வெளியீடு 4-3-2003 Issued 4-3-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மே 7, 2002 - தொகுதி [illegible] - எண் 1

Tuesday the 7th May, 2002 - Volume [illegible] No. 1

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

D.
V.2II, 3I'n2
P02.20.1
225165

**7-5-2002**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-37 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) வணிக வரிகள் துறை அறிவிக்கையின் பொருள்களில் ஆங்கிலம் தமிழ் வாசக வேறுபாடு | 38-39 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 40 |
| 3. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தாக்கப்பட்டது | 39,40-43 |
| டாக்டர் க. பொன்முடி | 40-41 |
| *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 41-43 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—** | |
| (அ) பட்டுப் புடவையின் மீதான ஆடம்பர வரி இரத்து செய்தல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 43 |
| (ஆ) விசைத் தறிகளுக்கான கூடுதல் மின் கட்டண உயர்வை இரத்து செய்தல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 43-50 |
| **5. கவன ஈர்ப்பு—** | |
| (அ) மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரியில் எம்.பி.ஏ. பாடப் பிரிவு தொடங்குதல் | 50-53 |
| (ஆ) குடிநீர் இணைப்பு வழங்குதல், அடைப்பபாளையம் கிராமம், ஈரோடு மாவட்டம் | 54-57 |
| **6. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 57 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு | 57 |
| **7. அறிவிப்புகள்—** | |
| (அ) தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) | 58 |
| (ஆ) பேரவை உறுப்பினர்களுக்கு ஆளுநர் மாளிகையில் அளிக்கவிருக்கும் விருந்திற்குச் செல்ல பேருந்து வசதி | 60-61 |
| (இ) அலுவல் வரிசையில் மாற்றம் | 61 |





| | பக்கங்கள் |
|---|---|
| **8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 | 58 |
| (ஆ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 | 59-60 |
| **9. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி** | |
| (அ) கோரிக்கை எண் 26 - தொழில் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 10 - வணிக வரித் துறை — வணிக வரிகள் | 61-224 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 61,73-74,84, 192-211 |
| *திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் | 85-100 |
| *திரு. பி.கே. சேகர்பாபு | 100-121 |
| *திரு. எஸ். தாமோதரன் | 122-134 |
| திரு. மு. கார்த்தி | 134-145 |
| *திரு. கு. ஜெயக்குமார் | 145-156 |
| திரு. கே.சி. கருணாகரன் | 156-168 |
| *திரு. இ.ஏ. லியாவுதீன் சேட் | 169-176 |
| *திரு. ஏ.எஸ். கண்ணன் | 176-183 |
| திரு. கே.என். இலட்சுமணன் | 183-188 |
| திரு. லா. சந்தானம் | 188-191 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 224-227 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ.ஶ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள்துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. **நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

   நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல்.

4. **கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.


225165
நூலகம்

5. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்து-சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :

வேளாண்மை. வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை. கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மின் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன் :**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர்-கிராமத் தொழில் வாரியம்.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :**

கால்நடை பராமரிப்பு.

21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



23. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் :**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :**

மீன்வளம்.

27. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர் :**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works and Prohibition and Excise** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption and Prisons. |
| 3. | **Minister for Finance and Information Technology** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money lending, Chits and Registration of Companies and Information Technology. |
| 4. | **Minister for Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-Conventional Energy Development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines and Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests and Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

21. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

22. **Minister for Labour** .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

23. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

24. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control.

25. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

26. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

27. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

*மாற்றுத் தலைவர்கள்**

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. எம்.ஏ. ஹக்கீம்

திரு. செ.கு. தமிழரசன்

திரு. லா. சந்தானம்

*முதன்மைச் செயலாளர்*

திரு. செ.சு. ஜானகிராமன்

*செயலாளர்*

திரு. வெ. இராசாராமன்

---

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. (விடுப்பு) | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. (விடுப்பு) | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |

| | |
|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ. .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. (விடுப்பு) .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சீ. .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்

114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்

115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்

117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்

119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)

120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்

121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்

122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்

123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி

124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)

125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்

126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்

128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்

130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)

131. துரைமுருகன், திரு. .. காட்பாடி

132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி

133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்

135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி

136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்

137. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி

138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு

140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்

141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு

142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு

143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்

144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்

145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்

146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)

149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை

150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்

154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு

155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி

158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி

159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்

160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்

161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்

162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி

163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி

164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

167. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்

168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

169. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)

170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு

171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)

172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)

173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)

174. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு

175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

176. மணி, திரு. டி. .. விளவங்கோடு

177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை

180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி

181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி

182. மில்லர், திரு. அ. .. கூடலூர்

183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி

184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)

185. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்

186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்

189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்

193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்

194. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்

195. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்

196. ராஜகோபால், திரு. ஆ .. சிவகாசி

197. ராஜம்மாள், திருமதி, எஸ். .. தூத்துக்குடி

198. ராஜா, திரு. எச். .. காரைக்குடி

199. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்

200. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்

201. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

| | | |
|---|---|---|
| 202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. | பேரூர் |
| 203. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 206. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்காநகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 225. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | .. | வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 24, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033
## 2002 மே 7, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்ட ஒருவர் அயராது பாடுபடுகிறபோது, அவரைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை தானே உயர்கிறது.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 290, திரு. ப. அரசன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**290—**

### நீர்ப்பாசனம்

***3932—திரு ப. அரசன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்லணைக் கால்வாய்ப் பாசனத்திலிருந்து பருவமழைக் காலங்களில் வீணாகும் வெள்ளநீர் கருங்காடு அணைக்கட்டு, மணலூர் அணைக்கட்டு, கீரனூர் அணைக்கட்டு ஆகியவற்றால் பயன்பெறும் ஏரிகளுக்குப் பாசனத்திற்குத் திருப்பி விடப்படும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரிசீலனையில் இல்லை. ஆனால், ஆய்வில் உள்ளது. சாத்தியக்கூறு இருப்பின் நிதி ஆதாரத்தைப் பொறுத்துப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்பதைப்போல, இந்தத் திட்டத்தினாலே தண்ணீராலே பயிர்கள் பாழாவதைத் தடுக்க முடியும்; தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நிலங்களுக்குப் பாசன வசதியும் செய்துதர முடியும். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து ஆய்வில் இருக்கின்ற அந்தத் திட்டத்தை செயலாக்கத்திற்குக் கொண்டு வருவார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லணைக் கால்வாய்ப் பாசனத்திலிருந்து பருவமழைக் காலங்களில் வீணாகும் வெள்ளநீரை கருங்காடு அணைக்கட்டு, மணலூர் அணைக்கட்டு, கீரனூர் அணைக்கட்டு ஆகியவற்றால் பயன்பெறும் ஏரிகளுக்கு பாசனத்திற்குப் பயன்பெறும் வகையில் திருப்பி விடும் திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது. அந்தத் திட்டத்தினுடைய அவசர, அவசியத்தைக் கருதி, நிதிநிலைக்கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று அணைக்கட்டுப் பகுதிகளிலே இருக்கிற நிலங்கள் மழைநீரை நம்பியே உள்ள நிலங்கள். இந்தக் காலங்களிலே மழை பொய்த்துப் போவதை நாம் அறிவோம். ஆகவே, வெள்ள நீரை அந்த அணைக்கட்டுகள் வழியாக ஒரு இலட்சம் ஏக்கர் பாசனம் பெறும் அளவிற்கு அந்தப் பகுதிகளுக்குத் திருப்பி விடுகிற திட்டத்தை மறு ஆய்வு செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு, செய்து தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறு ஆய்வு செய்யப்பட்டு, நிதியாதாரத்தைப் பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 291, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.

**291—**

### சாலையைப் புதுப்பித்தல்

***5131—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, தரணி சர்க்கரை ஆலை அருகில் தென்புறம் சுமார் 7 கி.மீ. வரையுள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக 1987-ல் போடப்பட்டது. அதற்குப்பிறகு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ரெகுலராக நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தச் சாலை, தரணி சர்க்கரை ஆலைக்கு அருகில் உள்ளது. விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள 8 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள கரும்புகள் பூராவும் தினம் 3 ஆயிரம் டன் அந்த வழியாகத்தான் போக வேண்டி இருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த 7 கி.மீ. தூரம் உள்ள சாலையை

எடுத்தால்தான் சரியாக இருக்கும். இந்தச் சாலையைச் செப்பனிட்டு சுமார் 15 வருடங்கள் ஆகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்தான் ரெகுலராக நெடுஞ்சாலைத் துறையால் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆக இந்த 8 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள கரும்புகள் முழுவதையும் தினம் 3 ஆயிரம் டன் அந்த வழியாக விவசாயிகள் எடுத்துப்போகிறார்கள். அந்தந்தத் தொகுதியில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி அங்கே வாகனங்கள் போகிறபோதுகூட பேசக்கூடிய நிலைமையில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதற்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக நிதி வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியுள்ள அந்தச் சாலை கி.மீ. 0/0—7/8 என்னும் இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலை 1990 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலை சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டது. இச்சாலை 1-4-2001 முதல் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளாக இச்சாலை பராமரிப்பு இல்லாமல் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த விவரம் அரசுக்கு வரப்பெற்றிருக்கிறது. இச்சாலையை மேம்பாடு செய்வதற்காக ரூபாய் 65 இலட்சத்திற்குத் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கூறியதுபோல அவசர அவசியம் கருதி இந்தச் சாலைக்கு முன்னுரிமை கொடுத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலநேரங்களில் விவசாயிகள் எல்லோருமே ஒன்று சேர்ந்து இந்தச் சாலையினை உடனடியாகப் போட வேண்டுமென்று, உண்ணாவிரதம், சாலை மறியல், போராட்டம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஈஸ்வரன், அமைச்சர் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்கிறார்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இருந்தாலும், இது இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வாசுதேவநல்லூர், தென்காசி, கடையநல்லூர்,





சங்கரன்கோவில், போன்ற எட்டு சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள விவசாயிகள் கடுமையாக என்னிடம் வற்புறுத்துகிறார்கள். ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும் காலத்தை நீட்டிக்காமல் அதற்கு முன்னுரிமை கொடுத்து எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, முன்னுரிமை கொடுத்து எடுக்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 292, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**292—**

**பல்தொழில்நுட்பப் பயிலகம்**

***438—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புரசைவாக்கம் தொகுதியில் ஓட்டேரி பகுதியில் அமைந்துள்ள பல்தொழில்நுட்ப தொழிற்கல்வி நிலையம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புரசைவாக்கம், அரசினர் Polytechnic கட்டடமானது மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு கட்டப்பட்டு வருகிறது. இதில் முதல் கட்டப் பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புரசைவாக்கம் ஓட்டேரி பகுதியில் அமைந்துள்ள அரசினர் Polytechnic, பணிகள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு, இதுவரையில் முழுமையாகக் கட்டி முடிக்கப்படவில்லை. அதேநேரத்தில் அந்த Polytechnic-ல் மாணவர்களைச் சேர்த்து அடையாறு பகுதியிலுள்ள மத்திய

[2002 மே 7

Polytechnic வளாக அறைகளில்தான் தற்போது வகுப்புகள் நடந்து கொண்டு வருகின்றன. ஆகவே, இந்த நடப்பு நிதியாண்டிலாவது அந்தக் கட்டடப் பணிகளை முடித்து அந்த இடத்திலேயே வகுப்புகள் நடந்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய பல்தொழில்நுட்பப் பயிலகம் கட்டி முடிப்பதற்காக நான் முன்பு சொன்னதைப்போல மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பண ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் 730 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவாகும். அதில் ஒரு பகுதியாக சுமார் 197 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்யப்பட்டு நிர்வாக மற்றும் கல்விக் கட்டடங்களில் தரைதளம் ஒரு பகுதியும், பிறகு workshop-ம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. compound wall கட்டப்பட வேண்டியுள்ளது. இதற்கு ஒரு தேவைப்படுகிறது. Electric connection அது மிகவும் கொடுப்பதற்காகச் சில முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே, அந்த compound wall கட்டுவதற்கு அரசிடம் கருத்துரு proposal இருக்கிறது. அது approval ஆன உடனேயே கட்டி முடிக்கப்படும். அது கட்டி முடித்தவுடனேயே electric connection எல்லாம் கொடுத்தபிறகு விரைவிலேயே இந்தப் பயிலகத்தை அங்கே தொடங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று ஆண்டுகளில் அந்தப் பல்தொழில் பயிலகத்தில் எத்தனைப் பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன? எவ்வளவு மாணவர்கள் அதிலே சேர்ந்துள்ளார்கள்? இந்தக் கல்வியாண்டில் கூடுதலாகப் புதிய வகுப்புகளைத் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா? அதேநேரத்தில் அந்தப் பயிலகம் அமைந்துள்ள ஓட்டேரி பகுதியில் உள்ள அந்தக் கல்வி நிலையத்திற்குச் செல்வதற்கு approach சாலைகள் எல்லாம் இன்னமும் அமைக்கப்படவில்லை. அதையும் இந்த நிதியாண்டிலே அமைத்துக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2002 மே 7]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்தொழில்நுட்பப் பயிலகம், அதாவது polytechnic-ஐத் துவங்குவதற்கு அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. உறுப்பினர் சொன்னதுபோல சாலை வசதிகள் அமைப்பது போன்றவற்றுக்கு எல்லாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். எவ்வளவு மாணவர்கள் படிக்கிறார்கள் என்ற புள்ளிவிவரங்கள் என்னிடம் தற்போது இல்லை. நீங்கள் தனியாகக் கேள்வி போட்டீர்கள் என்றால் அதற்கு விவரத்தைத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 293. திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**293—**

## மேல்நிலைப் பள்ளி

***7641—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, சேலையூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலையூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குவதற்கு இதுவரை எந்தக் கருத்துருவும் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்பட்டால் அது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகராட்சிப் பகுதியிலே, கிழக்குத் தாம்பரம் பகுதியிலே இயங்குகிற இந்தப் பள்ளி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட

சமுதாய மக்கள் பயன்பெறுகிற பள்ளியாகும். இப்பள்ளிக்குச் சற்றொப்ப 4 ஏக்கருக்கு மேல் இடவசதி இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு இதை அவர்களுடைய கணக்கிலே எடுத்துக்கொண்டு ஆவன செய்வதாக உறுதி அளித்தால் பொதுமக்கள் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்துவதற்குக்கூடத் தயாராக இருக்கிறார்கள் என்பதால் அமைச்சர் அதற்கான ஏற்பாட்டைச் செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எத்தனை உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது என்று முடிவெடுக்கப்படவில்லை. அதற்கான கருத்துருவானது தயாரிக்கப்பட்டு நிதியமைச்சருக்கு அனுப்பி வைக்க வேண்டியிருக்கிறது. நிதிநிலைக்கேற்ப அவர்கள் ஒப்புதல் தந்தவுடன் எத்தனை பள்ளிகள் ஆரம்பிப்பது என்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடும். அதற்கு ஏற்றாற்போல் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை எல்லாம் பரிசீலனை செய்யப்படும். ஆனால் இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் நீங்கள் சொன்னமாதிரி அங்கே 4 ஏக்கர் நிலம் கிடையாது. அங்கிருப்பது 3 ஏக்கர் 22 செண்டு தான். ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்றால் 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. 10 ஆம் வகுப்பில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 100 இருக்க வேண்டும். ஆனால் அந்தப் பள்ளியிலே 63 மாணவர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே இந்த நிலையும் வேறு இருக்கிறது. 2 இலட்சம் ரூபாய் பொதுமக்களுடைய பங்குத் தொகையாகக் கட்ட வேண்டும். அது இதுவரையில் கட்டப்படவில்லை. ஆகவே, இத்தகைய மற்ற நிபந்தனைகளை எல்லாம் பூர்த்தி செய்தீர்கள் என்றால் நிதிநிலைக்கு ஏற்ப உங்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கிட்டத்தட்ட 4 ஏக்கர் என்றுதான் சொன்னேன். அந்தப் பள்ளியிலே 63 மாணவர்கள்தான் தேர்வுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது உண்மைதான். மொத்தம் 572 மாணவர்கள் அங்கே பயிலுகிறார்கள். அங்கே 50 சென்ட் இடத்திலே கிழக்குத் தாம்பரத்திலே அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நடைபெற்றுக்



கொண்டிருக்கிறது. மீனம்பாக்கத்திலே ஒரு மேல்நிலைப் பள்ளி 50 சென்ட் இடத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே சென்னையை ஒட்டி இருக்கிற புறநகர்ப் பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது கூட 5 ஏக்கர் இடம் வேண்டும், இல்லையானால் குழுவிற்கு நீங்கள் பரிந்துரை செய்யுங்கள், அதை அரசு பார்க்கும் என்று சுட்டிக்காட்டினார்கள். ஏற்கெனவே குழு இப்படி அளித்திருக்கிற முன்னுதாரணம் இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதன் அடிப்படையில் எடுத்துக்கொள்வதாகச் சொன்னால் அந்த 2 இலட்சம் ரூபாயைக் கட்டுவதற்கு அப்பகுதி மக்கள் தயாராக இருப்பதோடு இந்த ஆண்டு 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப் பள்ளியிலே இறுதி வகுப்பிலே சேருவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னையை ஒட்டி இருக்கின்ற அந்தப் பகுதியிலே இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு இந்த ஆண்டு முன்னுரிமை தருவாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அரசானது தேர்தல் அறிக்கையிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குவதற்கும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குவதற்கும் முன்னுரிமை தரப்படும் என்று சொல்லியிருக்கிறது. நகர்ப்புறங்களில் பல பள்ளிகள் இருக்கின்றன. அதனால் அங்கிருக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. பக்கத்துப் பள்ளிக்குச் செல்வதற்கு, கிராமப்புறங்களில் 8 கிலோமீட்டர் செல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே அதற்கு முன்னுரிமை தருகிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல உயர்மட்டக் குழுவானது 3 ஏக்கர் இருந்தால்கூடப் போதும் என்ற நிலையிலே சில நேரத்தில் அங்கிருக்கும் சூழ்நிலைக்கு ஏற்பவும், அங்கு செய்ய வேண்டிய சில கட்டாயத்தின் காரணமாகவும் சிபாரிசு செய்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆகவே அத்தகைய நிலைமையில் உயர்மட்டக் குழுவானது உங்கள் பகுதியைப் பரிசீலனை செய்து அவர்கள் சிபாரிசு செய்தார்கள் என்றால், பரிந்துரை செய்தார்கள் என்றால் நிதிநிலைக்கு ஏற்ப அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளி ஆக்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 294. திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**294—**

### மலைப் பாதை

***10080—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதியிலுள்ள அரசுக்குச் சொந்தமான ஊராட்சிக்கோட்டை மலைக்கோவிலுக்குச் செல்ல நல்ல பாதை இல்லாததால், மலைப் பாதை எப்பொழுது அமைத்துக் கொடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஊராட்சிக்கோட்டை கிராமத்தில் மலைமீது அமைந்துள்ள அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் தற்போது மேற்படி கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சேவா சங்கங்கள் மூலம் பக்தர்கள் சுலபமாக மலைமீது நடக்கும் அளவிற்கு மண்பாதை அமைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலையில் மேற்படி மலைக்கோயிலுக்குச் செல்ல மலைமீது படிக்கட்டுகள் அமைக்கும் உத்தேசம் அரசளவில் ஏதுமில்லை. மேற்படி திருக்கோயிலுக்குப் பரம்பரை வழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்த பின்பு, திருக்கோயில் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர், சமயப் பெரியோர்கள் ஆகியோரது ஆலோசனைகளின் மீது, அவர்களுடைய நிதியை வைத்து மலைமீது பக்தர்கள் செல்லப் படிக்கட்டுகள் அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோவிலானது 1200 அடி உயரம் கொண்டது. இதன் மேலே உள்ள கோவிலுக்குச் செல்ல பொதுமக்கள் ஒரு சிறிய மண் பாதை அமைத்து அதற்கு வேண்டுகின்ற கல், மணல், சிமெண்ட்



அனைத்தையும் கழுதை மூலமாக மேலே கொண்டு சென்று
35 இலட்ச ரூபாய் செலவிலே இப்போது கோவில் கட்டி குடமுழுக்குச்
செய்திருக்கிறார்கள். பாதை அமைப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள்.
இதிலே அம்மாவினுடைய அரசு அனைத்துத் திருக்கோவில்களை
பராமரிப்பது போல, இந்தத் திருக்கோவிலுக்கும் பாதை அமைத்துக்
கொடுக்க வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற
கோரிக்கையை நிறைவேற்ற சட்டமன்ற உறுப்பினர், இரண்டு
நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய
நிதியிலேயிருந்து அவர்கள் நிதி கொடுக்க முன்வருவார்களேயானால்,
இந்த ஆண்டே அந்தப் பணியைத் தொடங்குவதற்கு ஏற்பாடு
செய்யப்படும். பவானி வட்டம், ஊராட்சிக்கோட்டை அருள்மிகு
வேதகிரீஸ்வரர் மற்றும் வரதராஜப் பெருமாள் திருக்கோவில் மலைமீது
சுமார் 600 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இக்கோவில் சட்டப்
பிரிவு 46(3)-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், படி அமைக்கப்படுமா, அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 295 திரு. சி. சண்முகம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**295—**

### சோடியம் மின் விளக்கு

***7313—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தேர்வு நிலைப் பேரூராட்சிக்கு சோடியம் மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2002 மே 7

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்பாடத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பூந்தமல்லி பேரூராட்சிக்கு சோடியம் மின் விளக்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் நல நிதித் திட்டத்திலோ அல்லது தனியார் நிதியுதவி பெற்றோ அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லி பேரூராட்சியில் ஏற்கெனவே 465 சோடியம் ஆவி விளக்குகளும், 707 குழல் விளக்குகளும் உள்ளன. இவை போதுமான அளவிற்கு இல்லையென்று சொன்னால், அந்தப் பேரூராட்சிக்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் தனியார் உதவியோடு மின் விளக்கு அமைக்கின்ற திட்டத்திற்குத் தொடர் செலவினமாக மின் கட்டணம் கூடிக்கொண்டே இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு நல்ல அடிப்படை வசதி செய்ய வேண்டுமானால் செய்து கொடுக்கலாமே தவிர, தொடர்ந்து செலவினத்தை உருவாக்குகின்ற ஒரு காரியத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதியைப் பயன்படுத்துவது சரியாக இருக்காது என்பது என்னுடைய ஆலோசனை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூந்தமல்லி பகுதியைத் தவிர, எனது தொகுதியில் ஆவடி பகுதி, திருநின்றவூர், பட்டாபிராம் அந்தப் பகுதிகளில் Tube Light-ஆவது—மின் அழுத்தம் குறைவான 40 வாட்ஸ் Tube Light ஆவது—சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து போடுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குமா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2002 மே 7]

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, பேரூராட்சி நிருவாகம் அதனைச் செயல்படுத்துவதற்கு முன்வரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 296, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**296—**

## குடிநீர் வசதி

***18632—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த மூன்றாண்டுகளாக மதுரை மேற்குத் தொகுதியிலுள்ள மேலப்பொன்னகரம், சண்முகநாதபுரம் மற்றும் சுற்று வட்டாரங்களில் குடிநீரில் கழிவுநீர் கலந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மதுரை மாநகராட்சி எடுத்த நடவடிக்கையின் மூலமாகக் கழிவுநீர் குடிநீருடன் கலப்பது தவிர்க்கப்பட்டு, மேலப்பொன்னகரம், சண்முகநாதபுரம் மற்றும் சுற்று வட்டாரங்களில் தற்பொழுது சுத்தமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பியபொழுது குடி தண்ணீரில் சாக்கடை கலந்து வந்தது. இப்போது அதிகாரிகள் சரி செய்துவிட்டதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மேற்குத் தொகுதியைப் பொறுத்தவரையில், கடந்த மூன்று ஆண்டுகளாகவே திடீரென்று குடி தண்ணீரிலே சாக்கடை கலப்பதும், அதை அதிகாரிகள் சரி செய்வதும், தற்காலிக முடிவை அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுப்பதும்

[2002 மே 7

தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தக் குடி தண்ணீர் குழாயினுடைய ஓட்டையை அடைப்பதற்கு அதிகாரிகள் சைக்கிள் tube-ஐப் பயன்படுத்துவதாகப் பொதுமக்கள் என்னிடம் எடுத்துச் சொன்னார்கள். அந்த குடி தண்ணீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டு 40 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும், அந்தக் குழாய்கள் இரும்புக் குழாய்களாக இருப்பதனால் துருப்பிடித்து அடிக்கடி ஓட்டை விழுவதாலும், 40 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட அந்தப் பழைய குழாய்களை எடுத்துவிட்டு, புதிய பி.வி.சி குழாய்களைப் பதிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா, மீண்டும் குடி தண்ணீரிலே சாக்கடை கலக்காமல் தடுப்பதற்கு நிரந்தரமான முடிவை எடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி நிர்வாகத்திற்கு இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்படிப்பட்ட 40 ஆண்டு காலம், 50 ஆண்டு காலத்திற்கு மேல் உள்ள பழைய குழாய்களில் பழுது ஏற்பட்டு அல்லது துவாரம் விழுந்து இருந்தால், அதைச் சரி செய்வதற்கு மாநகராட்சி நிர்வாகத்திற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு மாநகராட்சி நிர்வாகத்தைக் கேட்டு, அவர்களுக்குத் தகுந்த ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 297, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.



2002 மே 7]

**297—**

## நியாய விலைக் கடைகள்

***2147—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்தேரி மலைப் பகுதியிலுள்ள கலசப்பாடி, நொச்சிக்குட்டை, நெலமாங்கடை ஆகிய கிராமங்களில் புதியதாக நியாய விலைக் கடைகள் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வாய்ப்பில்லை.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை சரியில்லாதபோதுகூட, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஏழைகளுக்கு வழங்கப்படுகிற அரிசியைக் குறைந்த விலையில் கிலோ ரூ. 3.50-க்கு மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்ததற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை, அவருடைய பொற்பாதங்களில் சமர்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சித்தேரி என்பது மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். இந்த சித்தேரி மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதியிலே கிட்டத்தட்ட 48 கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, எப்படியாவது அந்த மலைவாழ் மக்களுக்குப் பயன்படுகிற விதத்திலே, அங்கே நியாய விலைக் கடைகள் அமைத்துக் கொடுக்க நம்முடைய அரசு முன்வருமா, மீண்டும் பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற இந்தக் கடைகள் எல்லாம் சித்தேரி லேம்ப் சொசைட்டி மூலமாக சக்கம்பட்டி நியாய விலைக் கடைகள் மூலமாக நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

உறுப்பினர் கேட்டிருக்கிற நொச்சிக்குட்டை, கலசப்பாடி ஆகிய ஊர்களிலே முறையே 92 மற்றும் 86 கார்டுகள்தான் நியாய விலைக் கடைக்கு இருக்கின்றன. 92 கார்டுகளுக்கும், 86 கார்டுகளுக்கும் ஒரு கடை திறப்பது என்பது நிர்வாக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சரியாக இருக்காது என்கிற காரணத்தினாலேயும், அதற்கு பதிலாக இந்த மலைப் பகுதியிலே நாம்—நடமாடும் அங்காடிகளை—நடமாடும் ஊர்திகள் மூலமாக விநியோகம் செய்வதற்கு இந்த அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அதிலும்கூட, உறுப்பினர் கேட்டிருக்கிற அந்த நொச்சிக்குட்டை, கலசப்பாடி ஆகிய ஊர்களுக்கு ரோடு வசதிகள் சரியாக இல்லாத காரணத்தினாலே, அந்த நடமாடும் ஊர்திகூட அந்த இடத்திற்குப் போகமுடியாது இருக்கிற காரணத்தினாலே, அந்த வசதியையும் இந்தக் கடைகளுக்குப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே. அப்படிப்பட்ட வாய்ப்பு வருகிறபோது அதைப்பற்றி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அங்கே குறைந்த ரேசன் கார்டுகள் இருப்பதாகச் சொன்னார்கள். அது உண்மையாக இருந்தாலும்கூட, இது மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதி. அங்கே 48 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய ரேசன் கடைகளிலே பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 8 கி.மீ., 15 கி.மீ., 20 கி.மீ. என்று 48 கிராம மக்கள் ஒரே இடத்திற்குச் சென்று வாங்க வேண்டிய அந்த சூழ்நிலை இருக்கிறது. மேலும், இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது நொச்சிக்குட்டை கிராமத்திற்கு வாகனங்கள் செல்வதற்குச் சாலை வசதிகள் இல்லையென்று குறிப்பிட்டார்கள். அங்கே தற்போது வாகனங்கள் செல்வதற்கு நல்லதோர் தார்ச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சிறப்புக் கவனம் செலுத்தி, மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டிற்கு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, அங்கு நடமாடும் அங்காடிகள் மூலம் ரேசன் பொருட்களைப்பெற நொச்சிக்குட்டை, கலசப்பாடி, நெலமாங்கடை ஆகிய மூன்று கிராமங்களையும் சேர்த்து மொத்தம் 48 கிராமங்களுக்கும் தனித்தனியாய் குறைந்தது 3 நியாயவிலைக் கடைகளாவது நம்முடைய அரசு அமைத்துக் கொடுப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மலைப் பகுதியிலே வசிக்கின்ற மக்களுடைய குறைகளைப் போக்குவதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த நடமாடும் கடைகளை நடத்துகிற அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த நொச்சிக்குட்டை போன்ற பகுதிகளுக்கு ரோடு வசதி உருவாகி இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக அந்த நடமாடும் ஊர்திகளை அங்கே அனுப்பி, மக்களுக்கு அந்த நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொருட்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதனையும், அப்படிப்பட்ட வாய்ப்பினை உருவாக்குகிற வகையிலே அந்த ரோடுகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுக்கின்றபோது, இந்த வண்டிகளையும் அங்கே அனுப்பி வைப்பதிலே எந்தச் சிரமமும் இருக்காது. மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் கிடைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு. பேரவைத் தலைவர்:** வினா எண் 298, திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**298—**

## வெளி மாநிலங்களுக்கு அரிசி

***9758—திரு. வி. ஜெயராமன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 மே 7

தமிழகத்திலிருந்து மோட்டா ரக டி.கே.எம். 9 ரக நெல்லை வெளி மாநிலத்திற்கு நெல்லாக எடுத்துச் செல்ல அனுமதித்துள்ளதற்குப் பதிலாக அரிசியாக மட்டும் எடுத்துச் செல்ல அரசு அனுமதி வழங்குமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

டி.கே.எம். 9 ரக நெல் மற்றும் அரிசி இரண்டையும் மற்றும் எல்லா ரக அரிசியையும் வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நெல்லாகவும், அரிசியாகவும் இரண்டு வகையிலும் எடுத்துச் செல்லலாம் என்று தமிழக அரசினுடைய அறிவிப்பு உள்ளது. இதற்குப் பதிலாக அரிசியாக மட்டும்தான் எடுத்துச் செல்ல வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிடுமானால், தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே இருக்கிற ஏராளமான அரிசி ஆலைகளிலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வாய்ப்பு உண்டு. அதற்கான முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அதிகப்படியான விலை கிடைக்க வேண்டும் என்கின்ற நோக்கத்திற்காகத்தான் 32 ஆண்டுகாலம் இருந்த அந்தத் தடையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தைரியமாக check-post-களை எல்லாம் remove செய்து, நெல்லையும், அரிசியையும் எடுத்துக்கொண்டு செல்லலாம் என்கின்ற ஆணையை இட்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய நெல்லுக்கு அதிகப்படியான விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலே திறக்கப்பட்டிருக்கிறது. வெளியிடப்பட்டிருக்கிற இந்த ஆணை அவர்களுக்குப் பயன்பெறுகிற வகையிலே முழுமையாக இப்போது செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, நெல்லையோ, அரிசியையோ வியாபாரிகள் அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப எடுத்துக் கொண்டு போவதை இந்த அரசாங்கம் தடை செய்யாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன்.



2002 மே 7]

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு விவசாயிதான். விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நீண்டகால ஆராய்ச்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கிற இந்த முடிவை வரவேற்கிறேன். ஆனாலும், அண்டை மாநிலமான கேரளாவிலேதான் இந்த டி.கே.எம். 9 ரக அரிசியை அதிகமான மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அரிசியாக என்று மட்டும் அனுமதிக்கும்போது, கிராமங்களிலே இருக்கிற ஆயிரக்கணக்கான மக்கள் அரிசி ஆலைகள் மூலமாக வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, டி.கே.எம். 9 ரக நெல்லை, அரிசியாக மட்டும்தான் கொண்டு செல்ல வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிடுவதனால் விவசாயிகளுக்கு எந்த வகையான பாதிப்பும் ஏற்படாது. தமிழகத்திலே அரிசி ஆலைகளின்மூலம் வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வாய்ப்பு உண்டு. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டி.கே.எம். 9 ரக நெல், அரிசி என்பது, தமிழ் நாட்டிலே தமிழக மக்களாலே அதிகமாக உபயோகிக்க முடியாத ஒரு ரக நெல் ஆகும். ஆகவே, நமக்குத் தேவையில்லாத அந்த நெல்லை, அது நெல்லாகப் போனாலும் சரி, அரிசியாகப் போனாலும் சரி, அதனாலே அரசுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லை. விவசாயிகளுக்கு நெல்லுக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதைத் திறக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அது எடுத்துப் போகிறவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. அவர்கள் நெல்லாகவும் எடுத்துக்கொண்டு போகலாம், அரிசியாகவும் எடுத்துக்கொண்டு போகலாம் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.கே.எம். 9 மற்றும் இதர ரக நெல் எவ்வளவு வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது? இப்படி அனுப்பப்படுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கான ஏற்பாடு என்று சொன்னார்கள். ஆனால், இப்படி வெளி

[2002 மே 7

மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கிறபோது, வியாபாரிகள் மூலமாக நல்ல விலை கிடைக்கவில்லை என்றுதான் சொல்லப்படுகிறது. அப்படி விலை பாதிப்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறதா? எவ்வளவு நெல் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய மிகப் பெரிய கோரிக்கை, நீங்கள் அந்த check post-களை எல்லாம் remove செய்யுங்கள் என்பது. அதன் மூலமாக இந்த டி.கே.எம். 9 ரக நெல்லை வெளி மாநிலங்களிலிருந்து வியாபாரிகள் வந்து வாங்கிக்கொண்டு போவதாலேயும், கேரளாவிலேயிருக்கிற மக்கள் அதிகம் இங்கே வந்து வாங்கிக்கொண்டு போவதாலேயும், எங்களுக்கு அதிகப்படியான விலை கிடைக்கும் என்கின்ற கோரிக்கையை இந்த அரசாங்கத்திற்கு வைத்த காரணத்தினாலேதான், அந்தத் தடையை இந்த அரசு நீக்கியிருக்கிறது. இந்த அடிப்படையிலே டி.கே.எம். 9 ரக நெல் மட்டுமல்ல, மற்ற ரக நெல்கூட நம்மிடத்திலே நிறைய stock இருக்கிற காரணத்தாலே, தமிழகத்திற்கு வேண்டிய அளவிற்கு உணவுப் பொருட்கள் stock இருக்கிற காரணத்தினாலே, ஏறக்குறைய 9 இலட்சம் டன் நெல்லும், அரிசியும் கையிருப்பு இருக்கிற காரணத்தினாலே, இந்த அரசாங்கத்திற்குத் தேவைக்கு மிகுதியாக இருக்கிற காரணத்தினாலேதான், மற்றவர்கள் எல்லாம் பயன்பெற வேண்டும்; நம் விவசாயிகளும் பயன் பெறவேண்டும்; நல்ல விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஆணையை இட்டிருக்கிறோம். அதனாலே அரசுக்குக் கிடைத்திருக்கிற தகவலின் அடிப்படையிலே வியாபாரிகள் வந்து இந்த டி.கே.எம். நெல்லை வாங்கிச் செல்வதனாலே, விவசாயிகளுக்குக் கூடுதல் விலை கிடைத்திருக்கிறது என்ற தகவல்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் சொல்லியிருக்கிற இந்த விவரத்தை வேண்டுமானால் விசாரித்துப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலேயிருந்து நெல், அரிசி நம்முடைய மாநிலத்திற்கு அதிக அளவிலே வருகிறது. ஆனால், இங்கே விவசாயிகள் நெல் விற்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே,



2002 மே 7]

தமிழகத்திலே அரிசிக்கு வரி போட்டிருப்பதைத் தவிர்த்து, வெளி மாநிலங்களிலேயிருந்து வருகிற நெல்லுக்கு, அரிசிக்கு வரி விதித்து, அதன் மூலமாகத் தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுடைய நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெல், அரிசியைப் பொறுத்தவரை ஒரே food zone என்பதுதான் இந்திய அரசினுடைய கொள்கை. அந்தக் கொள்கையை நாம் நிறைவேற்ற வேண்டுமென்று காலங்காலமாக, கடந்த காலத்திலேயிருந்து மத்திய அரசு தமிழக அரசை வற்புறுத்தி வந்துள்ளது. ஆனால் கடந்த அரசு தைரியமாக அதை எடுக்க முடியாத நிலையிலே இருந்தது. ஆனால் இந்த அரசு தைரியமாக மத்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒரே food zone-ஆகக் கொண்டு வருகிற அந்த அடிப்படையிலே இப்போது அந்தத் தடையை நீக்கியிருக்கிறோம். ஆகவே, கேரளாவில் இருந்தும், கர்நாடகத்தில் இருந்தும், ஆந்திராவில் இருந்தும் வருகின்ற அரிசியைத் தடுக்க வேண்டிய அவசியம் நமக்கு தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 299, திரு சி. இராசேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**299—**

**தனி வட்டம்**

***1916—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்கும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2002 மே 7

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-லிருந்து 1996 வரை ஆட்சியில் இருந்தபோது அன்றையதினம் தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியத்தில், ஒரத்தநாடு தாலுகாவைப் பிரித்து தனி தாலுகா தொடங்குவதற்காக மாவட்ட வருவாய் அலுவலர்களுடைய ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, அன்றையதினம் அதற்கான கருத்துரு ஆய்வு செய்யப்பட்டது. அதற்குப் பின்னாலே வந்தவர்கள் அது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டம் என்ற காரணத்தால், அவர்கள் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். இப்போது மீண்டும் மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக, தமிழக ஏழை, எளியோர்களுடைய வாழ்வு வளம்பெருகின்ற, ஒளி விளக்கை ஏற்றி வைத்திருக்கின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது இந்தத் திருவோணம் தொகுதி ஒரு தனித் தாலுகாவாக ஆவதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும். திருவோணம் ஒன்றியத்திலிருந்து 4 பஞ்சாயத்துகள் பேராவூரணி தொகுதியிலும், பட்டுக்கோட்டை தாலுகாவிலும் இருக்கின்றன. அந்த ஊர்களிலிருந்து ஒரத்தநாட்டுக்கு வர வேண்டுமென்று சொன்னால் 30 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. ஏழை எளியவர்களுடைய வாழ்வில் அக்கறை கொண்டுள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டு நிதிநிலை இல்லை என்று சொன்னாலும் வரும் ஆண்டில் இதைப் பரிசீலனை செய்து அந்தப் பகுதி மக்களுடைய ஏக்கத்தைத் தீர்க்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் 3 கோட்டங்கள் உள்ளன. தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை ஆகிய 3 கோட்டங்களிலே ஒரத்தநாடு வட்டத்தின்கீழ் திருவோணம் ஒன்றியம் வருகிறது. தற்போது தமிழகத்தினுடைய Joint Commissioner அவர்கள் ஒரு அளவுகோலை நிர்ணயித்து இருக்கிறார்கள். அந்த அளவுகோலின்படி 2000 ஆம் ஆண்டுக் கணக்குப்படி மக்கள்தொகை



2002 மே 7]

2,34,356 என்று இருக்கிறது. பரப்பளவு 590.87 சதுர கிலோமீட்டர் இருக்கிறது. கிராமங்களுடைய எண்ணிக்கை 125 ஆக இருக்கிறது. ஊராட்சிகளுடைய எண்ணிக்கை 88 ஆக இருக்கிறது. புதிதாக ஒரு வட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்றால் குறைந்தது 2½ இலட்சம் 3½ இலட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டும். பரப்பளவை எடுத்துக்கொண்டால் 500 க்கு மேல் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய அந்த வட்டத்தினுடைய மக்கள் தொகை இரண்டு இலட்சத்து 34 ஆயிரம் ஆக இருக்கிறது. ஆகவே, தற்சமயம் அந்த அளவுகோலின்படி சாத்தியக்கூறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 300, திரு ப. ஆண்டிவேல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**300—**

**பேருந்து வசதி**

***9723—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் கரிக்காலி, சி.சி. குவாரிக்கு, போதிய பேருந்து வசதி இல்லாததால், குஜிலியம்பாறையில் இருந்து சி.சி. குவாரி வரை பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வேடசந்தூர் தொகுதியில் உள்ள கரிக்காலி மற்றும் சி.சி. குவாரிக்கு சிற்றுந்துகள் மூலம் பொதுமக்களின் தேவைக்கேற்ப போதிய போக்குவரத்து வசதி உள்ளதால் கூடுதலாகப் பேருந்து வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2002 மே 7

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதியில் சி.சி. குவாரி, புளியூர் சிமெண்ட் பேக்டரிக்குத் தேவையான கற்கள் எடுக்கின்ற இடம் ஆகும். அந்தக் குவாரியிலே 1,500 தொழிலாளர்களும், அதனுடைய கிளையாக இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிற கரிக்காலியிலே ஆயிரம் தொழிலாளர்களும் வேலை செய்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல தனியார் மினி பஸ்கள் போவது உண்மை. ஆனால் அந்த பஸ்கள் போனாலும்கூடக் கூடுதலாக ஊழியர்கள் பணிபுரிகின்ற காரணத்தால் அவர்களுக்குப் போதுமான பஸ் வசதி இல்லை என்பதால் இப்போது புது பஸ்கள் வாங்க இருக்கிற திட்டத்திலாவது சேர்த்து நமது புரட்சித் தலைவியினுடைய அரசு அந்த சி.சி. குவாரிக்கு, கரிக்காலிக்குப் புதிய பேருந்துகள் விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறை சி.சி. குவாரி வழித்தடத்தின் தூரம் 12 கிலோமீட்டர். இதிலே குஜிலியம்பாறை முதல் கரிக்காலி வரை 4.3 கிலோமீட்டர் சாலை அகலமாக உள்ளது. கரிக்காலி முதல் சி.சி. குவாரி வரை 7.7 கிலோமீட்டர் மெட்டல் சாலையாக உள்ளது. இச்சாலை குறுகலாகவும், சாலையின் கற்கள் பெயர்ந்தும், சாலை அரிப்பு அதிகமாகவும் உள்ளதால் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்க முடியாத நிலையில் சாலை வசதி உள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலை வசதியை மேம்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரேயானால் சாலை வசதி மேம்பாடு அடைந்ததும் அந்த வழித்தடத்தில் பேருந்துகள் விடுவது பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 301, திரு. டி. மணி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.



2002 மே 7]

**301—**

**இரப்பர் கழகம்**

***6706—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகம், கீரிப்பாறை டிவிஷனில் பரளியாறு பகுதியில் இரப்பர் மரங்களை விற்பனை செய்தது தொடர்பாக அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகம், கீரிப்பாறை டிவிஷனில் பரளியாறு பகுதியில் இரப்பர் மரங்களை விற்பனை செய்தது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரிப்பாறையில் அரசு இரப்பர் கழகத்தினுடைய சில பகுதிகளில் மரங்களை ஏலம் விட்டதில் அது முறையாக நடத்தப்படவில்லை என்றும், அதற்குப் பின்னால் மீண்டும் அது நீதிமன்றம் வரை சென்று மீண்டும் அதை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிகின்றது. அதுபோன்று, அந்த மரங்களை விற்பனை செய்கின்றபோது எனக்குக் கிடைத்த தகவலின்படி இரண்டு டிவிஷன்களில் இரண்டு கோடிக்கும் அதிகமான ரூபாய்க்கு விற்பனை ஆகியிருக்கின்றது. அந்தப் பணம் அந்தக் கழகத்திற்குக் கிடைக்கவில்லை என்பதால் கழகத்தை இலாபகரமாக நடத்த இயலாத ஒரு சூழ்நிலையும் உள்ளது. அதுபோன்று, இந்த மரங்களை வெட்டியிருக்கின்ற பகுதியில் மீண்டும் இரப்பரை நடுவதற்கான ஏற்பாடுகள் என்ன நடந்திருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரப்பர் கழகம், கீரிப்பாறை கோட்டம், அந்த இடத்திலேயிருந்த முதிர்ச்சியடைந்த இரப்பர் மரங்களை விற்க 7-10-1999-ல் விற்பனை நடத்தப்பட்டு அதற்கான ஒப்பந்தங்கள் அன்று

[2002 மே 7

செய்யப்பட்டு, மனோகரன் என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. இவர், 10, 11 மற்றும் 19 ஆகிய 3 கூப்புகளுக்கு மாத்திரம் பணத்தினைக் கட்டிவிட்டு, 7 கூப்புகளுக்கு கட்டப்பட வேண்டிய பணத்தினைக் கட்டாமல் இருந்தார்கள். எனவே, உரிய காலத்தில் பிற கூப்புகளிலுள்ள மரங்களின் விலையைச் செலுத்தி மரங்களை வெட்டாததால், இந்தக் கூப்புகளுக்கான ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு, இந்தக் கூப்புகளுக்கான பிணை வைப்புத் தொகை ரூ. 11.45 இலட்சங்களை அவர் இழக்க நேரிட்டது. மேலும், வழக்கினை விசாரணை செய்தபின் சென்னை உயர் நீதிமன்றம் 7-12-2001 அன்றும் 18-01-2002 அன்றும் வழங்கிய உத்தரவில் இரப்பர் கழகத்தால் 18-4-2001 அன்று நடத்தப்பட்ட ஏலத்தில் கீரிப்பாறைக் கோட்டத்திலுள்ள கூப்பு எண் 7-க்கு அதிக ஏலத்தில் தொகை கேட்ட ஏலதாரர் மரிய சத்தியநேசனுக்குத் தரவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவிற்கிணங்க இந்த அரசு செயல்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதிர்ச்சியடைந்த இரப்பர் மரங்களை வெட்டுவதில் மிகப் பெரிய முறைகேடு இப்போது அல்ல முன்னாலே உள்ள சூழ்நிலையில் நடந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல திரு. மனோகரன் அவர்கள் 1,500 ரூபாய் ஒரு மரத்திற்கு என்று ஏலம் எடுத்துவிட்டு அவரே நீதிமன்றத்திற்குச் சென்று அதே மரத்தை மீண்டும் 700 ரூபாய்க்கு வெட்டுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. மரம் ஒன்றின்பேரில் 800 ரூபாய் அங்கே தவறு நடந்திருக்கிற சூழ்நிலையை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, இதன் மூலம் பலகோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, முதலாவதாக எடுக்கப்பட்ட அதே தொகைக்கு அதே நபரை வைத்து எடுக்க வேண்டும்; இல்லையென்று சொன்னால், அதே சூழ்நிலையில் ஏற்பட்ட இழப்பை அவரிடமிருந்து வசூல் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறைகேடு ஏற்பட்டது என்பதைத் தடுக்கின்ற வகையிலேதான் வழக்காடு மன்றத்திலே முறையிட்டு



2002 மே 7]

உயர் நீதிமன்றத்தினுடைய உத்தரவைப் பரிசீலித்து அதே தோப்பிலே இருக்கின்ற கூப்பு எண் 7-ல் முதிர்ச்சி அடைந்த 13,897 இரப்பர் மரங்களை, மரம் ஒன்றுக்கு 1,220 என்ற விலை விகிதத்தில் பால் வடிவு செய்தபின்னர், வெட்டி அப்புறப்படுத்த ஏல நிபந்தனைகளுடன் ஏலம் இறுதி செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரங்களை விற்றதில் பெரிய ஊழல்கள் நடந்து இருக்கிறது என்றும், சில அதிகாரிகளுக்கும், கான்ட்ராக்டர்களுக்கும் ஏற்பட்ட தொடர்புகளும் குளறுபடிகளும்தான் இப்படிப்பட்ட ஒரு பாதிப்பை அரசு இரப்பர் கழகத்திற்கு ஏற்படுத்தியிருக்கிறது என்றும், இதனாலே ஏற்பட்ட நிலை காரணமாகத்தான் காலாகாலத்திலே ரீபிளான்ட்டிங் செய்ய வேண்டிய மரங்களை, ரீபிளான்ட்டிங் பண்ண முடியாததன் காரணமாக தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்பொழுது இரப்பருடைய விலை வீழ்ச்சியடைந்திருப்பதன் காரணமாக அவர்களிடம் பணம் இல்லை என்ற ஒரு நிலையும் வந்து இருக்கிறது. ஆகவே, இந்த இரப்பர் மரங்களை விற்றுக் கிடைக்கிற பணத்தை அரசே எடுத்துக்கொள்ளாமல், அரசே இரப்பர் கார்ப்பரேஷனுக்கு மானியமாகவோ அல்லது கடனாகவோ கொடுத்து அந்த ரீபிளான்ட்டிங் ஏற்பாட்டை உடனடியாகச் செய்வதற்குரிய நடவடிக்கையும், இந்தக் குளறுபடிகளுக்கு எல்லாம் காரணமாக இருந்தவர்கள் மேலே தகுந்த நடவடிக்கையும் எடுத்து அந்தக் கழகத்தைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையிலேயும், அவர்களுடைய உணர்வுகளோடு என்னுடைய உணர்வுகளையும் நான் சேர்த்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட தவறுகள் இனி நடக்காத வகையில் பாதுகாத்திட வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்பேரில்தான் இதுவரை 1 கோடியே 62 இலட்சம் ரூபாய் இரப்பர் கழகத்தின் மூலமாகப் பெறப்பட்டு இப்போது அரசுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. மேற்கொண்டு இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராத வகையில் நிச்சயமாக

நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிமேல் இப்படிப்பட்ட குளறுபடிகள் நடக்காது என்ற ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள்; வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த 76 ஆம் நம்பர் கூப்பு, அதுபோல, 1999-2000-லே நடந்த நிகழ்ச்சிகளுக்கு, அதிலே நடந்திருக்கிற ஊழல்கள் சம்பந்தமாக ஒரு விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், யார் தவறு செய்திருக்கின்றார்கள், அந்தத் தவறு செய்தவர்கள் மேலே, அதிகாரிகளானாலும் சரி அல்லது வேறு ஒப்பந்தக்காரர்களானாலும் சரி உரிய நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமாகத்தான் அந்த இரப்பர் கழகத்தை நாம் இலாபகரமாக நடத்த முடியும் என்ற கருத்தை இங்கே நான் வலியுறுத்தி, அந்த வகையிலே கடந்த காலத்திலே நடந்த அந்தச் சம்பவங்களின் மீது ஒரு விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மனோகரன் என்பவர் தவறான ஒரு நிலைபாட்டை ஏற்படுத்திய காரணத்தினாலேதான் 11.45 இலட்சம் ரூபாய் அவர் இழந்திருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். மேலும் இப்படித் தவறுகள் நடக்காத வண்ணம் எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து ஆலோசித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெட்டி அப்புறப்படுத்தப்பட்ட இரப்பர் மரங்கள் இருந்த இடத்திலே புதிதாக ரீபிளான்ட்டிங் பண்ணுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதிக நாட்கள் சென்றுவிட்டால், இந்த இடத்திலே மண் சரிவு ஏற்பட்டு திரும்ப இரப்பர் மரக் கன்றுகள். நட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே, உடனடியாக அந்த இடத்திலே ரீபிளான்ட்டிங் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பொருளாதாரக் கொள்கையினபடி, இரப்பர் விலை மிகக் கடுமையாக வீழ்ச்சி அடைந்திருக்கிற காரணத்தினாலே இந்த இரப்பர் கழகம் மிகப் பெரிய நட்டத்தை ஈட்டிக் கொண்டிருக்கிறது என்றாலும் உறுப்பினர்களுடைய உணர்வுகளுக்கு ஏற்ப தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 302, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**302—**

## கடைகள் ஒதுக்கீடு

***9679—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கோயம்பேட்டிலுள்ள காய், கனி, மலர் அங்காடிகளில் தற்போது ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கும் 295 கடைகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்பேட்டில் வணிக வளாகத்தில் உள்ள காய், கனி, மற்றும் மலர் அங்காடிகளில் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கும் கடைகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜார்ஜ் டவுன் பகுதியில் உள்ள நெருக்கடியைக் குறைக்கவும், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும், சுகாதாரத்தைக் காத்திடவும் 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தீட்டப்பட்ட திட்டமாகும் இந்த கோயம்பேடு காய், கனி, மலர் அங்காடிகள் திட்டம். தற்போது சதுர பகுதி

அடிக்கு ரூபாய் 3,000 வரை விலை நிர்ணயம் செய்து உள்ளதால், சிறு வியாபாரிகள் இந்தப் பெரும் தொகையைக் கொடுத்து. கடையை எடுத்து நடத்த முடியாத ஒரு சூழ்நிலை நிலவுவதாகக் கருதப்படுகிறது. ஆகவே, இந்த காய், கனி மற்றும் மலர் அங்காடிகளில் உள்ள கடைகளின் விலை குறைத்து, வியாபார மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே விற்பனை செய்ய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு அங்காடி தொடங்கிய காலத்திலிருந்து இங்கு கட்டப்பட்ட கடைகள் ஜார்ஜ் டவுன், பழைய கொத்தவால்சாவடி வியாபாரிகளுக்கும் மற்றும் இதர வியாபாரிகளுக்கும் மொத்த விலைக்கோ அல்லது தவணை முறையிலோ கடைகளுக்குரிய கிரயத்தைச் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் கடையின் விலையில் 20 சதவீதம் கட்ட வேண்டும். மீதியுள்ள சதவீதத்தை 10 வருட காலத்திற்கு 18 சதவீத வட்டி அடிப்படையில் செலுத்திவிடலாம். குறிப்பாக, ஜார்ஜ் டவுன், கொத்தவால்சாவடி பழைய வியாபாரிகளுக்கு சதுர அடி ஒன்றுக்கு விலை ரூ. 2,750 என்றும் மற்றபடி ஜார்ஜ் டவுன் வியாபாரிகள் அல்லாதவர்களுக்கு ரூ. 3,000/-என்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்தக் கடைகளை வியாபாரிகள் வாங்கிட தடை ஏதும் இல்லாமல் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கடைகள் கட்டி முடிக்கப்பட்டு, பல ஆண்டு காலமாகப் பூட்டி வைக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் உள்ளன. குறிப்பாக 275-க்கும் அதிகமான கடைகள் தற்போது பூட்டிய நிலையில் உள்ளதால் அரசாங்கத்திற்குப் பெரும் அளவில் இலாப இழப்பீடும் ஏற்படுகிறது. இப்படி உள்ள 275 கடைகள் ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ அல்லது வாடகையின் அடிப்படையிலோ ஒதுக்கீடு செய்யப்படுமானால், அதன் மூலம் 275 குடும்பங்கள் மாத்திரம் அல்லாமல், அந்தக் கடைகளிலே வேலை செய்பவர்கள் 2,3 பேர்கள் என்று எடுத்துக்கொண்டால் கூட, கிட்டத்தட்ட 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதால் இந்தக் கடைகளை ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ அல்லது வாடகையின் அடிப்படையிலோ ஒதுக்கீடு





செய்ய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, விலைக்குத்தான் இந்தக் கடைகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது வாடகை அடிப்படையிலோ எந்தக் கடையும் ஒதுக்கீடு செய்யப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கடைகள் கட்டி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. பெரும் தொகை ஏற்கெனவே re-finance பெற்றுத்தான் இந்தக் கடைகளைக் கட்டியிருக்கிறார்கள். இப்படிக் கட்டப்பட்ட கடைகள் இதுவரை விலை போகாமல் இருக்கிறது என்று சொன்னால் இனி போகக்கூடிய வாய்ப்பு என்பது மிக மிகக் குறைவு. அப்படி இருக்கிற காரணத்தினாலே, அரசு சதுர அடிக்கு 2,500 ரூபாய், 3,000 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பதை மாற்றி ஒன்று விலையைக் குறைத்தாவது அரசு அதை வெளி மார்க்கெட்டிலே விற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்; இல்லை என்று சொன்னால் P.W.D. rate ஏதாவது fix பண்ணி வாடகைக்காவது கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடன் வாங்கிக் கட்டிவிட்டு, இப்படி நீங்கள் அப்படியே மூடி வைத்தீர்கள் என்று சொன்னால், அரசாங்கத்தினுடைய அந்தத் துறை நிச்சயமாக நட்டத்தில்தான் போகுமேயொழிய இலாபத்தில் இயங்கக்கூடிய வாய்ப்பே இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகையைக் குறைத்துக் கொடுத்தாவது வெளி market-லே அதை விற்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, வருடா வருடம் உயர்த்த வேண்டிய விலை மாற்றத்திற்கேற்ப உயர்த்த ஏதும் முடிவு செய்யப்படவில்லை. மற்றபடி மாண்புமிகு சட்டமன்ற

உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சொன்ன கருத்துகளை ஏற்று, அரசு இதுபற்றிச் சிந்திக்கும் என்ற முடிவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கோயம்பேட்டிலே கட்டப்பட்டிருக்கிற 295 கடைகள் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கின்றன. இதை குத்தகை அடிப்படையிலே கொடுக்க வாய்ப்பில்லை என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனியார்களுக்குக் குத்தகை அடிப்படையிலே கொடுப்பதற்கு சிரமம் இருந்தாலும், இப்பொழுது காய்கறி மற்றும் பூ கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கத்திற்காவது அதை உடனடியாகக் கொடுப்பதற்கு ஆவன செய்தால், அரசாங்கம் கட்டுகிற re-finance செய்திருக்கிற அந்த வட்டிக்காவது பணம் கிடைக்கும். தனியார்களுக்கு குத்தகைக்குக் கொடுத்தால் கூட, பல சட்டச் சிக்கல்கள் இருக்கும். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதுபோன்று கொடுத்தால், அவர்கள் அந்த விற்பனையிலே ஒரு குறிப்பிட்ட காலத் தொகையினை உபயோகிப்பதற்கு வாய்ப்பிருக்கும். அதனால் வட்டியாவது கிடைக்க வாய்ப்பிருக்கும் என்பதைச் சொல்லி, தங்கள் மூலம் அமைச்சர் அவர்கள் விடையளிப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்கும் மற்றும் கூட்டுறவுச் சங்கத்திற்கும் குத்தகை அடிப்படையில் கொடுப்பதற்கு அரசு எந்தவித முடிவும் ஏற்படுத்தவில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி, இந்தக் கருத்துகளை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 303, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**303—**

**கால்நடை மருத்துவமனை**

***6759—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, காரியாபட்டி வட்டத்திலுள்ள மாந்தோப்பு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, காரியாபட்டி வட்டத்திலுள்ள மாந்தோப்பு கிராமத்தைச் சுற்றிலும் 30-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. 5,000 விவசாயக் குடும்பங்கள் உள்ளன. அங்கே கால்நடைகள் அதிகமாக உள்ளன. மாந்தோப்பு கிராமத்தில் கால்நடை பார்வை மையம் செயல்பட்டு வருகிறது. மேற்படி கிராம மக்கள் கால்நடை மருத்துவமனைக்குச் செல்வதாக இருந்தால், 12 கிலோமீட்டர் தூரத்திலுள்ள காரியாபட்டிக்குச் செல்ல வேண்டும். அல்லது 18 கிலோமீட்டர் தூரமுள்ள விருதுநகருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே மாந்தோப்பு கிராமத்திலுள்ள கால்நடை பார்வை மையத்தை கால்நடை மருந்தகமாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வரும் நிதியாண்டிலேயாவது ஆவன செய்யுமா எனப் பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் மாந்தோப்பு கிராமமும் வருகிறது. மேற்படி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் அமைந்துள்ள மாந்தோப்பு கிராமத்தில் 5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அழகியநல்லூர் என்னும் கிராமத்தில் ஒரு கிளை நிலையமும், 8 கிலோமீட்டர் தூரத்திலுள்ள கல்குறிச்சி கிராமத்தில் மற்றொரு கிளை நிலையமும் அமைந்துள்ளன. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் மாந்தோப்பு கிராமத்தில் ஏற்கெனவே நடமாடும் கால்நடை மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும், இக்கிராமத்தைச் சுற்றி காரியாபட்டி,

முடுக்கன்குளம் மற்றும் மல்லாங்கிணறு ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் அமைந்துள்ளன. எனவே, மேற்கூறிய மாந்தோப்பு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 304, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**304—**

**படகுத் துறை**

***2313—திரு. சி. ஞானசேகரன்:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் சுற்றுலாத் துறை அலுவலகம் வைத்து படகுத் துறையைத் தொடர்ந்து நடத்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏலகிரி மலையில் சுற்றுலாத் துறை அலுவலகம் வைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலையிலே நீங்கள் சுற்றுலா அலுவலகத்தை வைக்காவிட்டாலும் பரவாயில்லை. மாவட்டத் தலைநகராம் வேலூரிலே சுற்றுலா அலுவலகத்தை வைத்துவிட்டு--என்னுடைய கேள்வியின் முக்கியப் பகுதியே--படகுத் துறையை நீங்கள் தொடர்ந்து சுற்றுலாத் துறை மூலம் நடத்தவேண்டும் என்பதுதான். ஏனென்றால், ஏலகிரி மலையிலே இருக்கக்கூடிய படகுத்துறை தற்போது தனியார் மூலமாக நடத்தப்படுகிறது. சென்ற கோடை விழா நடந்தபோது, மாண்புமிகு அப்போதைய சுற்றுலாத் துறை அமைச்சர் சகோதரி சரோஜா அவர்களும், அப்போதைய அமைச்சர் திரு. பாண்டுரங்கன் அவர்களும் ஏலகிரி மலைக்கு விழாவிற்கு வந்திருந்தார்கள். அப்போது படகு விடக்கூடிய இடத்திலே, ரௌடிகள் எல்லாம், சில பேர், படகுகளை





இயக்குகிற காரணத்தினால், அவர்கள் அதிகமான தொகை கேட்டு, சண்டை வந்து, அவர்கள் படகைக் கவிழ்த்து, ஒரு குழந்தை இறந்துவிட்டது. அந்தக் குழந்தை இறந்துவிட்டவுடனே நான் அந்தக் கோடை விழாவிலேயே ஒரு கோரிக்கை வைத்தேன். ஏற்கெனவே, சுற்றுலாத் துறை மூலம்...

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஏற்கெனவே, சுற்றுலாத் துறை மூலம் நடத்தப்பட்டு வந்த இந்தப் படகு விடுகிற அந்தப் பணியை, நீங்கள் தனியாருக்கு விட்டதால் இந்த மாதிரி குழந்தை எல்லாம் இறந்து போய் விட்டது, எனவே, மீண்டும் சுற்றுலாத் துறை மூலமாக இயக்கவேண்டுமென்று சொன்னபோது, அப்போதைய அமைச்சர் அவர்கள் அதற்கு உறுதிமொழி அளித்துவிட்டு வந்தார்கள். ஆகவே, மாண்புமிகு இப்போதைய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம். தனியாருக்கு அல்லாமல், இந்தச் சுற்றுலாத் துறை மூலம் இந்தப் படகுகளை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலை வளர்ச்சிச் சுற்றுலா மேம்பாட்டிற்காக 1993 ஆம் ஆண்டு ஏலகிரி மலை வளர்ச்சி மற்றும் சுற்றுலா மேம்பாட்டுச் சங்கம் ஒன்றை அமைத்து, பதிவு செய்யப்பட்டு, இதுநாள் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மலையின் சிறப்பு மென்மேலும் வளர்ச்சி பெறவும், புகழ் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது சுற்றுலாப் பயணிகளை ஆண்டு முழுவதும் வரவழைக்கும் பொழுதுபோக்கு ஸ்தலமாகும். தூயநீர், நிலம், தூய தென்றல், நீரோடைகள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு அமைச்சர், அதாவது, தனியாரிடமிருந்து எடுத்து நீங்கள் நடத்துவீர்களா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலை வளர்ச்சி மற்றும் சுற்றுல்லா மேம்பாட்டுச்

சங்கம். தனியாருக்குக் குத்தகைக்கு விட்டுள்ளது. குத்தகைக் காலம் முடிந்தவுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப்பெற்று, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அல்லது ஏலகிரி மலை வளர்ச்சி மற்றும் சுற்றுலா மேம்பாட்டுச் சங்கம் எடுத்து நடத்துவதற்கு முயற்சி செய்யலாம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், குத்தகை முடியட்டும் என்று அமைச்சர் சொல்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குத்தகையினை எடுத்திருக்கக்கூடிய ஆள், அதனுடைய terms and conditions-ஐ அடிக்கடி violate பண்ணிக் கொண்டிருக்கிறார். விதிகளை அவர் மீறுகிற காரணத்தினாலே, அந்த terms and conditions மீறப்படுகிற காரணத்தினால், எந்த நேரத்திலும், குத்தகையை நீங்கள் cancel செய்யலாம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி, அந்தக் குத்தகையைக் cancel செய்து விட்டு, உடனடியாக அந்தப் படகு விடுகிற பணியை துறையே எடுத்து நடத்துமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை எடுத்திருக்கக்கூடிய நபர், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகையைப் புதுப்பித்து வருகிறார். இது முழுக்க, முழுக்க மாவட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால், மாவட்ட நிர்வாகத்துடன் கலந்தாலோசித்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின் பேரில் செயல்படுத்தலாம் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் ஊட்டி என்றும், மலைகளின் இளவரசி என்றும் அழைக்கப்படுகின்ற எங்களுடைய தொகுதியிலே அமைந்திருக்கின்ற ஏலகிரி மலையிலே சுற்றுலாத் தலம் அமைக்க அனுமதி கொடுத்திருந்தாலும் கூட, இன்னும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் இருக்கிறது. இங்கே இருக்கின்ற ஏரிகள் எல்லாம்



தூர்ந்துபோய், படகுத் துறையிலே கடந்த ஆண்டு, கோடை விழாவின்போது, கலெக்டர் முன்னிலையிலே, இரண்டு அமைச்சர்கள் முன்னிலையிலே ஒரு குழந்தை இறந்துவிட்டது. அங்கே பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களைக் கொண்டு படகு விடுவதற்குப் பதிலாக, தனியார்கள் விடுவதன் காரணமாக, நீச்சல் பயிற்சி பெறாதவர்கள் விடுவதன் காரணமாக, அந்தக் குழந்தை இறந்துவிட்டது. கடந்த ஆண்டு, அமைச்சர் முன்னாலே, சுற்றுலாத் துறையே அதை நடத்த வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதற்கான பதில் இன்னும் வரவில்லை. இருந்தாலும்கூட, அங்கே சிறுவர்களைக் கவருகின்ற வகையிலே, மான் பூங்காக்களை அங்கேயிருந்த முன்னாள் கலெக்டர் அமைத்தார்கள். அந்த மான்களுக்கு எல்லாம் தீனி போடாமல் ஒரு மான் இறந்து விட்டது. அங்கேயிருக்கிற முதலைகளுக்குக்கூடத் தீனி போடாமல், முதலைகூட தப்பித்து ஓடிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கேள்வி? அதை மட்டும் கேளுங்கள்.

**திரு. டி.கே. இராஜா:** எனவே, அந்த மான்களுக்கும், முதலைகளுக்கும் அங்கே சுற்றுலாத் துறை மூலமாக வருகின்ற வருமானத்திலிருந்து, உணவு போடப்படுமா? அங்கே டெலஸ்கோப் மூலமாக வருவாய் கிடைத்துகொண்டிருந்தது. இப்போது டெலக்ஸ்கோப் இயங்காமல் மூடி இருக்கிறது. அந்த டெலஸ்கோப்-ஐ வனத் துறையினர் பலமுறை சொல்லியும் இன்னும் திறக்காமல் இருக்கிறார்கள். இதுவும் வருமானத்திற்கு ஒரு தடையாக இருக்கிறது. அந்த டெலஸ்கோப்-ஐ இயக்குவீர்களா? அதேபோல, (குறுக்கீடு) டெலஸ்கோப்தான். அதேபோல, அங்கே சுற்றுலாப் பயணிகளுக்குக் கழிப்பிட வசதிகூடக் கிடையாது. பொழுதுபோக்கு அம்சங்கள் முற்றிலுமாக இல்லை. எனவே, அடுத்த மாதம் நடைபெறவிருக்கின்ற கோடை விழாவிலேயாவது, பொழுதுபோக்கு அம்சங்களை அதிகப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி. எனவே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[2002 மே 7

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) வணிக வரிகள் துறை அறிவிக்கையின் பொருள்களில் ஆங்கிலம் தமிழ் வாசக வேறுபாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து, விழுப்புரம்...*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .........*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், சொல்லுங்கள்.*

*முற்பகல் 11-00*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்ட ஏடுகள் குறித்து ஒரு சிறிய விளக்கம் பெற விரும்புகிறேன். இன்றையதினம்* Papers Placed on the Table of the House *வணிக வரிகள் துறை அறிவிக்கை-1, அரசாணை (நிலை) எண் 16 என்று போட்டு, அதற்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.*

*மேற்சொன்ன அறிவிக்கையில், தற்போதுள்ள வரம்பு நிபந்தனைக்குப் பிறகு, பின்வரும் வரம்பு நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது, "அன்றியும் வணிக வரிகள் துறையின் 23-1-2000 ஆம் நாளிட்ட 12ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள குழாய் இணைப்புத் தொடர் தொழில்களுக்கு மேற்சொன்ன வரம்பு நிபந்தனை பொருந்தாது"*

*இது ஓர் இடத்தில் அல்ல. மூன்று இடங்களிலே அதுவே வருகிறது. விளக்கக் குறிப்பிலேயும் அதுவே வருகிறது. இது சரியானதுதானா? ஏனென்றால், ஆங்கிலத்தில் படித்தால் வேறுவிதமாக இருக்கிறது.*

"Provided further that the above proviso shall not apply to the industries in pipe-line, referred to in G.O.Ms.No.12, Commercial Taxes Department, dated the 23rd January, 2000."



*ஆக, இது குழாய் இணைப்பு தொடர் தொழில் என்று சொன்னால், குழாய்த் தொழிலுக்கு மட்டும்தான் பொருந்துமா? இல்லை, வேறு தொழில்களுக்கும் பொருந்துமா; நடைமுறையிலே இருக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாவற்றிற்கும் பொருந்துமா என்பது தெளிவாக இல்லை. எனவே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குச் சம்பந்தப்பட்ட.....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை. இது என் ஆய்வில் இருக்கிறது. நாளை இதுகுறித்துப் பேசி முடிவு செய்யலாம்.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது மிகவும் முக்கியமானது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அமைச்சர் அவர்கள், இதற்கு விளக்கம் ஏதேனும் இருக்கிறதா? (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் என்ன என்று விசாரித்துச் சொல்வார்கள்.*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தாக்கப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *விழுப்புரம் சட்டமன்றப் பேரவை உறுப்பினரது சட்டமன்ற அலுவலகம் தாக்கப்பட்டது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திருவாளர்கள் ஐ. கணேசன், ப. ரங்கநாதன், ஜி.கே. மணி, டாக்டர் க. பொன்முடி, இ. புகழேந்தி மற்றும் எ.வ. வேலு ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளனர். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு திரு. பொன்முடி அவர்களை அழைக்கிறேன். (குறுக்கீடு)*

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் —தொடர்ச்சி

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இங்கே பல ஒத்திவைப்புத் தீர்மானங்களை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களாக எடுத்துக்கொள்கிறீர்கள். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். ஆனால், நான் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானங்களை மட்டும் நிராகரித்துவிட்டீர்களே? அதற்கு ஏதாவது சிறப்பு காரணம் இருக்கிறதா? அல்லது எங்கள் தொகுதி மக்களுக்குத் தெரிய வேண்டாம் என்று..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் அறையில் வந்து பேசுங்கள், அதுபற்றி விளக்குகிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வெட்டுக் குறித்து அறிவிப்புக் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களே, நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தாக்கப்பட்டது

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 26 ஆம் தேதி வெள்ளிக்கிழமை, மாலை, சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்து நான் விழுப்புரம் சென்றேன். மறுநாள் காலை 10-00 மணி அளவில் சட்டமன்ற உறுப்பினருடைய அலுவலகம், அதனுடைய வெளிக்கதவு பூட்டு உடைக்கப்பட்டு, அங்கேயே அது எறியப்பட்டுக் கிடந்தது. அதேபோல், உள்ளே இருந்த கதவின் கண்ணாடியும் உடைக்கப்பட்டிருந்தது.

பொதுவாக விழுப்புரத்தைப் பொறுத்தவரையில், நான், விழுப்புரம் நகரத்தின் மையத்திலே இருக்கிற அலுவலகத்திற்குத்தான் தினசரி செல்வதுண்டு. அங்கே இருக்கிற என் தொகுதி மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்புகள் உண்டு. இந்த அலுவலகத்தைப் பொறுத்தவரையில் நான் அடிக்கடி செல்கிற வழக்கம்கூட அல்ல. அந்த அலுவலகத்தைப் பொறுத்தவரையில், அதுவும் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்து





கொண்டிருந்த காரணத்தினால், நான் அங்கே அடிக்கடி செல்வதுகூட இல்லை. அது கலெக்டர் அலுவலகத்திற்கும், புதிதாகக் கட்டுப்பட்டிருக்கிற பேருந்து நிலையத்திற்கும் இடையிலே இருக்கிற ஒரு அலுவலகம். பகல் நேரத்திலே கூட்டம் அதிகம் இருக்கும். இரவு நேரத்திலேயும் பேருந்துகள் அதிகமாக இருக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. ஆகவே, பகல் நேரத்திலே இப்படிச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை. இரவு நேரத்தில்தான் இது செய்யப்பட்டிருக்க வேண்டும். காலையில் செய்தி அறிந்தவுடன் நான் அங்கு சென்றேன். காவல் ஆய்வாளர் அவர்கள், உடனடியாக அங்கே வருகை புரிந்தார்கள். அவரிடம் இவற்றைச் சுட்டிக்காட்டி இந்த Pad Lock உடைக்கப்பட்டிருப்பதையும் காட்டி, கண்ணாடி உடைக்கப்பட்டிருப்பதையும் காட்டி, அதேபோல, அங்கேயிருந்த Fuse Carrier மூன்று எடுக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினேன். அவர் Current bill கட்டி விட்டீர்களா என்று கேட்டார். நான் எப்போதுமே fine போட்டுத்தான் கட்டுவது வழக்கம். நான்கு மாதத்திற்கு ஒருமுறை முதலிலே கட்டியிருக்கிறேன். இப்போதுகூட, இரண்டு மாதத்திற்கு ஒருமுறைதான் பில் வரும். அப்போதைக்கப்போது வரும்போது கட்டுவேன். ஆனால், பெரும்பாலும் Fuse Carrier எடுத்துச் செல்வது கிடையாது. அப்படி எடுக்கப்படுவதாக இருந்தால்கூட என்னிடம் inform பண்ணவும் இல்லை. அவர்கள் எடுத்திருப்பதற்கு வாய்ப்புக் கிடையாது. அதனால், வந்தவர்கள் இருட்டிலே இருந்த காரணத்தினாலே அதை எடுத்திருக்கலாம் என்று கூட நான் கருத்தைச் சொன்னேன். ஆகவே, திருட வேண்டும் என்ற நோக்கத்தோடு அங்கே வந்ததாக எதுவும் தெரியவில்லை. ஏனென்றால், அங்கேயிருந்த Chair, Table மற்ற பொருள்களெல்லாம் அப்படியே இருந்தன. ஏதோ அச்சுறுத்தலுக்காகச் செய்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இந்த நிகழ்வினை எந்த பாரபட்சமுமின்றி யார் செய்தார்கள் என்பதை அறிய காவல் துறையிலே அதற்குரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர்.

முற்பகல் 11-05

*** மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன்முடி, 27-4-2002 அன்று விழுப்புரம் தாலுகா காவல் நிலையத்தில் விழுப்புரம் நகரில், விழுப்புரம்—திருச்சிராப்பள்ளி

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 7

நெடுஞ்சாலையில் அமைந்துள்ள விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தின் பூட்டைச் சில அடையாளம் தெரியாத குற்றவாளிகள் உடைத்து திறந்து உள்ளே நுழைந்து உள்ளனர் என்றும், அவர்கள் அந்த அலுவலகத்திலுள்ள கண்ணாடித் தடுப்பு, நாற்காலிகள், குழல் விளக்கு ஆகியவற்றை சேதப்படுத்தியதுடன் அங்கிருந்த மோட்டாரையும் திருடிச் சென்று விட்டார்கள் என்றும் புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக விழுப்புரம் தாலுகா காவல் நிலையத்தில் இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 457 மற்றும் 380-இன்கீழ் குற்ற எண் 355/2002-இல் புகார் அளிக்கப்பட்ட அன்றே பகல் 12-15 மணிக்கு புகார் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடம், விழுப்புரம் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் நுழைவாயிலுக்கு அருகில் சென்னை—திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலையின் கிழக்குப் பகுதியில் 30 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இதற்கு அருகில் நெரிசலான வணிக வளாகம், பேருந்து நிலையம், ஆட்டோ நிறுத்தம் மற்றும் மதுபானக் கடையும் அமைந்துள்ளன. ஆரம்பக் கட்ட விசாரணையில் சம்பவம் நடந்த இடமானது நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்ததால் தூசிபடிந்திருந்ததாகவும், ஒட்டடை படிந்து இருந்ததாகவும் இருந்தது என்பது தெரியவந்துள்ளது. முன்கதவின் பூட்டு உடைக்கப்பட்டு மற்றும் அறைக்கலன்கள் சேதப்படுத்தப்பட்டிருந்ததாலும் அங்கே இருந்த சட்டமன்ற உறுப்பினர் மற்றும் கட்சித் தலைவர்களின் புகைப்படங்கள் சேதப்படுத்தப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் நடப்பதற்கு முன்பே அலுவலகத் தாழ்வாரத்தில், வராண்டாவில் இருந்த குழல் விளக்கு மற்றும் Fuse carriers திருடப்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது என்றும் அலுவலகத்தின் பின்பகுதியில் மோட்டார் வைக்கப்பட்டிருந்த இடத்தில் தூசியும், ஒட்டடையும் அதிகம் காணப்படுவதால் மோட்டார், இந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்பே திருடப்பட்டிருக்கும் வாய்ப்பு உள்ளது என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் வழிப்போக்கர்கள் ஓய்வு எடுப்பதற்காகத்தான் பயன்படுத்தப்பட்டு வந்தது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தைச் சுற்றி நள்ளிரவு வரை எப்போதும் ஆள் நடமாட்டம் உள்ளதால் திட்டமிட்ட தாக்குதலுக்கு வாய்ப்பு இல்லை என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

எனவே, நடந்தது தாக்குதலா என்பதில் ஐயப்பாடு எழுந்துள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கருதுகின்ற அளவிற்குத் தாக்குதல்



2002 மே 7] [திரு. சி. பொன்னையன்]

நடைபெறவில்லை என்றே கருதவேண்டியுள்ளது எனத் தகவல் வந்துள்ளது. எனினும், சம்பவம் பற்றித் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. குற்றவாளிகள் யாராக இருப்பினும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்து அமைகின்றேன்.

## 4. விதி 110-ன் கீழ் அறிக்கைகள்

### (அ) பட்டுப் புடவையின் மீதான ஆடம்பர வரி இரத்து செய்தல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-இன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 06-05-2002 அன்று கைத்தறி மற்றும் துணி நூல் துறைக்கான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு பெற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் 3 ஆயிரம் ரூபாய்க்கும் மேலான கொள்முதல் விலையுள்ள பட்டுப் புடவையின் மீதான Luxury Tax ஆடம்பர வரியை நீக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இந்த அரசு மகளிர் நலனுக்காகப் பாடுபடும் அரசு என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். மகளிருக்கான பல்வேறு நலத் திட்டங்களைச் செம்மையாக அமல்படுத்தி வருகின்ற இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு 3 ஆயிரம் ரூபாய் கொள்முதல் விலைக்கு மேல் விற்கப்படுகின்ற பட்டுப் புடவைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒரு சதவிகித ஆடம்பர வரி முழுமையாக இரத்துச் செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) விசைத் தறிகளுக்கான கூடுதல் மின் கட்டண உயர்வை இரத்து செய்தல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நமது நாட்டில் நெசவுத் தொழில் தற்போது சோதனையான காலகட்டத்தில் சிக்கித் தவிக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அண்மையில் நெசவுத் தொழிலுக்கு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 மே 7

முக்கியமாகத் தேவைப்படும் Hank Yarn சிட்டா நூலுக்கு மத்திய அரசு விதித்த excise duty ஆயத்தீர்வையால் நெசவுத் தொழில் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானது. எனவே, மத்திய அரசு விதித்த கூடுதல் ஆயத் தீர்வையை விலக்கிக்கொள்ள வேண்டுமென இந்த அரசு மத்திய அரசுக்குக் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளது. இப்படி நெசவாளர் நலம் காக்க பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. இதற்கிடையில் ஏற்கெனவே கடும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய 5 ஆயிரம் கோடி ரூபாய் நட்டத்தில் இயங்கிவருவது அனைவரும் அறிந்தது. இழப்பை ஓரளவு ஈடுசெய்யும் பொருட்டு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழக அரசு சில இனங்களில் மின்சாரக் கட்டண உயர்வை அறிவித்தது. மேலும், அப்போது பொது மக்களிடமிருந்து எழுந்த கோரிக்கைகளின் அடிப்படையில் பல்வேறு இனங்களில் உயர்த்தப்பட்ட மின் கட்டண உயர்வு குறைக்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் நேற்று கைத்தறி மற்றும் துணி நூல் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே நெசவுத் தொழில் நசிந்து கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி விசைத்தறிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கூடுதல் மின் கட்டணத்தை இரத்து செய்ய வேண்டுமெனக் கோரிக்கை எழுப்பினார்கள். இந்த அரசு பொதுவாக விவசாயிகள் மற்றும் நெசவாளர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது.

முற்பகல் 11-10

குறிப்பாக நெசவுத்தொழில் நசிந்து போகாமல் காப்பற்றப்பட பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறது. அந்த வகையில் விசைத்தறித் தொழிலாளர்களிடமிருந்து வந்த கோரிக்கைகள், அவர்களுடைய தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் ஆகியவற்றைப் பரிசீலித்து விசைத்தறித் தொழிலாளர்களுக்கு இந்த மின் கட்டண உயர்வினால் ஏற்பட்டுள்ள சிரமத்தை உணர்ந்த இந்த அரசு, விசைத்தறிகளுக்கு 01-12-2001 முதல் அறிவிக்கப்பட்ட கட்டண உயர்வை இரத்துச் செய்ய முடிவுசெய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 01-12-2001-க்கு முன்னர் விசைத்தறிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டண விகிதங்களே தற்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு



2002 மே 7] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஏற்படும் ஏறத்தாழ 9.06 கோடி ரூபாய் இழப்பைத் தமிழக அரசே தாங்கிக் கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை விதி..........

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் விவாதத்தின்போது விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று இன்றையதினம் அந்த மின் கட்டண உயர்வை இரத்துச் செய்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் விசைத்தறியாளர்களின் சார்பிலேயும், கட்சியின் சார்பிலேயும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நன்றியா? சரி, சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3,000 ரூபாய் விலை மதிப்பிற்கு மேலேயுள்ள பட்டுப்புடவைகளுக்கு ஒரு சதவிகிதம் வரியைக் குறைக்கவேண்டும், இரத்துச் செய்யவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளியிலேயும் கோரிக்கை வைத்து, இந்த மாமன்றத்திலேயும் கோரிக்கை வைத்தோம். அதன் அடிப்படையிலேயும், விசைத்தறி உரிமையாளர்களுக்குக் கூடுதலாக விதிக்கப்பட்ட கட்டணத்தை இரத்துச் செய்யவேண்டுமென்ற கோரிக்கையையும் ஏற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரத்துச் செய்ததைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று, நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், என்ன, நன்றிதானே?

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரு நிமிடம், கோவை மாவட்டத்தின் மிக முக்கியமான இந்தப் பிரச்சினையின் மீது, 1½ இலட்சம் விசைத்தறிகள்

சம்பந்தமான பிரச்சினைகள் மீது ஒத்திவைப்புத் தீர்மானம் உட்பட அனைத்து உறுப்பினர்களும் வலியுறுத்தியிருந்தோம். அதை ஏற்றுக்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த மின் கட்டணக் குறைப்பு நடவடிக்கைக்கு மாவட்ட ஒட்டுமொத்த மக்களின் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உங்கள் சார்பாக நானே சொல்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றி.

**திரு. ஜி. பழனிசாமி:** கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமல்ல, எல்லோருடைய சார்பாகவும், பாட்டாளி மக்கள் கட்சிதான் நன்றி சொல்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக நேற்றே இதைச் சொன்ன உடனே, பேசும்போதே முதலமைச்சர் கவனித்தார்கள் என்பதை நாங்களும் கவனித்தோம். சரி, கண்டிப்பாக ஒரு அறிவிப்பு வரும் என்று தெரியும். அதனாலே இன்றைக்கு 110-வது விதியின்கீழே அறிவித்த முதலமைச்சருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நன்றி கூறுகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு) கணேசன், என்ன இன்னொரு பாட்டாளி மக்கள் கட்சியா?

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, ஒன்றுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி தான் சொல்லிவிட்டாரே?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் ஜி.பி. அவர்கள் என் பெயரை அடிக்கடி இழுத்ததனால்தான் சொல்கிறேன். நேற்று கிட்டத்தட்ட 9 பேர்தான் பேசினார்கள். ஆனால் 48 பேர் வெட்டுத் தீர்மானத்திலே இந்த 3,000 ரூபாய்க்கு மேலே விதிக்கப்பட்ட ஒரு சதவிகித வரியை இரத்துச் செய்யவேண்டுமென்று அனைத்து எதிர்க்கட்சிகளும், நாங்களும் கேட்டிருந்தோம். எதிர்க்கட்சி என்பது எதிரி கட்சியில்லை என்பதற்காக இந்த வரியை இரத்துச் செய்த முதல்வருக்கு மனப்பூர்வமாக எங்களுடைய நன்றியைச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல கோடானு கோடி கைத்தறி, விசைத்தறி நெசவாளர்கள்





எங்களுடைட பகுதியிலே வேலை இழந்து அல்லல்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்திலே மின் கட்டண உயர்வு மிகப்பெரிய ஓர் உயர்வாக இருந்தது. அதற்காக மின்துறை அமைச்சர் இடத்தில் எல்லாம் வாய்தா வாங்கி, வாய்தா வாங்கி பணம் கட்டினோம். அதற்கு இந்தத் தமிழகத்திலே இருக்கக்கூடிய மின்துறை அமைச்சர் அவர்கள் ஒருமுறை வாய்தாவும் அளித்தார்கள். அவ்வளவு இன்னல்படக்கூடிய இந்த மின் கட்டண உயர்வை இரத்துச் செய்ததற்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், அனைத்து எதிர்கட்சிகளுடைய சார்பாகவும், மனப்பூர்வமாக நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் எங்களுடைய நல்வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் இருக்கிற திருப்பூர், பல்லடம், அவிநாசி, பொங்கலூர் போன்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேண்டுகோளை ஏற்று விசைத்தறிகளுக்கு மின் கட்டண உயர்வை இரத்துச் செய்த மாண்புமிகு இதயதெய்வம், நாங்கள் வணங்கும் கழகத்தின் காவல் தெய்வம், குலதெய்வம், டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு விசைத்தறி உற்பத்தியாளர்கள் மற்றும் விசைத்தறித் தொழிலாளர்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

*** திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்களுடைய இந்த அறிவிப்பின் மூலம், 'பசியோடு இருந்தவன் பானை நிறைய வெண்சோறு கண்டாற்போல' என்ற பாரதிதாசன் அவர்களுடைய வரிக்கு இப்போதுதான் எனக்கு அர்த்தமே தெரிவதைப் போல இருக்கிறது. அந்த அளவுக்கு 3,000 ரூபாய்க்கு மேல் உள்ள பட்டுச்சேலைகளுக்கு ஆடம்பர வரியை நீக்கியும் குடந்தையில் உள்ள பட்டு

நெசவாளர்களின் கோரிக்கையை ஏற்று இரத்துச் செய்ததையும், அதைப்போல விசைத்தறி தொழிலாளர்களுடைய கோரிக்கையை ஏற்று தமிழக முதல்வர் அவர்கள் மின் கட்டண உயர்வை இரத்துச் செய்ததையும் பாரதிய ஜனதா கட்சி மனதார வரவேற்கிறது; பாராட்டுகிறது. நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நெசவாளர்களுடைய பிரச்சினையை நான் வலியுறுத்தியிருந்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்பு உள்ளபடியே மகிழ்ச்சியை அளிக்கிறது; நம்பிக்கையை அளிக்கிறது. அவர்களுக்கு நன்றியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். பட்டுச் சேலைகளுக்கு இன்றைக்கு நீங்கள் வரியை இரத்துச் செய்திருப்பதைப் பெண்கள் வரவேற்பார்கள். ஒரு பட்டுச்சேலை வாங்கினால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆண்களும் வரவேற்பார்கள். நாங்கள்தானே வாங்குகிறோம். (சிரிப்பு)

**செல்வி க. பாலபாரதி:** ஒரு பட்டுச்சேலை எடுத்தால் இன்னொரு பட்டுச்சேலை தரப்படும் என்று எதிர்காலத்தில் மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் பட்டுச்சேலைகள் விற்பனையும் அதிகரிக்கும். பெண்களும் அதை வரவேற்பார்கள் என்று தெரிவித்து அமைகிறேன். நன்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) திரு. நன்மாறன், எங்கள் மதுரைக்காரர், சொல்லுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நெசவாளர்கள் பிரச்சினையில் நான் பேசக்கூடிய வாய்ப்பை அளித்தீர்கள். இதே கோரிக்கையை முன் வைத்திருந்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் விசைத்தறித் தொழிலாளர்களுக்கான அறிவிப்பினை கைத்தறி சம்பந்தமாக அறிவித்திருக்கிறார்கள். மதுரைக்கு, விசேஷமாக நேற்றையதினம் வழங்கியிருந்த அறிவிப்பு, இப்போது பட்டு மீது அறிவிக்கப்பட்டிருக்கிற அறிவிப்பு, இவை அனைத்திற்கும் என் சார்பிலும் மதுரை மக்கள் சார்பிலும் நன்றியை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூட இந்த மானியக் கோரிக்கையில் நேற்றுக் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானத்தில் நெசவுத் தொழிலை மேற்கொண்டிருக்கிற நெசவாளர்கள் வாழ்க்கையில் மிகவும் தாழ்ந்து கிடக்கிறார்கள், அவர்களுடைய தரத்தை உயர்த்துவதற்கு அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது குறித்து விவாதிக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்த மின்சார உயர்வு ரத்து, பட்டுச்சேலைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரி உயர்வு ரத்து என்பது, அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்தும் என்கிற காரணத்தால் அதற்கு என்னுடைய நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம் பிரபு, நீங்கள் நிற்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) சரி. சொல்லுங்கள்.

***திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூவாயிரம் ரூபாய்க்கு மேல் அதிகமாக விற்பனையாகக்கூடிய பட்டுப்புடவைகளுக்கு ஒரு சதவீத ஆடம்பர வரியை முழுமையாக இரத்துச் செய்து கொடுத்த தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பரமக்குடி பகுதி அதிகமாக நெசவாளர்கள் வாழக்கூடிய பகுதி. கிட்டத்தட்ட 50,000 நெசவாளர் குடும்பங்கள் அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கைத்தறி நெசவாளர்களின் நலனில் அக்கறை எடுத்துக்கொண்டதுபோல், தங்களுடைய கடைக்கண் பார்வையை வீசி எங்களுடைய பகுதி கைத்தறி நெசவாளர்களையும் காப்பாற்றவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், ஆளுங்கட்சியின் சார்பாக, நன்றி கூறுவார்.

[2002 மே 7

* **மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆறு பெண் பிறந்தால், ஆண்டி' என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரைச் சொல்வார்கள்?

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** 'ஐந்து பெண் பிறந்தால் அரசனும், ஆண்டி' என்று சொல்வார்கள். எனக்கு 3 பெண்கள் பிறந்து இருக்கிறார்கள். அதேபோல், எத்தனையோ பேருக்குப் பெண் குழந்தைகள் பிறந்து, அவர்களுக்கெல்லாம் திருமண நாளிலே, பட்டுச்சேலை எடுத்துக் கொடுத்துத்தான் அவர்களுடைய திருமணத்தை பண்ணி வைக்க முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் தாயுள்ளத்தோடு, அந்த ஏழையெளியவர்களுக்கு, மகளிருக்கு ரூ. 3 ஆயிரத்திற்கு மேல் இருக்கிற பட்டுப் புடவைகளுக்கு அந்த வரியை இரத்துச் செய்ததற்காக என்னைப் போல பெண் குழந்தை பெற்றவர்கள் அத்தனை பேர்களும் நன்றி சொல்வார்கள்; தமிழகத்திலுள்ள பெற்றோர், தாய்மார்கள் அத்தனை பேரும் பாராட்டுவார்கள் என்று சொல்லி, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களுக்குப் பெண் குழந்தைகள் இல்லையா? உட்கார்ந்து இருப்பதிலிருந்தே தெரிகிறது. (சிரிப்பு).

## 5. கவன ஈர்ப்பு

### (அ) மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரியில் எம்.பி.ஏ. பாடப் பிரிவு தொடங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. ஓர் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து திருமதி வளர்மதி ஜெபராஜ் அவர்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரியில்



2002 மே 7] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

எம்.பி.ஏ., பாடப் பிரிவைத் தொடங்குவதற்கு, மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தால், தடையின்மைச் சான்றிதழ் வழங்கியும், இக்கல்லூரியில் எம்.பி.ஏ., பாடப் பிரிவு தொடங்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

மதுரை அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் எம்.பி.ஏ., பாடப்பிரிவை 2002-2003 ஆம் கல்வியாண்டு முதல் சுயநிதி அடிப்படையில் தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது. மேலும், அக்கல்லூரியில் எம்.பி.ஏ., பாட வகுப்பைத் தொடங்கக் கோரி, அக்கல்லூரி மாணவிகளிடையே எவ்வித பதட்டமும் நிலவவில்லை என்றும், கல்லூரி அமைதியாக நடைபெற்று வருவதாகவும் அக்கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையில், இந்த ஆண்டிலேயே, அதாவது 2002-2003 ஆம் ஆண்டிலேயே, எம்.பி.ஏ., பாடப் பிரிவு தொடங்கப்படும் என்கின்ற அறிவிப்பு, எனக்கு அளவுகடந்த மகிழ்ச்சியைத் தருகிறது. ஆனால், அதேநேரத்தில், சுயநிதி அடிப்படையில் தொடங்குவதற்குத்தான் அரசு முடிவெடுத்திருக்கிறது என்கின்ற அறிவிப்பு, என்னுடைய மகிழ்ச்சியைச் சற்றுக் குறைக்கிறது. தமிழகத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள ஒரே அரசினர் மகளிர் கல்லூரி, இந்த மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி என்பதை யாரும் மறுக்க முடியாது. 1986 ஆம் ஆண்டு நான் பிளஸ் 2 முடித்துவிட்டு, கல்லூரியில் சேரலாமா, வேண்டாமா என்று திணறிக் கொண்டிருந்த நேரத்தில், என்னை அழைத்து, என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கிற எங்கள் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'நீ அரசியல் பணியிலே எப்போது வேண்டுமானாலும் ஈடுபடலாம்;

[திருமதி வளர்மதி ஜெபராஜ்] [2002 மே 7

ஆனால், படிப்பு என்பது இந்தக் காலகட்டத்திலேதான் படிக்க வேண்டும் என்று எனக்கு அறிவுறுத்தி, ஆணையிட்டு, கல்லூரியிலே படிக்கச் சொன்னார்கள். அப்போது நான் படித்த கல்லூரிதான் இந்த மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி. இந்தக் கல்லூரியிலே படிப்பவர்கள் எல்லாம், மிட்டா மிராசுதாரர்கள் அல்ல; பணக்கார முதலைகள் அல்ல; செல்வச் சீமான்கள் அல்ல; நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், ஏழையெளியவர்கள்தான், இந்தக் கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள். பாரதி சொன்னானே,

"பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்று பாடினானே புரட்சிக் கவிஞன் பாரதி. அந்த பாரதியின் கனவை, நிறைவேற்றுவதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற எங்கள் அன்னை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், இந்தியாவிலே உள்ள அத்தனை தலைவர்களும் பாராட்டக்கூடிய அளவுக்கு, புகழக்கூடிய அளவுக்கு, போற்றக்கூடிய அளவுக்கு, பெண்கள் சமுதாயத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டு வருகிற அம்மா அவர்களுடைய புனித ஆட்சியில், அந்தப் பெண்கள் பயன்படக்கூடிய அளவுக்கு, மீனாட்சி மகளிர் கல்லூரியில், எம்.பி.ஏ. பாடப் பிரிவு, இலவசக் கல்வியாக மாற்றப்படுமா என்பதையும், இந்த வருடமே தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்களே, நமது மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் அறிந்துகொள்ள விரும்புவது, A.I.C.T.E. என்று சொல்லப்படுகிற All India Council for Technical Education அதாவது, அகில இந்திய தொழிற்கல்வி குழுமத்தின் அனுமதி கிடைத்துவிட்டதா என்பதையும் தங்களின் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மேல்நிலைக் கல்வித் துறையில் பல்வேறு புரட்சிகரமான மாற்றங்களைத்



2002 மே 7] [டாக்டர் மு. தம்பிதுரை]

தமிழகத்தில் செயல்படுத்தி வருகின்றார்கள். அதன் அடிப்படையில் தான் பெண்களுக்காக, குறிப்பாக ஆதிதிராவிடப் பெண்களுக்கு இலவசமாகக் கல்வியைப் பட்ட மேற்படிப்பிலும் தருவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். ஆகவே பெண்களுக்கு நல்ல கல்வியைத் தர வேண்டும்; நல்ல உயர் கல்வியைத் தர வேண்டும் என்பது புரட்சித் தலைவி அவர்களுடைய கொள்கை. அதேநேரத்தில் நிதி நெருக்கடியையும் இந்த அரசு சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மதுரை மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரியில் எம்.பி.ஏ., பட்ட மேற்படிப்பைத் துவங்குவதற்கு இந்த ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி தந்து இருக்கிறார்கள். சுயநிதி பாடத் திட்டத்தின் மூலமாகக் கொண்டுவந்தாலும் அங்கு ஏழை மக்களுக்காகக் கல்வியின் அடிப்படையில் அவர்களுக்குத் தனியாக ஒரு கட்டணம் விதிக்கப்படும்; வசதி உள்ளவர்களுக்கு அதிகமான கட்டணம் விதிக்கப்படும்; அப்படி இரண்டு வகைக் கட்டணமானது அங்கு இருக்கிறது. இது அரசால் ஒரு குறைந்த அளவுக்குத்தான் நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தின்கீழ் மாணவிகள் கட்டுகின்ற அந்தக் கட்டணமானது ஓரளவுக்குக் குறைக்கப்பட்டுத்தான் அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. ஒரு கல்லூரியில் இத்தகைய பாடங்கள் துவங்க வேண்டும் என்றால், அதற்கு அடிப்படை வசதிக்காகப் பல இலட்சக்கணக்கான ரூபாய் முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த முதலீடு செய்வதற்கு புரட்சித் தலைவி அவர்கள் முன்வந்து இருக்கின்றார்கள். அந்த அளவுக்குக் கட்டட வசதி மற்ற வசதிகளை எல்லாம் செய்வதற்கு இந்த அரசு முன்வந்து இருக்கிறது. இப்போது கட்டணம் என்பது ஓரளவுக்குத்தான் இருக்கிறதேயொழிய அதிகமான அளவில் நிர்ணயிக்கவில்லை. ஆகவே, ஏழைப் பெண்கள் படிப்பதற்காக அத்தனை வசதிகளையும் புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்ற செய்தியைச் சொல்லிக்கொள்கிறேன். 64 அரசினர் கலைக் கல்லூரிகள் இருக்கின்றன; அவ்வாறு இருக்கையில் இந்த ஆண்டு ஒருசில கல்லூரிகளுக்குத்தான் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, பெண்கள் கல்லூரியாகிய மதுரை மீனாட்சி அரசினர் கல்லூரிக்கு இந்த எம்.பி.ஏ., மேற்பட்ட படிப்புக்கு அனுமதி தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## (ஆ) குடிநீர் இணைப்பு வழங்குதல், மூலப்பாளையம் கிராமம், ஈரோடு மாவட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு ஒன்று அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. மு.பெ. சாமிநாதன்.

***திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், எரிசனம்பாளையம் ஊராட்சி, மூலப்பாளையம் கிராமத்திற்கு குடிநீர் இணைப்பு வழங்காமலிருப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைககப்பட்டுள்ளது.

### அறிக்கை

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், எரிசனம்பாளையம் ஊராட்சியில் உள்ள கோம்பை மற்றும் கோம்பை அரிசன காலனி ஆகிய குடியிருப்புகளின் நீராதாரங்களில் குடிநீர் தன்மை பாதிக்கப்பட்டமையால், அமராவதி ஆற்றில் நீர் உறிஞ்சு கிணறு அமைத்து குடிநீர் வழங்க ரூ.9.50 இலட்சங்களுக்குக் குடிநீர்த் திட்டம் உருவாககப்பட்டு, நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவுற்று தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

2. இத்திட்டத்தினால் பயன்பெறும் தற்போதைய மக்கள் தொகை 650 ஆகும். இத்திட்டம் உச்சக்கட்ட மக்கள் தொகையான 910-க்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தற்போதைய குடிநீரின் அளவு, நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 55 லிட்டராகும். இத்திட்டம் ஊராட்சி அமைப்பிடம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டபின்பு, வீடுகளுக்குப் புதிய குழாய் இணைப்புகளுக்கான விண்ணப்பங்கள் உள்ளாட்சி அமைப்பின் மூலம்



கோரப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், இந்த நிதியாண்டில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

3. இதே ஊராட்சியைச் சார்ந்த மூலப்பாளையம் குடியிருப்பு, இத்திட்டத்தின் வழியோர கிராமமாகும். இக்குடியிருப்பின் சில பகுதிகள் மட்டுமே குடிநீர் வசதி பெற்றதாகும். இக்குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2002-2003) குடிநீர்த் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

4. எனினும் மூலப்பாளையம் குடியிருப்பின் மக்கள், தற்காலிகமாக மேற்கண்ட திட்டத்திலிருந்து தற்போதுள்ள மேல்நிலைத் தொட்டிக்கு நீர் ஏற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். மூலப்பாளையம் குடியிருப்பின் தண்ணீர்ப் பற்றாக்குறையைக் கருதியும் வரப்போகும் கோடையின் வறட்சியை எண்ணியும், மேற்கூறிய திட்டத்திலிருந்து மூலப்பாளையம் குடியிருப்பின் மேல்நிலைத் தொட்டிக்குக் குழாய் இணைப்பு 15-4-2002 அன்று கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு ஏறத்தாழ மேதகு ஆளுநர் உரையின்போது கொடுக்கப்பட்டது; இந்தக் கூட்டத் தொடரே முடிய இன்னும் 2, 3 நாட்கள் இருக்கும்போது இதற்கு பதில் வந்து இருப்பது, இந்த அரசு குடிநீர்ப் பிரச்சினையில் எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உங்கள் கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு மறுக்கப்பட்ட ஒன்று; உங்களுடைய வற்புறுத்தலுக்காகத்தான் நான் அதை எடுத்தேன். நீங்கள், அதெல்லாம் உள்ளாட்சித் துறை மானியத்திலே பேச வேண்டிய ஒன்று. அதனால், சும்மா கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கக் கூடாது. என்ன என்று கேளுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே பதில் வராமல், அதேநேரத்தில் அங்கே குடிநீர் இணைப்பு வழங்காமல் உள்ளதைப் பொது மக்கள் அறிந்த பிறகு, ஏறத்தாழ உயர் நீதிமன்றத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அதற்குப்பிறகு அதன் உத்தரவு பெறப்பட்ட காரணத்தினாலேதான், குடிநீர் வழங்கப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த மூலப்பாளையம் கிராமத்திற்காகத்தான் கழக

ஆட்சியின்போது அமராவதி ஆற்றிலே நீர் உறிஞ்சு கிணறு அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு, ஃப்ளோரைனால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு முக்கியத்துவம் தரப்படும் என்ற அடிப்படையில் அந்த மூலப்பாளையம் கிராமம் வழியாக இந்தக் குடிநீர்த் திட்டத்தை எடுத்துச் செல்கின்ற நேரத்தில் அங்கே பொதுமக்கள் அந்தப் பணியைத் தடுத்தார்கள். அதற்குப் பிறகு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் என்னிடத்தில் தொலைபேசியில் தொடர்புகொண்டு இதுபோன்ற ஒரு பிரச்சினை ஏற்பட்டு இருக்கிறது. தாங்கள் தலையிட்டு அதை நிவர்த்தி செய்து தாருங்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நானும் அவரும் அந்தக் கிராமத்திற்கு நேரடியாகச் சென்று பொதுமக்களை அழைத்துப் பேசி, நீங்கள் அந்தப் பணியைத் தடுக்காமல், அந்தப் பணி நிறைவேற ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்ட நேரத்தில், ஏற்கெனவே 10 ஆயிரம் லிட்டர் மேல்நிலைத் தொட்டி உள்ளது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** அதிலே மட்டும் இப்போது எங்களுக்கு ஒரு இணைப்புக் கொடுங்கள். பிறகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது குடிநீர் வடிகால் வாரியத்தில் இருந்தோ 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி கட்டி, அதற்குப்பிறகு குடிநீர் வழங்குங்கள் என்று சொன்ன பிறகு, அதற்குப்பிறகு பேச்சுவார்த்தை முடிந்து அந்தப் பணி துவங்கியது. ஆனால் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் பேசிய பிரகாரம் நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் மீண்டும் உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கப்பட்டு அதற்குப் பிறகு உத்தரவு பெறப்பட்டது. அந்த அடிப்படையில் இப்போது அந்தக் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு இருந்தாலும், அமைச்சர் அவர்கள் தெரிவித்த பிரகாரம், அதேபோலப் பொதுமக்கள் தெரிவித்த பிரகாரம் இணைப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், குடிநீர் சரியாக வழங்கப்படவில்லை. காரணம், யார் தடுத்தார்களோ, அந்த ஊராட்சி நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்தக் கிராமத்திற்கு, மூலப்பாளையம் குடியிருப்புப் பகுதிக்கு வருகிற 2002-2003 ஆம் நிதியாண்டில் தனியே தொட்டி அமைப்பதற்கு திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 15-4-2002 அன்று முதல் இன்றுவரை தொடர்ந்து நல்ல குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பிறகு அமைச்சரிடம் கேளுங்கள்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 36 முதல் 42 வரையிலான 7 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 5-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



### (ஆ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை...

**திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கிறீர்களா? இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவிலே ஆரம்ப நிலையிலேயே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் அறிமுகப்படுத்திவிடட்டும். (குறுக்கீடு). அமைச்சர் அறிமுகப்படுத்தி விடட்டும்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ரங்கநாதன், உங்களைப் பிறகு கூப்பிடுகிறேன். திரு. எஸ். ஆர். பி. அவர்கள்.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் எதிர்க்கிறேன்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை, இது ஆய்வு இல்லை. எதிர்க்கிறீர்களா, என்பதைச் சொல்லுங்கள்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே நாங்கள் இதை எதிர்க்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நாங்கள் என்றால்? மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.* (இல்லை)

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## 7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஆ) பேரவை உறுப்பினர்களுக்கு ஆளுநர் மாளிகையில் அளிக்கவிருக்கும் விருந்திற்குச் செல்ல பேருந்து வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் இன்று (7-5-2002) இரவு 8-00 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் விருந்து அளிக்க உள்ளார்கள். அதற்கான அழைப்பிதழ்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன. உறுப்பினர்கள்*



*சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்புகளிலிருந்து ஆளுநர் மாளிகைக்குச் சென்று திரும்பப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பேருந்துகள் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்புகளிலிருந்து முறையே இரவு 7-00, 7-15, மற்றும் 7-30 மணிக்குப் புறப்படும். விருந்து முடிந்ததும் ஆளுநர் மாளிகையிலிருந்து பேருந்துகள் மூலம் உறுப்பினர்கள் குடியிருப்புகளுக்குத் திரும்ப அழைத்து வரப்படுவார்கள். எனவே, உறுப்பினர்கள் அனைவரும் தவறாது விருந்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

### (இ) அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *இன்று காலையிலும், பிற்பகலிலும் எடுத்துக்கொள்ள இருக்கின்ற மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் இரண்டு மானியக் கோரிக்கைகளையும் ஒன்றாகவே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-35*

## 9. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### (அ) கோரிக்கை எண் 26 - தொழில் துறை

### (ஆ) கோரிக்கை எண் 10-வணிக வரித் துறை — வணிக வரிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26—தொழில் துறை, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தொழில் துறை மானியக் கோரிக்கை எண் 26-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.47,85,96,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6360, திரு. ஆர். சக்கரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரம் தொகுதியில் தொழிற்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 739, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் உள்ள காட்பாடி வெடிமருந்து தொழிற்சாலையை நவீன முறையில் விரிவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7401, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4431, திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6573, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3924, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4535, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1358, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8063, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் தொழிற்பேட்டை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6598, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1960, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5038, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7308, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5580, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5477, திரு அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 837, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2372, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாப்பநாசம் தொகுதியில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலை ஒன்று புதிதாகத் துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1877, திரு. ரா. ஈஸ்வரன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1020, திரு. ப. ரங்கநாதன்.



**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7116, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7012, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5919, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடனுதவி வேண்டி விண்ணப்பிக்கும் தொழில் முனைவோருக்கு உடனடியாகக் கடன் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16 திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சிப்பகுதியான ராதாபுரம் தாலுகா பகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7781, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6066, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1530, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தொழிற்சாலைகள் நிறைந்த திருவெறும்பூர் தொகுதியில் மென்பொருள் பூங்கா தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6265, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8180, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'டன்லப், மெட்டல் பாக்ஸ், பி. & சி. ஆலை, ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் மற்றும் மூடப்பட்டுள்ள அனைத்துத் தொழிற்சாலைகளையும் திறப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3848, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மிகவும் பின்தங்கிய உசிலம்பட்டி தொகுதியில் உள்ள மக்களுக்கு

வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தர தொழிற்சாலைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 367, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6406, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலுள்ள சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2219, திரு. கோவை தங்கம்.



**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தேயிலை பறிக்கும் தொழிலைத் தவிர வேறு தொழில் அங்கு இல்லாததால் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கும் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர அரசு அப்பகுதியில் தொழிற்பேட்டை அமைத்து வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 912, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் தொழில் வளம் பெற தொழிற்சாலைகளுக்கு அரசு மின்சாரத்தை பாதி விலையில் வழங்க வேண்டிய அவசியம் பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8109, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6907, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குமரி மாவட்டத்தில் கிடைக்கும் பழங்களைப் பயன்படுத்திப் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7957, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5224, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4133, திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1552, திருமதி எஸ். மகேஸ்வரி.



***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மூடிய ஆலைகளைத் திறக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7001, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலுள்ள சிப்காட் வளாகத்தில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,85,96,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7112, திரு. எச். ராஜா, இருக்கையில் இல்லை.

முற்பகல் 11-40

## (ஆ) கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை-வணிக வரிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10— வணிக வரித் துறை-வணிக வரிகள், மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரித் துறை-வணிக வரிகள் மானியக் கோரிக்கை எண் 10-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.240,19,11,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6356, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 694, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிட்டா நூலுக்கு விதிக்கப்பட்டுள்ள வணிக வரியை ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7360, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4425, திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 156, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய வணிக வரி வசூலை விரைவுபடுத்துவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3913, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3993, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1350, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7985, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4155, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1944, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4959, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6802, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5389, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ரூபாய் 3,000/-க்கு மேற்பட்ட விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள பட்டுப் புடவைகளின் இருப்புமீது குறைந்த அளவிலான 1 விழுக்காடு ஆடம்பர வரி விதிக்கும் வகையில் ஆடம்பர வரிச் சட்டத்தைத் திருத்தியமைக்க உள்ளதை ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 821, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1893, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2402, திரு. துரை, கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1004, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6968, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் வரிச் சீர்திருத்தக் கொள்கையினை மறுபரிசீலனை செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7023, டாக்டர் தே. குமாரதாஸ்.



**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5942, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரிசி, கோதுமை ஆகியவை மீது விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1497, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் சிறு பெயிண்ட் உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரிகளைக் கேரள அரசு போல் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7783, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7690*, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1274*, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரிசி மற்றும் கோதுமை மீதான வணிகவரி ரத்து செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1117*, திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உணவு எண்ணெய்களுக்குப் போடப்பட்டுள்ள விற்பனை வரியை அரசு குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3750*, திரு. ஏ.எஸ். கண்ணன்.



**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காகிதத்தின் மீதான வரியினைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3845*, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நிலுவையிலுள்ள வணிக வரிகளின் பாக்கிகளை வசூல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *397*, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சர்சார்ஜ் வரிகளை ரத்து செய்துவிட்டு வெறுமனே விற்பனை வரிகளை விதிப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6182*, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள திரை அரங்குகள் அரசு நிர்ணயித்த கட்டணங்களுக்கு மேல் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம்

பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4476, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பலமுனை வரி பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4622, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரிசிக்கு 2% கோதுமைக்கு 2% வரி உயர்வைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 922, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் மீண்டும் ஒருமுனை வரி கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8213, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள அனைத்து வணிக வரிச் சோதனை சாவடிகளிலும் இண்டர்நெட் தொலைதொடர்பு வசதி ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6269, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசு நிர்ணயம் செய்த கட்டணத்திற்கு மேல் அதிக கட்டணம் வசூலிக்கும் திரையரங்குகளின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6904, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir, 'to discuss the need to reduce the Agricultural Income Tax of 65% levied to plantation industry on par with Central Income Tax', I move—

"That the sum of Rs.240,19,11,000/- allocated under Revenue Account under Demand No.10—Commercial Taxes Department, Commercial Taxes be reduced by Rs.100/."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7931, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் அதனால் கோரப்படும் [illegible] ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்கப்பட வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் [illegible]. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் அதனால் கோரப்படும் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.240,19,11,000/-ல் ரூ.100/- குறைக்கப்பட வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக [illegible] கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பொ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் வணிக வரித் துறை - வணிக வரிகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் ஆற்றிய உரையாகக் கருதி, அவற்றை இந்த அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளையும் [illegible] வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இறுதியில் உறுப்பினர்களது கருத்துகளுக்கு எனது பதிலுரையில் விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 229 முதல் 282 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

***திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மற்றும் வணிக வரிகள் துறையில் பேச எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக முதலிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, தமிழ்நாட்டிலே மிக முக்கியமாகப் பொருளாதாரத்தைச் சரி செய்ய வேண்டும் என்று சொன்னால் அல்லது நீங்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியதைப்போல, பணப்புழக்கம் தமிழ்நாட்டிலே இருக்க வேண்டும் என்று சொன்னால், தமிழ்நாட்டில் தொழில் நன்றாக இருக்கவேண்டும். அதேபோல, விற்பனை வரியிலே உள்ளடங்கிய எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி, வியாபாரமாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தினுடைய கெடுபிடிகள் இல்லாமல் ஒரு சுமுகமான சூழ்நிலையிலே வியாபாரமும், தொழிலும் நடந்தால்தான் அரசாங்கத்திற்கு வருகின்ற வருவாயும் எந்தவிதமான தடைகள் இல்லாமல் சரியான முறையில் வரமுடியும், வரி கொடுப்பவர்கள் சிரமம் இல்லாமல், சந்தோஷமாக வரி கொடுக்கக்கூடிய சூழ்நிலையை தமிழ்நாட்டிலே நீங்கள் உண்டாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முதலிலே இந்த நேரத்திலே உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

ஆனால் இப்போது நம்முடைய பெருந்தொழில்கள் அறிக்கையிலே, இரண்டாவது பாராவிலே 'நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சிகளை ஆய்வு செய்வதற்காக, கொள்கை முடிவுகளை எடுக்க காலமுறைப்படி கூடி கலந்து ஆலோசிக்கப்படும்' என்று அந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. தேர்தல் முடிந்து 10 மாத காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொழிலதிபர்களை அழைத்துப் பேசி அவர்களுக்குள்ள சிரமங்களைப் புரிந்து கொண்டு அதைத் தீர்க்கக்கூடிய நடவடிக்கைகளை இந்த அரசோ, முதலமைச்சர் அவர்களோ, சம்பந்தப்பட்ட அமைச்சரோ எடுக்கவில்லை என்பதை நான் முதலிலே குறையாக இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நாம் கலந்து பேசியிருப்போம் என்று சொன்னால், இப்போது தொழில், இந்தியாவில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகம் பூராவும் மிகவும் சிரமமான சூழ்நிலையில்..

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறும் கருத்துத் தவறான கருத்து. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், நானும் தொழிலதிபர்களை அழைத்துப் பேசியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் கடந்த ஓராண்டு காலமாகப் பல தொழிலதிபர்கள் என்னைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சென்ற ஆண்டு Confederation of Indian Industry நடத்திய ஆண்டு மாநாட்டில், வருடாந்திர மாநாட்டில் சென்ற ஆண்டு நான் கலந்துகொண்டு ஏறக்குறைய 500-க்கும் மேற்பட்ட பெரிய தொழிலதிபர்களைச் சந்தித்தேன். அதேபோன்று இந்த ஆண்டும் Confederation of Indian Industry நடத்திய வருடாந்திர மாநாட்டில் கலந்துகொண்டு 600-க்கும் மேற்பட்ட தொழிலதிபர்களைச் சந்தித்து அவர்களுடன் ஒரு மணி நேரத்திற்கு மேல் நீண்ட விவாதம் நடத்தி அவர்களுடைய குறைகள் என்ன என்பதை அறிந்து, அவர்களுடைய எதிர்பார்ப்புகள் என்ன என்பதையும் அறிந்து அதன்மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர்களுக்கு உத்தரவாதமும் அளித்து, அதற்கான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழில்கள் கொள்கை விளக்கக் குறிப்பில், அப்படிப் பேசி, நம்முடைய தொழிலதிபர்களுக்கு வேண்டிய, வெளிப்படையான சலுகைகள் என்னென்ன வேண்டுமோ, அதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதாக எந்த இடத்திலும் சொல்லவில்லை. அதில் எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், 'கொள்கை முடிவுகளை எடுக்க காலமுறைப்படி கூடிக் கலந்து ஆலோசிக்கப்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய, வேறுவிதமாக அறிக்கையிலே இல்லை. இதை எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால், இப்போது Hindu பேப்பரைப் பார்த்தோம் என்று சொன்னால், 5-வது பக்கத்திலே, Assembly attack silences industry என்று நம்முடைய தொழிலதிபர்கள் இந்த அரசின் நடவடிக்கைகள்பற்றிக் கவலையடைந்து இருப்பதாக எழுதியிருக்கிறார்கள். Hindu பத்திரிகை ஒரு நடுநிலையான பத்திரிகை.



அந்தப் பத்திரிகையிலே தொழில் முனைவோர்கள் தமிழ்நாட்டில் தொழில் ஆரம்பிப்பதற்கு..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hindu பத்திரிகை நடுநிலையிலிருந்து தவறி நீண்டகாலம் ஆகிவிட்டது; (மேசையைத் தட்டும் ஒலி) அதெல்லாம் அந்தக் காலம். இப்போது இல்லை. இன்றைக்கு இந்தத் தொழில் துறை மானியக் கோரிக்கை வருகிறது என்பதைத் தெரிந்தே Hindu நாளேட்டில் ஒரு விமர்சனக் கட்டுரையை வெளியிட்டு இருக்கிறார்கள். இது இப்போதெல்லாம் Hindu பத்திரிகைக்கு வாடிக்கையாகிவிட்டது. எந்த முக்கியமான மானியக் கோரிக்கை இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்பட்டாலும், அதை விமர்சித்து அன்றையதினம் ஒரு கட்டுரையை வெளியிடுவது அவர்களுக்கு வாடிக்கையாகிவிட்டது. இன்றைக்கு Hindu பத்திரிகை வெளியிட்டு இருக்கிற அந்தக் கட்டுரையையும் நான் படித்தேன். ஏதோ தொழில் அதிபர்களெல்லாம் அச்சத்தில் இருப்பது போன்று ஒரு சூழ்நிலை நிலவுவதாக அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அது உண்மையல்ல, இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் ஏற்கெனவே இங்கே நடைபெற்ற விவாதங்களின்போது ஒரு தொழிலதிபரைக் குறிப்பிட்டார். அதைப் போலவே நான் இங்கே பேசுகிறபோதும் ஒரு தொழிலதிபரைத்தான் குறிப்பிட்டேன். ஆகவே இன்று யாராவது அச்சத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த ஒரு தொழிலதிபர்தான் அச்சத்தில் இருக்க நியாயம் இருக்கிறதே தவிர, மற்ற தொழிலதிபர்களுக்கு இது பொருந்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் Hindu பத்திரிகையைப் படிப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. நானும் அவரும், தினத்தந்தி, தினமணி, தினமலர்தான் படித்துப் பழக்கம். (சிரிப்பு).

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் வாழ்க்கையிலேயே முதல் முறையாக இன்று தான் Hindu பத்திரிகையைப் படித்து இருப்பார் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2002 மே 7

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hindu பத்திரிகையைப் படிப்பதைவிட அதில் என்னென்ன முக்கியமான செய்திகள் வருகின்றன என்பதைச் சராசரியாக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தினசரி படிக்கிற வாடிக்கையை வைத்திருக்கிறேன்.

முற்பகல் 11-50

மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டுவருவதற்குக் காரணம், முதலமைச்சர் நம்முடைய தொழில் முனைவோர் கவலை அடைவதாகக் கூடக் குறிப்பிட்டதை தாண்டி, அதையும் தாண்டி, ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே, யாராவது அந்தத் தொழிற்சாலையைப் பற்றிப் பேசுவார்கள் என்று சொன்னால் அவர்களைத் தி.மு.க., அண்ணா தி.மு.க. என்று சொல்கிறார்கள். இல்லையென்று சொன்னால் உடனடியாக மாசுக்கட்டுப்பாடு வாரியத்திலிருந்து நோட்டீஸ் அனுப்பி மிரட்டப்படுகிறார்கள் என்ற வாக்கியம் அதில் இருக்கிறது. இதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து தொழிலதிபர்களுக்குள்ள சிரமங்களைப் புரிந்துகொண்டு நமது அரசாங்கம் நடக்கும் என்று சொன்னால், நிச்சயமாக ஒரு நல்ல தொழில்வளம் மிக்க நாடாக நாம் உண்டாக்கமுடியும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே இந்த மாநிலத்தை முதல் மாநிலமாக ஆக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி முதல் மாநிலமாக வரவேண்டுமென்று சொன்னால் தொழிலதிபர்களுக்கும் வியாபாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு சுமுகமான உறவு இருக்கவேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தக் கோரிக்கையை நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் என்னுடைய தலைவர் டாக்டர் கலைஞர் ஆட்சியிலே ஒவ்வொரு தடவையும் பார்ப்போமென்று சொன்னால், கடைசி இரண்டு வருடங்களிலே வியாபாரிகளை, தொழிலதிபர்களை அழைத்து வைத்துப் பேசித்தான் அன்றைக்கு Sales Tax போடுவதாக இருந்தாலும் சரி, அதிலே மாற்றங்கள் இருந்தாலும் சரி, அன்றைக்குக் கலந்து செய்திருக்கிறார்கள். ஆகையினால் அவருடைய காலத்திலே விற்பனை வரி குறைக்கப்பட்டாலும்கூட பலமுனை வரி அன்றைக்கு இல்லாமல் இருந்தாலும்கூட, அன்றைக்கு வரியினுடைய விகிதாச்சாரம் குறைந்தாலும்கூட வருமானம் அன்றைக்கு மிக அதிகமாக இருந்திருக்கிறது. காரணம் வியாபாரிகளைக் கசக்காத



2002 மே 7] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

ஒரு அரசாங்கம் அந்த [illegible] இன்னும் நான் சொல்லவேண்டுமென்று சொன்னால் அரசாங்க அதிகாரிகள் கைக்கு அதிகாரம் போகுமென்று சொன்னால் தொழிலதிபர்களும், வியாபாரிகளும் பயப்படக்கூடிய சூழ்நிலை வரும். பொதுவாக Sales Tax அதிகாரிகள் கைக்கு அதிகாரம் போகுமென்று சொன்னால் [illegible] அதிகமாக இருந்தாலும் சரி, [illegible] இருந்தாலும் சரி, [illegible] கணக்குகளைச் சரிபார்ப்பதைவிட [illegible] என்ன [illegible] வைத்திருக்கிறீர்கள்? இது [illegible] குறித்து வைத்திருக்கிறீர்கள் என்று [illegible] சூழ்நிலைகள் எல்லாம் [illegible] ஐந்தாண்டு [illegible] சூழ்நிலை [illegible] வியாபாரிகள் [illegible] வியாபாரம் [illegible] சூழ்நிலை [illegible] அப்படிப்பட்ட சூழ்நிலை [illegible] அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை [illegible] அவர்கள் எடுக்க வேண்டுமென்று [illegible] நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன் [illegible].

[illegible] சென்ற [illegible] இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பற்றி வெளியிட்ட அறிக்கையில் தமிழ்நாடுதான் மிகச் சிறந்த மாநிலமாக முதலிடத்தில் உள்ளது என்று சொல்லி அன்றைக்கு C.M.Y.E. அறிக்கையில் சொல்லியிருக்கிறது. அதுமட்டுமல்ல, அன்றைக்கிருந்த பத்திரிகைகள்கூட, தமிழ்நாடு பத்திரிகைகள் அல்ல, வெளி மாநிலத்திலே இருந்து வருகிற ஆங்கிலப் பத்திரிகைகள் எல்லாம் கலைஞர் அரசாங்கத்தைப் பாராட்டியிருக்கின்றன. ஏனென்றால் கடன் வைப்புத் தொகையில் விகிதாச்சார அடிப்படையில் அகில இந்திய அளவிலே தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றிருக்கிறது என்று 06-07-1998-ஆம் ஆண்டு நாளிட்ட Times of india நாளிதழ் அந்த அரசாங்கத்தை - கலைஞர் அரசாங்கத்தை - அன்றைக்குப் பாராட்டியிருக்கிறது.

இன்னொன்று, கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் அதிக அளவில் இருப்பது தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையைத் தமிழகத்திலே உண்டாக்கியிருக்கிறது என்று அன்றைக்குப்

பாராட்டியிருக்கிறார்கள். அகில இந்திய விகிதாச்சாரம் 55.5 ஆக இருந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே விகிதாச்சாரம் 92.3 ஆக அன்றைக்கு இருந்திருக்கிறது. அதேபோல, தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின்னால் ஏற்றுமதி அடிப்படையிலே தமிழ்நாடுதான் மிகச்சிறந்த மாநிலமாக இருக்கிறதென்று 28-4-1999 நாளிட்ட Economic Times பத்திரிகை அன்றைக்குப் பாராட்டியிருக்கிறது. அதேபோல லண்டனிலிருந்து வெளிவரும் Financial Times 1996 ஆம் ஆண்டு சென்னை இந்தியாவின் டெட்ராய்ட் என்று சொல்லி வர்ணித்திருக்கிறது. ஆகையால் எல்லா வகையிலும் கலைஞர் அரசாங்கத்தை அன்றைக்கு இருந்த தொழிற் சாலைகளிலே, தொழில் வளத்திலே மிகச் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை வர்ணித்திருக்கிறார்கள். அதேபோன்ற சூழ்நிலை இன்றைக்கு வருமா என்று பார்த்தால், இங்கே இருக்கக்கூடிய பெருந்தொழில்கள் மானியக்கோரிக்கையிலே புதிய தொழிற்சாலைகளாக இந்த ஆண்டு இன்னின்ன தொழிற்சாலைகள் வரும் என்று பெரிய அறிவிப்புகள் எதுவுமே இல்லை.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் வெளியிடும் அறிக்கையில் தமிழகம் முதன்மையாக இருந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-1996-ல் தமிழகத்தில் மொத்த முதலீடு செய்தது ரூ. 90,650 கோடியாகும். ஆனால் 1996-2001-வரையிலான தி.மு.க. ஆட்சியில் முதலீடு செய்த தொகை ரூ. 67,024 கோடி மட்டுமே ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியைவிட சுமார் ரூ. 23,626 கோடி குறைவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியது இந்த ஆண்டிலே, இன்னின்ன பெரிய தொழிற்சாலைகள் இன்னின்ன வெளிநாட்டு உதவியோடு அல்லது இன்னின்ன தொழிலதிபர்கள் இந்த ஆண்டிலே தொழிற்சாலைகளை ஆரம்பிக்கப்போகிறார்கள் என்று குறிப்பு எதுவுமே இதிலே இல்லை; நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால் இப்போது அரசாங்கத்திலே வேலைவாய்ப்புக் குறைந்து கொண்டிருக்கிறது. இருக்கிற தொழிற்சாலைகளை மூடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே புதிதாக நாம் ஏதாவது



செய்யவில்லையென்று சொன்னால், வருங்காலத்திலே படித்த பட்டதாரிகள் எல்லாவிதமான தவறும் செய்வதற்கு அவர்கள் உடந்தையாக இருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். விருதுநகரிலே பார்ப்போமென்று சொன்னால் ஒரு களவு செய்தவர்களை போலீஸ்காரர்கள் பிடிக்கிற நேரத்திலே பட்டதாரிகள்தான் களவு செய்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. ஆனால் வேலைவாய்ப்புக் கிடைக்கவேண்டும் என்று சொன்னால் தொழிற்சாலைகளை நாம் உண்டாக்க வேண்டும். இருக்கிற தொழிற்சாலைகளைக் காப்பாற்றியாக வேண்டும். அந்த அடிப்படையிலே வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

இப்போது பவர் லூம்களுக்கு மின்சாரக் கட்டணத்தை நீங்கள் குறைத்திருக்கிறீர்கள். அதற்கு எங்களுடைய கட்சியின் சார்பாக நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் அதேநேரத்திலே தமிழகத்திலே மிகப் பாரம்பரியமான தொழிலாக இருக்கக்கூடியது பஞ்சாலைத் தொழில் ஆகும். இப்போது இந்தியாவிலேயே அதிகமான பஞ்சாலைகள் இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான். பரம்பரையாக பஞ்சாலைகள் இங்கே அதிகமாக இருக்கின்றன. இங்கே பஞ்சு விளைச்சல் குறைவாக இருந்தாலும்கூட அதிகப்படியான பஞ்சாலைகள் இருப்பது தமிழ்நாட்டிலேதான். ஆனால் தமிழ்நாட்டிலே இந்தப் பஞ்சாலைகள் தொடர்ந்து மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு இருக்கின்ற மின்சாரச் சுமை, அதற்கு இருக்கின்ற வரிச் சுமை என்று பல வகையிலே இப்போது பலசிரமங்களுக்கு நம்முடைய அந்தத் தொழில் அதிபர்கள் ஆளாகியிருக்கிறார்கள். அந்தத் தொழிலதிபர்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழில் துறை அமைச்சர் அவர்களும் அழைத்துப் பேசி இந்தப் பஞ்சாலைத் தொழிலில் இருக்கின்ற சிரமங்களை நிச்சயமாகப் போக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் பேசுகின்றபோது பஞ்சாலைத் தொழிலினுடைய நலிவுக்கு ஏதோ நமது அரசுதான் காரணம் என்பதுபோலக் கூறுகிறார்கள். அவர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒன்றைச் சொல்கிறேன். பஞ்சாலைத்

தொழிலினுடைய முக்கிய நலிவுக்குக் காரணம் W.T.O. ஒப்பந்தம் அந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு வெளிநாடுகளிலிருந்து துணியை இறக்குமதி பண்ணக்கூடிய ஒரு தவறான கொள்கை முடிவை மைய அரசு எடுத்து இருக்கிறது. அப்படி வெளிநாடுகளிலிருந்து ஏராளமான துணி வந்துவிடுகிற காரணத்தாலும் நமக்குத் தேவையான பஞ்சை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி பண்ணுவதற்கும் Import duty போடுகிற காரணத்தாலும் தொழிற்சாலைகள் நலிவுற்ற நிலையிலே இருக்கின்றன. இதை மாற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம் இருக்கிற மைய அரசிடம் கட்டாயம் இதை வலியுறுத்தவேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டிலே இருக்கிற பஞ்சாலைத் தொழில் செழிப்பான நிலைக்கு வரும். அந்தத் தொழிலாளிகளுக்கும் வாழ்வு மலரும் என்பதனை அவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதை எடுத்தாலும் இப்படி மத்திய அரசாங்கத்தைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். என்ன காரணம் என்று சொன்னால் பஞ்சாலைத் தொழிலில் வெளிநாட்டிலிருந்து வருகின்ற துணிகளுக்கோ அல்லது பஞ்சுக்கோ போட்டியாக நாம் இருக்க வேண்டிய காலக் கட்டாயம் இருக்கிறது. அது எந்த அரசாங்கமாக இருந்தாலும்சரி; நீங்கள் இருந்தாலும் சரி; நாங்கள் இருந்தாலும் சரி அல்லது வேறு யார் வந்தாலும் சரி; இந்தப் பிரச்சினை இருந்து கொண்டுதான் இருக்கும். அதை எப்படிச் சமாளிப்பது என்பதுதான் இப்போது இருக்கிற பிரச்சினை. அதை எப்படிச் சமாளிக்க வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி மட்டும் அந்தத் தொழிலதிபர்களை அழைத்துப் பேசி அவர்களுடன் போட்டி Competition போடுவதற்கு உங்களுக்கு என்ன சலுகை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டால் தான் அதற்கு உரிய விடிவுகாலம் வரும என்பதை நான் இந்தநேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வெளிநாட்டிலிருந்து பஞ்சு வருகிறது. நாங்களும் அந்தப் பஞ்சை வாங்குகிறோம். குறைந்த விலைக்குக் கிடைத்தால் அங்கே வாங்குகிறோம். குறைந்த கிடைத்தால் இங்கே வாங்குகிறோம். குறைந்த விலைக்குக் இருப்பது. ஆனால் வெளிநாட்டுப் பொருட்களோடு நாம் போட்டிப் போட்டுத்தான் ஆக வேண்டும். நாம் நினைத்தாலும்கூட இப்போது வெளிநாட்டுப் பொருட்களை நிறுத்த முடியாது. அந்த வெளிநாட்டுப் பொருட்களோடு போட்டிப் போடுவதற்கு உரிய அந்த வாய்ப்பு வசதிகளை நம்முடைய தொழிலதிபர்களுக்கு வழங்கக்கூடிய ஒரு



சூழ்நிலையை நீங்கள் நிச்சயம் உண்டாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உங்களுடைய ஆட்சியில் 1992-93 ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ. 6,808 கோடியாகும். ஆனால் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே 1996-97-ல் ரூ. 17802 கோடியும். 1997-98-ல் ரூ. 18,952 கோடியும். 1999-2000-ல் ரூ. 21,357 கோடியும் இங்கேயிருந்து ஏற்றுமதி ஆகியிருக்கிறது. ஆகவே எல்லாவகையிலும் அந்த அரசாங்கத்திலே கலைஞர் அவர்கள் சாமர்த்தியமாக எல்லா வேலைகளையும் செய்து ஏற்றுமதி எல்லாம் நடந்திருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலை இப்போது இருக்கின்ற இந்தத் தொழில்துறையில் இல்லை. நலிவுற்ற நிலையிலே உள்ளதை இந்த அரசாங்கம் அப்படி கொண்டு வரவேண்டிய முனைப்பான வேலைகளைச் செய்தாக வேண்டும்.

அதேபோல, போனஆண்டு அறிவித்த எம்.ஜி.ஆர். அறிவு நகரத்தை மிக வேகமாக ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலையில் ஆரம்பிக்க வேண்டும். அமைச்சர் பேசுகின்றபோது அந்த அறிவு நகரம் எந்த அளவிற்கு இப்போது இருக்கிறது, வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றனவா என்ற குறிப்பை எல்லாம் கட்டாயம் சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, நம்முடைய தமிழ்நாட்டில் உள்ள சிமெண்ட் ஆலை நிறுவனங்கள் நவீனப் படுத்தப்படவேண்டும். தமிழ்நாடு சிமெண்ட் ஆலை இலாபகரமான தொழில் தான். அந்தத் தொழில் இப்போது நமக்கு நஷ்டமாக இருப்பதற்குக் காரணம் Modernisation இல்லாததுதான். எங்களுடைய பகுதியிலே தமிழ்நாடு சிமெண்ட் ஆலை ஆலங்குளத்திலே இருக்கிறது. அதற்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை. நம்முடைய ஆலைகளிலே Modernisation இல்லை. புதிதாக நவீன இயந்திரங்களைப் போட்டு Computerise செய்தால்தான் தனியார்களுடன் போட்டி போடக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்தாக வேண்டும்.

அதேபோலச் சர்க்கரை ஆலைகள். இப்போது தமிழ்நாட்டிலே இருக்கின்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் எல்லாம் நலிந்து போயிருக்கின்றன. நலிந்து போன காரணத்தால் விவசாயிகளுக்குக் கரும்புக்கு உரிய பணத்தை நம்மால் கொடுக்க முடியவில்லை. ஆனால்

தனியார் சர்க்கரை ஆலைகளைப் பார்த்தோம் என்று சொன்னால் அங்கே மின்சாரம் தயாரித்தோ அல்லது புதிதாக Computerise செய்தோ—அந்த புதிய அணுகுமுறையின் காரணமாக—தனியார் சர்க்கரை ஆலைகள் ஓரளவிற்கு இலாபத்தில் நடக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதிலே வைத்துக்கொண்டு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*நண்பகல் 12-00*

இன்னொன்று, சுற்றுப்புறச் சூழ்நிலை சரியில்லையென்று சொல்லி பல இடங்களிலே ஆற்றோரமாக இருக்கின்ற தொழிற்சாலைகளை எல்லாம் மூடிக்கொண்டிருக்கிறோம். அப்படி மூடுவதைவிட அதை எப்படி மாற்றித் தொழில் செய்யலாம் என்று பார்க்கவேண்டும். வெளிநாடுகளிலே இருக்கிற தொழிற்சாலைகள் பக்கத்திலுள்ள சம்பந்தப்பட்ட ஆறுகள் எல்லாம் தூய்மையாக இருப்பதாகத்தான் பத்திரிகைக் குறிப்புகள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் சென்று அதை எப்படிச் செய்யலாம் என்று பார்த்துத் தொழிற்சாலைகளை மூடாமல் தொடர்ந்து நடத்துவதற்கு வேண்டிய வேலைகளையெல்லாம் நிச்சயமாக இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வணிக வரி குறித்து நான் பேச விழைகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அறிக்கையின் மூலம் 3 ஆயிரத்திற்கு மேலே இருக்கிற பட்டுப் புடவைகளுக்கெல்லாம் ஒரு சதவீத வரியை ரத்து செய்தார்கள். அதற்காக நாங்கள் அவர்களைப் பாராட்டுகிறோம். நாங்கள் பாராட்டுகிற அதே நேரத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்வதெல்லாம்; நீங்கள் இவ்வளவு மிகப்பெரிய சலுகைகளைச் செய்கிறீர்கள், ஆனால் வியாபாரிகளை, தொழிலதிபர்களைப் பார்ப்போம் என்று சொன்னால், இந்த Sales Tax Bill-ஐ என்றைக்கு நீங்கள் அறிமுகம் செய்தீர்களோ அன்றைய தினத்திலேயிருந்து தமிழ்நாடு எங்கும் போராட்டம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் அவர்களையும், அமைச்சர்களையும் அவர்கள் எல்லாம் வந்து பார்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற பிரச்சினைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். வரி போட வேண்டாம் என்று சொல்லவில்லை. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சருக்கு நான்



சொல்வது எல்லாம் வரி போட வேண்டாம் என்று சொல்லவில்லை. என்ன வரியை ஒருமுனை வரியாகத்தான் போடச் சொல்கிறார்கள். வரி போட்டாலும் ஒரு இடத்தில் நாங்கள் வரி கட்டுகிறோம். பலமுனை வரி வருகின்ற நேரத்திலே நிறையத் தவறுகள்தான் வரும்; without bill-தான் வரும், வெள்ளைச் சீட்டுத்தான் வருமேயொழிய நிச்சயமாக நீங்கள் நினைக்கிற அந்த வரி வரப்போவதே இல்லை. நீங்கள் எல்லாம் கணக்குப் போட்டு 6 மாதங்கள் கழித்துப் பார்ப்போம் என்று சொன்னால், அதிகாரிகள் தொல்லை இருக்கும். நீங்கள் நினைக்கிற மாதிரி வரி வராது. எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சியிலே பார்ப்போம் என்று சொன்னால், நிறையச் சலுகைகள். ஒருமுனை வரி அன்றைக்குத்தான் ஆக்கப்பட்டது. பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரி ஆக்கிய பிறகு வரி கூடித்தான் இருக்கிறது. 1997-98-ல் ரூ. 6,063 கோடியாக விற்பனை வரி ஏறியிருக்கிறது. அதே வரி ஒவ்வொரு வருடமும் கூடி, அடுத்த வருடம் ரூ. 6,583 கோடியாக வந்திருக்கிறது. அதற்கு மறுவருடம் 7,381 கோடியாக இருக்கிறது. அதற்கு பின்னாலும் ரூ. 8,661 கோடி வந்திருக்கிறது. கடைசியில் 2001-2002-ல் ரூ. 8,905 கோடியாக வரி உயர்வு இருந்திருக்கிறது. ஆகவே, வரி இப்போது இருக்கிற விலைவாசிக்கு ஏற்றாற்போல வியாபாரிகள் நேர்மையாக இருக்கிற நேரத்திலே வரி கூடத்தான் கிடைக்கும். நீங்கள் 690 கோடி ரூபாய் deficit-போதும் என்று நினைக்கிறீர்கள். நிச்சயமாக உங்களுக்கு பட்ஜெட் பற்றாக்குறை சரியாகப் போகக்கூடிய அளவிற்கு வரி கட்டாயம் வரும். ஆனால், எப்போது வரும் என்று சொன்னால் ஒருமுனை வரியாக இருந்தால்தான் வரும். பலமுனை வரியாக இருந்தால் நிச்சயமாக நீங்கள் எதிர்பார்க்கிற வரி வராது. ஆகவேதான், 20 ஆண்டு காலமாக இந்த நடைமுறையையெல்லாம் சரிபார்த்து அதை மாற்றி பலமுனை வரியை ஒருமுனை வரியாகக் கொண்டு வந்திருக்கிறோம்.

இன்னொன்று, இங்கே நாம் கொண்டு வந்திருப்பது நுழைவு வரி. நம்முடைய நிதியமைச்சருக்கே தெரியும். அன்றைக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே வெறும் ரூ. 20 கோடிக்காக அன்றைக்கு நுழைவு வரியை கொண்டு வந்தார்கள். அன்றைக்கு இருந்த எதிர்க்கட்சித் தலைவர்கள், வெளியே இருக்கிற வியாபாரிகள் எல்லாம் அதற்கு ஒரு போராட்டமாக எதிர்ப்பைத் தெரிவித்த நேரத்திலே அன்றைக்கு இருந்த நம்முடைய அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த வரியை வாபஸ் வாங்கிக்கொண்டார்கள்.

ரூ. 20 கோடிக்காகப் பொதுமக்கள் எதிர்ப்பு வேண்டாம் என்று சொல்லி அன்றைக்குப் பெருந்தன்மையாக வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். இப்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியிலே செல்கிற அரசாங்கமாக நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிற காரணத்தால் அப்படி அதை வாபஸ் வாங்குவீர்கள் என்று சொன்னால், நாங்களும் ஒத்துக்கொள்வோம். ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கையை நீங்கள் நிச்சயம் எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், எண்ட்ரா அதிகமாக வியாபாரம் செய்கிறீர்கள் என்று surcharge வரி போடுகிறீர்கள். கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே surcharge வரியையும் additional tax-ஐயும் எடுத்துவிட்டார்கள். ஒரு இடத்திலே single point-ஆக மட்டும் வரி விதித்தார்கள். நாம் இன்றைக்கு போட்டிருப்பது நுழைவு வரி, பலமுனை வரி. Surcharge, additional tax என்று சொல்லி நான்கு விதமான வரிகளைப் போட்டு வியாபாரிகளையும், தொழிலதிபர்களையும் நசுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. நான் நம்முடைய நிதியமைச்சருக்கு. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** இப்போதுதான் சப்ஜெக்ட்டுக்கு வந்திருக்கிறேன். இரண்டு சப்ஜெக்ட்ஸ் இருக்கின்றன. நம்முடைய நிதியமைச்சருக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்வது எல்லாம், தொழில் வளர வேண்டும்; வாழ வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக நீங்கள் reconsider செய்து, சிந்தனை செய்யவேண்டும். உங்களிடம் பேசிய வியாபாரிகள் எங்கள் பத்திரியிலும் பேசினார்கள். நான் அவர்களிடம் சொன்னேன். அமைச்சர் மந்திரியிலும், நிதியமைச்சர் மந்திரியிலும், முதலமைச்சரைப் பார்க்க முடிந்தால் பாருங்கள், நியாயமான கோரிக்கையைச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், இதுவரைக்கும் அப்படிப்பட்ட நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை. முதலமைச்சர் இன்றைக்கு முதலில் அறிக்கை வைக்கிற நேரத்திலே நிறைய அறிவிப்பார் என்று நான்கூட நினைத்தேன். ஆனால் ஒரு percent அந்தச் சேலைக்கு மட்டும் வரியை எடுத்துவிட்டு மீதியை வைத்துவிட்டார்கள். ஆகவே, நான் இங்கே சொல்வது எல்லாம் அன்றாடம் நாம் பயன்படுத்தக்கூடிய எல்லாப் பொருள்களுக்கும் வரி; நீங்கள் பார்ப்பீர்கள் என்று சொன்னால், அரிசிக்கு வரி போட்டிருக்கிறீர்கள். அது எந்தவிதத்திலும் நியாயமில்லை. அரிசிக்கு நீங்கள் வரி போடுகிற காரணத்தால் நமக்கு



என்ன லாபம் வரப்போகிறது? தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் கேரளக்காரர் நெல் கொள்முதல் செய்தால் வரி கிடையாது. தஞ்சாவூரில் நெல்லைக் கொள்முதல் செய்து அந்த நெல்லைக் கேரளாவிற்குக் கொண்டு போய்—அங்கே நம்மைவிட modernised rice mill-கள் நிறைய வந்துவிட்டன. அந்த—modernised rice mill-கள்மூலம் அந்த நெல்லை அரிசியாக ஆக்கி அவன் வரியில்லாமல் வியாபாரம் செய்கிறான். அங்கே ஒரு percent tax ஆனால், நம் ஊரிலே நம்முடைய வியாபாரி இங்கே நெல்லைக் கொள்முதல் செய்தால் இரண்டு percent tax கட்ட வேண்டும். கட்டி அவன் இங்கே அரிசியாக்கிக் கேரளாவிற்குத்தான் விற்க வேண்டும். அப்படி விற்கிற நேரத்திலே அவர்களோடு போட்டி போட முடியவில்லை. ஒரு மூட்டைக்கு 30 ரூபாய் வித்தியாசம் வருகிறது. ஆகவே, நம்முடைய rice mill-கள் எல்லாம்—நீங்கள் யாரை வேண்டுமானாலும் கேட்கலாம். இன்றைக்கு சரியாக ஒரு ஆய்வு எடுத்தால்கூட —இப்போது மூடப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. Rice mill-கள் மட்டுமல்ல, அதைச் சார்ந்து வேலை செய்கிற தாய்மார்கள் எல்லாம் வேலையில்லாமல் போகக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தயவுசெய்து இந்த அரிசிக்குப் போட்டிருக்கிற வரியை, நிச்சயமாகப் பொதுமக்களுடைய சுமையையும் கருதி, இங்கே இருக்கிற தொழிலாளர்கள், தொழிலதிபர்கள், ரைஸ் மில் உரிமையாளர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்று, நிச்சயமாக அந்த 2% வரியைக் குறைக்க வேண்டும்.

*பிற்பகல் 12-05*

அதுமட்டுமல்ல, கோதுமை, பருப்பு, இதெல்லாம் நாம் தினசரி சாப்பிடுகிற பொருட்கள். அன்றாடம் நாம் சாப்பிடுகிற பொருட்களுக்கு எல்லாம் இப்போது நாம் வரி போட்டிருக்கிறோம். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், போன ஆட்சியிலே மக்கள் எதை எதை தினசரி உபயோகிக்கிறார்களோ அதற்கெல்லாம் வரி இல்லாமல் செய்து, ஒரு ஆட்சியை நடத்தினார்கள். நீங்கள் அந்தப் பொருட்களுக்கெல்லாம் வரிபோட்டிருக்கிறீர்கள். அது எந்தவகையிலும் சரியான நடவடிக்கை இல்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே உங்களுக்குப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உள் கட்டமைப்பு சர்சார்ஜ். இப்போது 8,000 கோடி ரூபாய் வரி வருகிறது. வருமானம் வருடத்திற்கு ரூ. 8,000 கோடி

வருகிறது. இப்போது, இந்த வருஷம் பிறந்த உடனே ரூ. 8,000 கோடி ரூபாய் என்பது 9,000 கோடி ரூபாயாக வரும். கட்டாயம் அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நீங்களும் பேசப் போகிறீர்கள். நாங்களும் பேசப்போகிறோம். ரூ.9,000 கோடி கட்டாயம் வரும். வரப்போகிறது. வருடாவருடம் கூடிக் கொண்டேதான் இருக்கும். ஏன் அதிகமாக வியாபாரம் செய்கிறீர்கள் என்று சொல்லி அவர்களுக்கு 5% சர்சார்ஜ் போட்டிருக்கிறீர்கள். Additional tax போடுகிறீர்கள். அதெல்லாம் வேண்டியதே இல்லை.

அதுமாதிரி பார்ப்போமேயானால், சிமெண்ட் விலையைக் குறைத்திருக்கிறீர்கள்; பாராட்டுகிறோம். சிமெண்ட் விலையைக் குறைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் எந்தவிதமான கடுமையான நடவடிக்கை எடுத்தாலும் நாங்கள் அதற்கு ஒத்துத்தான் இருக்கிறோம். ஆனால், வரியைப் பார்த்தோம் என்று சொன்னால் ஒவ்வொரு விதமாக உள்ளது. நம்முடைய பகுதியிலே பார்த்தோம் என்று சொன்னால், மில்லிலே. வெளியே வந்து ஏஜெண்ட்; ஏஜெண்ட் கீழே வரிசையாகத்தான் கிராமம் வரைக்கும் இருக்கிறோம். நாம் ஒவ்வொரு பாயிண்டிலும் வரி போட்டுக் கொண்டிருப்போம் என்று சொன்னால் எந்த வகையிலே அது சரியாகும். விலை கூடுமே ஒழிய குறைவதற்கு வழி இல்லை. நீங்கள் சிமெண்ட் விலையைக் குறைப்பதற்கு இன்னும் கடுமையான சட்டங்கள் போட்டாலும் அதை நாங்கள் எதிர்க்கவில்லை. அதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், நீங்கள் அந்த சிமெண்ட்டுக்குப் போட்டிருக்கிற வரியை reconsider செய்து எப்படிக் குறைக்கலாம், பொதுமக்களுக்கு எப்படிச் சுமையைக் குறைக்க முடியும் என்பதை மட்டும் நீங்கள் யோசித்துப் பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

அதேபோல வணிகர் நல வாரியத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அன்றைக்கு ஆரம்பித்த நேரத்திலே அதிலே முதலிலே அரசியல் . . . (குறுக்கீடு) முடித்து விடுகிறேன். ஒன்றும் பிரச்சனை இல்லை. (குறுக்கீடு) நான் வியாபாரி; தொழில் செய்பவன்; மற்றும் எம்.எல்.ஏ; மூன்றையும் சேர்த்துப் பார்ப்பவன். ஆகவே, அந்த வணிகர் நல வாரியத்திலே நீங்கள் உறுப்பினர்களைப் போடுகிற நேரத்திலே வியாபாரிகளை அழைத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியிலே முடித்து விடுங்கள்.



**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** முடித்து விடுகிறேன். வியாபாரிகளை அழைத்துப்பேசி நல்ல ஒரு உறுப்பினரைப் போட்டு, எதிர்காலத்திலே வியாபாரம் காப்பாற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள் நிச்சயமாக எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாண்டு கால ஆட்சியிலே வரிச் சலுகை மட்டும் 2,700 கோடி ரூபாய்க்குக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பைப் பார்த்தோம் என்று சொன்னால் ரூபாய் 2,700 கோடி வரிச் சலுகை கொடுத்து பிறகு ரூபாய் 8,000 கோடி அரசுக்கு வருமானம் வந்திருக்கிறது. நானும் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன். கலைஞர் அவர்கள் ரூ. 2,700 கோடி வரிச் சலுகை கொடுத்த பிறகு ரூ. 8,000 கோடி வந்திருக்கிறது. ஆகவே, நீங்கள் Sales tax-ஐ எல்லாம் ஒருமுனை வரியாக்கினால் நிச்சயமாக எதிர்பார்ப்பதைவிட அதிகமாகத்தான் வருமே ஒழிய எந்தநேரத்திலும் குறைவதற்கு வழி இருக்காது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சொல்லிகொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** முடித்துவிடுகிறேன். அதேபோல மின்னணு சாதனங்களுக்கு நீங்கள் tax போட்டிருக்கிறீர்கள். அது சரியல்ல, மின்னணுவை நாம் develop பண்ணனும். வளர்ந்து வருகிற, விஞ்ஞான ரீதியாக இருக்கிற பொருட்களுக்கு எல்லாம் வரி போடுவது சரியல்ல. அப்படி வரி போடுகிற நேரத்திலே அதை வெளி மாநிலங்களிலிருந்து தான் நாம் வாங்க வேண்டியிருக்கிறது. இன்னொன்று எண்ணெய்க்கு tax போட்டிருக்கிறீர்கள். எண்ணெய்க்கு tax போட்டு அதற்கு additional tax வேறு போட்டிருக்கிறீர்கள். இப்போது பார்த்தோம் என்று சொன்னால் சென்னை ஆர்பரில்தான் நம்முடைய கச்சா எண்ணெய் அதிகமாக இறங்கிக் கொண்டிருக்கிறது. இப்போது நாம் வரி போட்டிருக்கிற காரணத்தால் அது ஆந்திராவுக்குப் போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இங்கே இருக்கிற பாமாயில் இங்கே இறக்குமதி ஆகாமல், அங்கே போகிற நேரத்திலே நமக்கு வரி குறைவாக வரும். ஆகவே, மறுபடியும் நீங்கள் வியாபாரிகளை அழைத்து வைத்துப் பேசி வரி வருவாய் குறையாமல் இருக்க என்ன வழி என்று கேட்டு, அவற்றையெல்லாம் நீங்கள் செய்தால் அது சரியாக இருக்கும். போன ஆட்சிக் காலத்திலே இரண்டு தடவை வியாபாரிகளை எல்லாம் அழைத்து வைத்துப் பேசித்தான் அன்றைக்கு வரிக் குறைப்பு, நீட்டிப்பு எல்லாம் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2002 மே 7

சூழ்நிலைகளை எல்லாம் உண்டாக்குகிற நேரத்திலேதான் நீங்கள் எதிர்பார்ப்பதைப் போல் தமிழ்நாடு வளர முடியும் என்பதை இந்த நேரத்திலே, நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே இந்த மணல் விலை சிமெண்ட் விலையை விட கூடி இருக்கிறது. அதற்குக் காரணம் mines-ஐ பார்த்தோமேயானால் 4 districts, 5 districts-க்கு ஒரு ஆபிசர் இருக்கிறாரே ஒழிய district-க்கு ஒரு ஆபிசர் என்று இல்லை. ஒரு district-ல் சாதாரண ஆபிசர் தான் இருக்கிறார். அதிகாரமுள்ள அதிகாரி இல்லை. இப்போது மணல் கொள்ளை பற்றிப் பார்ப்போம் என்று சொன்னால் தமிழ்நாட்டிலே அளவில்லாக் கொள்ளை நடைபெறுகிறது. அதை ஓரளவுக்கு Monitor செய்து, வரன்முறைப்படுத்தி இந்த மணல் கொள்ளையைத் தடுத்தீர்கள் என்று சொன்னால், மணல் விலை குறையும். அப்படியில்லை என்றால் மணல் விலை அதிகமாக இருக்கிற சூழ்நிலைகள்தான் தமிழ்நாட்டிலே இருந்து கொண்டு இருக்கும். அவற்றையெல்லாம் நிறுத்தக்கூடிய வேலைகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கலைஞர் அவர்கள் எப்படி வரியைக் குறைத்து ஆட்சி செய்தாரோ அதேபோன்ற ஒரு ஆட்சியை நீங்கள் செய்ய வேண்டும். கலைஞர் அவர்கள் அன்றைக்குத் தைரியமாக, வரியைக் குறைத்தால் விற்பனை அதிகமாக வருமென்ற எண்ணத்தோடு எடுத்த முடிவுகளைப்போல் நீங்களும் எடுத்து வியாபாரிகளையும், தொழிலதிபர்களையும், பொதுமக்களையும் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிர் மூச்சின் சுவாசமே, இரத்த நாளங்களின் ஸ்ப்த ஸ்வரமே, கற்பனையை நிஜமாக்கும் கற்பக விருட்சமே, கருணையை வரமாக்கும் தாய்மையின் அம்சமே, வாழும் யுகத்தின் வரலாறு நீங்கள். நூறு நிறத்தின் நவீன வானவில். கோவிலுக்குச் சென்று நான் கும்பிடும் குலதெய்வம். வாழ்விக்க நேரில் வந்த வடிவம் நீங்கள், அம்மா. என் காணிக்கை எல்லாம், நன்றிக் கண்ணீரின் உப்புகள்; உங்கள் கண்பட்ட நொடிக்குள்ளே, அவை எல்லாமே முத்துகள். உங்கள் சுடர்முகம் கண்டு, மின்னலும் மிரண்டுவிடும். ஒற்றை ரோஜாவாய் நீங்கள் உதிர்க்கும் புன்னகையில், சுற்றும் பூமிக்கே சுறுசுறுப்புப் பெருகிவிடும் என்று கூறி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு



2002 மே 7] [திரு. பி.கே. சேகர்பாபு]

இங்கே நடைபெறும் தொழில் மற்றும் வணிக வரித் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்குக் காரணமாக விளங்குகின்ற எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

*பிற்பகல் 12-10*

வணிக வரியை பொறுத்தவரை, அது அரசுக்கு அதிகமான நிதியைக் கொடுக்கும் துறையாகும். அந்தத் துறையைக் கடந்த ஆட்சி காலத்தில், மாருதி கையில் கொடுத்த பூமாலை ஆக்கிவிட்டார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை.

இங்கே பேசுகின்ற போது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் வருமானம் அதிகமாக இருந்தது கடந்த கால ஆட்சியில் என்று குறிப்பிட்டார்கள். 1999-2000 ஆம் ஆண்டின் இறுதிவாக்கில், வணிகம், அறநிலையத் துறை, உள் துறை, வருவாய் மற்றும் தொழில் துறைகளில் மொத்தமாக வரி வசூல் பாக்கி மட்டும் 8,863.60 கோடி ரூபாய் ஆகும். இதில் விற்பனை வரி மற்றும் கனிமத்திற்கான நிலுவைத் தொகை மட்டும் ரூபாய் 8,412 கோடியே 32 இலட்சம் ஆகும். இந்தத் தொகையை என்ன காரணத்தாலோ வசூலிக்காமல் விட்டுவிட்டு கடந்த ஆட்சியாளர்கள் சென்று விட்டார்கள் என்பதை இங்கே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இந்தத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசிடம்..

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுமில்லை, அதாவது...

**திரு. பி.கே. சேகர்பாபு:** வியாபாரி நீங்கள். நான் பேசி முடித்த பிறகு பதில் சொல்லுங்கள். திரும்பவும் நான் பதில் சொல்வதற்கு வியாபாரிக்கு வசதியாக இருக்கும்.

இப்போது இந்தத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசிடம் 3,000 கோடி ரூபாய் வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேண்டுகோள் விடுக்கும் நிலையை இந்தத் தமிழகத்திற்கு உண்டாக்கிவிட்டுச் சென்றதற்கான காரண கர்த்தாக்கள் கடந்த ஆட்சியாளர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



225165
சென்னை 600 009

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது போல் ரூபாய் 8,863 கோடியே 60 இலட்சத்தை உரிய காலத்தில் வசூலிக்காமல் ஏன் விட்டு விட்டார்கள்? இதன் மர்மம் என்ன என்பதை இந்த நாட்டு மக்களுக்கு எனக்கு முன்னால் பேசிய வியாபாரப் பெருந்தகையான மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள், தெரியப்படுத்துமாறு இந்த அவையின் சார்பிலே கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விற்பனை வரியில் பாக்கியாக உள்ள தொகையில், 7,244 கோடியே 17 இலட்சம் ரூபாய் பாக்கி வைத்துள்ளவர்கள் வரியைச் செலுத்தாமல் வேறு மாவட்டத்திற்கு அல்லது வேறு மாநிலத்திற்கு ஓடுகின்ற ஒரு சூழ்நிலை; முந்தைய அரசு இந்தப் பாக்கியை வசூலிக்க அவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது விந்தையாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆட்சியில்தான் தொழில் துறை ஓங்கி உயர்ந்து வளர்ந்தது என்று கூறிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தமிழகத்திலே 179-க்கும் மேற்பட்ட ஆலைகள் மூடப்பட்டன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உதாரணத்திற்கு, நாங்கள் வசிக்கின்ற சென்னை மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, 1991 ஆம் ஆண்டு மூடப்பட்டிருந்த பி. அண்டு சி. ஆலையை, அன்றையதினம் திறந்து வைத்துப் பேசினார்கள் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். என்னுடைய ஆட்சி இருக்கின்ற காலம் வரை இன்றையதினம் நான் ஏற்றி வைக்கிற இந்தத் தொழிலாளர்களுடைய இல்லத்தின் விளக்கை, என்னுடைய இரு கரங்கள் கொண்டு அணையாமல் பாதுகாப்பேன் என்று அன்றையதினம் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பி.&.சி. ஆலையின் திறப்பு விழாவிலே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதி அளித்தார்கள். சொல்வதைச் செய்கின்ற தலைவியாக, பாடுபடுகின்ற பாட்டாளி வர்க்கத்துக்குச் சொந்தக்காரரான எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1996 ஆம் ஆண்டு வரையில் அந்த ஆலையை நடத்திக் காட்டினார்கள். அந்தப் பெருமை எங்கள் அம்மா



அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதற்குப் பின்னாலே வந்த ஆட்சியாளர்கள் அந்த இடத்தைத் தங்களுடைய சுய இலாபத்திற்காகக் கூறுபோட்டுக் கொள்ளலாம் என்ற நப்பாசையில் அந்த ஆலையின் முதலாளிகளோடு சேர்ந்து கொண்டு, செயல்பட்டுக்கொண்டிருந்த அந்த ஆலையைச் செயல்படாமல் வைத்த பெருமை**சாரும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தொழில் துறையில் தமிழகம் எவ்வாறு முன்னேறி இருக்கிறது, கடந்த ஆட்சிக் காலத்திலே எப்படி எல்லாம் முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு சென்றார்கள் என்பதை மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவருடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். ** மகாபலிபுரம் அருகே—ஆதாரத்தோடுதான் பேசுகிறேன்—கடம்பாடி என்ற இடத்தில் Sri Maruthi Marine Industries என்ற பெயரில் ஒரு தொழிற்சாலையைத் தொடங்கி இருப்பதாகத் தகவல் கூறுகின்றது. இதற்காக அரசு நிலம் (குறுக்கீடு) ஆதாரம் வைத்திருக்கிறேன் தலைவரே, நீங்கள் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும். இதற்காக அரசு நிலம் (குறுக்கீடு) பேசுவோம், பின்னால் பேசும்போது நான் காட்டுகிறேன் ஆதாரத்தை, அரசாணை எண் எல்லாம் சொல்லுகிறேன், அதற்குப் பிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் எந்தக் குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தாலும் பேரவைத் தலைவரிடம் ஆதாரத்தைக் காட்டி, அனுமதி பெற்று பிறகு சொல்ல வேண்டுமென்று நீங்களே பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் தொடர்ந்து, எதையுமே பின்பற்றாத அளவில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் சொல்லிக் கொண்டிருப்பது என்ன நியாயம்?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் ஒரு தகவலைச் சொல்லுகிறார். அந்தத் தகவலுக்கான விளக்கத்தைச் சொல்லுகிறார். பொதுவான ஒரு தகவலைச் சொல்லுகிறார்.

**திரு. இ. புகழேந்தி:** ஏற்கெனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது தேவையில்லாத ஒரு வார்த்தையை மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ** என்று எல்லாம் சொன்னார். அந்த வார்த்தைகளை எல்லாம்கூட நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அவற்றையும்கூட அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதுதான் நியாயமாக இருக்கும் என்று சொன்னோம். எந்த உள்நோக்கத்தோடு, அவர் உறுப்பினரைச், சொல்லுகிறாரோ, இல்லையோ, ஆனால் மாண்புமிகு உறுப்பினரைக் குறித்துச் சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தையே குறிப்பிடக்கூடிய வகையில் அந்தச் சொல்லை அவர் பயன்படுத்தியது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் சமுதாய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். ஒட்டுமொத்தமாக ** என்று சொல்லியிருந்தால், அந்தச் சொல்லை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். அவர் சொன்னது, நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். பேசும்போது, நான் தொழிலதிபர், நான்**என்று சொன்ன காரணத்தால் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.-க்குப் பதில் சொல்லுகின்ற வகையிலேதான் அவர் சொல்லுகிறார்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக அரசு நிலம் 560.66 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 261, வருவாய்த் துறை, நாள், 6-3-1997. இதற்கான சர்வே எண்களில் ஒன்று 269/2. மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்களே இது அரசாணையாக இந்தத் தனியாருக்கு (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி உட்கார்ந்துகொண்டு பேசவேண்டாம். எழுந்துநின்று பேசினால் பதில் கூறத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. சேகர்பாபு, நீங்கள் என்னிடம் பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. பி.கே. சேகர்பாபு:** அவர் உட்கார்ந்து கொண்டே பேசுகிறார். இடைஞ்சலாக இருக்கிறதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பதில் சொல்லுகிறேன், நான் சொல்லுகிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இப்படி அரசாணையாக வெளியிடப்பட்டு இந்த 560.66 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. முறைப்படி ஒதுக்கப்பட்ட நிலம் என்னவோ 560.66 ஏக்கர் தான். ஆனால், ** என்பதை இன்று நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிலத்தை ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டது முந்தைய ஆட்சியில்தான். இதில் நான் பினாமி இல்லை என்று மத்திய அமைச்சர் கூறுவார். ஆந்திர மாநிலத்தில் நீண்ட கடற்கரை இருக்கும்போது அந்த நபருக்குத் தமிழ்நாட்டில் கடற்கரையோரம் நிலம் ஒதுக்கீடு செய்து தர அரசாணை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் வந்தது? (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலம் உப்பளம் நடத்துவதற்கென்று ஒதுக்கீடு பெறப்பட்டது.

பிற்பகல் 12-20

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order. (குறுக்கீடு) தலைவர் அவர்களே, point of order. அவர் point of order. (குறுக்கீடு) தலைவர் அவர்களே, point of order. அவர் ஜி.ஓ. போடப்பட்டது ** ஆந்திர மாநிலத்திலேயிருந்து ஒருவர் இங்கே வந்து, மற்ற மாநிலங்களிலேயிருந்து தமிழகத்திற்கு வந்து யாரும் தொழில் செய்வதில்லையா? ஆனால், ஆந்திர மாநிலத்திலேயிருந்து ஒருவர் இங்கே வந்து தொழில் செய்கிறார் என்கிற காரணத்தினாலே ** எப்படிச் சரியாக இருக்க முடியும்? ஆகவே, ** அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டும். யாரோ ஒரு தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்வதைப்பற்றி எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அந்த ஜி.ஓ.-விலே அவர் சொல்லியிருப்பதிலே ** பெயர் கிடையாது. தனியாருடைய பெயர் இருக்கிறது. ஆனால், அந்தத் தனியாருடைய பெயரை எந்த ஆதாரமும் இல்லாமல், எந்தத் தொடர்பும் இல்லாமல் ** என்பது சரியாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்காது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள்தான் அதிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் தனியாருடைய பெயரைச் சேர்த்து....

**திரு. பி.கே. சேகர்பாபு:** இல்லை, இல்லை. தலைவர் அவர்களே, நான் முழுமையாகப் பேசியதற்குப் பிறகு அதில் விளக்கம் கேட்டால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் பேச வருவது முழுமை பெறாததற்கு முன்பு எழுந்து குறுக்கீடு செய்வது அவசியமற்றது என்பதை நான் மாண்புமிகு திரு. பொன்முடி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** ஒரு கருத்தைக் கூற வந்தால் அதை முழுமையாகக் கூற விட வேண்டும். (குறுக்கீடுகள்) கூறி முடித்ததற்குப் பிறகு அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. சேகர்பாபு, இந்தத் தனியார் யார் என்கிற பெயரைக்கூடச் சொல்லலாம். அதைப் பற்றியில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் பெயரைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பெயரைக்கூடச் சொல்லலாம், அதிலே ஒன்றும் தவறு இல்லை. ஏனென்றால் அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். எந்தத் தனியாருக்கு என்று நீங்கள் சொல்லலாம். அவருக்கும் ** எந்த வகையிலே ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்று சொன்னால், அதை நிரூபிக்கக்கூடிய அளவிற்கு ஏதாவது ஒரு ஆதாரம் இருந்தால் அந்த ஆதாரத்தைச் சொல்லலாம். அப்படி இல்லை என்றால் அந்தத் தனியாருடைய பெயரை மட்டும் சொல்லுங்கள். ** பெயரைச் சொல்ல வேண்டாம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் பெயரையே, இன்னார் என்று குறிப்பிடவில்லை. ** என்றுதான் இதுவரையில் குறிப்பிட்டுக்கொண்டே வந்திருக்கிறேன். ஆனால், 'எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற நிலையாக மாண்புமிகு திரு. பொன்முடி அவர்களே ** என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



குறிப்பிட்டுக் கூறுவது விந்தையாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. சேகர்பாபு, அது எந்த ** பரவாயில்லை, அப்படியென்று சொல்லிச் சொல்கிறார்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அவர்கள்தான் ** என்றார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், உட்காருங்கள். ஆக தனியாரைப் பற்றி, தனியாருடைய பெயர் இருந்தால் அதைப் பற்றிச் சொல்லலாம். அதைப் பற்றிச் சொல்வதில் ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** ** என்று சொல்லியிருந்தார்கள். அதை எடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜெ. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இது....

**திரு. பி.கே. சேகர்பாபு:** என்னுடைய கேள்வி எல்லாம் (குறுக்கீடு) அன்பழகன் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி எல்லாம் 560.66 ஏக்கருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் ** (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியே பார்த்தாலும், அந்த நிலம் உப்பளம் நடத்துவதற்கென்று ஒதுக்கீடு பெறப்பட்ட நிலமாகும். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986, பிரிவு 3, உட்பிரிவு 3-ன்படி சிலிக்கா ஏரி, புலிக்காட் ஏரி, நல்லாப்பட்டு, யாகூரப்பட்டு, மகாபலிபுரம் மற்றும் கல்பாக்கம் இடையேயான கடலோரப் பகுதிகளிலேயிருந்து 1,000 மீட்டர் தூரத்திற்குள் உள்ள இறால் பண்ணைக் குளங்கள் மூடப்பட்டு அழிக்கப்பட வேண்டுமென்று 12-11-1996 அன்று உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பினை வழங்கியிருக்கின்றது. உச்ச நீதிமன்றம் தீர்ப்பினை வழங்கிய தேதி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

12-11-1996. ஆனால், நீங்கள் தனியார் ஒருவருக்கு 6-3-1997 அன்று உப்பளம் நடத்துவதற்காக என்று ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தில் இறால் பண்ணையை வைப்பதற்கு என்று அனுமதி அளித்ததிலிருந்து நீங்கள் அவருடைய பினாமி என்பது நிரூபணம் ஆகின்றது. (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஒன்றும் இல்லை. உட்காருங்கள். திரு. புகழேந்தி, நான் சொல்லிவிடுகிறேன். அதாவது, தனியார் ஒருவருக்கு முறைகேடாக உப்பளம் நடத்துவதற்கு உள்ள பகுதி இறால் பண்ணை நடத்துவதற்காகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது கடந்த கால ஆட்சியிலே என்று அவர் குற்றச்சாட்டுச் சொல்கிறார். அந்தக் குற்றச்சாட்டுக்கான ஆதாரத்தைச் சொல்கிறார். அரசாணையை அவர் சொல்கிறார். உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிற சூழ்நிலையிலேயும்கூட அந்தத் தீர்ப்பையும் மீறிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ** என்று சொல்கிறார். (குறுக்கீடு) அதுதான் அவர் சொல்லக்கூடியதே தவிர, அதில் நீங்கள் எதை எதிர்க்கிறீர்கள் என்று கேட்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றம் சாட்டுவதைப் பற்றியோ அல்லது சட்டத்தினுடைய நிலைகள் பற்றி நீங்கள் சொல்வதைப் பற்றியோ நாங்கள் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை. முடிந்தால் அதன்மீது நடவடிக்கை எடுங்கள். அதன்மீது எந்தவிதமான சட்டபூர்வமான நடவடிக்கையும் எடுங்கள். (குறுக்கீடு) அதற்கு மேலாகத் தொடர்ந்து இதே மாதிரியே முதலிலே ** என்றாலே ஒரு கேவலம் மாதிரி, அதற்கு முந்தி ஏழைகள் என்றாலே கேவலம் மாதிரி எல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, அவர் சொல்வதிலே எந்தப் பகுதிக்கு நீங்கள் கண்டனம் தெரிவிக்கின்றீர்கள் என்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** எங்கள்மீது பினாமி என்றோ மற்றவர்கள் என்று குறிப்பிடுகின்ற அந்த வார்த்தைகளோ தேவையில்லாதது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கடந்த கால ஆட்சியில்....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. இ. புகழேந்தி:** அவற்றை நீக்க வேண்டும் என்றுதான் நான் கேட்கிறேன். எங்களைப் பார்த்துச் சொல்வது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் சொல்கிறேன். கொஞ்சம் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. புகழேந்தி உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். ** அளவிற்கு உப்பளத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட பகுதி இப்படி இறால் பண்ணைக்கு என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால், அந்த ஆட்சியாளர்களுக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்ற வகையில் அவருடைய கருத்தை அவர் இங்கே அரங்கேற்றுகிறார். அதற்கு எதிராக நீங்கள் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள், அதையும் நான் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு குற்றச்சாட்டுச் சொல்லி, அவர்மீது நடவடிக்கை எடுப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால், இது ஒன்றே அவர் பினாமியாக இருப்பதற்கு அர்த்தம் என்று சொன்னால், என்ன பொருள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கடந்த கால ஆட்சியிலே சலுகை வழங்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** அந்த வார்த்தைதான், அதுதான். அதனால்தான் அந்த பினாமி என்ற வார்த்தை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடந்த கால ஆட்சியிலே சலுகை வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** சலுகை வழங்கப்படலாம். தவறாக சலுகை வழங்கப்பட்டிருக்குமானால், சட்டபூர்வமாக நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம். அதிலே எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. (குறுக்கீடு) அதற்கு பினாமி என்று சொல்வதை, அந்த வார்த்தையை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அவர்கள் ஒரு அரசியல் இயக்கத்தின் சார்பாக ஒரு கருத்தைப் பேசுகிறார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் அரசியல் கட்சி நடத்துகிறார்களே தவிர, சன்மார்க்க சபை நடத்தவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலே, அவர்களுடைய கருத்து என்னவென்றால்; கடந்த கால ஆட்சி இப்படி முறைகேடாக இவர்களுக்கு இந்தச் சலுகை செய்திருக்கிற காரணத்தினால், அந்த ஆட்சியாளர்கள் இவர்களுக்குப் பினாமிகள் என்று அவர் அடித்துச் சொல்கிறார். அவருடைய கருத்தைச் சொல்கிறார். நீங்கள் இதற்கு எதிராக ஏதாவது கருத்தைச் சொல்வதாக இருந்தால் நானும் அதைப் பதிவு செய்துகொள்கிறேன். அதில் எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் நடத்துவதற்கு வெளியே இடம் இருக்கிறது. அதிலேதான் மத்திய அமைச்சரும்கூடச் சொன்னார். வெளியே பேசினால், நான் கோர்ட்டிலேயே சந்திக்கிறேன் என்றுகூட அவரும் சொல்லியிருக்கிறார். ஆகவே, சொல்கிற வார்த்தைகளை வெளியே சொன்னால், என்ன நடவடிக்கையோ அதைச் செய்யலாம். ஆனால், இங்கே பினாமி என்ற வார்த்தைகளை உபயோகிக்காமல் இருப்பது நல்லது என்று நான் உங்களை மறுபடியும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த வார்த்தையை எடுக்கச் சொல்லுங்கள். மற்றபடி எந்தக் குற்றச்சாட்டையும் அவர் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் குற்றச்சாட்டுச் சொல்கிறார். சொல்லி, அதற்கு ஆதாரத்தைச் சொல்கிறார். ஆதாரத்தினுடைய அடிப்படையிலே சொல்கிறார். அதற்கு எதிராக நீங்கள் ஏதாவது கருத்தைச் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். திரு. சேகர்பாபு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

***திரு. துரைமுருகன்:** எனக்குத் தெரியவில்லை, இப்போது வந்ததால் நான் சொல்கிறேன். எனக்கு உள்ளே நடந்தது தெரியவில்லை. அதனால் சொல்கிறேன். பினாமி என்று ஒருவரைச் சொன்னால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருவரை அல்ல. ஓர் அரசாங்கம் முறைகேடாகச் சலுகை செய்திருக்கிறது. அதாவது உப்பளத்திற்காக என்று ஒதுக்கப்பட்ட பகுதியில் தனிப்பட்ட ஒருவருக்கு இறால் பண்ணை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது; உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி அந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அனுமதி வழங்கப்பட்டிருப்பதற்காக, கொடுக்கப்பட்டிருக்கிற அந்த நிலம்



மட்டும் அல்லாமல், ** அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த ஆட்சியாளர்கள் அந்தத் தனிப்பட்டவருக்கு பினாமிகள் என்ற கருத்தைச் சொல்கிறார். அவர் யாரையும் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ** என்று சொன்னார். அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். கடந்த கால ஆட்சியிலே அப்படிப்பட்ட ஒரு தவறு இழைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். அப்படிச் சொல்வதற்கு அவருக்கு உரிமையுண்டு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப்பின் அந்த இடத்தை 20 ஆண்டுகளுக்குக் குத்தகை எடுத்து, கிட்டத்தட்ட இன்றைய நிலையில் பார்க்கின்றபோது, 6-3-1997 ஆம் ஆண்டிலிருந்து அரசாணை மூலம் ஒதுக்கப்பட்ட இந்த நிலத்திற்குக் குத்தகைப் பணம் எவ்வளவு? 5 ஆண்டு காலம் முடிவடைந்து 6-வது ஆண்டு காலம் தொடங்கியிருக்கிறது. இந்த 5 ஆண்டு காலம் குத்தகைத் தொகை ஒழுங்காகக் கட்டியிருக்கிறார்களா என்பதை அறிய வேண்டும். குத்தகைத் தொகை கட்டி இருக்காவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்திற்கு விரோதமாக, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விரோதமாக அந்த இடத்தில் இறால் பண்ணை நடத்த அனுமதித்ததற்குக் கடந்த ஆட்சியாளர்களின் மீது கோர்ட் அவமதிப்பு வழக்கைத் தொடரவேண்டும் என்று இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ** என்று சொன்னாலே கோபம் வந்துவிடுகிறது. ஆதாரத்தோடு கூறுகிறோம்.

பிற்பகல் 12-30

பொன்னேரி தாலுகாவில் உள்ள காளாஞ்சிக்குப்பம். இந்தக் கிராமத்தில் கருங்காளி சிந்தாமணி ஈஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடம்; இந்த இடம் முன்னாள் முதலமைச்சரின் உறவினருக்கு 5 ஆண்டு காலக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அந்த இடத்தினுடைய அளவு, முழுமையாகக் கேட்டுக்கொள்ள வேண்டும், திரு. பொன்முடி அவர்களே.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அவர் இங்கே திரும்பி திரும்பி பேசிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அவரைப் பேச வேண்டாம் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முகத்தைப் பார்க்க வேண்டாம். என் முகத்தைப் பாருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** உங்களைத்தான் பார்க்கிறேன். அவர் கூப்பிடுகிறார் அங்கிருந்து. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** 5 ஆண்டு காலக் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) 5 ஆண்டு காலக் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். திரு. பொன்முடி, என்ன? சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சும்மாதான் உட்கார்ந்து இருக்கிறேன். இதோடு 3, 4 தடவை 'பொன்முடி', 'பொன்முடி' என்று அழைத்து, நான் ஏதோ குற்றம் செய்த மாதிரி, ஏதோ பேசிக் கொண்டிருக்கிற மாதிரி ஒரு மாயையை உருவாக்குவது தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுகிற காரணத்தால் அவர் சொல்கிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் அவரிடம் பேசினேனா? உங்களிடம் பேசச் சொல்லுங்கள். நான் உங்களிடம் பேசுகிறேன். நான் ஒன்றும் அவரிடம் பேசவில்லை. எதுவும் பண்ணவில்லை. வேண்டுமென்றே இதுமாதிரி பேசினால் சரியாக இருக்காது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. பி.கே. சேகர்பாபு:** 5 ஆண்டு காலம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, நேராகப் பார்க்காமல் இந்தப் பக்கமாகப் பார்த்துப் பேசுங்கள். அடிக்கடி பார்க்கிற முகமாக இருப்பதால் ரொம்ப போரடிக்கிறது என நினைக்கிறேன். (குறுக்கீடு) என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** 36 ஏக்கர் நிலம் 5 ஆண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டிருப்பது உண்மை. ஆனால் இதிலே இருப்பது என்னவென்றால் கடந்த ஆட்சியாளர்கள்—சுமை தூக்க வேண்டுமென்றால் சும்மாடு கட்டித்தான் ஆக வேண்டும் என்று சொல்வார்கள். அதைப்போல—இதை எல்லாம் தாங்கிக் கொண்டுதான் ஆக வேண்டும். உண்மையை உரக்கக் கூறுகின்றபோது ஏன் கோபம் பொத்துக்கொண்டு, எழுந்து நின்று குறுக்கீடு செய்கிறார்கள் என்பதுதான் எங்களுக்கு விந்தையாக இருக்கிறது.

பெரியவர்கள் ஒரு பழமொழியைச் சொல்வார்கள், சிவன் சொத்து குல நாசம் என்று. அதைப் பற்றியெல்லாம் முன்னாள் முதல்வர் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. விபூதி வைப்பவர்களைக் கேவலமாக விமர்சனம் செய்வார். அம்மன் கோவிலில் தீ மிதி விழாவில் கலந்துகொண்ட மந்திரியை காட்டுமிராண்டி என்று விமர்சனம் செய்வார். ஆனால்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் அவர்களுடைய சொந்தக்காரருக்கு அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தை யாரும் எடுத்துக் கொடுத்துவிட முடியாது. நாட்டில் எத்தனையோ கோயில் நிலங்கள் பலருக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. இப்படித்தான் கோயில் நிலத்தை, இப்படித்தான் ஒருவருக்குக் குத்தகைக்கு விட வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் அதிலே இருக்கிற வரம்பு முறைகள் மீறப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அது முறைகேடு. ஆனால் அதை விட்டுவிட்டு, ஒரு முன்னாள் அமைச்சருடைய சொந்தக்காரர் ஒருவருக்கு ஒரு கோயில் நிலம் குத்தகைக்கு விடப்பட்டு

இருக்கிறது என்று ஒன்றைச் சொல்லிவிட்டு, அப்படியானால், அதுவே ஒரு முறைகேடு என்று சொல்வது எந்த வகையிலே நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை. இதை நீங்கள்தான் விளக்க வேண்டும்.

இரண்டாவது, வெளியிலே மற்றவற்றை, நூறைப் பேசுகிறோம். அவற்றையெல்லாம் இங்கே பேசவில்லை. நாங்கள் பகுத்தறிவுக் கொள்கையைப் பற்றி ஆயிரம் சொல்கிறோம். நாங்கள் சுயமரியாதைக்காரர்கள். அவர்களும் சொல்கிறார்கள். கலைஞரோ, மற்றவர்களோ, எல்லோரும் சொல்கிறோம். ஒவ்வொருவருக்கும் ஒரு நம்பிக்கை உண்டு. நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். இவற்றையெல்லாம் இங்கே விமர்சனம் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. அதை திரும்பியும் பண்ணலாம். அது ஒன்றும் பெரிது கிடையாது. ஆனால் இந்த மன்றத்தை அதற்கு உபயோகப்படுத்தக் கூடாது.

இப்போது நான் கேட்கிற கேள்வி ஒரு சொந்தக்காரர் என்பதனாலேயே அது முறைகேடு ஆகிவிட்டது என்று சொல்வது அர்த்தம் அல்ல. கொடுக்கப்பட்ட நிலம் சட்ட திட்டங்களை மீறி, வரைமுறைகளை மீறி ஒருவருக்குத் தரப்பட்டிருக்குமானால், அதை நிரூபித்தால்தான் முறைகேடு எனச் சொல்ல முடியுமே தவிர, சும்மாவே பேசினால் 'கருணாநிதி உறவினர் மீது குற்றச்சாட்டு' 'பயங்கரக் குற்றச்சாட்டு' என்று பத்திரிகையில் வர வேண்டுமென்று பார்த்தால் சரியாக இருக்காது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** குற்றச்சாட்டினை முழுமையாகக் கேட்டுக் கொண்டால்தான் அதைப் பற்றித் தெரியும். பாதியிலேயே குறுக்கிடுவதால் உண்மை நிலை தெரியாமல் போய்விடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தக் கோவில் நிலம்? எவ்வளவு? யாருக்கு விடப்பட்டிருக்கிறது? சம்பந்தப்பட்டவர்கள் யார்?

**திரு. பி.கே. சேகர்பாபு:** இதோ வந்துவிட்டேன். மோகனாம்பாள் என்பவருடைய பெயரில் அந்த நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த நிலத்தைக் குத்தகைக்கு விட்டதில் என்ன முறைகேடு?



**திரு. பி.கே. சேகர்பாபு:** முறைகேடு பற்றித்தான் சொல்ல வருகிறேன். அதற்குள் உறுப்பினர் அவர்கள் எழுந்து கொண்டால் நான் என்ன செய்வது? (குறுக்கீடு) நீங்கள் சொன்ன இடத்திற்கு வருகிறேன்.

கருங்காளி சிந்தாமணி ஈஸ்வரர் கோயில் நிலம் 38 ஏக்கர் குத்தகைக்கு எடுத்துக்கொடுப்பார். ** (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அதிலும்கூட, என்னவென்றால் இறால் பண்ணை வைத்துத்தான் அந்த இடமும் பராமரிக்கப்படுகிறது. பல இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வரும்போது கோவில் நிலம் பற்றி முன்னாள் முதலமைச்சருக்குப் பாதகம் இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது எப்படி இருக்கிறது என்றால் குதிரை, கொள்ளு என்றால் வாய் திறக்குமாம். கடிவாளம் என்றால் வாயை மூடிக் கொள்ளுமாம் என்பது போல் உள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடத்திலே நான் ஒன்றே ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டிக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். பினாமி என்று சொன்னதுமே சிலபேருக்குக் கோபம் வந்துவிடுகிறது.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள், நான் கேட்கிறேன். திரு. சேகர்பாபு, அந்த கோயில் நிலம் முறைகேடாக ஒருவருக்குக் குத்தகைக்கு விடப்படுகிறது என்று சொல்கிறீர்கள். திரு. சேகர்பாபு சொல்வது குத்தகைக்கு விடப்பட்டது என்பது மட்டுமல்ல, ** என்று சொல்கிறார். ** என்பது முறைகேடு. ** என்பது முறைகேடு. ஆனால் அந்த ** என்கிற முறைகேடு செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு உங்களிடத்திலே ஆதாரம் இருந்தால், அதை என்னிடத்திலே தாருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற நிலத்தின் அளவு 38 ஏக்கர். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது சம்பந்தமாக நீங்கள்.. (குறுக்கீடு) இல்லை, கொஞ்சம் பொறுங்கள் இல்லை, இது சம்பந்தமாக

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. சேகர்பாபு அவர்கள் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரிடத்திலே ஒரு கேள்வி போட்டதாக எனக்கு நினைவு. அறநிலையத் துறை அமைச்சரிடத்திலே இதுபற்றிய விளக்கம், விவரம் ஏதாவது இருக்கிறதா? இருந்தால் அவைக்குத் தர முடியுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சருடைய மருமகள் மோகனாம்பாள் என்பவர், பொன்னேரி வட்டம், கருங்காளி கிராமம், அருள்மிகு சிந்தாமணி ஈஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான 38.5 ஏக்கர் நிலத்தில் இறால் பண்ணை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த அவைக்கு நான் முன்பே சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது குற்றச்சாட்டுத்தான்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். அதில் இறால் பண்ணை வைத்திருக்கிறார்களோ அல்லது மாட்டுப் பண்ணை வைக்கிறார்களோ, அது அல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இல்லை, இல்லை. குத்தகையைப் பற்றியே சொல்லவில்லை. ** என்று . . .

**திரு. துரைமுருகன்:** ** பற்றி அவர் சொல்லவில்லை. அவர் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு ** சம்பந்தப்பட்ட அலுவலர்கள் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. கொஞ்சம் பொறுங்கள். இந்த இடம் குத்தகைக்கு எடுக்கப்பட்டதிலே முறைகேடு என்று நான் சொல்லவில்லை. ** என்ற தகவலை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தத் தகவலை அவைக்குத் தருகின்ற வரைக்கும் அதை அவைக் குறிப்பிலிருந்து நான் நீக்கி வைக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தின் மூலம் பல்வேறு இடங்களில் சுமார் 5980 ஏக்கரில் ஆடை தயாரிக்கும் நிறுவனங்களுக்காகத் தொழில் பூங்காக்கள் அமைக்க இருப்பதை உள்ளார்ந்த நெஞ்சோடு அன்போடு இங்கே வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமின்றி, இராணிப்பேட்டை, ஓசூர், புதுக்கோட்டை, மானாமதுரை, கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, கடலூர், இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், சிறுசேரி, பெருந்துறை, கங்கைகொண்டான், நிலக்கோட்டை, பர்கூர், ஓரகடம் ஆகிய 16 இடங்களில் 2899.90 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அதில் 1824 ஏக்கர் பரப்பில் இந்தத் தொழில் பூங்காக்கள் அமைக்க இருப்பது நாட்டில் வேலைவாய்ப்பினை அதிகரித்துத் தருவது மட்டுமின்றி, தமிழகத்தை தொழில் வளத்தில் முதலிடத்திற்குக் கொண்டுவர எடுக்கப்பட்டிருக்கும் முயற்சி என்பதால், தமிழக மக்கள் இதை நன்றியோடு வரவேற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் தொழில் துறை, வணிக வரித் துறை, அறநிலையத் துறை ஆகியவற்றில் 15,000 கோடி ரூபாய் பாக்கியை வசூலிக்கவில்லை என்று இந்திய தலைமைக் கணக்கு அதிகாரி தெரிவித்திருக்கிறார். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கின்ற நிலைமைகளை வைத்து மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலருக்கு ஒரு சில வார்த்தைகளைச் சொன்னவுடன் கோபம் வருகிறது. அதை இங்கே இருக்கின்ற என்னைவிட அனுபவம் வாய்ந்த அவர்கள், நான் கூறுவதை முழுமையாகக் கேட்டுவிட்டுப் பதில் சொன்னால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். 1974 ஆம் ஆண்டு பாரதப் பிரதமராக அன்னை இந்திரா காந்தி அவர்கள் இருந்த நேரத்திலே, ஆயிரம் ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். சிலர் தாங்கள் பதுக்கி வைத்திருக்கின்ற நூறு ரூபாய் நோட்டுகளும் செல்லாது என்று அறிவித்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத்து, அண்ணா மேம்பாலத்திற்கு அருகே உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலே அந்தப் பணத்தைக் கொடுத்து, சில்லறையாக மாற்றுவதற்காக வங்கி ஊழியர்களுக்கு Over-time வைத்து நூறு ரூபாய் நோட்டுகளை சில்லரை நோட்டுகளாக மாற்ற நடந்த முயற்சி,

வரலாற்று உண்மை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேதிவாரியாக, வருடவாரியாக, மாதவாரியாக, எவ்வளவு பணம் மாற்றப்பட்டது என்பதையும் நான் கொஞ்சம் அழுத்தமாகவே இங்கே குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதெல்லாம் வேண்டாம். அது சர்க்காரியா கமிஷனிலேயே இருக்கிறது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அதை நான் சொல்ல வேண்டும் இல்லையா? எனக்குத் தெரிந்தது, மற்றவர்களுக்கும் தெரிய வேண்டுமல்லவா? சொல்லவிடுங்கள் தலைவரே, அவைக்குறிப்பிலே இல்லையே, இருக்க வேண்டுமல்லவா?

18-7-1974 அன்று 11 இலட்சத்து, 50 ஆயிரம் (100 ரூபாய் நோட்டுகளை) ரூபாயைச் சில்லறையாக மாற்றினார்கள். 19-7-1974 - 2.00 இலட்சம் ரூபாயைச் சில்லறையாக மாற்றினார்கள். 22-7-1974 - 2.00 இலட்சம் ரூபாயைச் சில்லறையாக மாற்றினார்கள். 4-10-1974 - 5.00 இலட்சம் ரூபாயைச் சில்லறையாக மாற்றினார்கள். 26-6-1975 அன்று 16 இலட்சத்து, 40 ஆயிரம் ரூபாயைச் சில்லறையாக மாற்றினார்கள். ஆகமொத்தம், 36 இலட்சத்து, 90 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 100 ரூபாய் நோட்டுகளைச் சில்லறையாக மாற்றியிருக்கின்றவர்கள்தான், ஊழல் செய்தவர்கள், இலஞ்சம் வாங்கியவர்கள், நாட்டைக் கொள்ளையடித்தவர்கள் என்ற குற்றச்சாட்டுகளோடு (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி கலைக்கப்பட்டபோது, சி.பி.ஐ. இந்த 100 ரூபாய் நோட்டு விவகாரத்தைத் தோண்டித் துருவி விசாரித்தபோது, அந்தப் பணத்தைச் சில்லறையாக மாற்றுவதற்குக் கட்டளையிட்டவர் 'இது என்னுடைய பணம் அல்ல, இது கட்சியினுடைய பணம்' என்று கூறினார். அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளரோ 'இது கட்சியினுடைய பணம் இல்லை' என்று கூறியதை நாட்டு மக்கள் மறந்து விடமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்தைச் சேர்ந்த திரு. ஜாபர் செரீப் அவர்கள், மத்திய இரயில்வே மந்திரியாக இருந்தார். அவர் கர்நாடக மாநிலத்திலிருந்த எல்லா இரயில் பாதைகளையும், அகல இரயில் பாதைகளாக மாற்றினார்; மின்சாரமயமாக்கினார். இதை ஏன் சொல்கிறேன் என்றால், அந்த அளவிற்கு, அந்த மந்திரிக்கு மாநிலப் பற்று இருந்ததால், அவர் அவ்வளவு பணிகளை நிறைவேற்றினார் என்பதற்கு இதை உதாரணமாக நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு மாநிலப் பற்று இல்லாவிட்டாலும் தமிழ்நாட்டிற்கு நியாயமாக, உரிய பங்கைப் பெற்றுத் தருவதற்குக்கூட லாயக்கில்லாதவர்கள் மந்திரியாக இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். "எட்டி பழுத்தால் என்ன? ஈயாதவர் வாழ்ந்தால் என்ன?" என்பார்கள். அதைவிட இவர்களுக்குப் பொருத்தமான — பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல் சொல்லவேண்டுமென்றால், மத்திய அமைச்சராக இருக்கின்ற மாறனிடம் இருக்கின்ற மத்திய தொழில் அமைச்சர் பதவி, குஷ்டரோகி கையில் இருக்கும் வெண்ணெய் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களுக்குச் சேவை செய்வதில்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு உட்காருங்கள், என்ன திரு. துரைமுருகன்?

**திரு. துரைமுருகன்:** மத்திய அமைச்சர்கள் இந்த மாநிலத்திற்குப் பணியாற்றவில்லை. முதலிலே அவர் மத்திய அமைச்சர் என்றுகூடச் சொல்லவில்லை. அமைச்சராக இருப்பவர்கள் இந்த மாநிலத்திற்குப் பணியாற்றவில்லை என்றார். ஓஹோ, அவர்களுடைய அமைச்சர்களைச் சொல்கிறார் என்று நான் பேசாமல் உட்கார்ந்து இருந்தேன். ஆனால் அவர் அடுத்துச் சொன்னார், மத்திய அமைச்சர் என்று. இதைப் பொதுவாகச் சொல்கிறார் என்று அதற்கும் நான் பேசாமல் இருந்தேன். ஆனால், அவர் வேண்டுமென்றே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இப்போது நீங்கள் சொன்னதே, அவர் சொன்னதற்கு பதிலாகிப் போய்விட்டது. போதும், உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆனால், திரு. மாறன் அவர்களை வம்புக்கிழுத்து, திரு. மாறனைப் பற்றிப் பேசாவிட்டால் இவர்களுக்கு ஒரு மரியாதையே இல்லை என்ற நிலை வந்திருக்கிறது போலும். ஆகையினாலேதான், வேண்டுமென்றே அவரை இழுக்கிறார். மத்திய அமைச்சர் திரு. மாறனுடைய கையிலே இருக்கிற இலாகாவினுடைய தத்துவத்தை முதலிலே புரிந்துகொள்ளவேண்டும், அவர் என்ன இலாகா நடத்துகிறார் என்று. இந்த இந்தியா அல்ல, உலக அரங்கில் இருக்கிற அத்தனை அமைச்சர்களும் பாராட்டக்கூடிய அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) டோரா மாநாட்டிலே பேரும், புகழும் பெற்றிருக்கிறவர் அவர். அவருடைய நடவடிக்கையை, திறமையை எடை போடுவதற்கு இவர்களுக்கெல்லாம் வயதும் போதாது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சேகர்பாபு, சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** ஆமாம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய அருமை, பெருமைகளைக் கடந்த ஆண்டு நடைபெற்ற ஒரு கைது விவகாரத்திலே அவர் எப்படியெல்லாம் நடந்து கொண்டார் என்பதை வைத்துப் பார்க்கும்போதே, (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய அருமை, பெருமைகளை இந்த நாடு உணர்ந்திருக்கிறது. யாரைப் பற்றிப் பேசியும், நாங்கள் உயரவேண்டுமென்ற நிலை எங்களுக்கு இல்லை. எங்களை உயர்த்துகின்ற நிலை, எங்களை உயர்த்துகின்ற தகுதி படைத்த, ஆற்றல் படைத்த தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற நேரத்தில், நாங்கள் யாரைப் பற்றியும், உயர்வாகப் பேசவேண்டும், தரம் தாழ்த்திப் பேசி, அதனால்தான் பெயர் வாங்கவேண்டுமென்ற நிலை எங்களுக்கு இல்லை.

*பிற்பகல் 12-45*

இறுதியாக, நான் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், தலைமுறை தலைமுறையாக இந்தத் தமிழகத்தைக் கூறு போட்டுக் கொள்ளை அடிக்கத் திட்டமிட்டிருந்த கும்பலுக்கு, மக்கள் தந்த அதிரடித் தோல்வி, அவர்களை ஆற்றாமையில் கொண்டுபோய் விட்டுவிட்டது. அப்பா, மகன், மாமன், மச்சான் பதவி விளையாட்டிற்குத் தமிழக மக்கள் தலையாட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இப்போது பாடமாகத் தெரிந்த பின்னும், அவர்கள் காகித ஓடமாகத் தத்தளித்துக்



கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் அழுக்காறு, அவா என்ற அனைத்து மூர்க்கத்தனங்களும் அத்துபடியாகி விட்டன. சதா புலம்பல். இங்கே கூச்சல் குழப்பத்தை விளைவிக்க மனப்பால் குடிக்கிறார்கள். எரிமலையின் காலடியைக் கவிழ்க்க எறும்புகளா முயற்சிப்பது; புரட்சித் தலைவியின் புண்ணிய நிழலைக்கூட இந்தப் புழுக்களால் அரிக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை மக்களின் வாழ்வை ஏற்றம் பெறச் செய்வது, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியின் நோக்கம். அதுவரை இல்லவே இல்லை, ஓய்வு, உறக்கம். எங்கள் புரட்சித் தலைவியின் ஆட்சி இந்த இந்தியாவிற்கே ஒரு முன்மாதிரியான அரசாக அமைந்தே தீரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவரை புரட்சிப் படை அவர் புகழைப் பாடிக் கொண்டே இருக்கும் என்று கூறி, வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து உரையை முடித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவருக்கு, மத்திய அமைச்சர் மீது குறை சொல்கிறார் என்ற வருத்தம் இருந்தது. மத்தியிலே இருக்கின்ற இன்னொரு அமைச்சர் தமிழகத்திற்கு என்ன உதவி செய்தார்கள் என்பதை நான் இப்போது படித்துக் காண்பிக்கிறேன்.

சேலம் மாவட்டம், ஆத்தூர் கோட்டத்தில் குறுக்கு மலை வனச் சரகப் பகுதியில் பைத்தூர் காப்புக் காட்டில், 2.03 ஹெக்டேர் பரப்பளவில் 24-11-1978-லிருந்து 22-2-2000 வரை கறுப்பு நிற கிரேனைட் கற்களை வெட்டி எடுத்து, கனிம நிறுவனம் விற்பனை செய்து வந்தது. இந்த கிரேனைட்டின் விலை ஒரு கன மீட்டருக்கு 1 இலட்சம் ரூபாய் ஆகும். இந்த பைத்தூர் குவாரி குத்தகையைப் புதுப்பிக்கக் கோரி 6-2-1998 அன்று மனு சமர்ப்பிக்கப்பட்டது. மாநில அரசின் பரிந்துரையோடு மேலும் 10 ஆண்டுகளுக்கு உரிமத்தைப் புதுப்பித்துத் தர, மைய அரசினுடைய வனத் துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனால், மைய அரசில் இருந்து கொண்டிருக்கின்ற தமிழகத்தைச் சார்ந்த திராவிட முன்னேற்றக்

கழகத்தைச் சார்ந்த, அமைச்சர் பதவி வகித்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் இதற்கு ஒப்புதல் அளிக்காமல், ஏறத்தாழ 20 மாதங்கள் காலம் தாழ்த்தியதால், மாதம் ஒன்றுக்கு தலா 1 கோடி ரூபாய் வீதம் மொத்தமாக 20 கோடி ரூபாய் இழப்பு தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன். (குறுக்கீடு) என்ன, கே.கே.எஸ்.எஸ்.ஆர். சொல்லுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரி நிலுவையைப் பற்றிச் சொன்னார்கள். வரி நிலுவை என்பது எல்லா அரசாங்கத்திலும் இருக்கிற ஒரு நிலைதான். எந்த அரசாங்கம் இருக்கும்போதும், ஒவ்வொரு வருடமும் சேர்ந்துகொண்டுதான் வரும். அந்தந்த வருடங்களிலே அதைத் தீர்ப்பாயத்திலிருந்து தீர்வு செய்து கொண்டிருப்பார்கள். புதிதாக வரி போட்டுக்கொண்டே இருப்பார்கள். ஆகவே. அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வந்தது மட்டும் அல்ல. அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் இருந்தது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் இருக்கும். இப்போது இருக்கிற ஆட்சிக் காலத்திலும் இருக்கும். தொடர்ந்து இருக்கக்கூடிய ஒன்றுதான். தீர்ப்பாயத்திற்குப் போவார்கள். பிறகு கோர்ட்டுக்குப் போவார்கள். தொடர்ந்து இருக்குமேயொழிய, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அதை வசூலிக்காமல் விட்டுவிட்டார்கள் என்ற கருத்து தப்பு. அதுபோக, தனிப்பட்ட வியாபாரிகள் மட்டுமல்ல, பொதுத் துறை நிறுவனங்களும் சேர்ந்துதான் இருக்கின்றன. அது உங்களுடைய குறிப்பிலே 17ஆம் பக்கத்திலே இருக்கிறது. பொதுத் துறை நிறுவனங்கள் சேர்ந்துதான் இருக்கின்றனவேயொழிய, தனிப்பட்ட வியாபாரிகளுக்கு, அன்றைக்கு இருந்த அரசாங்கம் சலுகை செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. தாமோதரன்.

***திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அம்மா அவர்களே, முதற்கண் பெருந்தலைவர் காமராஜர் அவர்களையும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் நிறுவனர் ஐயா திரு. ஜி.கே. மூப்பனார் அவர்களையும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. வாசன் அவர்களையும் வணங்கி எனது உரையை ஆரம்பிக்கிறேன்.



பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய 100-வது பிறந்த தினத்தை அரசு விழாவாகச் சீரோடும், சிறப்போடும் கொண்டாட உத்தரவிட்ட முதலமைச்சர் அம்மா அவர்களுக்குத் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கல்விக்குக் கண் கொடுத்தவர், தமிழகத்தில் தற்பொழுது உள்ள பெரும்பான்மையான அணைகளைக் கட்டியவர், அனைத்துப் பெரிய தொழிற்சாலைகளையும் தொடங்கியவர், இந்திய சரித்திரத்தில் இரண்டு பிரதமர்களைத் தேர்வு செய்து மங்காத புகழ் பெற்றவர்; அவரது பெயர் என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் விருதுநகரில் ஆர்ச்சுகள், மணிமண்டபம், தொழில் நுட்பப் பூங்கா, நர்சிங் கல்லூரி ஆகியவற்றை ஆரம்பித்து இவ்விழாவை விருதுநகரிலும் கொண்டாட வேண்டும் என அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

எனது 40 வருடத் தொழில் அனுபவத்தையும் 20-க்கும் மேற்பட்ட மேலை நாடுகள் மற்றும் கீழ் நாடுகளைப் பார்த்த அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளவும், சட்டமன்றத்தில் பதிவு செய்யவும் விரும்புகிறேன்.

2002-2003-க்கான பட்ஜெட் மொத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூபாய் 30,832 கோடிக்குத் திட்டம் தீட்டி, வெறும் மொத்தப் பற்றாக்குறை ரூ.1,330 கோடி மட்டும் எனத் திறமையாகத் தயாரிக்கப்பட்ட இந்த பட்ஜெட்டை தமிழ் மாநிலக் காங்கிரஸ் வரவேற்கிறது. கல்வி, மருத்துவம், காவல் துறை நீங்கலாக ஒட்டுமொத்தப் பணியாளர்கள் நியமனம் இல்லையென்றபொழுதும் 2001-ல் ரூபாய் 11,543 கோடியாக இருந்த சம்பளச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமரக் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் மீண்டும் அம்மாவைக் கூப்பிட வேண்டியதிருக்கும். (சிரிப்பு)

**திரு. எஸ். தாமோதரன்:** கல்வி, மருத்துவம், காவல் துறை நீங்கலாக ஒட்டுமொத்தப் பணியாளர்கள் நியமனம் இல்லையென்றபொழுதும் 2001-ல் ரூ.11,543 கோடியாக இருந்த சம்பளச் செலவு 2002-ல் ரூ.11,935 கோடியாகவும், 2003-ல் 13,043 கோடியாகவும் உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் ரூ.1,108 கோடி அதிகம் செலவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பணி நியமனம் இல்லாததால் இது கட்டாயம்

குறைய வேண்டும். ஏன் 1,108 கோடி ரூபாய் கூடியுள்ளது என்பது தெரியவில்லை.

பொது விநியோக முறையின் மூலம் உண்மையிலே ஏழை மக்களுக்கு மட்டும் ரேசன் கொடுப்பதன் மூலமும், இலவச மின்சாரம் குடிசைகளுக்குக் கொடுக்கும்பொழுது டி.வி., Fridge வைத்திருப்பவர்களுக்குத் தவிர்ப்பதன் மூலமும், அரசுப் போக்குவரத்துத் துறையைப் பல கார்ப்பரேசன் என்பதை ஒரே கார்ப்பரேசன் என ஆக்குவதன் மூலமும், அரசுப் போக்குவரத்தை இலாபகரமாக ஓட்டுவதன் மூலமும் இந்தப் பற்றாக்குறை ரூ.1,330 கோடியை உறுதியாகச் சரிக் கட்ட முடியும் என்று நினைக்கிறேன்.

தொழில்கள் வளர்ந்திட இன்னும் பெரிய அளவிலே திட்டங்களைத் தீட்ட வேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த 6 வருடங்களாக, சொல்லும்படியாக புதிய தொழில்கள் ஆரம்பித்திட, ஒரு விற்பனை வரி பதிவுகூட ஆகவில்லையென்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். வெளி நாட்டில் வாழும் இந்தியத் தமிழர்கள் தொழில் முனைவோர் கூட்டமைப்பை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஆஸ்திரேலியா, ஹாங்காங், ஜப்பான், ஐரோப்பா, கனடா மற்றும் அமெரிக்க நாடுகளில் வாழும் வசதியான 2 இலட்சம் தமிழர்களால் 2 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்ய முடியும். இதனை ஒருங்கிணைக்க வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெட்ரோலுடன் எத்தனால் கலப்பது; 75% வரை உபயோகிக்கலாம் என வல்லுநர்கள் கூறுகின்றனர். மிகப் பெரிய அளவில் எத்தனால் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனைப் பொருட்களுக்குப் பலமுனை விற்பனை வரி அறவே கூடாது எனத் தொழில் அதிபர் என்ற முறையில் இந்த அரசை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த 19 ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஒருமுனை விற்பனை வரி அமலில் உள்ளது. இதனால், தொழிலும், வணிகர்களும், பொதுமக்களும் பயன்பட்டதோடு வருடாவருடம் விற்பனை வரியும் கூடியுள்ளது. பலமுனை விற்பனை வரியில் ஆர்வக் கோளாறு காரணமாகவும், சுயநலம் காரணமாகவும் வணிகவரி அலுவலர்கள் வியாபாரிகளைத் துன்புறுத்தும் நிலை ஏற்படுகிறது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன். மக்கள் நலன் கருதி மதிப்புக் கூட்டு வரியை 1-4-2005 வரை தள்ளிப்



போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மிகச்சிறு வணிகர்கள் நலன் கருதி வணிகர்களுக்குப் போடப்பட்ட விற்பனை வரம்புத் தொகையை 6 இலட்சமாக உயர்த்திட அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கற்பகத்தரு, காராம்பசு என்றெல்லாம் மாநிலத்திற்கு வருவாய் தரும் விற்பனைவரி, 2000-2001-ல் ரூ.12,282 கோடியாகவும், 2001-2002-ல் ரூ.12,974 கோடியாகவும், 2002-2003-ல் ரூ.14,283 கோடியாகவும் கொட்டிக் கொடுக்கிறது. பொன்முட்டை இடும் வாத்து நலிந்த நிலையில் இருந்தபொழுதும் இவ்வளவு வரியை அள்ளிக் கொடுத்துள்ளது. இது உண்மையான அரசு வருவாயில் 66% ஆகும். ஆகவே, அடுத்த ஆண்டு, விற்பனை வரிக் கோரிக்கைக்காக ஒரு முழுநாள் ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செலவினங்களைக் குறைத்து 690 கோடி ரூபாய்க்குக் கூடுதலாகப் போட்ட விற்பனை வரிகளை அதிகமாகக் குறைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தொழில்களைப் பெருக்குவதன்மூலம் விற்பனை வரி மேலும் கூடும் என்பதில் ஐயமில்லை.

அரிசி, கோதுமைக்கு வரியை 1963-ல் இரத்து செய்த திரு. காமராசர் அவர்கள் போல் அம்மா அவர்களும் அரிசி, கோதுமைக்கு வரி போடக்கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன். 2,000 பருப்பு ஆலைகளிலும், 15,000 அரிசி ஆலைகளிலும் உள்ள தொழிலாளர்கள் நலன் பெற கடலை, கடலைப்பருப்பு, துவரை, துவரம்பருப்பு, பாசிப்பயறு, பாசிப்பருப்பு போன்ற பருப்பு வகைகளுக்கு 4% வரியைக் குறைக்க வேண்டும். உடைந்த பருப்பு, தூசி, தொலி முதலியவற்றை 3-ம் அட்டவணையில் சேர்த்துக் கணக்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு இலட்சம் தொழிலாளர்கள் நலன் கருதி வெல்லத்தின்மீது போடப்பட்டுள்ள கொள்முதல் வரியை எடுத்திடக் கேட்டுக்கொள்கிறேன். முன்பு போடப்பட்ட Surcharge ஒழிக்கப்பட்டு, பொருட்கள் மீதான வரி விகிதம் அதிகரிக்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் மீண்டும் Surcharge 5% விதிப்பது நியாயமற்றது; பொது மக்களுக்கு விலைவாசி அதிகமாகும். ஆகவே, மக்கள் நலன் கருதி Surcharge-ஐக் கைவிட வேண்டுகிறேன். கச்சாப் பொருட்களின்மீது செலுத்திய நுழைவு வரியை உற்பத்திப் பொருளுக்கு வசூலிக்கும் வரியில் அல்லது இணக்க வரியில் set-off செய்துகொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 350 அச்சகங்கள் மூலமாகவும், கட்டிங், ஸ்கோரிங், பஞ்சிங், லேமினேஷன், வார்னிஷ், பாலிதின், பிரிண்டிங் போன்ற ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் மூலமும் சுமார் ஒன்றரை இலட்சம் தொழிலாளர்கள் பயனடைகின்றனர். ஒரு கால கட்டத்தில் இந்தியத் தேவையில் சுமார் 20% சப்ளை செய்த இந்த அச்சகங்கள், இயந்திர இறக்குமதி தாராளமயமாக்கப்பட்டதால் கழுதை தேய்ந்து, கட்டெறும்பு ஆன கதையாக 5%-க்குக் கீழ் ஆகிவிட்டது.

நசிந்த அச்சுத் தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு, அரசு அறிவித்த இணக்க வரியை நான் வரவேற்கிறேன். ஆனால், பிற மாநிலங்களில் உள்ள அச்சகங்களுடன் கடுமையான முறையில் போட்டியிட வேண்டியுள்ளதால், அச்சகத் தொழில்கள் வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிடாமல் தடுப்பது தமிழக அரசின் கடமையாகும். இந்த இணக்க வரியை சிவகாசி, மதுரை, கோவை, சென்னை, கரூர், திருப்பூர், நாகர்கோவில் அசோசியேஷன்ஸ் கேட்டுக் கொண்டபடி 1% ஆக்கவும், முடியாத பட்சத்தில் 2% ஆக்கவும் கேட்டுக்கொள்கிறேன். இணக்க வரிக்கு சமமாக வெளி மாகாணத்தில் விற்கப்படும் அச்சுப் பொருட்களுக்கு அதே சதவீதம், 1% அல்லது 2% சலுகை வரியாக விதிக்க அரசு உத்தரவு மத்திய விற்பனை வரிச் சட்டம் செக்ஷன் 8(5)-ன் கீழ் வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இணக்க வரியை வசூல் செய்து கட்ட சட்டத் திருத்தம் செய்திட வேண்டுகிறேன். அச்சுத் தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு இணக்க வரியை அறிவித்துள்ள இந்த அரசு, இடி போல, அச்சுத் தொழிலுக்கு மிக அத்தியாவசியமான பேப்பர் அட்டைமீது நுழைவு வரி 10% விதித்திருப்பது, அச்சுத் தொழிலை மிகவும் நசிந்த நிலைக்குக் கொண்டு சென்று, தொழிற்சாலைகளை மூட நேரிடும்.

நம் மாநிலத்தில் உள்ள அச்சகங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களில் 80% முதல் 90% வரை வெளி மாகாணங்களில்தான் விற்பனையாகின்றன. நுழைவு வரியினால் நம் மாநிலத்தில் உள்ள அச்சகத்திற்கு மட்டும் உற்பத்தி அடக்க விலை கூடுதலாகி, வெளி மாகாணத்திலிருந்து கிடைக்கும் ஆர்டர்களை இழக்க நேரிடும். இதனால், வெளி மாகாணங்களுக்கு விற்பனையாகும் அளவு மிகவும் குறைந்து, அரசுக்கு வரும் வரி வருவாயும் மிகவும் பாதிக்கப்படும்.



நம் மாநிலத்தில் உள்ள காகித ஆலைகளில் தயாரிக்கப்படும் பேப்பர், அட்டை மொத்த அளவு, நம் மாநிலத்தின் தேவையில் 15% ஆகும். மீதி 85% பேப்பர், அட்டை வெளி மாநிலத்திலிருந்துதான் தருவிக்கப்படுகிறது. நுழைவு வரி விதிப்பால் பேப்பர், அட்டை விலை அதிகரித்து, தயார் செய்யும் அச்சுப் பொருட்களை வெளி மாநிலங்களில் விற்பதற்கு போட்டி போட இயலாத நிலைதான் ஏற்படும். எனவே, அச்சுத் தொழிலுக்குத் தேவையான பேப்பர் அட்டைகளுக்கு நுழைவு வரியிலிருந்து ஏற்கெனவே அறிவித்துள்ளது போல விலக்கு அளிக்க வேண்டும். குறிப்பாக, Coated Board, Duplex Board, Kraft Paper, Poster Paper, Creamwove Paper, Maplitho paper, Butter Paper, Cellophane Paper, Gold Foil Paper போன்ற வகைகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும். 27-3-2002-லிருந்து வெளி மாநில பேப்பர் வாங்காமல் அச்சகத் தொழில் ஸ்தம்பித்துப் போய் உள்ளது என்பதை அரசின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும், பேப்பர் மீதான வரி விகிதம் சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் 4%-ஆக இருந்தது. இடையில் அது 8%-ஆக உயர்த்தப்பட்டது. இந்த பட்ஜெட்டில் மீண்டும் 12%-ஆக உயர்த்தப்பட்டது. இதற்குக் காரணம், R.N.R. 12% நமது அரசு ஏற்றுக் கொண்டிருப்பதுதான். மொத்த வரி விகிதங்களை மூன்று வகையாகப் பிரிப்பதற்கு 1%, 2% மற்றும் R.N.R. என்று குறிக்கப்பட்டுள்ளது. R.N.R. 12% என்பது மிக அதிகபட்சமாகும். விலைவாசி மிக அதிகமாக உயர்ந்து, பொது மக்களும், மாணவர்களும் சிரமப்பட நேரிடும். ஆகவே, R.N.R-ஐ 8%-ஆக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவந்தான்-திருச்சியில் உள்ள கரூர் டி.என்.பி.எல்.(TNPL) மில் போல பெரிய பேப்பர் தொழிற்சாலைகளை ஆரம்பித்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டத்தில் 520 பட்டாசுத் தொழிற்சாலைகள் உள்ளன. நேர்முகமாகவும், மறைமுகமாகவும் 3 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

பொதுவாகப் பட்டாசுத் தொழில்களைத் தீபாவளி முடிந்ததும் 1 வாரம் கழித்து ஆரம்பித்து விடுவர். இந்தக் கணக்குப்படி நவம்பர் 20, 2001-ல் தொழிற்சாலைகள் ஆரம்பித்திட வேண்டும்.

ஆனால், உச்ச நீதிமன்ற உத்தரவுகள், மாசுக் கட்டுப்பாடு தடைகள், குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாக பொய்ப் பிரச்சாரம் செய்தல், பொருளாதார தேக்கநிலை ஆகியவை காரணமாக, அநேகத்

தொழிற்சாலைகளில் மார்ச் கடைசியிலேதான் பணிகள் ஆரம்பித்துள்ளன. தொழிலாளர்கள் சொல்லவொண்ணாத் துயரத்தில் உள்ளனர்.

தமிழ்நாட்டு பட்டாசு விற்பனை ரூபாய் 50 கோடி. படிப்படியாக உயர்த்தப்பட்ட விற்பனை வரி 12% ஆகும். வெறும் 6 கோடி ரூபாய்தான் வரி ஆகும். பட்டாசுத் தொழிலின் சூழ்நிலை கருதி 12% விற்பனை வரியை 8% ஆக்கி, சாமானியர்களும், பட்டாசை உபயோகித்திடவும், குழந்தைகள் மகிழ்ந்திடவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பெரும்பான்மை மக்கள் நலன் கருதி வருடத்திற்கு 1 நாள் மட்டும் உபயோகிக்கப்படும் பட்டாசுகள் இந்த வரிக் குறைப்பால் வியாபாரம் ரூ.65 கோடி வரை கூடுவதற்கு வாய்ப்பு உள்ளது. நிகர நஷ்டம் ஒருசில இலட்சங்களே வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

அலுமினியம் தமிழ்நாட்டில் உற்பத்தி இல்லை. அலுமினியம் வாங்கி பாத்திரங்களாக மாற்றும் தொழிற்சாலைகள் நலன் கருதியும், அலுமினியப் பாத்திரங்கள் வெளி மாநிலங்களில் விற்பனை செய்யும்பொழுது பாதிக்கப்படாமல் இருக்கவும், அலுமினியப் பவுடர் உபயோகிக்கும் பட்டாசுத் தொழிற்சாலைகள் நலன் கருதியும், தமிழ்நாடு தொழில் அதிபர்கள் வெளி மாநிலத்தில் விற்கும் அலுமினியம் பேஸ்ட்டின் விலை கூடாமல் இருக்கவும் அலுமினியம் மீதான நுழைவு வரியை எடுத்திட வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-00

கர்நாடகத்தில் கச்சாப் பொருட்களுக்கு வரி, 4 சதவீதம் நுழைவு வரி 1 சதவீதம் போட்டதையும் எடுத்துவிட்டனர் என்பதையும் அரசின் மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் பிரிவு 3 இன் படி தங்க ஆபரணம் விற்பனை செய்வோர்க்கு நிர்ணயம் செய்யப்படுவதுபோல், பட்டாசுத் தொழிலுக்கும் கழிவுத்தாள் கொள்முதலை மொத்த விற்பனையில் இருந்து நீக்கி வரி நிர்ணயம் செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சேம்பர் செங்கல் உற்பத்தியாளர்கள் கோரிக்கைக்கு இணங்க அமைச்சர்களுடன் 30-1-2002-ல் பேசியபடி அடுப்பு எண்ணிக்கை அடிப்படையில் காம்பவுண்டிங் முறை அமல்படுத்த வேண்டிக் கொள்கிறேன்.



விவசாயத்திற்கு அடுத்ததாக வேலைவாய்ப்பு கொடுக்கும் கட்டுமானத் தொழிலுக்கு உபயோகப்படும் பொருட்கள் மீதான விற்பனை வரி, நுழைவு வரியைக் குறைத்திட வேண்டுகிறேன். நட்சத்திர ஓட்டல்களுக்கு 20 சதவீத விற்பனை வரி என்பது மிகவும் கூடுதலாகும். இதனால் வெளிநாட்டினர் சுற்றுலாவிற்கும் வணிகத்திற்கும் இங்கே வருவது குறைகிறது. இதை 12 சதவீதமாக ஆக்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சிறு மற்றும் குறு பெயிண்ட் தொழிற்சாலைகள் பயனடையும் வகையில் இவர்கள் தயாரித்து விற்கும் முதல் ஒரு கோடி ரூபாய் விற்பனைக்கு 8 சதவீதம் வரி போடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் பன்னாட்டு நிறுவனங்களான ஏசியன் பெயிண்ட்ஸ், நெரோலாக் பெயிண்ட்ஸ் போன்ற நிறுவனங்களுடன் போட்டியிடமுடியும். தொழிலும் நிலைத்து நிற்கும். தமிழ்நாடு மொத்த பெயிண்ட் விற்பனையான 500 கோடி ரூபாயில் சிறு மற்றும் குறு பெயிண்ட் தொழிற்சாலைகள் மொத்த உற்பத்தி வெறும் 50 கோடி ரூபாய்தான் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இது முடியாத பட்சத்தில், வெளிமாநிலத்திலிருந்து வரும் பெயிண்ட்டுகளுக்கு 20 சதவீத நுழைவு வரி போட்டு, தமிழ்நாட்டில் உள்ள சிறு மற்றும் குறு பெயிண்ட் தொழிற்சாலைகளைக் காத்திட வேண்டிக்கொள்கிறேன்.

விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சி, வேலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 15 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் தீப்பெட்டித் தொழில் மிகவும் நசிந்துள்ளது. இதற்கு முக்கிய மூலப்பொருளான குளோரைடு ஆஃப் பொட்டாஷ் 80 சதவீதம் பாண்டிச்சேரி மற்றும் கேரளாவில் இருந்து வருகிறது. நுழைவு வரியின் மூலம் விலை உயரும்; தொழில் மேலும் பாதிக்கும். எனவே குளோரைடு ஆஃப் பொட்டாஷுக்குப் போட்ட நுழைவு வரியைக் கட்டாயம் எடுக்கும்படி அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசி தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்களின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு அரசு நிறுவனமான ஆலங்குளம் அரசு சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்ய வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிற்சாலை மட்டும் இருக்கிறது. வேறு தொழில் ஏதும் இல்லை. ஆகவே அங்கே தொழிற்சாலை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மூடிய ஆலைகள் தமிழ்நாட்டில் நிறைய உள்ளன. டெக்ஸ்டைல்ஸ், கூட்டுறவு நூற்பாலைகள், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், பின்னி, சிப்காட் ஆக 40 சதவீதம் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. உங்கள் தேர்தல் வாக்குறுதியின்படி இவற்றை விரைவில் திறக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

படித்த இளைஞர்கள் இலட்சக்கணக்கில் வேலையில்லாமல் உள்ளனர். நாம் ஒன்றிய அளவில் ஒரு கோடி ரூபாய் அளவில் தொழிற்சாலைகள் திறக்க உள்ளோம். இது போதாது. குறைந்தது 500 பேருக்கு வேலை கிடைக்கும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நஷ்டத்தில் ஓடுவதால் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.1000 கொடுக்க இயலவில்லை என்று கூறுகிறார்கள். இந்த நிர்வாகச் சீர்கேடுகளை நீக்கி இலாபகரமாக ஆலைகளை ஓட்டி, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாட்டில் தயாராகும் ஹூண்டாய், ஃபோர்டு கார்கள் இந்தியா பூராவும் ஒரே விலையில் விற்கப்படுகின்றன. தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில் இவற்றின் விலையை இங்கே குறைத்துக் கொடுக்கும்படி இந்த அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிமெண்ட் விலை தற்போது அதிகமாக விற்கிறது என்றாலும், கூடுதல் வரி என்கிறோம், ஆனால் விலை குறைந்தபாடு இல்லை. சிமெண்ட் உற்பத்தியாளர்களின் சிண்டிகேட்டை உடைத்து சிமெண்ட் மூட்டை ரூ.120-க்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகரில் சிறுசிறு தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இதுவரையிலும் திறக்கப்படாமல் இருக்கின்றன. அந்தக் கூடங்கள் யாவும் பல ஆண்டுகளாகப் பாழடைந்து பாதுகாப்பற்ற நிலையில், இரவு நேரங்களில் சமூக விரோதிகள் சந்திக்கும் இடமாக மாறியிருக்கின்றன. அந்தத் தொழில் கூடங்களைத் திறந்து தொழில் செய்ய



முன்வருவோருக்கு குறைந்த விலைக்குக் கொடுத்துதவ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

HDPE Granules தமிழ்நாட்டில் உற்பத்தி இல்லை. Woollen Fabrics, Socks தொழிலைக் காத்திட, இதன் நுழைவு வரியை எடுத்திட வேண்டுகிறேன். Electrical and Electronic Goods-க்கு 12 சதவீதம் விற்பனை வரியை, கர்நாடகா போன்று 4 சதவீதம் ஆக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மூன்று நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். வரி குறைக்காவிடில் Electrical and Electronic Goods வணிகம், தொழில்கள் பிற மாநிலங்களுக்குச் சென்றுவிடும் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து Information and Technology Industries-க்குத் தேவையான Electrical and Electronic goods-களின் வரியைக் குறைத்திட வேண்டுமென்று அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் விவசாயப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்பொருட்டு எண்ணெய் வித்துக்கள் வாரியம் ஒன்று அமைக்க வேண்டும். அதில் விவசாயிகளும், எண்ணெய் ஆலை அதிபர்களும், வணிகர்களும் வேளாண்மை பற்றிய அறிவாளிகளும் அங்கத்தினர்களாக இருந்து திறம்பட செயல்பட எண்ணெய் வித்துக்கள் வாரியம் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணெய் வித்து பயிரிடும் விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுக்க தமிழகத்தில் உள்ள எண்ணெய் ஆலைகள் சிறப்பாகச் செயல்படவேண்டும். அயல்நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் உணவு, எண்ணெய் விலைகள் மிகவும் குறைவாக இருப்பதாலும், அதிக அளவு இறக்குமதி செய்யப்படுவதாலும் தமிழகத்தில் உணவு எண்ணெய் தயாரிக்கும் தொழில்கள் பல சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளன. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்களுக்கு, தமிழகத்தில் உள்ள எண்ணெய் தயாரிக்கும் தொழில்களுக்கு உள்ளதுபோல, இரு கட்ட வரி இல்லை. அவர்கள், எண்ணெய்க்கு மட்டும்தான் வரி செலுத்துகிறார்கள். இதனால் நமது மாநிலத்தில் உள்ள எண்ணெய் தயாரிப்பாளர்கள், அவர்களுடன் போட்டி போட இயலாத நிலை உள்ளது. சிறு தொழில் நசிந்துபோய் பலர் வேலைவாய்ப்பை இழக்க நேரிடுகிறது. விவசாயிகள், அவர்கள் உற்பத்தி செய்யும் எண்ணெய் வித்துக்களுக்கு நல்லதொரு விலை கிடைக்காமல் தமிழகத்தில் எண்ணெய் வித்து உற்பத்தியும் பாதிப்புக்கு உள்ளாகி

உள்ளது. ஆதலால், தமிழகத்தில் உள்ள எண்ணெய் ஆலைகள், நசிந்து விடாமல் இருக்க, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் எண்ணெய்களுக்கு மட்டும் ஏதாவது வழியில் கட்டாயம் நுழைவு வரி விதிக்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-05

தமிழக விவசாயிகளின் நலன் காக்க, விவசாயிகள் உபயோகிக்கும் இடுபொருட்கள் மீதான வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒரு சதவீதம், ஒரு சதவீதம் என்று Tax அதிகமாகப் போடும்போது, அது M.R.P. விலையைவிட அதிகமாகும் என்பதையும் கருத்தில்கொண்டு, நலிவடைந்த விவசாயத் தொழிலின் நலன் கருதி, அந்த வரியைக் குறைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான விருதுநகருக்கு இன்றியமையாத ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத்திலிருந்து 2 ஆம் பைப்லைன் போடுவதற்கும், 40, 50 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட மோட்டார், சுவிட்சு, பைப்லைன்களை மாற்றுவதற்குமான ரூ.20 கோடி திட்டத்தினை நிறைவேற்றி, விருதுநகர் மக்களுக்கு தினசரி தண்ணீர் சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விருதுநகர் மாவட்ட மக்களின் உடனடித் தேவையான கூட்டுக் குடிநீர்த் திட்டமாகிய தாமிரபரணி ஆறு, பாபநாசத்திலிருந்து 5 டி.எம்.சி. தண்ணீர் எடுத்து, இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர், சிவகாசி (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். ஒரு நிமிடம் - சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை நகராட்சிகளுக்கும், 11 பேரூராட்சிகளுக்கும், 540 பஞ்சாயத்துகளுக்கும் பயன்அளிக்கும் வகையில் ரூ.925 கோடி திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசி - துலுக்கப்பட்டி சாலையையும், சிவகாசி - எரிச்சநத்தம், ஆமத்தூர்-எரிச்சநத்தம் சாலையையும், விருதுநகர்-பேராளி சாலையையும், தேசிய நெடுஞ்சாலை எண் 7 - சாத்தூர் வழி, நடுவப்பட்டி -- வேப்பிலைப்பட்டி - சந்தையூர் - கோல்வார்பட்டி சாலையையும் சரி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், அரசின் 20 இலட்சம் ஹெக்டேர் தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் கானல் நீர் திட்டம் அல்ல, இலகுவில் செயலாக்கக் கூடியது தான் என்பதற்கு உள்ள உதாரணத்தை நான் தபால் மூலம் நம்முடைய விவசாயத் துறை அமைச்சருக்கும், பொதுப் பணித் துறை அமைச்சருக்கும் கொடுத்துள்ளேன். வறட்சி மாவட்டமான விருதுநகர் மாவட்டத்தின் ஒரு இலட்சம் ஹெக்டேர் தரிசுநில மேம்பாட்டுத் திட்டக் குறிப்பை மாண்புமிகு அமைச்சருக்குக் கொடுத்ததன்படி, இந்தத் திட்டத்தை விருதுநகர் மாவட்டத்திற்கு நிறைவேற்ற என்னாலான உதவியைச் செய்துதர தயாராக இருக்கிறேன் எனக் கூறிக்கொள்கிறேன். இதுபோல், ஏனைய 29 மாவட்டங்களில், நகர்ப்புற மாவட்டங்கள் 5 ஐக் கழித்து, 25 மாவட்டங்களில், 21 இலட்சம் ஹெக்டேர் பாசனம் செய்ய முடியும். இதன்மூலம், மாநில அரசின் 15 அம்ச திட்டத்தில், 7-ஐ இலகுவாக நிறைவேற்ற முடியும். கர்நாடக முதலமைச்சர், 2002-2003 பட்ஜெட்டைத் தொடங்கி, அவர் கூறியதை நினைவுகூர விரும்புகிறேன்.

"When the economy is going through a recessionary phase, it will be prudent for any Finance Minister not to keep his sights very high on additional resource mobilisation. It is claimed that the additional resource mobilisation from Commercial Taxes will be Nil."

இதற்கிணங்க, நமது மாநிலத்தில் விற்பனை வரியை அதிகமாகப் போட்டதைக் குறைத்து, தொழில்களை ஊக்குவித்து அதிகமான வரி வசூலுக்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தற்போதுள்ள தமிழர்களினுடைய ஆண்டு வருமானம், ரூ.17,500 ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கார்த்தி.

**திரு. எஸ். தாமோதரன்:** நன்றியை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். தாமோதரன்:** இதை 2, 3 ஆண்டுகளில் இரட்டிப்பாக்க முடியும். 'TASMAC' அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் விற்பனையாகும்

மது ரூ.2840 கோடி ஆகும். இதுபோல், கள், சாராயம், வெளிநாட்டு மதுவகைகள் விற்பனை சுமார் ரூ.2840 கோடி சேர்ந்தால், சராசரி தமிழக குடும்ப செலவு வருடம் ஒன்றுக்கு ரூ.6000 ஆகும். மது, சாராயத்தையும் அடியோடு ஒழிப்பதன் மூலம், தொழில், விவசாயம் கூடுதலாகி, சராசரி வருமானம் அதிகமாகும். தேவைப்பட்டால், பல இலட்சம் பனைத் தொழிலாளர்கள் பயன்பெற சுண்ணாம்பு இல்லாத பதனீர் இறக்கினால், குடி மக்களுக்குக் குடிச் செலவு அற்பமாக இருக்கும் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதுபோல, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கார்த்தி அவர்கள்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் வணிகவரித் துறை மானியத்திலே பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கும், எனது தொகுதி மக்களுக்கு உழைத்திட வாய்ப்புத் தந்த டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமை தாயகத்தினுடைய தலைவர் டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும், தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன், தொழில் துறையில், இந்தியாவில் உள்ள முன்னணி மாநிலங்களில், ஒன்றாக தமிழகத்தைக் கொண்டுவர நாம் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்பட்டாலும்கூட, இப்போது பல்வேறு காரணங்களால் ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டு, அதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், குடும்பங்களோடு பாதிக்கப்பட்டுள்ளனர். வறுமையில் வாடும் அந்தத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிப்பதோடு, மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் திறந்திட அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு சிறு தொழில் துவங்கிட மானியத்துடன் கடன் வழங்க வேண்டும். ஏராளமான இளைஞர்கள் படித்துவிட்டு வேலைவாய்ப்பு இல்லாமல், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு வேலைக்காக காத்து இருக்கிறார்கள். ஆனால், இளைஞர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கக்கூடிய வகையில் அரசுத் துறையில் புதிய வேலைவாய்ப்புக்கு



தடை ஏற்படுத்தி இருப்பது அவர்களுடைய எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி இருக்கிறது.

பொதுத் துறை நிறுவனங்கள், அங்காடியிலிருந்தும் மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்தும் கடன் பெறும்போது, அரசு அவற்றிற்கு உத்தரவாதம் தருகிறது. பொது நிறுவனங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறும்போது அவற்றிற்கு அரசே உத்தரவாதம் தருகிறது; தற்போது நிலுவையில் உள்ள மொத்தம் ரூ.12,388 கோடிக்கு அரசு உத்தரவாதம் அளித்து உள்ளது. கடன்களை திருப்பிச் செலுத்தத் தவறிய பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் சரியாக இயங்கி, இன்னும் அதிக இலாபம் ஈட்டும்படிச் சீர் செய்ய வேண்டும். தமிழகத்தில் உள்ள வருவாய்த் துறை நிலங்களிலும், வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களிலும் கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கும் தொழில் மூலம் அரசுக்கு அதிக இலாபம் ஈட்ட புதிய குவாரிகளைத் தனியாருக்கு ஏலம் கொடுப்பதன் மூலமாகவும், தற்போதுள்ள ராயல்டி கட்டணத்தைக் கூடுதலாக்குவதன் மூலமாகவும் அரசுக்கு அதிக வருமானம் கிடைக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியாரிடம் இருந்த மேக்னசைட் கனிமத்தை வெட்டி எடுத்து வந்த சேலம் மேக்னசைட் பிரைவேட் லிமிடெட் சுரங்கக் குத்தகைக் காலம் முடிந்த பிறகு 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு மேக்னசைட் - டாமின் என்ற நிறுவனத்தை அரசு தொடங்கி சுரங்கப் பணி நடைபெற்று வந்தது. 1985 ஆம் ஆண்டு சுழலும் சூளை ஒன்று ரூபாய் 8.57 கோடி செலவில் வருடத்திற்கு 30 ஆயிரம் டன் எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்யும் திறனுடன் தொடங்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டில் 110 சதவீதமாக இருந்த சுங்க வரி, அடுத்தடுத்து வந்த மத்திய பட்ஜெட்டில் படிப்படியாகக் குறைந்து இறுதியாக 2002 ஆம் ஆண்டில் மத்திய பட்ஜெட்டில் 15 சதவீதமாகக் குறைந்து அத்துடன் சுங்க வரி மீதான Surcharge 10 சதவீதமும் நீக்கப்பட்டுவிட்டது. சுங்கவரியின் ஒட்டுமொத்தக் குறைப்பினாலும், Sur-charge நீக்கியதாலும், அதன் விளைவாக நம் நாட்டில் உற்பத்தியாகிவந்த எரியூட்டப்பட்ட மேக்னசைட் உள்நாடு முழுதும் தேவை குறைந்து போனதாலும், சுங்கவரி 110 சதவீதத்திலிருந்து படிப்படியாக 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுவிட்டதாலும், மலிவு

விலையில் மேக்னசைட் பொருட்கள் இறக்குமதி செய்து குவித்து வரும் காரணத்தாலும், நிறுவனம் தொடர்ந்து இழப்பை அடைந்துள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு இந்நிறுவனம் ரசாயன தரம் மேம்படுத்தும் திட்டதைத் துவங்கியதாகவும் இந்தத் திட்டத்திற்குச் செலவான தொகை ரூ.44.8 கோடியைத் தள்ளுபடி செய்யுமாறும் தொடர்ந்து பல ஆண்டுகளாக இந்நிறுவனம் அரசைக் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்தத் திட்டத்திற்காக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் கிடங்கில் பாதுகாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த இயந்திரங்களுக்குச் சுங்கவரி மற்றும் அதன்மீது வட்டியும் சேர்த்து 1974.58 இலட்சம் என்று கூறப்படுகிறது. அரசு பங்கு மூலதனமாகவும், குறுகிய கால முன்பணமாகவும் மற்றும் கடனாகவும் வழங்கிய ரூ.44.7 கோடியை இந்த திட்டப் பணிக்கு நல்ல முறையில் செயல்படுத்தாததால் அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இதுபோன்று திட்டத்தினுடைய துவக்கத்திலேயே நஷ்டம் ஏற்படாமல் அரசு கவனம் செலுத்தி நிதி இழப்பைத் தவிர்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் கூட்டுறவு நூற்பாலையில் சுமார் 900 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு 8 மாத காலமாகச் சம்பளம் வழங்கப்படாத நிலை உள்ளது. எனவே, உடனடியாக சம்பளம் வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். மேலும், விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய P.F., Gratuity ஆகியவற்றை உடனடியாக வழங்க வேண்டும்.

சேலம் கூட்டுறவு நூற்பாலை முழுமையாக, சிரமம் இல்லாமல் தொடர்ந்து இயங்கிட 1000 குடும்பங்களினுடைய இன்னலைப் போக்குகின்ற வகையில் அரசு ரூ.2 கோடி நிதி ஒதுக்கி மேலும் சேலம் மத்திய கூட்டுறவு வங்கியில் மீண்டும் கூட்டுறவு நூற்பாலையின் வரவு செலவுக் கணக்கைத் தொடர ஆவன செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும். தமிழகத்தில் இதுபோன்று நலிவுற்ற நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் கூட்டுறவு நூற்பாலைகளை நல்ல முறையில் இயக்கிட ஆண்டு தோறும் அரசு வழங்கி வந்த இலவச வேட்டி, சேலையினை வழங்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



தமிழக அரசு, அரசாணை எண் 133, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை 12-2-2002 மூலம் உத்தரவிட்டவாறு மூடப்பட்ட மற்றும் இயங்காமல் உள்ள நிறுவனங்களை மீண்டும் திறக்க உரிய வழிவகைகளை ஆராயும்பொருட்டு அமைக்கப்பட்ட சேலம் மாவட்ட முத்தரப்புக் குழுவின் முதல் கூட்டம் 19-3-2002 ஆம் நாளன்று சேலம் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், அலெக்சாண்டர் திரட் டிவிஷன், மேட்டூர் அணை, மைக்கோ பார்ம் கெமிக்கல்ஸ் லிமிடெட்., மேட்டூர் அணை, சேலம் ரெஃப்ராக்டரிஸ் பிரைவேட் லிமிடெட், சேலம் கருணா ஸ்டீல் ரோலிங் மில், சேலம் ஆகிய நிறுவனங்களைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனங்களைச் சேர்ந்த உரிமையாளர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூறி அரசு சார்பாகக் கடிதம் எழுதி இருந்தும் உரிமையாளர்கள் யாரும், அவர்கள் சார்பாகக் கலந்துகொள்ளவில்லை.

பிற்பகல் 1-15

தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய ஆலைகளில் ஒன்றான மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் சுமார் 93 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது. இதனுடைய மதிப்பு சுமார் பல கோடிக்குப் போகும். இதனை நம்பி ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் இன்னும் பணி செய்வோம் என நம்பிக்கையோடு வாழ்ந்து வருகிறார்கள். இதில் சுமார் 1100 தொழிலாளர்கள் தற்போது 58 வயதைக் கடந்துவிட்டார்கள். பல கோடி ரூபாய் மதிப்புள்ள இந்நிறுவனம் சில ஆயிரம் ரூபாய் கடனுக்காக Official Liquidator-ரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதில் இருக்கின்ற பல இயந்திரங்கள் நல்ல முறையில், இயக்கக்கூடிய நிலையில் உள்ளன. ஆகவே, அரசு இதில் கவனம் செலுத்தி ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்க்கையில் விளக்கை ஏற்றுகின்ற நிலையில் இந்த ஆலையை மீண்டும் திறப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, முத்தரப்புக் குழுவினருக்கு அரசு சில அதிகாரங்களைக் கொடுத்து அந்தந்த மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள நிறுவனங்களை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான சேலம் உருக்கு ஆலை மற்றும் பார்ன்ஸ் டேண்ட் கம்பெனி ஆகிய இந்த

இரண்டு கம்பெனிகளும் இப்போது மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து வருகிறது. ஆனால், அதை மத்திய அரசு தனியாருக்கு விற்பதற்கு முயற்சி செய்து வருகிறது. ஆகவே, அரசு தலையிட்டுத் தனியாருக்கு விற்பதைத் தடை செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசுக்கு அதிகமாக வரி வருவாயை ஈட்டித் தருவது விற்பனை வரி. அரசின் மொத்த வரி வருமானத்தில் சுமார் 80 சதவிகிதம் விற்பனை வரியிலிருந்து கிடைத்து வருகிறது. இந்த வரிகள்தான் எத்தனை வகைகள்? பொது விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி, விற்பனை மேல் வரி, மத்திய விற்பனை வரி, கேளிக்கை வரி, பந்தைய வரி, ஆடம்பர வரி, விளம்பர வரி, நுழைவு வரி என்ற பட்டியலில் தற்போது மதிப்புக் கூட்டு வரி, சமச்சீர் வரி முதலிய புதிய இனங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மத்திய அரசு சிறிதளவு இரயில் கட்டணத்தை உயர்த்தினால்கூட ஏழைகளைப் பாதிக்கும் என்று நாம் கருத்துச் சொல்கிறோம். இந்த அரசு ஏழையெளியவர்களைக் கடுமையாகப் பாதிக்கும் விற்பனை வரி உயர்வுகளை அறிவித்தபோது, கசப்பான மருந்து என்று சமாதானம் சொல்கிறார்கள். அத்துடன், இதுவரையில் இல்லாத அளவுக்கு அரிசி, பருப்பு, கோதுமை போன்ற அத்தியாவசியமான உணவுப் பொருட்களுக்கு புதியதாக 2 சதவிகித வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

பிறக்கும் குழந்தை முதல் இறக்கும் முதியோர் வரை அதாவது, பிறக்கும் முதல் இறக்கும் வரையிலான மனிதர்கள் பயன்படுத்தக்கூடிய அனைத்துப் பொருட்களையும் விட்டு வைக்காமல் வீட்டு உபயோகத்திற்கான அனைத்துப் பொருட்களுக்கும் வரி உயர்ந்திருக்கிறது.

வியாபாரிகளிடமிருந்துதான் இந்த வரியை வாங்குகிறோம் என்றும், இது பொதுமக்களுக்கு அல்ல என்றும் நாம் கூறுகிறோம். ஆனால், வியாபாரிகளுக்கு வரி என்று நீங்கள் சொன்னால், அதை எந்த வியாபாரியும் கட்டுவது இல்லை. அரசு 2 சதவிகித வரி உயர்த்தினால் அவர்கள் 3 சதவிகிதமாக வரியை உயர்த்தி விடுகிறார்கள்.

கடந்த சில வருடங்களாக அளிக்கப்பட்டுள்ள audit report-களைப் படித்துப் பார்த்தால், எந்த அளவுக்கு வரி வருமானம் வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது என்பது தெரிய வரும். 1990-91-ஆம் ஆண்டு வரி வருமானப் பாக்கி 519 கோடி ரூபாய், இது



அந்த ஆண்டு வசூலிக்கப்பட்டதில் 15 சதவிகிதம். இது இந்த அளவுக்கு படிப்படியாக உயர்ந்து, 1999-2000 ஆண்டில் 71 சதவிகிதமாக அதிகரித்திருக்கிறது. இதில் விற்பனை வரிப் பாக்கியே அதிகம். அதுமட்டுமல்ல, வசூலிக்கப்பட்ட விற்பனை வரியைவிட வசூலிக்கப்படாத விற்பனை வரி அதிகம் என்று audit report-ல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1999-2000-இல் விற்பனை வரி பாக்கி 7244 கோடியை வசூலிக்க நடவடிக்கை எடுத்திருந்தாலே, ஒவ்வோர் ஆண்டும் விற்பனை வரி இலக்கினை எட்டியிருந்தாலே, பற்றாக்குறை பட்ஜெட் தேவையிருக்காது. மேலும், புதிய வரிகளுக்கும் அவசியம் இருந்திருக்காது. இன்னொரு முக்கியமான குற்றச்சாட்டினையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். Auditor-General-ன் ஆண்டு அறிக்கையில், விற்பனை வரித் துறையின் தவறுகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படிச் சுட்டிக்காட்டி கருத்துகளைத் தெரிவித்தபோது, அதற்குத் தகுந்த விளக்கம் அளிக்கப்படுவதில்லை என்றும், விற்பனை வரித் துறையினர் அலட்சியமாக இருந்து விடுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 2000ஆவது ஆண்டில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட inspection report மற்றும் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட audit objection இருந்தும் விற்பனை வரித் துறையின் மூலம் பதில் அளிக்கப்படவில்லை என்று audit அறிக்கையிலேயே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தொடர்ந்து வந்த ஆண்டுகளிலும் இந்த நிலைமைதான். மிக உயர்ந்த அமைப்பான Auditor-General-ன் அறிக்கைக்கே விளக்கம் அளிப்பதில் தயக்கம் காட்டும் துறை, விரிவான வரி பாக்கியை வசூலிப்பதில் எப்படி வேகமாகச் செல்லும் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

விற்பனை வரி என்பது பொன் முட்டையிடும் வாத்து. பொன் முட்டைக்காக வாத்தையே கொன்றுவிடக் கூடாது. விற்பனை வரி, மேல் வரி, வரிக்கு மேல் கூடுதல் வரி என்று அடுக்கிக் கொண்டே போனால், பாதிக்கப்படுவது பொது மக்கள்தான் என்பதனை மனதில் கொண்டு அரசு செயல்பட வேண்டும். ஆக மொத்தத்தில் அரிசி, கோதுமை, பருப்பு, எண்ணெய், வெல்லம், யுனானி மற்றும் சித்தா மருந்து, தங்கம், வெள்ளி, சாம்பிராணி, சமையல் பாத்திரங்கள், ஓடு, சிமெண்ட், காகிதம், காகித அட்டை, செங்கல், ஆஸ்பெஸ்டாஸ் அட்டை, மின் விசிறி ஆகிய மக்களின் அத்தியாவசிய பொருட்களின் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகளை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.

பிற்பகல் 1-20

கடந்த 5 ஆண்டுகளில் வரி வசூல் வருமானம் குறித்து புத்தகத்தின் 7-வது பக்கத்தில் ஒரு பட்டியல் போடப்பட்டுள்ளது. பொது விற்பனை வரி, மத்திய விற்பனை வரி, பந்தைய வரி, ஆடம்பர வரி, மோட்டார் வாகன நுழைவு வரி, முதலான வருமானங்கள் ஆண்டாண்டு உயர்ந்து கொண்டே போகின்றது. ஆனால், கேளிக்கை வரி வருமானம் மட்டும் 1997-1998-ஆம் ஆண்டில் 109 கோடி வசூல், 2002-ல் 68 கோடி ரூபாய் என்று குறைந்து இருக்கிறது. அதாவது 41 கோடி ரூபாய் கேளிக்கை வரி வசூல் குறைந்ததற்கு என்ன காரணம்? சினிமா பார்ப்போரின் எண்ணிக்கை குறையவில்லை. அப்படியானால், கேளிக்கை வரியில் மோசடி பெரிய அளவில் நடந்துள்ளது என்று நாம் சந்தேகப்படுகின்றோம்.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு விற்பனை வரியை அரசு உயர்த்தியுள்ளதால் மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறைந்தபட்சம் உணவு மற்றும் சமையல் எண்ணெய் போன்ற அன்றாடம் உபயோகிக்கும் அத்தியாவசியப் பொருட்கள் மீதான கூடுதல் வரியை அரசு ரத்து செய்ய வேண்டும்.

மறைமலை நகரில் வீட்டுவசதி வாரியத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டு மனைகளுக்கு அபிவிருத்தி செய்யப்படாத அடிமனை விலைக்குப் பத்திரப் பதிவு செய்யப்படுகிறது. ஆனால், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினால், அதே மறைமலை நகரில் ஒரே சர்வே நம்பரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீடுகளுக்கு மார்க்கெட் ரேட்டுக்குப் பத்திரம் வாங்கிப் பதிவு செய்ய வலியுறுத்துகிறார்கள். தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு வழங்கப்படும் அதே சலுகை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினால் ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளுக்கும் வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சில முக்கியமான கோரிக்கைகளை இங்கே அரசுக்கு வைக்க இருக்கின்றேன். ஏற்கெனவே இந்த அவையில் இந்தக் கருத்துகளை நான் கூறியுள்ளேன். மீண்டும் அதே கருத்துகளை வலியுறுத்த விரும்புகிறேன்.



சேலம் மாநகராட்சியில் புதியதாகச் சேர்க்கப்பட்ட 21 பஞ்சாயத்துகளுக்கு 17 இடங்களில் குடிநீர்த் தொட்டிகள், பைப்புகள் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட 24.5 கோடி ரூபாயில் 2000 ஆம் ஆண்டு ரூ.6.60 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இரண்டு குடிநீர்த் தொட்டி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு சேலம் 2-வது தொகுதி சேலம் 1-வது தொகுதி, வீரபாண்டி தொகுதி ஆகிய தொகுதிகளுக்கு தலா ஒரு தொட்டியாவது கட்டுவதற்கு அரசு கூடுதலாக நிதி ஒதுக்கிக் கொடுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகரப் பகுதியில், குறிப்பாக, சேலம் 2-வது தொகுதி முழுவதும், பயன்பெறக்கூடிய வகையில் அஸ்தம்பட்டி பகுதியில் 110/22 கே.வி. துணை மின் நிலையம் ஒன்று அமைத்திட 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வாரியத்தால் அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால் தேவையான இடம் இல்லாததால், இந்தத் திட்டம் நிறைவேறாமல் உள்ளது. சேலம் மத்திய சிறைச்சாலைக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்து துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் ஆயுதப் படையில் 1982 முதல் 1993ஆம் ஆண்டு வரை பணியில் சேர்ந்த சுமார் 400 காவலர்கள் தொடர்ந்து சுமார் 15 முதல் 20 ஆண்டு காலமாக ஆயுதப் படையிலேயே பணிபுரிந்து வருகிறார்கள். வேறு மாவட்டங்களில் இருந்து மாறுதலாகி வரும் காவலர்கள் சேலம் மாவட்டத்தில் உள்ள 30 காவல் நிலையங்களில் நேரிடையாகப் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். தற்போது சுமார் 150 காவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. சேலம் மாவட்ட ஆயுதப் படையில் பணிபுரியும் காவலர்களைக் காவல் நிலையங்களில் காலியாக உள்ள இடங்களில் பணியில் அமர்த்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற ஆறு மாநகராட்சியில் சேலம் மாநகராட்சிக்கு மட்டும்தான் பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற திட்டங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு 1983ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 286 உள்ளாட்சித் துறையின் மூலமாக 1,200 இலட்சம் ரூபாய்க்குத் திட்டம் அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு ரூ.176 லட்சம் செலவில்

[திரு. மு. கார்த்தி] [2002 மே 7

21 கிலோ மீட்டர் நீளத்திற்குக் குழாய் பதிக்கப்படும் பணி நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

ஆனால், சேலம் மாநகராட்சிப் பகுதியில் சாக்கடை நீரை முழுமையாக வெளியே கொண்டு செல்ல முடியாத நிலையில் சேலம் மாநகராட்சியின் பல பகுதிகளில் சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. ஆகவே அந்தப் பணி இப்போது மிக மோசமாக இருக்கின்றது. சேலம் மாநகராட்சிக்குப் புதிதாக ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல சேலம் 2-வது தொகுதியில்--நான் பல முறை கேட்டு இருக்கின்றேன், அது கிராமப் பகுதி--செட்டிச்சாவடி கிராமத்தில் சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தங்களுடைய அனுபவத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால் அந்த விவசாய நிலங்களில் கனிமவளம், மேக்னசைட், இருப்பதாகக் கூறி அந்த விவசாய நிலங்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே அரசு அந்த இடங்களைப் பார்வையிட்டு (மணியடிக்கப்பெற்றது) அது விவசாய இடமாக இருந்தால் மட்டுமே பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் அரசு ஆணையைப் பிறப்பித்து முப்போகமும் விளையக்கூடிய கரும்பு, நெல், வாழை, மஞ்சள் விளையக்கூடிய விவசாய நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

சேலம்-2 தொகுதி, மிட்டாஅய்யம்பெருமாள்பட்டி கிராமத்தில் ஏற்காடு, கண்ணங்குறிச்சியில் உள்ள மூக்கனேரியில் மழைநீர் தேங்கி நிற்பதால், இந்தப் பகுதியில் உள்ள சிறு விவசாயிகள் முப்போகமும் --நெல், கரும்பு, மல்லிகை மற்றும் பல்வேறு பயிர்களை--விவசாயம் செய்து வருகிறார்கள். முப்போகமும் விளையக்கூடிய இந்த விவசாய நிலங்களை 1980-ஆம் ஆண்டு, 267 ஏக்கரை தரிசு நிலம் எனக்கூறித் தமிழநாடு வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்தியது. அந்த நிலங்களுக்குச் சதுர அடி ஒன்றுக்கு 35 பைசா முதல் 50 பைசா வரை அரசு விலை நிர்ணயம் செய்தது. ஏற்கெனவே, இதே கிராமத்தில் 30 வருடங்களுக்கு முன்பு வீட்டு வசதி வாரியத்திற்காக 75 ஏக்கர் நிலத்தில் வீடுகள் கட்டப்பட்டன. அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்காகச் சுமார் 50 ஏக்கர் நிலமும், தொழிற்பயிற்சி



2002 மே 7] [திரு. மு. கார்த்தி]

நிலையத்திற்காகச் சுமார் 40 ஏக்கர் நிலமும், சமூக நலத் துறைக்காகச் சுமார் 10 ஏக்கர் நிலமும் அரசு எடுத்துக்கொண்டது; அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையம். சமூக நலத் துறை விடுதி ஆகியவை இயங்கி வருகின்றன. 1980ஆம் ஆண்டு கையகப்படுத்திய நிலத்தில் 40 ஏக்கரில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளைச் சுற்றிலும் மழை நீர் தேங்கி நிற்பதால் குடியிருப்பதற்குப் பெருமளவு யாரும் வருவதில்லை. இன்னும் பல வீடுகள் விற்கப்படாமலேயே உள்ளன. கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் தற்போது சேலம் மாநகராட்சியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆதலால், அந்த நிலங்கள் தற்போதைய மார்கெட் நிலவரப்படி சதுர அடி ஒன்றுக்கு ரூ.100 லிருந்து ரூ.200-க்குமேல் விலை போகக்கூடிய நிலங்களாக உள்ளன.

21 ஆண்டுகளுக்கு முன்பு கையகப்படுத்திய நிலங்களை இதுவரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஸ்வாதீனத்தில் எடுக்க முடியாத நிலை உள்ளது. தரிசு நிலங்களைக்கூட விவசாய நிலங்களாக மாற்ற இந்த அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்துவரும் இந்தச் சூழ்நிலையில், முப்போகமும் விளையக்கூடிய இந்த விவசாய நிலங்களைக் கையகப்படுத்திய திட்டத்திலிருந்து விலக்களித்திட வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சேலம் பழைய பஸ் நிலையத்திலிருந்து குமாரசாமிபட்டி, அஸ்தம்பட்டி, ஐந்துரோடு வழியாக ஜங்ஷன்வரை செல்லும் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சி மையப் பகுதியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாக அலுவலகம், பஸ் பாடி கட்டும் தொழிற்சாலை, tyre retreading--புதுப்பிக்கும் பணிகள் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலம் மாநகராட்சியின் மைய குடியிருப்புப் பகுதியில் உள்ள இந்தப் போக்குவரத்துக் கழகத்தின் தொழிற்சாலையின் மூலம் எண்ணெய், ஆயில், கிரீஸ் கழிவுகளையும், டயர் புதுப்பிக்கும் ரப்பர் கழிவுகளையும் பம்பு மூலமாக மாநகராட்சிச் சாக்கடைகளில் வெளியேற்றுகிறார்கள். இதனால், மழைக் காலத்தில் சேலத்தில் உள்ள 20 அடி, 40 அடி ரோடுகள் மூலம் இங்கே உள்ள குடியிருப்புப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் இந்தக் கழிவுகள் புகுந்து மாசுபடுத்துகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்களே, உங்களுடைய திறமையால், 1½ மணிக்கு முடித்து விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்தி, நீங்கள் உரையை முடித்து விடுங்கள். டாக்டர் ஜெயக்குமார் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்தி, சீக்கிரம் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு.மு.கார்த்தி:** மேலும் டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகை மற்றும் டயர் தூள்கள் இவற்றால் பக்கத்தில் உள்ள வீடுகள், 3,000 மாணவிகள் படிக்கும் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் மாசுபடுகின்றன. சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அரசு, சேலம் மாநகராட்சியின் மையப் பகுதியில் இயங்கக்கூடிய டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலையையும், பழுதுபார்க்கும் தொழிற்சாலையையும் மாநகராட்சியின் எல்லைக்கு வெளியே கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள்.

**திரு. மு. கார்த்தி:** ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார் அவர்கள் பேசுங்கள். திரு. கார்த்தி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) அவர் உரையை முடிக்க முடியாமல் திண்டாடுகிறார். அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) திருமதி யசோதா, பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன. ஆகவே, மதியத்திற்கு மேலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எங்கள் உறுப்பினர் பேசுவார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், அம்பலூர், இராமநாயக்கன்பேட்டை பகுதியில் நீண்டகாலமாகத் தனியார் ஒருவர் 24 மணி நேரமும் 12 டிராக்டர்கள் வைத்து அனுமதியில்லாமல் பல ஆண்டுகாலமாக மணலைக் கொள்ளையடிக்கிறார். அனைத்து அதிகாரிகளையும்



சரிக்கட்டிவிட்டு நடத்துவதாகத் தெரியவருகிறது. ஆகவே, அரசு இதில் தலையிட்டு — வாணியம்பாடி, திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, நாட்ராம்பள்ளி பகுதி மக்களின் குடிநீர் கேள்விக் குறியாகிவிட்டது— உடனே மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பலமுனை வரி விதிப்பினால், உரம், பூச்சி மருந்து, விதைகள் ஆகியவற்றின் விலையும் ஏறிவிடும். பல்வேறு பொருட்களினுடைய விலை உயர்வும் கூடுதலாகும். எனவே, பலமுனை வரிவிதிப்பை அரசு கைவிட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் சந்தன எண்ணெய் வாசனை திரவியத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, உரையை முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. கோ. இரவிராஜ்:** Sir, point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், 10 நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே பேசிய உறுப்பினர் நிறைய நேரம் எடுத்துகொண்டுவிட்டார்.

***திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரியாக 1-1/2 மணியளவில் என்னைப் பேசச் சொல்கிறீர்கள். நிச்சயமாகக் குறைந்தபட்சம் என்மீது சற்றுக் கருணை காட்டி 15 மணித்துளிகளாவது பேச அனுமதிப்பீர்கள் என்ற நம்பிக்கையில்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள்மீது கருணை காட்டிச் சீக்கிரம் பேசி முடியுங்கள் (சிரிப்பு).

**திரு. கு. ஜெயக்குமார்:** 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றான் பாரதி...

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கு. ஜெயக்குமார்:** உழவும், தொழிலும் தேசத்தின் இரு கண்கள். ஏற்கெனவே இந்த அவையிலே நான் உழவைப் பற்றி, வேளாண்மைப் பற்றிப் பேசியிருக்கிறேன். இன்றையதினம் தொழில் துறையிலே பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். இத்தகைய இந்த முக்கியமான இரண்டு தலைப்புகளிலே உள்ள மானியங்களின்மீது பேசுகின்ற நல்வாய்ப்பினை எனக்கு ஈட்டித் தந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நல்ல ஓர் இளைஞர், பட்டதாரி இந்த இரண்டு துறைகளுக்கும்--தொழில் துறைக்கும், வணிகவரித் துறைக்கும் பொறுப்பேற்று செயலாற்றிக் கொண்டிருக்கிறார். இந்த இரண்டு துறைகளின் வளர்ச்சியை வைத்துத்தான், இந்த இரண்டு துறைகளின் செயல்பாட்டை வைத்துத்தான். இந்த அரசு எந்த அளவுக்குச் சிறப்பாக செயல்படுகிறது என்பதை நிர்ணயிக்கிற ஒரு நிலை இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

இங்கே இந்த நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில வார்த்தைகளைச் சொல்லி, பிறகு வணிக வரித் துறைக்குச் சென்றால் சாலப் பொருந்தும் என்று நான் கருதுகிறேன். மொத்த நிதிப் பற்றாக்குறையாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரூ. 1,330 கோடியை அறிவித்திருக்கிறார்கள். இதில் புது வரியாக ரூ. 690 கோடியை வசூலிக்க இருப்பதாகவும், ஆக, இந்த வருடக் கடைசி நாளில் 640 கோடி ரூபாய் நிகரப் பற்றாக்குறையாக இருக்கும் என்பதையும் நிதிநிலை அறிக்கையிலேயிருந்து நான் அறிந்து கொண்டேன். மத்திய அரசின் நிதிநிலை அறிக்கைக்கும், இந்த மாநில அரசின் நிதிநிலை அறிக்கைக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு என்பதை நான் நன்கு அறிவேன். மாநில நிதிநிலையில் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றால், அதைக் கடன் வாங்கி ஈடுகட்ட முடியும் அல்லது வரியை விதித்து ஈடுகட்ட முடியும். மத்திய அரசிலோ அதை எந்த வழியிலும் ஈடுகட்ட முடியவில்லையென்றால், கடைசியில் நோட்டுகளை அடித்து, அதை ஈடுகட்டிக்கொள்வது சாத்தியம் ஆகும். ஆக இன்றைக்கு 640 கோடி ரூபாய்ப் பற்றாக்குறையை வைத்துக்கொண்டு, மத்திய அரசு கொடுக்க வேண்டிய தொகையிலே ரூ. 512 கோடியைக் குறைவாகப் பெற்று ஆட்சி நடத்த



வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல -- மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சரவர்கள் அறிவார்கள்; அதாவது--கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே உங்களுடைய துறையால் வசூலிக்கப்படவேண்டிய பணத்தில், நான் அறிந்த மாத்திரத்திலே, என்னைப் பொறுத்த மாத்திரத்திலே, ஆயிரம்கோடிக்குமேல் உங்களால் வசூலிக்கமுடியாமல் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆக, 1,512 கோடி ரூபாயை நீங்கள் பற்றாக்குறையாக வைத்துக்கொண்டு, இந்த ரூ. 640 கோடியையும் சேர்த்து, 2,152 கோடி ரூபாய் இந்த வருடக் கடைசியில் உங்களுக்கு பற்றாக்குறையாக இருக்கப் போகிறது. மொத்தக் கடனாக ரூ. 7,200 கோடியை வெளியிலே கடனாக வாங்கியிருக்கிறீர்கள். உங்கள் நிதிப் பற்றாக்குறை, உங்களுடைய அறிக்கையின்படி ரூ.8,899 கோடியாக இருக்க, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் உங்களுடைய பற்றாக்குறை அதிகமாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

2001-2002 ஆம் ஆண்டிலே 5,736 கோடி ரூபாய்ப் பற்றாக்குறை இருந்து, இந்த ஆண்டின் கடைசி நாளில் உங்களுடைய பற்றாக்குறை ரூ. 8,899 கோடியாக இருக்க, இந்தப் பற்றாக்குறையானது 65% அதிகப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து, சற்றுப் பொருளாதாரம் அறிந்த நான் ஐயப்படுகிறேன். இந்தச் சூழ்நிலையிலே தமிழகம் முதல் நிலைக்கு வரவேண்டுமென்றும் அதை எப்படிச் சாதிக்கப்போகிறீர்கள் என்பதையும் நிச்சயமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவர்களுடைய விளக்கவுரையிலே சொல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இப்போது இந்த அளவுக்கு நிதிநிலை இருக்கிறபோது நம்முடைய வணிகவரித் துறையானது சுமார் 9,585 கோடி ரூபாயை வரியாக வசூலித்துக் கொடுக்க இருக்கிறது. இந்தத் துறைதான் இந்த அரசின் உயிர் நாடியாக, உயிரோட்டமாக, உயிர் நரம்பாக இயங்குகின்ற ஒரு துறையாக இருந்து கொண்டிருக்கிறது. மொத்த வருமானத்தில் 55% வணிகவரித் துறை மட்டும் ஈட்டிக் கொடுக்கின்ற இந்த நேரத்தில், ஏன் இத்தகைய நெருக்கடியான நிலை தமிழகத்தில் ஏற்பட்டது என்பதை, சற்று நான் பின்னோக்கிப் பார்க்க விரும்புகிறேன். இது ஏதோ இப்போது இருக்கிற அண்ணா தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்டது அல்ல; அல்லது இதற்கு முன்பாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைக்கூட நான் முழுவதுமாகக் குறை சொல்ல மாட்டேன்.

வாங்கிவிட்டுக் கடந்த ஆண்டைவிட வரப்போகின்ற ஆண்டுக்கு அதிகப்படியாக, இரண்டு மடங்காக நீங்கள் வட்டியைக் கட்டப்போகின்ற நிலையிலே ஐந்து ஆண்டுகள் கழித்துப் பார்க்கின்றபோது உங்களுடைய வட்டிக் கடனானது, உங்களை எங்கே எடுத்துச்செல்லப் போகிறது என்பதை என்னால் சிந்தித்துப் பார்க்க முடியாத அளவிற்கு இருக்கிறது. அத்தகைய ஒரு நிலைக்கு நாளைக்குத் தமிழகம் சென்றுவிடக் கூடாது. முந்தைய அரசை நாம் விமர்சித்தோமே அந்த விமர்சனம் இந்த அரசுக்கு எதிர்காலத்திலே ஏற்பட்டுவிடக்கூடாது என்ற ஒரு நல்ல எண்ணத்தினால் சொல்கிறேன். மக்களின் வாக்குகளைப் பெற்ற இந்த அரசு நன்கு செயல்பட வேண்டும்.

I would say, concretely and constructively, without fear or favour, haste or hesitation, or even the slightest hindrance to my thinking on this occasion, that this Government has to perform. It has to perform. We have no other alternative because with the people's mandate we have come. I use the word ``we''. We all together went to the people and asked the people to vote for us and said that we would do better in the future and that better future if we fail to give, the people will not forgive us and the people will not forget us also. Therefore, I very humbly request the Hon. Finance Minister to look into this matter seriously.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Indian Constitution மாதிரி இருக்கிறதே. சரி பேசுங்கள்.

*பிற்பகல் 1-40*

**திரு. கு. ஜெயக்குமார்:** சார், Constitution-லிருந்து I am coming to the Industries. அடுத்ததாக இந்த நுழைவு வரியைப் பற்றி எல்லோருமே பேசினார்கள். இந்த நுழைவு வரியை `entry tax'-ஐ நீங்கள் நிச்சயமாக விலையுயர்ந்த பொருட்களின்மீது போடலாம்,

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் point of order கேட்கிறார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** என்ன சார், நான் பேசுகிறபோது..



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் வரியை வசூலிக்க முடியாத தொகை 6500 கோடி இருக்கிறது என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்ல வேண்டும், சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இந்த நுழைவு வரியானது நிச்சயமாக அமல்படுத்த வேண்டிய ஒன்று என்றே நான் கருதுகிறேன். ஆனால் எல்லாவற்றுக்கும் இதை அமல்படுத்தினால் விளைவுகள் விபரீதமாக இருக்கும். இந்த நுழைவு வரியானது you can do it on consumer durable items. டி.வி. வருகிறது என்றால் அதற்குப் போட வேண்டும். மற்ற மாநிலங்களிலிருந்து கார் வருகிறது என்றால் அதற்குப் போட வேண்டும். ஆனால் கச்சாப் பொருட்கள் மீதும், மூலப்பொருட்களின் மீதும் நீங்கள் நுழைவு வரியைத் திணித்தால் இது தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் குந்தகமாக அமையும். குறிப்பாக furnace oil, அலுமினியம், எச்.டி.பி.இ.; எச்.டி.பி.இ.-ஐ தமிழகத்திலே நாம் தயாரிப்பது கிடையாது. வெளியிலே இருந்துதான் இந்த எச்.டி.பி.இ. கிரான்யூல்ஸ் வரவேண்டும். ஆந்திர மாநிலத்திலேயிருந்தும் கர்நாடக மாநிலத்திலேயிருந்தும் வரும்போது இங்கே நீங்கள் நுழைவு வரியைப் போட்டால் அந்த எச்.டி.பி.இ. கிரான்யூல்ஸ்சை உள்ளே கொண்டு வந்து அதை வைத்து இங்கே செய்யப்படுகின்ற பொருட்களின் விலை அதிகமாகும். இதனால் அந்தத் தொழிற்சாலைகளுக்கான சாத்தியக்கூறு இல்லாமல்கூடப் போய்விடும். அப்படிப்பட்ட சாத்தியக்கூறு இல்லாத ஒரு நிலையிலே--மன்னிக்க வேண்டும்--இங்கே இருக்கிற தொழிலதிபர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளை மற்ற மாநிலங்களிலே வைத்துக் கொள்கின்ற ஓர் இக்கட்டான நிலை ஏற்படும். தமிழகம் தொழில் துறையில் முதலிடத்திற்கு வந்தால்தான் நீங்கள் சொல்வதைப் போன்று தமிழகமே அனைத்து மாநிலங்களிலும் இந்தியாவிலேயே முதன்மையான நிலையிலே இருக்கும். இந்தப் பொட்டாஷியம் குளோரைடினை, நீங்கள் தொட்டீர்கள் என்றால் அதற்கு நுழைவு வரியை விதித்தீர்கள் என்றால், சிவகாசி படுத்துவிடும். இந்தப் பொட்டாஷியம் குளோரைடு இல்லாமல் சிவகாசியில் எதுவுமே நடக்காது என்பதை நன்றாக அறிவீர்கள். அட்டைக்கு நீங்கள் நுழைவு வரி போடப் போகிறேன் என்று சொல்கிறீர்கள். அட்டைக்கு நுழைவு வரி போட்டாலே அங்கே

சிவகாசி படுத்துக்கொள்ளும். தீப்பெட்டித் தொழிற்சாலைகள் படுத்துக்கொள்ளும். பட்டாசுத் தொழிற்சாலைகள் படுத்துக்கொள்ளும். பல கோடி ரூபாய் உங்களுக்கு இழப்புகள் ஏற்படும் என்பதை நன்றாக நீங்கள் உணர்ந்தவர்கள்தான். இருந்தாலும் இதுபோன்ற பொருட்களின் மீது நீங்கள் போடும் இந்த நுழைவு வரிதனைத் தளர்த்திக்கொள்ள வேண்டும். விலையுயர்ந்த பொருட்களின் மீதும், எந்தெந்தப் பொருட்கள் எல்லாம் தமிழகத்திலே தயாரிக்கப்படுகின்றனவோ, குறிப்பாக இந்த டெக்ஸ்டைல் மெஷினரி, இந்த டெக்ஸ்டைல் மெஷினரி எல்லாம் நம்முடைய கோயம்புத்தூரிலே எல்.எம்.டபிள்யூ என்ற லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ் நிறுவனம் தயாரிக்கிறார்கள். இதுபோன்ற -- அந்தப் பொருட்களில் எல்லாம் நீங்கள் நுழைவு வரி போடுவதன் மூலம் அப்பொருள்கள் உள்ளே வராமல், தடுக்கலாம். இவை உள்ளே வந்தால் விலைவாசி அதிகமாக ஏற்படுத்தலாம். ஆக இத்தகைய ஒரு வழிமுறையை நீங்கள் அணுக வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும், வணிக வரித் துறை அமைச்சர் அவர்களையும் நான் விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தது imported goods. இதை உங்களுடைய அறிக்கையிலே சரியாக நீங்கள் தெளிவுபடுத்தவில்லை. Imported goods என்றால் என்ன என்ற டெஃபனிஷனே சரியாக இல்லை. Please, the Hon. Finance Minister as well as the Commercial Taxes Minister may kindly look into this aspect. இது சரியாக விளக்கப்பட வேண்டும். இன்றைக்கு என்ன சொல்லி இருக்கிறீர்கள் என்றால் 12%, 16% வரி விதிக்கப்படுகிற அந்தப் பொருட்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டால் 20% இறக்குமதி வரிபோடப்படும் என்று குறிப்பிடுகின்றீர்கள். மன்னிக்க வேண்டும். என்னுடைய அறியாமையினால் பேசுகின்றேனா, என்று இருந்தாலும்கூட இருக்கலாம். மாநில அரசானது How it can levy the import tax? இது எனக்கு உண்மையிலேயே புரியவில்லை. வணிக வரித் துறை அமைச்சரோ அல்லது மாண்புமிகு நிதியமைச்சரோ நிச்சயமாக இதற்கு வழி வைத்திருப்பார்கள். இல்லாவிட்டால் இத்தகைய ஒரு அரசு. இத்தகைய ஒரு நடப்பினை எடுக்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். But I am very sure you are going to undermine the constitutional authority of Government of India if you levy the import tax on the imported items. This is my opinion. I know a little bit of export and import activities because I had worked in the Export Import Bank of India. Therefore I have my heavy reservation on how you can levy the import tax?



நீங்கள் செய்கிற இதையே மற்ற மாநிலங்களும் செய்தால் இந்தியா 35 தனித் தனி நாடுகளாக ஆகிவிடுமோ என்ற எண்ணம்கூட எனக்கு இப்போது ஏற்படுகிறது. அப்படி ஒரு ஐயப்பாடு தோன்றுகிறது. மாநில அரசு இந்த imported goods மீது எப்படி வரி விதிக்க முடியும் என்பதை நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதை மத்திய அரசின் அதிகாரத்தோடு நீங்கள் செய்யலாம். தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், அவற்றிற்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்றால் வெளிநாட்டிலேயிருந்து பொருட்களைக் கொண்டு வந்து அவற்றிற்கெல்லாம் இங்கு வாய்ப்பே இல்லாமல் செய்துவிட வேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது என்றால் அந்தக் காலக்கட்டத்திலே, to protect the local production, to give safety to the local manufacturers நீங்கள் மத்திய அரசை நாடி இது போன்ற ஒரு (மணியடிக்கப்பெற்றது) வரியைப் போடச் சொல்லலாம். Import tax என்ற இறக்குமதி வரியை நீங்கள் எப்படிச் செய்யப் போகிறீர்கள் என்பதைத் தயவுசெய்து எனக்கு விளக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் பெருந்தகைகளை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

இதிலே வேறு ஒரு முறையும் இருக்கிறது. Anti Dumping—அந்தச் சட்டத்தை நீங்கள் பயன்படுத்தலாம், you can invoke that clause. அதற்கு மத்திய அரசு நிச்சயமாக உதவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வேறு ஒன்று. வெளிநாட்டிலேயிருந்து பொருட்களை இறக்குமதி செய்ய விரும்புகின்றவர்கள், அவர்களுக்கு நீங்கள் import tax 20 சதவீதம் போடப் போகிறீர்கள், என்றால் பக்கத்து மாநிலங்களான ஆந்திர மாநிலத்திலோ அல்லது கர்நாடக மாநிலத்திலோ ஒரு சிறு அலுவலகத்தைத் திறந்து அந்த அலுவலகத்தின் மூலமாக அங்கே இறக்குமதி செய்து அங்கே வரி கட்டாமல், மற்ற மாநிலங்களிலேயிருந்து இங்கே கொண்டு வருகிற ஒரு வழிமுறையும் இருக்கின்றது. அதற்கு இந்த அரசு என்ன தடை முறைகளை எடுக்கப்போகிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அரிசி, கோதுமைக்கு இரண்டு சதவீத வரி என்கிறீர்கள். நாங்கள் இதை வேண்டாம் என்று சொல்லவில்லை. நிச்சயமாக எந்த வரியையும் வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை. ஆனால், இந்த இரண்டு சதவீதம் அரிசிக்கும் கோதுமைக்கும் வரி போட்டு

நீங்கள் சாதிக்கப் போவது என்ன? 50 கோடி ரூபாய் கிடைக்குமா இதிலிருந்து? அதைவிடக் குறைவாகத்தான் கிடைக்கும். நான் ஒட்டுமொத்தமாக ஒரு கணக்கைப் போட்டுப் பார்த்தேன். இந்த 2 சதவீதத்தின் மூலம் உங்களுக்குக் கிடைக்க இருக்கின்ற வருவாய் 50 கோடி ரூபாய் அல்லது அதற்குக் குறைவாகத்தான் இருக்கும். இந்த 50 கோடி ரூபாய்க்கு, அரிசிக்கும் கோதுமைக்கும் தமிழகத்திலே வரி போட்ட அரசு இதுதான் முதல் அரசு என்கிற அவப்பெயர் உங்களுக்கு ஏன் ஏற்பட வேண்டும்? இந்த 50 கோடி ரூபாயை வேறு சில பொருட்களின்மீது அங்கும் இங்குமாக நிரவிவிட்டு, நாங்கள் அரிசியின்மீதும், கோதுமையின்மீதும் வரி போடவில்லை என்று ஒரு நல்ல பெயரை ஏன் இந்த அரசு எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற ஒரு கருத்தை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, Multi Point Tax என்று எல்லோரும் பேசினார்கள். வெகுவாக இது பாதிக்கின்ற திட்டம் என்றும் மதிப்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.—அவர்கள் இங்கே இல்லை,— கூட நன்றாக எடுத்துச் சொன்னார்கள். இந்த Single Point Tax முறையின் மூலம் வரி வசூலிக்கின்ற திறன் அதிகப்பட்டிருக்கின்ற காரணத்தினால் ஏன் ஒரு புதிய முறையை Multi Point Tax முறையைக் கொண்டு வந்து இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். இங்கே நான் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். உங்கள் கொள்கை விளக்கத்திலே படித்துப் பார்த்தேன். இந்த Multi Point Tax முறையானது, அடுத்த ஆண்டிலே தொடங்க இருக்கின்ற VAT System-க்குச் செல்கின்ற ஒரு வழிமுறையாக, தடமாக இருக்குமென்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இருந்தாலும், முந்தைய முறையான உங்களுக்கு அனுகூலமான, திறமையான முறையான Single Point Tax முறையே உங்களுக்கு போதிய வரிகளைக் கொடுக்கின்ற நிலையாக இருக்கிறபோது ஏன் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த Multi Point Tax பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார். உரத்திற்கும், பூச்சி மருந்திற்கும், விதைகளுக்கும் விவசாயப் பொருட்களுக்கும் இந்த Multi Point Tax System-ஐ நீங்கள் தொடர வேண்டாம் என்றும் அதைத் திணிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நெசவாலைகள், பஞ்சாலைகள் நலிந்து போய்க் கிடக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) இந்த நெசவாலைகள், பஞ்சாலைகள் உபயோகப்படுத்துகின்ற இந்த இயந்திரங்களுக்கெல்லாம்



4 சதவீதம் வரி இருந்ததை 12 சதவீதமாக மாற்றியிருக்கிறீர்கள். நலிந்து கிடக்கின்ற ஒரு துறைக்கு இன்னும் நீங்கள் பாரத்தைச் சுமத்தி 8 சதவீதம் கூடுதலாக ஏற்றி இருக்கிறீர்கள். 4 சதவீதம் எங்கே? அதுமட்டுமல்ல. வணிக வரித் துறை அமைச்சர் கோயம்புத்தூரிலேயிருந்து வந்தவர்; பஞ்சாலைகளும், நூற்பாலைகளும் அங்கே எப்படித் துவண்டுபோய் இருக்கின்றன என்ற நிலையை அறிந்தவர். நீங்கள் இதைச் செய்யலாமா மாண்புமிகு அமைச்சர் அவர்களே? எனவே, அந்த 4 சதவீதம் இருந்த வரி முறையைத் தொடருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஐயா, தொழிற்சாலைக்கே நான் இன்னும் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடம் ஆகிவிட்டது. பேசி முடியுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இரண்டே நிமிடத்தில் தொழிற்சாலை பற்றிப் பேசி முடித்துவிடுகிறேன். ஒரு வினாவை மட்டும் வைக்கிறேன். என்னுடைய கருத்துகள் அமைச்சர்களுக்கு சற்றுப் பயனுள்ளதாக இருக்குமென்று கருதுகிறேன். சற்றுப் பொறுத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா உறுப்பினர்கள் கருத்துகளும் பயனுள்ளதாகத்தான் இருக்கும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களே, உங்களுடைய மானியத்திலே 87 கோடி ரூபாய் நீங்கள் கேட்டிருக்கின்றீர்கள். உங்களுடைய அறிக்கையோ தமிழகம் முதலிலே வர வேண்டும் என்பது. எந்த ஒரு மாநிலத்திலே தொழில் வளர்கின்றதோ அதுதான் அதற்கு வழிகாட்டியாக இருக்க முடியும். ஆக 87 கோடி ரூபாய் என்பது 0.34 per cent of the total expenditure அதாவது 100 ரூபாய் தமிழகத்திலே இந்த அரசு செலவு செய்யப் போகிறதென்றால் 34 நயா பைசாதான் தொழிற்சாலைகளுக்குச் செலவிடப் போகிறீர்கள். இந்த ஒரு நிதிநிலை அறிக்கையை வைத்துக்கொண்டு எப்படி இதை முதல் மாநிலமாக மாற்றப் போகிறீர்கள் என்பது it is a day-dream for me. I am sorry for using a very strong word. எனவே, அதுமட்டுமல்ல, இங்கே இருக்கின்றன முக்கியமான நிறுவனங்கள்; T.I.I.C., SIPCOT and TIDCO.

TIDCO என்பது மூலதனத்தைக் கொடுக்கின்ற ஒரு நிறுவனமாகவும் SIPCOT என்பது கட்டமைப்புகளைக் கொடுக்கின்ற நிறுவனமாகவும், T.I.I.C. என்பது கடன்களைக் கொடுக்கின்ற நிறுவனமாகவும் இருக்கின்றபோது இந்த நிறுவனங்களுக்கெல்லாம் நீங்கள் எந்த நிதியையும் ஒதுக்காமல் subsidy கொடுக்க வேண்டுமென்று ஒரு *10* கோடி ரூபாயை T.I.I.C.-க்கு மட்டும் ஒதுக்கியிருக்கிறீர்கள். *2000-2001* ஆம் ஆண்டிலே பார்த்திருப்பீர்களானால் *30* கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கியிருக்கின்றீர்கள். ஆக, மிக மெலிந்த, நலிந்த நிதி ஒதுக்கீட்டை நீங்கள் செய்து, இதை எப்படிச் செயல்படுத்த முடியும்?

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை *4-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது*

*பிற்பகல் 4-30*

*பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. அ. அருணாசலம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத் தொழில் துறை மற்றும் வணிக வரிகள் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

முதலில், இந்த இரண்டும் மிக முக்கியமான துறைகள். கோவை மாவட்டத்தைச் சார்ந்த எங்களுடைய முக்கியமான அரசியல் இயக்க நண்பர்களிலே ஒருவருக்கு இந்தத் துறைகள் வழங்கப்பட்டிருப்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயம். நாங்களும், அந்த மாவட்டத்து மக்களும், தமிழகமும் மனநிறைவு பெறத்தக்க வகையில், நம்முடைய மாண்புமிகு தொழில் துறை மற்றும் வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்கள் செயல்பட்டு முன்னேற வேண்டும் என்று எங்களுடைய வாழ்த்துகளை நாங்கள் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)



இந்த இரண்டு துறைகளோடு சேர்ந்தது தொழிலாளர் நலத் துறையும் ஆகும். உடனே, தொழிலாளர் நலத் துறை, தொழில் துறை, வணிக வரிகள் துறை, இவற்றுக்குத் தலைமைப் பொறுப்பு ஏற்றிருக்கிற நிதித் துறை மற்றும் நம்முடைய மாண்புமிகு மாநில முதல்வர் அவர்களும் இணைந்து செயல்பட்டால் மாத்திரம்தான் இந்தத் துறைகளிலே இருக்கும்படியான பிரச்சினைகளைத் தீர்த்துத் தமிழக மக்கள் திருப்தி அடையக்கூடிய அளவிலே நிறைவு செய்ய முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். அந்த வகையில் இந்தத் துறை இப்போது சந்தித்து வருகின்ற, சந்திக்கப் போகின்ற பல்வேறு பிரச்சினைகள், கொள்கை விளக்கக் குறிப்பிலே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. அதிலே சிலவற்றை நாங்கள் வரவேற்றாலும், பல எதிர்பார்ப்புகள் இப்போது தமிழக மக்களின் முன்னால் இருப்பதையும், அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேற வேண்டும் என்ற விருப்பத்தில் இந்த மாமன்றத்தில் சில கருத்துகளை முன்வைப்பதும் அவசியம் என்றும் நான் கருதுகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் டைசல் உயர் தொழில் நுட்பப் பூங்கா, சென்னை தரமணியிலே அமைப்பது சம்பந்தமான அறிவிப்பு, தருமபுரி மாவட்டத்தில் வேளாண் ஏற்றுமதி, மலர்கள் ஏற்றுமதிக்காக ஒரு தனித்த மண்டலத்தை அமைப்பது சம்பந்தமான அறிவிப்பு, நாங்குநேரியில் உயர் தொழில் நுட்பப் பூங்கா, சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை உருவாக்குவதற்கான அறிவிப்பு, கன்னியாகுமரியில் 'ஸ்பா' வாசஸ்தலம் அமைப்பது போன்ற சில முக்கிய கொள்கை அறிவிப்புகள் இருப்பதை நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேநேரத்தில், தமிழ்நாட்டில் மிக முக்கிய தொழில் பெருநகரங்களில் ஒன்றாக விளங்கி, தென் மாநிலங்களிலேயே மிக முக்கியமான பங்கினை, பொருளாதாரத் துறையில் தொழில் துறையில் செய்து காட்டி, வளர்ந்து, முன்னேறியிருக்கக்கூடிய கோயம்புத்தூர் மாவட்டம் இப்போது எல்லா நிலைகளிலும் தாக்கப்பட்டு அதனுடைய பொருளாதார அடிப்படை நிலைகள் தகர்க்கப்பட்டு வருவதை இந்த மாமன்றமும், அனைத்து அமைச்சர்களும் அறிவீர்கள்.

குண்டுவெடிப்பிற்குப் பிறகு ஏற்பட்ட பொருளாதார மந்தமும், வியாபார மந்தமும், புதிய பொருளாதார மற்றும் தாராளமயக் கொள்கைகளின் விளைவாக முக்கிய கேந்திரத் தொழில்களிலே ஒன்றான பஞ்சாலைத் தொழிலும், பஞ்சாலைத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட அதனுடைய உதிரிப் பாகங்களை உற்பத்தி

செய்து வந்த இன்ஜினியரிங் தொழிற்சாலைகளும் பெரும் அளவு பூட்டப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதை, தொடர்ந்து இம்மாமன்றத்தில் நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம்.

அதேபோன்று, கை நெசவு, விசை நெசவு போன்றவை. இன்று காலையிலே நம்முடைய வணக்கத்திற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மின் கட்டண உயர்வை ஓரளவிற்கு, உயர்த்தியதைக் குறைத்திருப்பதை இந்த மாமன்றம் மொத்தமும் வரவேற்றது; பாராட்டியது. அது ஒரு வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உதவி செய்தது என்கிற வகையில் மீண்டும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் அந்தத் தொழில் சந்திக்கின்ற முழுமையான நெருக்கடியிலிருந்து அதனை மீட்பதற்கு உண்டான நடவடிக்கையை எடுத்தால் மாத்திரமே 3 இலட்சம் மக்களைப் பாதுகாக்க முடியும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 4-35

அதேபோல இன்ஜினியரிங் தொழில்களில் 1500 சிறிய தொழிற்சாலைகள், பல இலட்சக்கணக்கான மக்கள் வேலை பார்த்த அந்தத் தொழில் இப்போது மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. வங்கிக் கடன் பெறுவதில் இருக்கக்கூடிய சிக்கல், கூடுதல் வட்டி விகிதம், மின்கட்டண உயர்வு, தேனிரும்பு, வார்ப்பட இரும்பு, நிலக்கரி போன்ற மூலப் பொருட்களின் விலை உயர்வு, ஆகியவற்றால் வளர்ந்து வருகிற போட்டியை ஈடுகட்ட முடியாத அளவுக்கு அந்த இன்ஜினியரிங் தொழிலும், பஞ்சாலைத் தொழிலும் இப்போது தாக்கப்பட்டிருக்கிறது. இவற்றைப் பாதுகாப்பதற்கு—இன்று காலை மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு தி.மு. கழக உறுப்பினர் விவாதத்திலே குறுக்கிட்டு பேசுகிறபோது சொன்னார்கள்—தாம் பதவிக்கு வந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டில் முதலாளிகளை, 400, 500-க்கு மேற்பட்டவர்களை, பலமுறை இந்தத் தொழில் சம்பந்தமாகச் சந்தித்து நான் பேசி வந்திருக்கிறேன் என்று சொன்னார்கள்; வரவேற்கிறோம். இந்த நெருக்கடியிலே இருந்து கோவை மாவட்டத்தை மட்டுமல்ல, மொத்த தமிழகத்தையும் பொருளாதார நிலையிலே பலப்படுத்த வேண்டுமென்று நாம் விரும்புவது உண்மை என்றால், அந்த நடவடிக்கையில் நம்முடைய மாநில முதல்வர் தொடர்ச்சியாக ஈடுபடுவதும். இப்போது மூடப்பட்டு இருக்கக்கூடிய பஞ்சாலைகளை மட்டுமல்ல தொழில்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்து



ஓரளவுக்கேனும் குறைந்தபட்ச முன்னேற்றத்தைக் கண்டால் மாத்திரம்தான் இந்தத் திட்டங்கள் வெற்றிபெற முடியும். இதை நிச்சயம் நம்முடைய மாநில அரசு செய்ய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முத்தரப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரை அந்தந்த மாவட்டங்களில் தலைவராகக் கொண்டு, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலதிபர்கள், இவர்களைக் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. அதனுடைய முதலாவது கூட்டம் ஒன்று நடந்துள்ளது. அது அடையாளபூர்வமான அறிமுகக் கூட்டம் என்கிற நிலையிலே மாத்திரம் இருந்தது. அந்தக் குழு, மூடியிருக்கின்ற ஆலைகளின் நிலைகள் சம்பந்தமாக, வேலை இழந்திருக்கிற தொழிலாளிகள் நிலை சம்பந்தமாக, அவர்களுடைய நிவாரணம் சம்பந்தமாக, குறைந்தபட்ச வாய்ப்புள்ளவை, உடனடியாக திறக்கும் வாய்ப்புள்ளவை பற்றி ஆய்வு செய்து அந்தப் பரிந்துரைகளை அரசுக்குத் தந்து, அதன் மீது மேல் நடவடிக்கை எடுப்பது என்ற ஒரு தீர்மானத்தோடு அந்தக் கூட்டம் கலைந்தது. எந்த ஆக்கபூர்வமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை. ஆகவே, இது ஒரு கண் துடைப்பு நடவடிக்கையாக இருந்துவிடுமோ என்று தொழிற்சங்கங்கள் அஞ்சுகின்றன. தொழிலாளிகள் கவலை அடைகிறார்கள். அது தொடர்ந்து செயல்படுத்தப்படுவதும், ஆக்கபூர்வமான ஒன்றிரண்டு ஆலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதும் அவசியம் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இங்கே பல்வேறு டைடல் பூங்காக்கள் அமைப்பது சம்பந்தமான வரவேற்பை நான் சொன்னேன். (மணியடிக்கப்பெற்றது)

***திரு. அ. அன்வர் ராஜா:** முக்கியமான விஷயம் சொல்லுகிறார், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும் என்பதற்காக, மிகுந்த முன்னெச்சரிக்கையோடு சட்ட நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்து, தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு வேண்டிய என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தால் அரசு அந்தத் தொழிற்சாலைகளைத் திறக்கலாம் என்கின்ற பரிந்துரையை மாவட்ட அளவில் மக்கள் பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசித்து அரசுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றுதான் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுகூட நீங்கள் நினைப்பது போல்

அல்ல. 3 ஆண்டுகள் அதனுடைய பதவிக் காலம் இருக்கும் என்று முதலிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை தாங்குகிறார். வேலை அளிப்போர் பிரதிநிதிகள், Trade Union Leaders, MPs, MLAs எல்லோரும் அந்தக் குழுவிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று தெளிவாக அரசின் ஜி.ஓ. இருக்கிறது. அந்தக் குழு சரியாக எல்லா இடங்களிலும் இயங்கி வருகிறது. இவ்வளவுக்குப் பிறகும்கூட அது கண்துடைப்பான குழு என்று சொல்வது சரியாகாது என்பதை அருள்கூர்ந்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக்கபூர்வமான பரிந்துரைகளை அரசு கண்டிப்பாக ஏற்றுக்கொண்டு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதற்கு முன்னால் இருந்த முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசால் மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் தந்து இருக்கக்கூடிய இந்த விளக்கம் நடைமுறையில் அவர் விரும்புவது போல் இருக்க வேண்டும் என்றுதான் நாங்களும் தொழிலாளர்களும் விரும்புகிறோம். அப்படி ஓர் அச்சம் இருக்கிறது என்றுதான் நான் சொன்னேனே தவிர இந்த முயற்சியே தவறு என்று சொல்லவில்லை. அந்த முயற்சி திருவினையாக்கவேண்டும் என்ற விருப்பம் எங்களுக்கு உண்டு. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த அரசு எடுக்கும் நடவடிக்கைகள் வெற்றி பெறுமானால் அதிலே மகிழ்ச்சி அடைகிறவர்கள் உங்களைவிட நாங்களாகத்தான் இருப்போம் என்பதை நான் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். முதலாவது வாழ்த்துகளும், பாராட்டுகளும் எங்களிடமிருந்து உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும். அந்தவகையில், தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்.

பிற்பகல் 4-40

மாண்புமிகு முதல்வர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் கலந்து பேசி அறிவிக்க வேண்டும். எல்லாவிதமான Infrastructure-ம் கோவையிலே இருக்கின்றன. எல்லாவிதமான கட்டமைப்பு வசதிகளும் இருக்கின்றன. ஆகவே, இப்போது அறிவித்திருக்கிற,



அறிவிப்போடிணைந்து கோவை மாநகரத்திலே ஒரு தகவல் தொழில்நுட்ப உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை அமைப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்தால், அறிவித்தால், நடவடிக்கையில் ஈடுபட்டு நிறைவேற்றினால் இதர துறைகளிலே ஏற்பட்டிருக்கிற பாதிப்புகளிலேயிருந்து கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக்கொள்வதற்கு அது நிச்சயம் உதவி செய்யும் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறை, பொதுத் துறை, தனியார் துறை ஆகிய இந்த 3 அமைப்புகளும் வலுவான முறையில் பாதுகாக்கப்படுவதற்கு, பலப்படுத்தப்படுவதற்கு இன்றைய நெருக்கடியிலேயிருந்து மீளுவதற்கு சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நிதிநிலை அறிக்கையிலேயும், அதைத் தொடர்ந்து பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கைகளிலும் இங்கே சொல்லப்பட்டிருக்கிற விளக்கங்கள், அறிவிப்புகள், கொள்கை அறிவிப்புகளெல்லாம் இலாபம் தருகிற பொதுத் துறைப் பங்குகளை தனியாருக்குத் தருவது, நஷ்டம் தரும் பொதுத் துறை நிறுவனங்களை மூடிவிடுவது என்ற ஒரு கொள்கை அறிவிப்பு என்பது தமிழ்நாட்டு தொழில் வளத்தைப் பாதுகாக்க உதவி செய்யுமா என்பதை நீங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அவற்றை நீங்கள் சரிப்படுத்த வேண்டும். இலாபம் தருவதைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கும். நஷ்டம் வருவதைப் புனரமைத்து நஷ்டத்திலேயிருந்து சரிக்கட்டி மீட்டுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நாம் முயற்சி எடுத்தாக வேண்டும். அந்த வகையில் கூட்டுறவுத் துறையிலும் சரி, பொதுத் துறையிலும் சரி அல்லது தனியார் துறைகளிலேயும் சரி, தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பின் நிலைகளில் ஒரு மிகப் பெரிய கேள்விக்குறியை உருவாக்கியிருக்கிறது; எல்லாத் துறைகளிலும். அதனால், தனியார் துறைத் தொழில்கள் முன்னேற முடியாமல் ஒரு பக்கம் தொழில் பாதிப்பிலும் நெருக்கடியிலும் பூட்டப்பட்டுக்கொண்டோ அல்லது நிரந்தரத் தொழிலாளர்களை வெளியிலே அனுப்பிவிட்டு, கான்டிராக்ட் முறையில் வேலைக்கு அமர்த்திக்கொண்டோ புதிய வேலைவாய்ப்புகளை சுருக்கிக் கொண்டோ இருக்கிறார்கள். மறுபுறத்தில், அரசுத் துறை உட்பட நம் அனைத்துத் துறைகளிலும் வேலைவாய்ப்புகளில் இருக்கிறவர்களை நாம் வெளியிலே அனுப்பிக் கொண்டிருக்கிறோம். புதிய வேலைவாய்ப்பும் இல்லை என்கிறபோது, புதிய தொழில்களும் இல்லை என்கிறபோது இந்தியாவில் முதன்மை

மாநிலமாக தமிழ்நாடு எந்த வகையிலே ஆக முடியும்? இதை அப்படி ஆக்க வேண்டுமென்று சொன்னால் மூடப்பட்ட ஆலைகள் திறக்கப்பட முடியவில்லை என்றாலும் புதிய தொழில்களிலே இருக்கும் புதிய வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள, இம்மாதிரியான முயற்சிகளை நாம் மேற்கொள்வது உதவியளிக்கும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல நாடு முழுவதும் முதுகெலும்பாக விளங்குவது சிறு தொழில் துறை. 70 சதவீத வேலைவாய்ப்பைத் தந்துகொண்டிருக்கக்கூடியது அந்தச் சிறு தொழில் துறை. 40 சதவீத உற்பத்தியை, 35 சதவீத ஏற்றுமதியை அந்தத் துறை தந்துகொண்டிருக்கிறது. உலக வர்த்தக ஒப்பந்தத்தின்படி பன்னாட்டு நிறுவனங்களுடைய வருகையினால் அந்நிய நாட்டுப் பொருள்களுடைய தாராள இறக்குமதியினால் பெருமளவில் பாதிக்கப்படுகிற சூழ்நிலை வந்திருக்கிறது. தமிழகத்திலே ஆயிரக்கணக்கான சிறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு அல்லது முழு உற்பத்தி அளவுக்குச் செயல்படாமல் உள்ளன.

இதனால் பலர் வேலையிழந்திருக்கிறார்கள். பணப் புழக்கம் குறைந்து போயிருக்கிறது. எனவே, சிறுதொழில் துறையை உற்சாகப்படுத்துகின்ற வகையில் தமிழகத்திலே இயங்குகின்ற பல சிறு தொழில்களுக்குக் கணிசமான வரிச் சலுகையை நாம் அளித்தாக வேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பொருள்களைத் தயாரிக்கும் சிறு தொழிற்சாலைகள், பன்னாட்டு நிறுவனங்கள் அல்லது பிற மாநிலங்களிலுள்ள பெரிய நிறுவனங்கள் ஆகியவற்றின் போட்டியை எதிர்கொள்ள முடியாமல் மேலும் நசிந்துபோய்விடுகிற அபாயம் இருக்கிறது. விற்பனை வரி அடிப்படையிலான சலுகை எதுவும் மாநில அரசு கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ள போதிலும், பாண்டிச்சேரி, கேரளா மற்றும் ஆந்திரா போன்று இருக்கக்கூடிய மாநிலங்களில் சிறு தொழில் துறைக்கு வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக, கேரள மாநிலத்தில் பெயிண்டுகளுக்கு 16 சதவீத வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சிறு தொழில் துறைக்கு 4 சதவீத வரிதான் விதிக்கப்பட்டிருக்கிறது.

பாண்டிச்சேரியிலே தொழில் தொடங்கினால், முதல் 5 வருட காலங்களுக்கு விற்பனை வரியே கிடையாது. தொழில் துறையில் பின்தங்கியுள்ள தென் தமிழகம் மற்றும் வட தமிழகம் ஆகியவற்றின



நிலைமைகளை நம்முடைய தமிழ்நாடு அரசு சற்றுப் பூரணமாக ஆய்வு செய்து இதிலிருந்து அதைப் பலப்படுத்துவதற்கு சிறு தொழில் துறையை ஊக்குவிப்பதற்கு இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தத் துறையைப் பாதுகாப்பதற்கு, இந்தச் சலுகைகளை அளிப்பதற்கு அரசு முன் வர வேண்டும். அதே நேரத்தில் அரசுக்கு நிதி தேவை. அது காலியாகியிருக்கிறது. கூடுதல் பணம் தேவை என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. இப்போது இந்த நிதியை உருவாக்குவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய நிதியைப் பெறுவதில் எந்தத் தயக்கமும் இருக்கக்கூடாது. அதுதான் 3,000 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். அது கிடைத்ததா? கிடைப்பதற்கு, தொடர் முயற்சி எடுப்பதற்கு இந்த அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கையோடும் எங்களைப் போன்றவர்கள், எங்கள் கட்சியைப் போன்றவர்கள், நாங்கள் உறுதியாய் உங்கள் பக்கம் நிற்கத் தயார்.

பிற்பகல் 4-45

இதில் சொல்லப்படுகின்ற எந்த விஷயமும் அரசியல் உள்நோக்கத்தோடு அல்லது வேறு விதமான காரணங்களுக்காகச் சொல்லப்படுவது அல்ல. தொழிலில் தமிழகம் கடந்த 5 ஆண்டுகளில் பின்தங்கிப் போய் இருந்தது; பலவீனப்பட்டுப்போய் இருந்தது. மக்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆகையால்தான், ஓர் ஆட்சி மாற்றம் வேண்டும் என்று கடந்த கால ஆட்சியை, திமுக ஆட்சியை மக்கள் தோல்வியுறச் செய்தார்கள். இங்கே நாம் நடத்துகின்ற விவாதங்கள் அனைத்திலும் அந்த ஆட்சியின் மீதான குறைகளை விமர்சிக்கிறோம்; தவறில்லை. குற்றங்களைச் சுட்டிக் காட்டுகிறோம்; தவறில்லை. ஊழல் புரிந்தோர் யாராக இருந்தாலும் நடவடிக்கையில் ஈடுபடுத்தலாம்; தவறில்லை. ஆனால் அந்தத் தவறுகளைச் சொல்லிக் கொண்டு, குறைகளைச் சொல்லிக் கொண்டிருப்பதன் மூலம், எந்த மக்கள், எந்த நெருக்கடியினால் அந்த அரசாங்கத்தை வீழ்த்தினார்களோ, அப்படிப்பட்ட ஒரு நிலை எந்தச் சூழ்நிலையிலும் இந்த அரசுக்கு வந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் காரணமாக மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி சொல்ல விரும்புகிறது. இதிலேயிருந்து நாம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றாக வேண்டும்.

இந்த அரசு பொறுப்பேற்று இன்னும் நான்கு தினங்களில் ஒரு வருடம் ஆகப்போகிறது. நடைமுறையிலே சாதித்து இருக்கக்கூடிய சாதனைகள் குறைவானது. சந்திக்க வேண்டிய பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. அதை எவ்வாறு செய்யப் போகிறோம் என்பதிலேதான்

கேள்விகள் எழுகின்றன. ஆகையால் ஆக்கபூர்வமான, இப்படிப்பட்ட ஒரு நல்ல அணுகுமுறையை நாங்கள் தமிழக அரசிடமிருந்து உறுதிபூர்வமாய் எதிர்பார்க்கிறோம். (மணியடிக்கப்பெற்றது)

தலைவர் அவர்களே, நான் வணிக வரித் துறை சம்பந்தமாகச் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும்.

வணிக வரித் துறை சம்பந்தமாக 2000-2001 ஆம் நிதியாண்டில் மொத்த வரி வசூல் ரூபாய் 8,663.72 கோடி. 2001-2002 ஆம் நிதியாண்டில் மொத்த வரி வசூல் ரூ.8,904.68 கோடியாகும் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, வருமான வரித் துறையினுடைய இந்த விவரங்கள், கடந்த 5 ஆண்டு காலத்தில்—என்னென்ன இனங்களிலிருந்து அதாவது 6 இனங்களின் மூலம் வந்திருக்கிற மொத்த வரி வசூல்; கேள்வி என்ன எழுகிறது என்றால், இப்போது வசூலிக்கவேண்டிய, வெளியே நிலுவையில் இருக்கும் தொகை எவ்வளவு? எங்களுக்குக் கிடைத்த கணக்கு சரியாக இருக்குமானால், சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வரை சற்றேறக்குறைய 8,761 கோடி ரூபாய் விற்பனை வரியின் மூலமாக வசூலிக்க வேண்டியிருக்கிறது. இதில் 1,000 கோடி ரூபாய்க்கான தொகை வழக்குமன்றங்களிலே வழக்குகள் இருப்பதனால் வசூலிக்க முடியாமல் இருக்கிறது. எஞ்சியுள்ளவற்றை வசூலிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற தகவல்கள் எல்லாம் வந்திருக்கின்றன. கடந்த அக்டோபரிலிருந்து மே மாதம் வரைக்கான இந்தக் காலத்தில் நம்முடைய வணிக வரித் துறை அந்தத் தொகைகளை வசூலிப்பதில் செய்திருக்கிற சாதனை இலக்கு என்ன? 6,000 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை வெளியிலேயிருந்து வசூலிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும்போது, 4,000 கோடி ரூபாய்க்கு நாம் புதிய வரி விதிக்க வேண்டியிருக்கிறதா, இல்லையா? இதனால் தானே கடுமையான எதிர்ப்பு வந்தது? இன்று காலை மின் கட்டணத்தைக் குறைக்கிறபோது பேராதரவை எதிர்க் கட்சிகள், கட்சி வித்தியாசம் இல்லாமல்--சபையே--வழங்கின. இந்தச் சபையிலேயே போக்குவரத்துத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பிரச்சினையில், இன்று கட்சிகள் வெளிநடப்பும், எதிர்ப்பும் தெரிவித்தன. ஒரு வேலை நிறுத்தத் தடைச் சட்டம் வருகின்றபோது எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அதே கட்சிகள் நல்லதைச் செய்கின்றபோது, வித்தியாசம் பார்க்காமல், முகம் சுளிக்காமல், மனந்திறந்து பாராட்டுதலைத் தெரிவித்ததை நாம் பார்த்தோம். இவை இரண்டையும் எடை போட்டுப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



ஆகையினால் இந்த வரியை வசூலிப்பதில் இன்று காலை மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல achievement காட்டினால் மாத்திரம்தான் கஜானா காலியாகும் என்ற நிலையிலிருந்து பாதுகாக்க முடியும்.

இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது என்ன சொன்னார்கள் என்றால் கடந்த முறை—நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் என்று நினைக்கிறேன்—கடந்த கால ஆட்சியில் ஒரு நாள் சட்டமன்றக் கூட்டத்திற்கு இத்தனை இலட்சம் ரூபாய் செலவாயிற்று; ஆனால் இந்த ஆட்சிக் காலத்தில் ஒரு நாள் சட்டமன்றக் கூட்டச் செலவு 96,000 ரூபாய் என்று சொன்னார்கள். மகிழ்ச்சிதான். நாங்கள் யாரும் பிரியாணி கேட்கவில்லை. 96,000 ரூபாயாகக் குறைத்திருக்கிறீர்கள். ஆனால் அவர்கள் செய்த குற்றத்திற்கு நாங்கள் எல்லாம் சேர்ந்து தண்டனை அனுபவிக்க வேண்டுமா? அதுபோலக் கடந்த கால அரசு செய்த குற்றத்திற்காக இப்போதுள்ள அரசு மீண்டும் தமிழ்நாட்டு மக்களைத் தண்டிக்க வேண்டுமா? அந்தத் தண்டனையைப் பெற்ற மக்கள் அவர்களைத் தண்டித்தார்கள். நாமும் தண்டிப்பது என்ன நியாயம்? ஆகையினால்தான் சில சலுகைகளைக் கட்டாயம் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு முடிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 4-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண் இடுபொருட்களாகிய உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள், ஸ்பிரேயர் முதலானவற்றுக்குப் பலமுனை வரி விதிக்கச் சட்டம் இயற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதனால் இடுபொருள் வியாபாரிகளாகிய நாங்களும், தமிழக வேளாண் பெருமக்களும் பாதிப்பிற்கு உள்ளாவதாக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

விவசாயிகளின் நலிவடைந்த பொருளாதார நிலையைக் கருத்தில்கொண்டு பலமுனை வரி விதிப்பு அமலில் இருந்த கால கட்டத்திலேயே, வேளாண் இடுபொருள்களுக்கு பலமுனை வரி விதிப்பிலிருந்து வரி விலக்கு அளிக்கப்பட்டு வந்தது.

உரங்கள் மற்றும் விதைகள் தற்பொழுது அத்தியாவசியப் பண்டச் சட்டத்தின்கீழ் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண் விதைப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்து நமது மாநிலமும் நாடும் தன்னிறைவடைய வேளாண் இடுபொருள்களின் பங்கு இன்றியமையாததாகும்.

பல்வேறு வகையான உரங்களின் சில்லறை விற்பனை விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டு, நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டு வருகிறது. பலமுனை விற்பனை வரி விதிப்பால் அரசு நிர்ணயம் செய்த சில்லறை விற்பனை விலையைவிட அடக்க விலை கூடிவிடுகிறது.

சிறுசிறு கிராமங்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் வேளாண் இடுபொருட்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 70 சதவீத விற்பனையாளர்கள் வேளாண் இடுபொருள்களைச் சிறுசிறு கிராமங்களில் விற்பனை செய்து வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் இந்த வரிவிதிப்பிலிருந்து நிவாரணம் அளிக்க வேண்டும். பல முனை விற்பனை வரியை இரத்து செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசி, கோதுமை ஆகியவற்றுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். பயறு, பருப்பு, மிளகு போன்றவற்றிற்கும் முழு வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். அங்ஙனம் இல்லாதபட்சத்தில் 1% வரி விதிக்கப்படலாம். இரண்டாம் மற்றும் மறுகட்ட விற்பனைக்கு விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள 1% வரி மற்றும் 5% கட்டமைப்பு உபவரி போன்றவை முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும். அரசிதழில் குறிப்பிடாத இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பயறு, பருப்பு வகைகளில் உமி மற்றும் தூசி போன்றவை கோழி மற்றும் கால்நடைத் தீவனமாக அறிவிக்கப்பட்டு வரிவிலக்காக அரசிதழில் குறிப்பிடப்பட வேண்டும். கால்நடைத் தீவனமான பிண்ணாக்கிற்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும். பிண்ணாக்கிற்கும், சாம்பிராணிக்கும் வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்பதே வருத்தமாக இருக்கிறது. Instant சாம்பிராணி, (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 25 நிமிடம் பேசி இருக்கிறீர்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** Instant சாம்பிராணித் தொழிலில் 5,000 பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். மதுரை மாவட்ட Instant சாம்பிராணித் தொழிலில் 5,000 பெண்கள் வேலை பார்க்கிறார்கள். அதற்கு 4 சதவீத வரி போடப்பட்டிருக்கிறது. தயவுசெய்து மாண்புமிகு நிதி



அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அதைப் பழையபடி குறைக்க வேண்டும். இதைக் கேட்டுக் கொண்டதற்காகக் கட்டாயம் இதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். 5,000 பெண்கள் சம்பந்தப்பட்டு இருக்கக்கூடிய பிரச்சினை இது; குடிசைத் தொழில். இதன் மீது வரிவிதிப்பது என்பது சரியல்ல. மதுரை மாவட்டச் சகோதரிகள் கூடுதலாகப் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிற பிரச்சினை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழைய கந்தல் துணி. அது ஏற்கெனவே கந்தல். அதற்கு வரி போட்டிருக்கிறார்கள். வீடுகளுக்குப் போய் அந்தப் பழைய துணிகளை, கிழிந்த, கந்தல் துணிகளை வாங்குவார்கள். அதற்கு 4 சதவீத வரி போடப்பட்டிருக்கிறது. இதனாலே எல்லாம் அரசாங்கத்தினுடைய வறுமை பெரிய அளவிலே தீர்ந்துவிடாது. கந்தல் துணிகளை விற்பதனால் கிடைக்கிற பணம் எந்த அளவுக்கு அரசினுடைய வறுமையைப் போக்கும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கந்தல் துணிகள்மீது வரி போடவில்லை. industrial waste அதாவது tailoring-ல் cut செய்த பிறகு வரக்கூடிய அந்தக் கழிவுகள்மீது வரி போடப்பட்டிருக்கிறது. அது பெரிய தொழிலாக, இலாபகரமான தொழிலாக நடக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாமல் இருக்காது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடித்து விடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நேரடியாகச் சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய விஷயமாக இருந்தால் அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போலத் தீப்பெட்டித் தொழில் குறித்து ஏற்கெனவே இந்தச் சபையில் நாம் பேசி இருக்கிறோம். அந்நிய இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டதன் விளைவாக, இலட்சக்கணக்கான மக்கள் சம்பந்தப்பட்டு இருக்கக்கூடிய இந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. தென் மாவட்டங்களில் குடிசைத் தொழிலாகத் தீப்பெட்டித் தொழிலைக் கொண்டுள்ள மக்கள் பாதிப்பு அடைந்திருக்கிறார்கள்.

இப்போது இதன் உற்பத்திக்குத் தேவையான பொட்டாசியம் குளோரேட், காகிதம், அட்டைப் பொருள்களுக்கு 10 முதல் 12 சதவீதம் வரை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் 10,000 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதில் 80 சதவீதம் தென் மாவட்டங்களில் உள்ளவை. 18,000 டன் பொட்டாசியம் குளோரேட் உபயோகித்து வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) 80% அண்டை மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுகின்றது. ஆகவே, இதனுடைய நுழைவு வரி உள்ளிட்டவற்றை இரத்து செய்து இத்தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொழில்கள் மற்றும் வணிக வரித் துறை சம்பந்தமான இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக என்னுடைய கோவை மாவட்ட நிலைமைகளைப் புரிந்துகொண்டு, அமைச்சர் அவர்கள் கூடுதல் சலுகைகளை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்து, கடைசியில் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு, அவர் இல்லாவிட்டாலும் ஒரு வேண்டுகோள், ஒரே ஒரு சாதாரண வேண்டுகோள்....

*பிற்பகல் 4-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லியாவுதீன் சேட்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 25 நிமிடம் ஆகிறது. முடித்து விடுங்கள். அடுத்த உறுப்பினர் பேச வேண்டும். ஒரே நிமிடம், பேசி முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** வாடகை டாக்சிகளுக்கு கருப்பும் மஞ்சளும் அடையாளமாக 50 வருடங்களாக இருந்து வருகிறது; இப்பொழுது எல்லாவிதமான வசதியான கார்களெல்லாம் வாடகைக்குப் போய்க்கொண்டிருப்பதால், ஜனங்கள் ஏறமாட்டேன் என்கிறார்கள்; எங்களுக்கு வாடகையும் கிடைக்கமாட்டேன் என்கிறது; தயவுசெய்து இந்தக் கலரை மாற்றிக் கொடுங்கள் என்று கோர்ட் வரை போய் கோர்ட் Government consider பண்ணலாம் என்று சொல்லிவிட்டது. தயவுசெய்து அந்தக் கலரை மாற்றிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்.

***திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமிக்க பெருமைமிகு இச்சபையிலே, தொழில் துறை மீதான மானியக் கோரிக்கை மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், சிறுபான்மை மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், தமிழகத்தின் விடிவெள்ளி, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

6 கோடி தமிழ் மக்களின் நெஞ்சத்திலே வீற்றிருக்கும் தமிழ்த் தாயே, தமிழே, அம்மா, கருணைத் தாய் நீங்களம்மா, நீங்கள் கனிவாய் சிந்தும் சாந்தியம்மா, தருமத் தாய் நீங்களம்மா, நீங்கள் நீடூழி வாழ ஆசையம்மா. அடாது செய்வதே அரசியல் நீதியாய், அதர்மமே மேலோங்கி பஞ்சமா பாதகம் செய்வதில் வல்லவர்களாய், நேர்மையை நெரிப்பதையே நிலையெனக் கொண்டு, சந்திகள் சிரித்திட கையூட்டுப் பெற்ற அந்த உலக மகா நல்லவர்கள் எங்கள் தலைவியை, தர்மமே தலையாய கடமையென நெஞ்சுப்புண் தாங்கி வந்த புரட்சித் தலைவி அவர்களைக் கொஞ்சமும் ஈவு இரக்கமின்றி சிறையினில் அடைத்திட்டனர். தமிழ்ப்புலம் பிறந்து, தமிழால் வளர்ந்து, தமிழர் போல் வாழ்ந்து, தமிழிதழ் நடத்தி, தமிழிலே பிழைத்து, தமிழால் உயிரையும், தகமையையும் வளர்த்து, தமிழனுக்குத் துரோகியாய், தமிழ் நலம் விற்று, பொய்க்குப் புகலிடம் பொருத்தமாய்த் தந்து, மெய்யெனக் கதைக்கிறார் சிலர்; வெறும் முரண்பாடாய், தாயே. அந்த மண்ணை வாரித் தூற்றிய உலக மகா நல்லவர்களை நினைக்கிறேன். விஞ்சும் துயரக் கடலைக் கடந்த, வேதனைத் தழும்பைப் பார்க்கிறேன். எத்தனை எத்தனை கொடுமைகள் எய்தாலும், அத்தனை சோதனைகளையும் சாதனைகளாக்கி, தடைக் கற்களைப் படிக்கற்களாக்கி, வஞ்சகத் தன்மை கொண்டோர்க்கு தக்கதோர் பாடம் புகட்டும் வகையில் தமிழ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று இன்று அரியணைக் கட்டிலில் அமர்ந்திருக்கும் அம்மா அவர்களே, தாழ்ந்த தமிழகத்தின் தலையினை உயர்த்திய மங்காத் தமிழின் சங்கத் தொகுப்பே, அரசியல் அறிஞரின் நுண்ணறிவு எளிய மக்கள்பால் செலுத்தும் அன்பு, அவர்களிடத்தும் அத்தகு அன்பினைப் பெறுதல் இவையனைத்தும் ஒப்பற்ற தலைவியான உங்களிடத்திலே

இணைந்திருப்பதைக் காண்கிறோம். அரும்பணியாற்ற விரும்பி உலகு ஏற்றி பெருமிகு பல்கலைக்கழகங்கள், ஏன் இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்கள் வியக்கும் வண்ணம் மக்கள் மன்றங்கள் உறவு சாற்றிடவும், மக்கள் துயர் கண்டு துன்பம் துடைத்திட அயராது பாடுபடும் துணிச்சல்மிகு புரட்சித் தலைவி அவர்களே, சிக்கவைக்க நினைப்பவரையும் சிக்க வைத்து, சிந்தனையால் சிந்திக்க வைக்கும் ஆற்றல்மிகு தலைவியே, பேழைகள் திறந்தபோதும், பெரிதெனப் போற்றாது ஏழையர் உறவினிலே என்றும் இங்கு இன்பமுறும் அன்னையே, வல்லமை கொண்டு வாதிட முனைவோரின் வாய்களையும் அடைத்திடச் செய்யும் வாக்காற்றல்மிக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களே, பள்ளப்பட்டி என்னும் இஸ்லாமிய மக்கள் நிறைந்த ஊரில் வியாபாரக் குடும்பத்தில் பிறந்து, மறைந்த, பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அன்பிற்குப் பாத்திரமாய் அன்று முதல் கழகத்தில் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றி வந்த என்னை அடையாளம் காட்டிக் கழக சிறுபான்மை நலப் பிரிவின் மாநிலச் செயலாளராக்கி, என்னை அரவக்குறிச்சி வேட்பாளராக அறிவித்து, என் தொகுதிக்கு வந்து, எனக்காக வாக்கினைச் சேகரித்து, என்னைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து சட்டமன்ற உறுப்பினராக்கிய என் அன்புத் தலைவிக்கு என் இதயபூர்வ வணக்கத்தினைத் தெரிவித்து, எனது கன்னிப் பேச்சினை ஆரம்பம் செய்கிறேன்.

என்னைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், அன்று எனக்காக உழைத்த தோழமைக் கட்சியினருக்கும் எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். அன்று புரட்சித் தலைவரின் சத்துணவுத் திட்டம், இன்று புரட்சித் தலைவியின் அன்னதானத் திட்டம். மனிதனுக்கு திருப்தி என்பது அவன் வயிறு நிறைகின்றபொழுது ஏற்படுகின்றது. வயிறு நிறைகின்றபொழுது அவன் உணவளித்தவனை வயிறார, வாயார வாழ்த்துகிறான். கடவுளை மந்திரம் மூலம் தொடர்ந்து அர்ச்சனை செய்தால் சக்தி கிடைக்கும். அதுபோல் ஒருவன் பலபேரிடமிருந்து வாழ்த்துப் பெறும்பொழுது அவன் சிறப்புகள் பல பெறுவான். மனிதன் பிரதிபலன் பாராமல் இன்னொருவனுக்குத் தேவையானவற்றை வழங்கும்பொழுது அது தானமாகிறது.



"தானத்தில் சிறந்த தானம், அன்னதானம்", அதன்மூலம் மனிதன் பல்வேறு பேறுகளைப் பெறுகிறான. அன்னதானத்தை முறைப்படி செய்தால், மனிதனால் அதன் முழுப் பயனையும். அடைய முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என ஸ்ரீபரத்வாஜ் சுவாமிகள் கூறுகிறார். இதையேதான் இஸ்லாம் மார்க்கம் சொல்லுகிறது. மற்ற மதங்களும் கூறுகின்றன. ஆகவே, அன்னதானத்தை முஸ்லிம் தர்காக்களிலும், கிறிஸ்துவ ஆலயங்களிலும் வழங்கிட அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த உன்னத திட்டத்திற்கு, எனது ஒரு மாத ஊதியத்தை அம்மா அவர்களிடம் அளிக்க உள்ளேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மானியக் கோரிக்கைக்கு வரும்முன் முதலில் என்னுடைய தொகுதி மக்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் மக்கள் பணிகள் சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். என்னுடைய அரவக்குறிச்சி தொகுதி மிகவும் வறட்சியான, பரந்த தொகுதி. தொகுதி முழுக்க கடுமையான குடிநீர்ப் பஞ்சம். என்னுடைய ஊரிலேகூட குடிதண்ணீர் 35-40 நாட்களுக்கு ஒரு முறைதான் வருகின்றது. ஆகவே, அம்மா அவர்கள் உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் குடிநீர் கிடைத்திட ஆவன செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முடிகின்ற தறுவாயில் உள்ள காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து நிறைவேற்றித் தாருங்கள் என அன்புடன் கோருகிறேன். சுமார் 10 ஆண்டுகளாகக் கட்டப்பட்டு வரும் இடையகோட்டை-நங்காஞ்சியாறு அணை கட்டும் பணி உடனேயே முடிக்கப்பட்டால், சுமார் 3,635 ஏக்கர் நிலம் பயன்படும். ஆகவே, அதற்கான நிதியொதுக்கி ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

க. பரமத்தி யூனியனில், மயில்ரங்கத்திற்கு அருகில், மூலத்துறை என்னும் இடத்தில் அமராவதி ஆற்றில் தடுப்பணை கட்டி, அங்கிருந்து தாதாம்பாளையம் ஏரி வரை தண்ணீர் கொண்டு வந்து சேர்க்கும் திட்டத்தை நிறைவேற்றினால், விவசாயிகளின் 50 ஆண்டு கால கானல் நீர்க் கனவு அம்மா ஆட்சியில் நனைவாகும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனது தொகுதியில் எங்கு நோக்கினும் தரிசு நிலங்கள். காவிரி ஆற்றில் கொடுமுடிக்கு அருகில் இருந்த பரமத்தி, அரவை மற்றும் தாந்தோனி ஒன்றியங்கள் வழியாக ஒரு கால்வாய் வெட்டப்பட்டால், எனது தொகுதி முழுக்க இருக்கும் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாறுவதுடன், நிலத்தடி நீர் உயர்ந்து வளமான தொகுதியாக மாறும்.

அடுத்து, எனது தொகுதியில் அரசு பாலிடெக்னிக் அல்லது அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்துத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மிக அதிகமாக விளைச்சலாகும் முருங்கைக் காய்களை, அரசு த்விர முயற்சி செய்து, 'முருங்கைக்காய் கொள்முதல் நிலையம்' அமைக்கவேண்டும். மேலும் முருங்கைப் பவுடர் சித்த மருத்துவ முறையில் தேவைப்படுவதால், அதற்கென்று தனிப்பட்ட முறையில், 'முருங்கை பவுடர் தொழிற்சாலை' ஒன்றை அமைக்கவும் அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தொழிற்சாலை முன்னாள் ஆட்சியாளர்கள், நடிகர் பாக்கியராஜை வைத்துத் திறக்கப்பட வேண்டுமென்று கூறினார்கள். ஆனால், எந்தத் திட்டத்தையும் அவர்கள் செயல்படுத்தவில்லை.

அடுத்து, ஆடுகள் அதிக அளவில் வளர்ப்பதால், ஆடுகள் வளர்ச்சியைப் பெருக்க, 'ஆடுகள் ஆராய்ச்சி மையம்' ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முற்றிலும் முடமாகிப்போன, தென்னிலை கால்நடை மையத்தை சீரமைத்து, அழிந்து கொண்டிருக்கும் காளை மாடு இனத்தைக் காக்க; அம்மா அவர்கள் அரசு உடன் ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அரவக்குறிச்சிக்கு மிக முக்கியமாக இரண்டு பாலங்கள் வேண்டும். ஒன்று, தாட கோவில் பாலம்; மற்றொன்று, தாலுகா அலுவலகம் பாலம் இந்த இரண்டு பாலங்களை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கு நிலம் வாங்கப்பட்டும், இதுவரை பணிமனைக்கான எந்தவொரு பணியும் செய்யப்படவில்லை. மேலும், எனது தொகுதியில் நீதிமன்றம், மகளிர் காவல் நிலையம், போலீஸ் டி.எஸ்.பி. அலுவலகம், மின் செயற் பொறியாளர் அலுவலகம் முதலியன அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



எனது பள்ளப்பட்டி அரசு மருத்துவமனையிலேயும், வட்ட மருத்துவமனையிலேயும், நபார்டு நிறுவனத்தின் உதவியுடன் யுனானி மருத்துவப் பிரிவு ஒன்று அமைக்க வேண்டுமென்று எனது தொகுதிக்காகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சூழ்நிலையையும் மற்றும் அனைத்தினையும் கருத்திற்கொண்டு எடுக்கப்படும் முடிவினை, ஏதோ சிறுபான்மைச் சமுதாயத்திற்கு, அம்மா அவர்கள் துரோகம் இழைத்துவிட்டதாகத் தி.மு.க.-வினர் எழுதியும், பேசியும் நாடகமாடுகிறார்கள். உண்மையில் புரட்சித் தலைவி அவர்கள் தான் சிறுபான்மை மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அவர்கள்தான் இப்பொழுது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காகப் பல்வேறு முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். சிறுபான்மையினரின் காவலன் என்று சொல்லிக்கொண்டு தந்திர சாகசம் செய்யும் தலைவர்கள் மத்தியில் உண்மையான சிறுபான்மையினர் மேம்பாட்டிற்கான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வரும் அம்மா அவர்கள் பக்கம்தான் சிறுபான்மைச் சமுதாயத்தினர் இப்போது இருக்கிறார்கள் என்பதை இவ்வேளையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உதாரணத்திற்குச் சிறுபான்மை மக்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாக வகிக்கும் வக்ஃபு வாரியத்திற்கு, இந்தப் பேரவையிலே, பேரவையின் மறைந்த முன்னாள் உறுப்பினர், பன்மொழிப் புலவர் ஹாஜி அப்துல் லத்தீப் அவர்கள், கடந்த ஆட்சியாளர்களிடம் ஒரு முறை அல்ல, பலமுறை, "முதலமைச்சர் அவர்களே, வக்ஃபு வாரியக் கட்டடத்தை வந்து பாருங்கள்; சுவர்ப் பிடியைப் பிடித்தாலே பயம், எங்கே நாமும் சேர்ந்து போய் விடுவோமோ என்றும், ஒரு வாடகைக் கட்டடத்தில் Statutory Body இருக்கிறது என்றும் எங்களிடத்தில் பணமில்லை என்றும் முதலமைச்சர் அவர்களே, என்னிடத்தில் பொறுப்புக் கொடுத்துள்ளீர்கள் என்றும் அந்தப் பொறுப்பை நான் நிறைவேற்ற வேண்டாமா? எங்களுக்கு சிறப்பு மானியமாக ஒரு மானியத்தை அளியுங்கள்" என்றும் முன்னாள் அமைச்சரிடத்திலே, முதல்வரிடத்திலே, பலமுறை கேட்டும், அந்த ஆட்சியாளர்கள் வழங்கவில்லை. ஆனால், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததும், கேட்காமலேயே வக்ஃபு வாரியத்திற்கு அரசு

நிர்வாக மானியமாக 45 இலட்சமும், கட்டடம் கட்ட 40 இலட்சம் ரூபாயும், 10 வட்டார அலுவலகங்களுக்கு 15 இலட்சம் ரூபாயும், ஆக 1 கோடி ரூபாய் நிதி வழங்கினார்கள். அதற்காக உண்மையில் சிறுபான்மையினருக்கு நன்மை செய்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-05

இம்மாநிலம் தொழில் வளர்ச்சியில் முன்னோடி மாநிலமாகத் திகழ ஏதுவாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்வரும் 2002—2007 திட்டக் காலத்தில் 10 சதவிகித வளர்ச்சி விகிதத்தை எய்துவது இந்த அரசின் குறிக்கோள் என்ற உறுதியோடு, உயிரியல் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம், தகவல் தொடர்பு, மருந்துப் பொருள் வளர்ச்சியடையச் செய்வது போன்ற முக்கிய கொள்கைகளை முதன்மை வளர்ச்சிப் பணியாகக் கொண்டு தொழில் துறையை முன்னிறுத்தி இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா மற்றும் இரண்டாவது மென்பொருள் பூங்கா தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) இவ்வாண்டு செயல்படுத்தப்படும் பெரிய தொழில் திட்டங்களாகும். இதுவன்றி, நலிவடைந்த நிலையிலுள்ள சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம், தமிழ்நாடு சிமண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் போன்ற பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சர்க்கரை ஆலைகளைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் இவ்வரசால் எடுக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதிபூண்டுள்ளார்கள்.

இதுமட்டுமல்லாமல், 2002-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம், தனது காகித இயந்திரம் 1-ல் ரூ.25 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் ரூ.30 கோடி முதலீட்டில் காகித இயந்திரம் 2-ன் வேகத் திறனை விரைவுபடுத்தவும், ரூ.25 கோடி செலவில் காகிதக் கூழ் பிரிவின் திறனை மேம்படுத்தவும் மற்றும் ரூ.10 கோடி செலவில் காகிதம் வெட்டும் இயந்திரம் ஒன்றை நிறுவவும் எங்கள் அம்மா அரசு முடிவு செய்துள்ளார்கள். செய்தித் தாள் துறைக்கே ஒரு மிகப் பெரிய சாதனையாக விளங்கவுள்ளது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், கடந்த 36 ஆண்டுகளில் இரும்பு மற்றும் உருக்கு, பெட்ரோலிய இரசாயனங்கள், உரங்கள் மற்றும் இரசாயனங்கள், தானியங்கள், மலர்ச்செடி வகைகள் வளர்த்தல் போன்ற பல்வேறு துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திட்டங்களை டிட்கோ நிறுவனம் நிறுவியுள்ளது. தொடர்ந்து முதலீடுகளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளை உருவாக்கிட அண்மைக் காலமாக 'டிட்கோ' நிறுவனம் தனது நடவடிக்கைகளை முறைப்படுத்தியுள்ளது என்பதையும் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மை ஏற்றுமதியில் ஒரு சிறப்பு அம்சமாக மலர்கள் ஏற்றுமதிக்காக 'டிட்கோ' நிறுவனமும், மைய அரசின் 'அபீடா' நிறுவனமும் இணைந்து தருமபுரி மாவட்டத்தில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் ஒன்றினை அமைப்பதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் தருமபுரி மாவட்ட வேளாண்மை மக்கள் பயன்பெறும் வகையில் அதிக எண்ணிக்கையில் மலர்ச்செடி வளர்ப்பு மற்றும் தோட்டக்கலைத் திட்டங்களை மேம்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை.

விவசாயத்தில் மிகவும் முக்கிய ஏற்றுமதியில் ஒன்றாக விளங்குவது சர்க்கரை. இந்தச் சர்க்கரைத் தொழிலை பரவலாகத் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் முகத்தான் இவ்வரசு பல திட்டங்களை இத்தொழிலுக்கு அறிவித்துள்ளது. மேலும் தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 கூட்டுறவுத் துறையிலும், 3 பொதுத் துறையிலும் மற்றும் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் -- 19 தனியார் துறையிலும் உள்ளன. 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறைச் சர்க்கரை ஆலைகள் மூன்றும், கரும்புக் கொள்முதல் விலை அதிகரிப்பு, சர்க்கரை விலைச் சரிவு, போன்றவற்றினால் நட்டம் ஏற்பட்டு நலிவடைந்துள்ளன. இந்த நலிவடைந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளைப் புனரமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆலைகளிலுள்ள இயந்திரங்களின் செயல் திறனை அதிகப்படுத்துவதற்கும், கரும்பு பெருக்கத்திற்கும், சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து மைய அரசிடம் உதவி கோரப்பட்டுள்ளது.

இதுபோன்ற சிக்கல்களைக் களையும் முகத்தான் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் நடைமுறை மூலதன நிதியுதவிக்காகவும், இந்த

ஆலைகள் 2000-2001 அரவைப் பருவத்திற்கும் கரும்பு விவசாயிகளுக்குக் கரும்பு விலை பாக்கியைக் கொடுப்பதற்கும் அரசு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் ரூ.125.88 கோடி கடனுதவி வழங்கக் கோரியுள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 11 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு, ரூ.87.20 கோடி கடன் வழங்க ஒப்புக்கொண்டு, ரூ.50 கோடி முதல் தவணையாகவும், ரூ.37.20 கோடி இரண்டாவது தவணையாகவும் வழங்கியுள்ளது. இத்துறை சரிந்த நிலையில் இருந்து உன்னதமான உயர்வையும், மேன்மையையும் பெற்றுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொண்டு, இந்தியாவிலே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை ஆக்கிக்காட்டுவேன் என்று சூளுரைத்துச் செயலாற்றி வரும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சிறுபான்மை சமுதாயம் தக்க உறுதுணையாய் என்றென்றும் இருக்கும் என்பதனை எடுத்துக் கூறி, கடைசியாக காந்தி பிறந்த மண்ணில் நடக்கின்ற கொடுஞ்செயல்கள் ஒவ்வொரு மனித மனங்களும் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையில் இருக்கிறது. இந்நிலை மாறி அனைத்து மக்களும் ஒன்றுபட்டு சகோதரர்களாய் வாழ்ந்திட நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக என்று கூறி, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. எஸ். கண்ணன்.

***திரு. ஏ. எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் வணிக வரித் துறை சார்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் பேசுவதற்கு முன்னால், தமிழகத்தினுடைய முதல்வர் இந்தியாவிலேயே தமிழ் மாநிலத்தை தொழில் வளர்ச்சியில் முதன்மையான மாநிலமாக மாற்றுவேன் என்று கூறித் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பிலே பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்க விரும்புகிறேன். தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதன்மையாக உருவாகும் என்பதற்கேற்ப தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையாகப் பல அம்சங்களுடனான கொள்கையை அரசு உருவாக்கி வருகிறது. முக்கியமாக, 2002—2007



திட்ட காலத்தில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் 10 சதவிகிதம் வளர்ச்சி எய்த வேண்டுமென்ற குறிக்கோளோடு திட்டம் தீட்டப்படுகிறது. வளர்ச்சிப் பாதையில் தமிழகத்தைக் கொண்டு செல்ல மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பல்வேறு வணிகச் சங்கங்களுடைய பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த நேரத்திலே வரவேற்கிறோம்.

அதேபோலத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அமைந்திருப்பதைப் போன்ற உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக அயல் நாட்டு முதலீடுகளை ஈர்ப்பதை அரசின் நோக்கமாகக் கொண்ட உட்கட்டமைப்பு முதலீடு குழுமம் ஒன்றை உருவாக்கவிருக்கிறீர்கள். அதை இந்த நேரத்திலே நாங்கள் வரவேற்கிறோம்.

தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கான மேம்பாட்டு இடவசதிகளின் தேவை பெருகியுள்ளதைக் கருத்தில்கொண்டு டைடல் பார்க்-2 திட்டத்தைச் செயல்படுத்திட டிட்கோ நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட ஜுரோங் நகரக் கழகம் என்னும் சிங்கப்பூர் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது, சிறப்பான முறையில் நடைபெற வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்து அதை வரவேற்கிறோம்.

தேனி மாவட்டத்தில் உள்ள கம்பம் பள்ளத்தாக்கில் விளையும் மஸ்கட்/தாம்சன் ரக திராட்சைகளைக் கொண்டு திராட்சைப் பழங்களுக்கான மதிப்புக் கூட்டப்பட்ட மையங்கள் நிறுவிடவும், ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு விற்பனைக்கான ஒயின் தயாரிக்கவும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறோம். அதேநேரத்தில் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற இடங்களில் கிடைக்கும் அரிசியைப் பயன்படுத்தி பீர் என்னும் மதுபான வகைகளைத் தயாரிக்கத் திட்டமிட வேண்டுமென்று அரசை அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறோம்.

அமெரிக்காவின் இன்பேக் இந்தியா குரூப் மற்றும் ஆக்ஸஸ் டெக்னாலஜிஸ் நிறுவனங்களுடன் இணைந்து திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரியிலுள்ள உயர் தொழில் நுட்பப் பூங்கா வழிகாட்டுத் துறையில் 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டிட்கோ ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. அந்தத் திட்டத்தை இந்த நேரத்தில் நாங்கள் வரவேற்கிறோம்.

[திரு. ஏ.எஸ். கண்ணன்] [2002 மே 7

'ஸ்பா' வாசஸ்தலம், கன்னியாகுமரி. நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா, கன்னியாகுமரியில் இரப்பர் பூங்கா மற்றும் துறைமுகம், கூடங்குளத்தில் அணுமின் நிலையம் ஆகிய முக்கிய திட்டங்கள் தென் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காகக் கன்னியாகுமரிக்கு அருகில் பன்னாட்டுத் தரம் வாய்ந்த 'ஸ்பா' வாசஸ்தலம் ஏற்படுத்த டிட்கோ நிறுவனத்திற்கு ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை இந்த நேரத்திலே நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோலப் பொன்னேரி தொகுதியிலுள்ள எண்ணூர் துறைமுகத்தைப் பயன்படுத்தி, அங்கே தோல் பொருட்கள் மற்றும் ஆடைகள் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிற்பிரிவுகள் தமிழகத்தில் பெருமளவில் அமைந்து இருப்பதைப் பயன்படுத்தி சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்ற அந்த முயற்சியை நாங்கள் இந்த நேரத்திலே வரவேற்கிறோம்.

அதேபோலச் சீரழிந்து கொண்டிருக்கின்ற பொதுத் துறை நிறுவனங்களான சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் போன்ற பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சர்க்கரை ஆலைகளைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். அதேநேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது அப்படிச் சீரமைக்கின்றபோது பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் துறைக்கு அனுமதிக்கக் கூடாது என்று இந்த நேரத்திலே நாங்கள் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 5-15

இப்போது தமிழக முதல்வர் அவர்கள் தமிழகம் தொழில் வளர்ச்சியில் முதலிடம் பெற வேண்டும் என்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி எடுக்கின்றபோது, உள்நாட்டு, பன்னாட்டு மூலதனத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று முயற்சி செய்து அதில் பலன் கிடைக்கின்றபோது அந்தப் பலன் தமிழகத்திலேயுள்ள சிறு, குறு தொழில்களுக்குக் கிடைக்கின்ற வகையிலும் மற்றும் அந்தப் பகுதியைச் சார்ந்த. அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலும், அதனைத் திட்டமிடவேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்வேன். ஏனென்றால், கடந்த கால ஆட்சியில் நடந்த ஒரு விஷயத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாருதி கம்பெனியை இந்திய நாட்டிற்குக் கொண்டுவந்தபோது, அந்தக் கம்பெனிக்குத் தேவையான 85 சதவிகித உதிரி பாகங்களை இந்திய நாட்டிலே தயாரித்த நிலைமை இப்போது நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆட்சியின் போது ஹூண்டாய் என்ற ஒரு கம்பெனியை இங்கே தமிழகத்திற்குக் கொண்டு வந்தார்கள். ஆனால், அவர்கள் பூஜை போட்டு அடிக்கல் நாட்டியதோடு சரி. அதன்பின் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அது உற்பத்தி துவங்கப்பட்டதும் துரதிருஷ்டவசமாக மத்திய அரசால் அந்நிய நாட்டு கம்பெனிகள் நம் நாட்டில் கம்பெனியைத் துவங்குகின்றபோது அவர்களுக்குத் தேவையான உதிரி பாகங்களை இங்கே இருக்கின்ற சிறு, குறு தொழில்களில் எல்லாம் வாங்க வேண்டும் என்ற ஒரு நிலை இருந்தபோதிலும்கூட, அந்தக் கடந்த கால ஆட்சியாளர்கள் துரதிருஷ்டவசமாக அந்த ஹூண்டாய் கம்பெனி ஆரம்பித்தபோது, பக்கத்திலேயே ஒரு ancillary unit அந்த கொரியன் நிறுவனத்தினுடைய அரசின் ஒரு நிறுவனத்தை இங்கே நிறுவி, அந்த ரூ. 70 கோடியில் ஏற்படுத்தப்பட்ட அந்த ancillary unit அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அவர்கள் போய் அதைத் திறந்து, அந்த ஹூண்டாய் கம்பெனிக்குத் தேவையான உதிரி பாகங்களை அங்கேயே தயாரிக்க வேண்டுமென்ற ஒரு மோசமான நிலையைக் கொண்டு வந்தார்கள். இது எப்படி வந்தது என்று கேள்விப்படுகின்ற நேரத்தில் மத்திய அரசில் அதற்குத் தனியாக ஒரு சலுகை வாங்கி ancillaries-உதிரி பாகங்களைத் தயாரிப்பது கொரியா கம்பெனிக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது இங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்குத் தெரியும். ஏறக்குறைய 3 இலட்சம் கார்களை அவர்கள் உற்பத்தி செய்திருக்கின்றார்கள். விளம்பரமும் அதிகமாகச் செய்யப்படுகிறது. ஆனால் அதனுடைய இலாபம்கூட ஏறக்குறைய 300 கோடி ரூபாய்க்கு மேல் கடந்த ஆண்டு சம்பாதித்து இருக்கிறார்கள். தமிழகத்திற்கு அதனால் என்ன இலாபம். நம்மைப் பொறுத்த அளவிலே, அந்த கம்பெனி ஆரம்பிக்கின்றபோது, 10 ஆண்டுகளுக்கு வரிச் சலுகை, மின் கட்டணச் சலுகை, குறைந்த விலையில் அவர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்தது, அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தது. அத்தனையும் அவர்களுக்குச் செய்து கொடுத்த பிறகு இந்தப் பன்னாட்டு கம்பெனி இந்தத் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலும் அல்ல, அதில் வருகின்ற லாபத்தினை தன் நாட்டிற்கே கொண்டு சென்றார்களே தவிர, குறைந்தபட்சம் இங்கே இருக்கின்ற சிறு, குறு தொழில்களுக்கு அவர்கள் Job order-களைக்கூடத்

தரவில்லை. இப்படிப்பட்ட நிலைமை வருங்காலத்தில் நம்முடைய இந்த ஆட்சியில் ஏற்படக்கூடாது என்று இந்த நேரத்திலே பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொரு தகவலையும் சொல்கிறேன். அவர்கள் ஆரம்பித்த அந்த கம்பெனி, அவர்கள் போட்ட முதலீடு, மெஷின்கள் என்ற வகையிலே முதலீட்டை இங்கே கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வந்தபோதுகூட அந்த மெஷின்கள் ஏற்கெனவே ஜெனரல் மோட்டார் கம்பெனியில் பயன்படுத்தப்பட்ட, கனடா நாட்டிலே இருந்த அந்த கம்பெனியிலிருந்து second hand machine-களை இங்கே எடுத்து வந்து போட்டு, அதன் குத்து மதிப்பான விலையை அவர்கள் போடவேண்டிய அந்த மூலதனத்திற்கு நமக்குக் காட்டி அவர்கள் இந்த கம்பெனியை ஆரம்பித்தது பற்றி பல பத்திரிகைகள் எழுதின என்பதையும் இந்த நேரத்தில் நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தொழில் துறை இன்று பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் இருக்கின்றது. அதை அரசு கனிவோடு கண்டு ஆய்வு செய்து உதவிட வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இன்று காலையில்கூட கைத்தறி விசைத்தறி நெசவாளர்களுக்கு சலுகை வேண்டுமென்று அத்தனை எதிர்கட்சிகளும் கேட்டபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தற்போது போட்ட அந்தக் கட்டண உயர்வை நீக்கிக் கொள்கிறேன் என்று சொன்னார்கள். கடந்த காலத்திலிருந்து வசூலிக்கப்படுகின்ற அந்தக் கட்டணம் கூட, சலுகைக் கட்டணம் கூட இப்போது முதல்வராக இருக்கின்ற மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் போட்ட ஜி.ஓ. தான். அதன்மூலம்தான் இப்போது கைத்தறி, விசைத்தறி, செக்டாரைச் சேர்ந்தவர்களுக்கும் இன்ஜினியரிங் செக்டாரைச் சேர்ந்தவர்களுக்கும் 10 H.P.க்கு கீழே இருப்பவர்களுக்கு ஒரு ரூபாய் 20 காசு என்ற சலுகை விலை வழங்கப்பட்டிருக்கிறது எனபதை நான் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இந்த ஜி.ஓ.-வைக் கொண்டு வந்தவர்களே இன்றைய முதலமைச்சர்தான். மீண்டும் அதில் ஒரு சிக்கல் இருக்கிறது என்று கடந்தமுறை கூட நான் இதுகுறித்துப் பேசினேன். முதல்வர் அவர்களையும் நிதியமைச்சர் அவர்களையும் தொழில் அமைச்சர் அவர்களையும் நான் பணிவோடு கேட்டுக் கொள்வது இந்தச் சலுகைகளைப் பயன்படுத்துவதற்கு மின் வாரியம் ஒரு நிபந்தனை



போட்டிருக்கிறது. அந்தத் தேவையற்ற நிபந்தனையை வாபஸ் பெற்றால் மேலும் அந்த ஜி.ஓ. செழுமையாக இருக்கும் என்று இந்த நேரத்தில் அன்போடு கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-20

துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால தி.மு.க. ஆட்சியில் கம்பெனி திறப்பு விழாக்கள் என்பதைவிட அமைதியான முறையில் மூடுவிழாக்கள் நடந்திருக்கின்றன. ஏறக்குறைய இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதில் பணிபுரிந்த 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது தமிழகத்தில் இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு இதற்கெல்லாம் சுமுகமான ஒரு முடிவு வரும் என்று தொழில் முனைவோரும் தொழிலாளர்களும் எதிர்பார்க்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஓராண்டு காலத்திற்குப் பின்னாலும் கடந்த கால ஆட்சியில் இருந்த நிலைதான் ஆங்காங்கு தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று போற்றப்படுகிற கோவையில் மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. சிவகாசியில், சென்னையில் இதேநிலைதான் என்று எனக்கு முன்னால் பேசியவர்கள் கோடிட்டுக் காண்பித்தார்கள். ஆக ஒட்டுமொத்தமாக இப்படி ஏற்பட்ட பாதிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் இந்த நேரத்தில் உங்களை நான் கேட்டுக்கொள்வது; தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலோ அல்லது தொழில் அமைச்சர் தலைமையிலோ ஒரு கமிட்டியைப் போட்டு ஆய்வு செய்து மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளுக்குப் பாதுகாப்புத் தந்து மீண்டும் அதைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே காலையில் ஒரு சட்டமுன்வடிவினை முன்வைத்திருக்கிறோம். அதில் பிளாஸ்டிக் பொருட்களைச் சேமிப்பது, ஏற்றிச் செல்வது, பயன்படுத்துவது போன்றவற்றைத் தடைசெய்வது குறித்த சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்களையும் முதலமைச்சர் அவர்களையும் நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த பிளாஸ்டிக் செக்டாரில் 2,000 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் 25 ஆயிரம் தொழில்கள் இருக்கின்றன. இதில் 8 லட்சம் பேர் பணி

புரிகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு செக்டாரை நாம் தடுத்து நிறுத்துவதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருந்தால் அந்த செக்டாரில் இருப்பவர்கள் நிலைமை என்ன என்பதை நீங்கள் தயவுசெய்து உணர்ந்து, குறிப்பிட்ட காலவரையறை இரண்டு வருடம் என்று நிர்ணயித்து மேற்கொண்டு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

வணிக வரித் துறையைப் பற்றி ஒரு வார்த்தை. நான் முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், நிலுவையில் உள்ள 6,000 கோடி ரூபாயை வசூலிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, செங்கல் தயாரிப்பவர்கள், தற்போது தனியார் நிலங்களில் மண் எடுத்து செங்கல் உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் வரி கட்டவேண்டுமானால், 1 முதல் 16 அடுப்புகள் கொண்ட சூளைக்கு 5,000 ரூபாய் வரி கட்டுகிறார்கள். 17 முதல் அதற்கு மேல் உள்ள சூளைக்கு 8000 ரூபாய் வரி கட்டுகிறார்கள். ஆனால் காம்பவுண்டு வரி என்று அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அந்த வரி முறையை நாம் கொண்டுவந்தால் அந்த 1 முதல் 16 அடுப்புகள் உள்ள சூளைக்கு ரூ. 28 ஆயிரமும், 17 முதல் 26 அடுப்புகள் உள்ள சூளைக்கு ரூ. 35 ஆயிரமும், 27 அடுப்புகளுக்கு மேல் உள்ள சூளைக்கு ரூ. 40 ஆயிரமும் வருடத்திற்குக் கட்டுகிற நிலைமை இருக்கும். அதனால் அரசாங்கத்திற்கு வருகின்ற வருவாய் இப்போது வருவதைவிட 10 மடங்கு அதிகமாக வரி வசூலாகும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல மூலப்பொருள்களுக்கு விதிக்கப்படுகிற பலமுனை வரியைப்பற்றிய ஒரு கருத்தை இந்த நேரத்தில் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நிதியமைச்சர் அவர்களுக்கும் தயவுசெய்து தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், சிவகாசியில் கொண்டுபோய்க் கொடுக்கிற அந்த மூலப்பொருளுக்கு இப்போது வரி போட்டுள்ளதால்--அவர்கள் கடந்த காலத்தில் நேரடியாகக் கொண்டு சென்றால், சிவகாசி கம்பெனிகள் மூலப்பொருள்களைத் தந்து உற்பத்தியை வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுத்துச் செல்வார்கள். ஆனால் நீங்கள் வரி போட்டவுடன்-- பக்கத்து மாநிலங்களுக்கு அந்த ஆர்டர்கள் எல்லாம் செல்கின்ற நிலை இருக்கிறது. ஆதலால், இந்த மூலப்பொருள்கள் மீது விதிக்கின்ற



அந்த நுழைவு வரியை இரத்து செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, வணிகர்கள், பொது மக்கள் ஆகியோரைப் பாதிக்கின்ற பலமுனை வரி அமல்படுத்துவதை (மணியடிக்கப்பெற்றது) மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். அன்றாடம் மக்கள் பயன்படுத்துகின்ற அரிசி, பருப்பு, பயறு போன்றவைமீது நாம் வரி விதித்து இருக்கிறோம். அந்த வரியை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மீண்டும் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 5-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் மற்றும் தொழில் குறித்த மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பினை அளித்தமைக்கு மிக்க நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

'நீர் இல்லாமல் உலகம் இல்லை' என்பது பழமொழி. உலகத்திலே நீர் இல்லாமல் எதுவுமே நடக்காது. அதுபோல, வரி இல்லாமல் அரசு அசையாது என்பது புதுமொழி. வரிகள் போடத்தான் வேண்டும். அது அரசினுடைய கடமையாகும். வசூலித்த அந்த வரி வருவாயைப் பாதுகாத்து, மக்களுக்கு, தக்கவாறு, சிக்கனமாக, சீராகச் செலவு செய்ய வேண்டும் என்பது, வரியினுடைய அடிப்படைக் கொள்கை என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வணிகர்கள் நமக்கு வரியைச் செலுத்துகிறார்கள். Merchants are pay-masters. ஆகையினாலே, வணிகர்களினுடைய மனது புண்படாமலும், மென்மையாகவும் அந்த வரி வசூல் செய்கின்ற திட்டத்தை அரசு கடைப்பிடிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விற்பனை வரியை, சென்னை இராஜதானியாக இருந்தபோது, 1939 ஆம் ஆண்டிலே, மூதறிஞர் இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது, இந்த மாமன்றத்திலே அவர்கள் கொண்டு வந்தார்கள். அப்போது ஒரு ரூபாய்க்கு 192 தம்பிடி; 192 தம்பிடிக்கு ஒரு தம்பிடி என்று வரியை அவர்கள் விதித்தார்கள். இப்போது ரூபாய்க் கணக்கு வைத்துக் கொண்டால், அரை சதவிகிதம் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, 1939 ஆம் ஆண்டிலே அரை சதவிகிதம் இராஜாஜி அவர்கள்,

வரிவிதித்த போது, ஆண்டு ஒன்றுக்கு 35 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்தது. மெல்ல, மெல்ல இன்றையதினம் பெருகி ஏறக்குறைய சராசரியாக 10 சதவிகிதம் வரியாக அது உயர்ந்து, ஆண்டு ஒன்றுக்கு 6 ஆயிரம், 7 ஆயிரம் கோடி ரூபாயாக வருகின்ற ஒரு துறையாக இந்த விற்பனை வரித் துறை இருக்கிறது. ஆகவே, இப்பேர்ப்பட்ட ஒரு வரிவிதிப்பை ஏற்படுத்துகின்ற நிலைமையில் ஆண்டுதோறும் அந்த வரியை அதிகரிக்க வேண்டுமா; ஆண்டுதோறும் புதிய வரிகளை விதித்துதான் ஆக வேண்டுமா என்கின்ற கேள்விக்குறியை இப்போது நாம் சந்தித்தாக வேண்டியிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழகத்திலே சுமார் 20 இலட்சம் வணிகர்கள் இருக்கின்றார்கள். அந்த வணிகர்களிலே மிகக் குறைந்த அளவுதான் வரியைச் செலுத்துகின்றார்கள். பரந்த அளவிலே மக்கள் வரிகளைச் செலுத்துவதனால், குறைந்த விகிதத்தோடு வரியை விதித்தால், அதிக வரியை வசூலிக்கின்ற தன்மைகள் ஏற்படும். ஆகையினாலே, வரியைக் குறைப்பதன் மூலமும், வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் இந்த எதிர்பார்க்கப்பட்ட 6 ஆயிரம், 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாகவே வருமானம் வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மக்களுடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக அரசு செலவு செய்தாக வேண்டும். அப்படிச் செலவு செய்ய வேண்டுமென்றால், வருவாய் கண்டிப்பாக வேண்டும். ஆகவே, வரிகள் மூலம் வசூல் செய்கிறார்கள். வரி போட்டுத்தான் வளர்ச்சித் திட்டங்களைத் தீட்ட முடியுமா; வேறு வழி இல்லையா என்பதை அரசு சிந்திக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-30

இப்போது நம்முடைய அரசாங்கத்திலே பல்வேறு துறைகள் பெருகிவிட்டன. சிக்கன நடவடிக்கையைக் கண்டிப்பாக எடுக்க வேண்டிய சூழ்நிலையில் அரசு இருக்கிறது. கஜானாவே காலி; வருகின்ற வரியிலே ஏறக்குறைய 85 அல்லது 90 சதவீதம் அரசு செலவுகளுக்கு, அதிகாரிகளுக்கு, பணியாளர்களுக்குப் போய்விடுகிறது. ஆகவே, 20 சதவீதம்கூட வளர்ச்சித் திட்டங்களுக்குக் கொடுக்க முடியவில்லையே என்கின்ற ஒரு பிரத்தியேக நிலைமையை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இந்தத் துறைகளிலே



நாம் சிக்கன நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். பல்வேறு துறைகளை, வேண்டாத துறைகளை எல்லாம் அரசு சிந்தித்து அவற்றை எடுத்து விட வேண்டும் அல்லது பல்வேறு துறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் செலவினத்தை மிகவும் குறைக்க முடியும் என்பதை அரசுக்கு நான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் தொழில் துறையை எடுத்துக்கொண்டால், அரசு நடத்துகின்ற தொழில்களை எடுத்துக்கொண்டால் பல்வேறு தொழில்களிலே பெரிய பெரிய நஷ்டம் ஆண்டுதோறும் வந்து கொண்டிருக்கிறது. ஆக அந்த நஷ்டத்தை ஈடு கட்டுவதற்காக மேலும் அதிக வரியைப் போட்டாக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தாலே, மக்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட தொழில் துறைகள் மக்களுடைய நலனுக்கே குந்தகமாக இருந்துகொண்டிருப்பதை நிவர்த்தி செய்ய வேண்டும். ஆகையினால் தொடர்ச்சியாக நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற தொழிற்சாலைகளில் அரசு ஈடுசெய்த மூலதனத்தைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். Disinvestment scheme-ஐ ஏற்றுக்கொண்டால் இந்த அரசு நடத்துகின்ற தொழில் சீராக அமையும்; அரசும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் நஷ்டம் அடைவதைத் தவிர்க்கலாம்; அப்பேர்ப்பட்ட நஷ்டத்தைத் தவிர்த்தாலே புதிய வரிகளைத் தவிர்க்க முடியும் என்று தாழ்மையுடன் நான் சொல்லிக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல இப்போது அரசினுடைய நிர்வாகத் துறைகளை எடுத்துக்கொண்டால் ஏராளமான பணியாளர்கள், அதிகாரிகள் தேவைக்கு அதிகமாகவே இருப்பதை நாங்கள் உணர்கின்றோம். இந்த தேவையற்ற பணியாளர்களைப் படிப்படியாகக் குறைப்பதன் மூலம் அரசாங்கத்தினுடைய செலவுகளை நாம் குறைக்க முடியும். தமிழகத்திலே நம்முடைய அரசுத் துறைகளிலே பணியாளர்கள் 12½ இலட்சம் பேர் இருக்கின்றார்கள். அவர்கள் மிகப் பெரிய ஒரு பட்டாளமாக இருக்கின்றார்கள். அந்த அளவுக்குத் தேவைதானா என்பதை அரசு சிந்தித்து அதையும் படிப்படியாகக் குறைத்து, அரசாங்கத்தினுடைய செலவைக் குறைக்க வேண்டும்; சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இதனால் அதிக வரி அல்லது புதிய வரியைத் தவிர்க்கலாம் என்பதை தாழ்மையோடுத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தவிர, இப்போது பல புதிய வரிகளை நம்முடைய அரசு அறிவித்திருக்கின்றது. கைத்தறிக்கு வரி அதிகம் இருக்கிறது என்று நேற்றையதினம் கேட்டுக் கொண்டதற்கு இன்றையதினமே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த வரியை எல்லாம் விலக்கிக் கொண்டார்கள்; பட்டுச் சேலைக்கு வரியே இல்லை என்று அறிவித்தார்கள்.

அதேபோலத் தமிழகத்திலே ஏறக்குறைய 40 ஆண்டு காலமாக எந்த அரசும் அரிசிமீது வரியைப் போடவே இல்லை. அதைத் தயாரிக்கின்ற அரிசி ஆலைகள்மீது வரி 2% அல்லது 4% என்று போட்டாலும் அது படிப்படியாக உயர்ந்து கடைசியில் அதனால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, இந்த 2 விழுக்காடு கோதுமை மற்றும் அரிசி மீது போட்டிருக்கின்ற வரியை அடியோடு நீக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றேன்.

நாளையதினமே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதை ஒத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-35

அதுதவிர, பருப்பு, வெல்லம், மிளகு போன்ற அத்தியாவசியபொருட்கள்மீது 4 விழுக்காடு வரியைப் போட்டிருக்கிறார்கள். அதையும் குறைக்க வேண்டும். அடியோடு நீக்காவிட்டாலும்கூட 1 சதவிகிதமாக அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, உற்பத்தி செய்த விவசாயப் பொருட்களை நமது விவசாயத் துறையிலே இருக்கிற அரசு விற்பனைக் கூடங்களிலே கொண்டுபோய் வைத்தால் அதற்கு cess என்று ஒரு வரி போடுகிறார்கள். காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைக் கொண்டுபோய் வைத்தாலும் அதற்கும் cess என்ற ரூபத்திலே வரி போடுகிறார்கள். இந்தக் காரணத்தாலே விவசாயிகளுக்குப் போதிய அளவு, அவர்கள் எதிர்பார்க்கின்ற விலை அந்தப் பொருட்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகையினால் அதையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பலமுனை விற்பனை வரி இருக்கிற காரணத்தால் மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். 20 ஆண்டு காலமாக ஒரு முனை வரி இருந்தது. அதையே மீண்டும் ஒருமுனை விற்பனை வரித் திட்டமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இரண்டாம் மற்றும் மறுகட்ட விற்பனைக்கு விதிக்கப்பட்டுள்ள ஒரு விழுக்காடு வரி மற்றும் 5 விழுக்காடு கட்டமைப்பு உபவரி முற்றிலும் நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பயறு, பருப்பு, வயலின் உமி, மற்றும் தூசி போன்ற பொருட்கள் கோழித் தீவனமாகவும், மாட்டு தீவனமாகவும் பயன்படுகின்றன. அதற்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதுமட்டுமல்ல, பிண்ணாக்கிற்கும் வரி இருக்கிறது. அதற்கும் விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிற பல தொழிற்சாலைகள் தரமான மூலப்பொருள்களை அண்டை மாநிலத்திலிருந்து தருவித்து உற்பத்தியைச் செய்து, இங்கே இருக்கிற தமிழக மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்றன. அதனாலே தொழில்வளம் நன்றாக இருக்கிறது. ஆனால், இப்போது நுழைவு வரி போட்டிருக்கிற காரணத்தால் நம்முடைய தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருட்கள் வெளியிலேயிருந்து வாங்க வேண்டுமென்றால் நுழைவு வரியைக் கட்டுகின்ற காரணத்தாலே போட்டி போடுகின்ற அளவுக்கு நம்முடைய அடக்க விலை இருப்பதில்லை. 4 விழுக்காடு நுழைவு வரி கட்டிவிட்டு அல்லது 10 சதவிகிதம் நுழைவு வரி கட்டிவிட்டு உற்பத்தி செய்தால் அண்டை மாநிலத்தினுடைய உற்பத்திப் பொருட்களுக்கு ஈடாக நாம் போட்டி போட்டு விற்க முடியாத ஒரு சூழ்நிலை வந்துவிடும், ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இலட்சுமணன், இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** ஆகவே பல அண்டை மாநிலங்களிலிருந்து இங்கே தருவித்துக்கொள்ளும் காகித அட்டைகள் போன்ற பல பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுதவிர நுழைவு வரி செலுத்தி மூலப்பொருட்களை இங்கே தருவித்து அதனாலே உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்கும்போது விற்பனை வரி கட்டுகிறார்கள். அப்படி

அந்த விற்பனை வரியைக் கட்டும் போது நுழைவு வரி எவ்வளவு கட்டினார்களோ அந்தத் தொகையை கழித்துக்கொள்ளக்கூடிய ஒரு வசதியும் இப்போது இல்லை. ஆகவே, அந்த நுழைவு வரியை எடுத்துவிட வேண்டுமென்று நான் கேட்டுகொள்கிறேன். காகித அட்டைகள் தமிழகத்தில் தேவையான அளவுக்கு உற்பத்தி இல்லை. அதுபோல Duplex Board போதுமான அளவுக்கு இல்லை. இவற்றை வெளிமாநிலத்திலிருந்து தருவிக்க இங்கே உள்ள தொழிற்சாலைகள் ஏங்கிக் கொண்டிக்கின்றன. இதன்மீது 10 சதவிகிதம் நுழைவு வரியை நீக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுதவிர, மயிலாப்பூர் தொகுதியிலே பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். அந்தத் திட்டங்களுக்கெல்லாம், உயிர் கொடுக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே பல புதிய குளங்களை வெட்டி, மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நீக்குவதற்காக அருமையான யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தத் திட்டத்தின் கீழே மயிலாப்பூரில் இருக்கின்ற தெப்பக் குளங்களை எல்லாம் சீரமைத்துத் தண்ணீர் அங்கே நிரம்பக்கூடிய அளவுக்குச் செய்தால் அந்தப் பகுதியிலே தண்ணீர் பிரச்சினை இல்லாத நிலைமை வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல பகுதிகளிலே உள்ள ஆகாய விமான நிலையங்களில் எல்லாம் tax free shops இருக்கும். அங்கே போய் வாங்கினால் எந்த excess வரியும் கிடையாது. எந்த விற்பனை வரியும் கிடையாது. அதுபோல மயிலாப்பூர் தொகுதிக்கு வரி விலக்கு அளித்து அங்கே இருக்கின்ற, கடைகளில் விற்கப்படுகின்ற பொருள்களுக்கு எல்லாம் எந்த வரியும் இல்லை என்ற நிலையை நம்முடைய அரசு அறிவிக்குமாறு கேட்டு நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 5-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் வணிக வரித் துறையின் மானியக் கோரிக்கைகளிலே என்னுடைய கருத்துகளை சொல்வதற்கு வாய்ப்பு



அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நாடு, முன்னேற்றப்பாதைக்குச் செல்வதற்கு முக்கியமாக விளங்குவது தொழிலும், உழவும் என்கின்ற ஒரு காரணத்தினால் தொழில் துறையிலே தமிழகத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தோடு அரசு பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கிறது.

குறிப்பாகச் சென்னையிலும் நாங்குநேரியிலும் உயர் தொழில் நுட்பப் பூங்காக்களை அமைத்து, தொழில் நுட்பப் பூங்காக்களின் மூலம் தொழில் துறையிலே தமிழகம் சீரோடு இருக்க வேண்டுமென்று சிறந்த முயற்சிகளை அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது. ஆனால் மதுரை என்பது தென் மாவட்டங்களிலே உள்ள மாவட்டங்களுக்கு எல்லாம் தலைமையிடமாக இருக்கின்ற ஓர் இடம். ஏறக்குறைய பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம், அதிலே இப்போது 6 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு இருந்தாலும்கூட ஒரு நேரத்திலே அந்த 6 மாவட்டத்தின் ஒட்டுமொத்த தலைநகரமாக இருந்தது மதுரை மாவட்டம்தான். அந்த மதுரை மாவட்டத்தைச் சுற்றியுள்ள இராமநாதபுரம் மாவட்டம் போன்றவை எல்லாம் மிகுந்த வறட்சியால் பாதிக்கப்பட்டு அங்கு தொழிலே இல்லாத நிலை இருக்கின்ற காரணத்தினால், மதுரையைச் சுற்றி ஒரு தொழில் நுட்பப் பூங்கா அமைக்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசுகூட விமான நிலையத்தை சர்வதேச அளவுக்கு உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதைக் கூட நாம் கேள்விப்பட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே, மதுரையில் அப்படிப்பட்ட ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல இந்தத் தொழில்துறையிலே நாம் புதிய முயற்சிகளை எடுத்துக்கொண்டாலும்கூட பழைய தொழில்களாக இருக்கின்ற பஞ்சாலைத் தொழிலும், சர்க்கரைத் தொழிலும் சிறிது நசிந்துகொண்டு இருக்கிறது என்பதை அரசு அறியும் என்று நான் கருதுகிறேன். எனவே விவசாயிகள் பயன் பெறுகின்ற அளவில் இருக்கின்ற இந்தச் சர்க்கரைத் தொழில் இப்போது மிகுந்த பாதிப்பான நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய பகுதியிலே விளைகின்ற கரும்பை எல்லாம் ஆலைகளுக்குக் கொடுத்தவர்கள்—

ஒரு பக்கம் விலையை 1000 ரூபாய் டன் ஒன்றுக்கு என்று உயர்த்தித் தரவேண்டும் என்கிற கோரிக்கை வைத்தாலும்கூட கடந்த 6 மாத காலமாக அவர்கள் உற்பத்தி செய்து கரும்பை கொடுத்துவிட்டு—பணம் பெற முடியவில்லை என்கிற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. இராமநாதபுரம் அயங்காநல்லூர் போன்ற சர்க்கரை ஆலைகளில் எல்லாம் அந்த விவசாயிகளுக்குப் பணம் சென்று அடையவில்லை என்பதைத் தங்களிடத்திலேகூட சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொடுத்து, தாங்கள்கூட அது கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிப்புக் கொடுத்தும்கூட இதுவரைக்கும் அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லை. எனவே அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய அந்தக் கரும்பு பாக்கிப் பணத்தை எல்லாம் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைத் தொழிலாக இருக்கின்ற கல் உடைக்கும் தொழிலாளர்கள் பல்வேறு இடங்களிலே இருக்கிறார்கள், தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக அவர்கள் செய்கின்ற அந்தத் தொழிலுக்கு உரிய குவாரிகளை ஏலம் விட முடியவில்லை என்கிற நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதை ஏலத்திற்குக் கொண்டு வந்தால் அரசுக்குக்கூட மிகப் பெரிய வருமானம் வருகின்ற நிலை இருக்கும். குறிப்பாக நமது சென்னையை ஒட்டிய திரிசூலம் பகுதியில்கூட பல இலட்சக்கணக்கானவர்கள் அந்தத் தொழிலை நம்பி இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தொழில் வழங்குகின்ற முறையில் தற்காலிகமாகவாவது ஒரு அனுமதியைத் தந்து அந்தத் தொழிலைத் துவக்குவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-45

வரி விதிப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு, திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதற்கு, மாநிலத்திற்குப் பொருளாதாரம் வேண்டுமென்பது நாமெல்லாம் ஏற்றுக்கொள்கின்ற ஒன்றுதான் என்று சொன்னாலும்கூட, காலையிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சில வரிச் சலுகைகளை நெசவாளர்களுக்கு அறிவிக்கின்ற நேரத்திலே, இந்த அரசு தொழிலாளர்கள்மீதும், விவசாயிகள்மீதும் மிகுந்த பற்றுக்கொண்ட அரசு



என்பதை எடுத்துச் சொன்னார்கள். எனவே, அந்த விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு அரிசி, கோதுமை போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு நேரடியாக வரி விதிக்கப்படவில்லை என்று இங்கே குறிப்பிட்டாலும்கூட அந்த ஆலை அதிபர்களிடத்திலேதான் வரி விதிக்கிறோம் என்று சொன்னாலும்கூட, அவர்கள் அரிசியாக்கி விற்கின்ற நேரத்திலே, அதை வாங்குகின்ற மக்கள்தான் அதை வாங்கும் நுகர்வோர்தான் அந்த வரியைக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது என்கின்ற நிலையில், அந்த வரி விதிப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலக் கரும்பிலிருந்து வெல்லம் தயார் செய்கின்றார்கள். வெல்லத்திற்கு 4 சதவீத வரி போடப்பட்டிருக்கிறது. அதிலே பெரும்பகுதி நமது தமிழகத்தைக் காட்டிலும் வெளிமாநிலங்களிலும், கேரளா போன்ற அண்டை மாநிலங்களிலும்தான் விற்கப்படுகின்றன. எனவே, அந்த வரியைக் குறைக்க முடியவில்லை என்று சொன்னாலும் கூட, உள்நாட்டில் விற்கின்ற அந்த வெல்லத்திற்காவது வரி விலக்கு அளிக்க வேண்டும். வெளிமாநிலங்களுக்கு விற்கின்ற அளவிலே 4 சதவீத வரியை 2 சதவீதமாகக் குறைக்கலாம் என்கின்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள்.

அதுபோல, நமது தென் பகுதியிலே, உங்களுக்கும் சேர்த்துத்தான், சிவகாசி போன்ற இடங்களிலே தீப்பெட்டித் தொழிலை நம்பித்தான் பல பேர்—பல குடும்பங்கள், இலட்சக்கணக்கானவர்கள்—பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீப்பெட்டித் தொழிலிலே 80 சதவீதம் பேர் நமது தென் மாவட்டங்களிலே இருக்கின்றவர்கள்தான் வேலை செய்கின்றார்கள். அவர்கள் உபயோகிக்கின்ற மூலப்பொருளாகிய Potassium Chloride-க்கு நுழைவு வரி 12 சதவீதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி விதிக்கப்படுமானால், அவர்கள் முழுமையாக அந்தத் தொழிலைச் செய்ய முடியாது பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற நிலை இருக்கிறது. எனவே, அதையும் இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று, கூறி, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் காலத்து வரலாறே, வளர் தமிழகம் போற்றும் பொக்கிஷமே, தென்னகத்துக் குலவிளக்கே, தென்திசை தெய்வமே, எங்களை வாழ வைக்கும் அன்னையே, நான்காம் தமிழே, நடமாடும் ஆலயமே, கழகத்தின் கடைக்கோடித் தொண்டனாய் இருந்த என்னை, கழகத்தின் ஒன்றியச் செயலாளராய், ஊராட்சியினுடைய துணைத் தலைவராய், கழக மாவட்டச் செயலாளராய், சட்டமன்ற உறுப்பினராய், மட்டுமின்றி அமைச்சராகவும் ஆக்கி, தங்கள் குருகுல குடும்பத்தில் விளக்கேற்றி வைத்த எங்கள் தாயின் பொற்பாத மலர்களை வணங்குகிறேன்.

தங்களுக்கு என்னுடைய வாழ்நாள் முழுவதும் நன்றி செலுத்துவது மட்டுமல்லாமல், என் குடும்பத்தின் நன்றி மட்டுமல்லாமல், என் வழி வரும் சந்ததியர்கள் அத்தனை பேரும் தங்களை நன்றியோடு நினைத்து வணங்கும்.

அடுக்கடுக்கான வழக்குகள்; அத்தனையும் எங்கள் அம்மாவையும், அவரது சீரிய தலைமையிலான இந்த இயக்கத்தையும் அழிக்கத் திட்டமிட்ட பொய் வழக்குகள். ஆட்சிக்கு வந்ததும் அரசு வேலைகளைப் புறந்தள்ளிவிட்டு, எங்கள் மாண்புமிகு அம்மாவை அழிப்பதையே முழுமுதல் பணியாகக் கொண்டிருந்த கடந்த கால ஆட்சியாளர்களின் சூழ்ச்சி வலையில் சிக்கி, விசாரணை, குறுக்கு விசாரணை, சோதனை என்று பழி வாங்கும் படலத்தின் உச்சகட்டக் காட்சிகள் அரங்கேறியபோதுதான், நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தது நாடு. அம்மா, முகஸ்துதிக்காகச் சொல்லவில்லை. அப்படியொரு ஹிட்லர் காலத்து நெருக்கடியிலும், இந்த இயக்கத்தை மக்கள் ஆதரவு என்ற மகத்தான சக்தியுடன் வெற்றிப் பாதையில் இட்டுச் சென்ற மாபெரும் சரித்திரத்தைப் படைத்த வரலாறு உங்களைத் தவிர வேறு யாருக்கும், இந்த உலகத்தில் கிடைத்ததில்லை.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், கட்சித் தலைமையையே முன்னிறுத்த முடியாமல் சதி செய்த போதிலும், மக்கள் உங்கள் பக்கம் என்பதை நிரூபித்துக் காட்டிய வரலாற்றையும் நீங்கள் படைத்துக் காட்டினீர்கள். அதோடு நிற்கவில்லை உங்கள் சரித்திரப் புரட்சி. மக்கள் தீர்ப்பளித்தபடி உங்களால் ஆட்சி நாற்காலியில் அமர முடியாத நிலையை உருவாக்கிய போதிலும், அசரா உங்கள் தலைமைக்கு உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் பரிசு தந்தார்கள். கோட்டை மட்டுமல்ல, குக்கிராமங்களும் உங்கள் பக்கம் என்பதை



நிரூபித்துக் காட்டிய வீர வரலாறு, வெற்றி வரலாற்றைத் தமிழக அரசியலில் எழுதிக் காட்டியவர் எங்கள் அம்மா. உங்களைத் தவிர வேறு யாரும் இப்படிச் சரித்திரம் படைத்ததில்லை; படைக்கப் போவதும் இல்லை. ஆனாலும், கண் கெட்டவர்களுக்குப் புத்தியில் உரைக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் என்று அடுத்தடுத்து வந்த தேர்தல்களை எல்லாம் வென்று, வெற்றி எனும் தேரில் நீங்கள் வீர உலா வருவதைக் காணப் பொறுக்காதவர்கள், ஆண்டிப்பட்டியில் உங்களைக் களம் இறங்க விட முடியாமல் தடுக்க நினைத்த முயற்சிகளையும் கண்டு பொடியாக்கிக் காட்டினீர்கள்.

பிற்பகல் 5-50

இத்தனைக்கும் உங்கள் பக்கமே மக்கள் கூட்டம் என்பதைத் தெரிந்து இருந்த கட்சியினர், உண்மையிலே அவர்கள் மக்களுக்காகக் கட்சி நடத்துவதாக இருந்திருந்தால், மக்கள் தீர்ப்பை மதித்து, கடந்த கால இந்தியப் பிரதமராக இருந்த திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் வெற்றி பெறுவதற்கு ஆந்திர முதல்வராக இருந்த திரு. என்.டி. ராமாராவ் அவர்கள் வழி ஏற்படுத்தித் தந்ததைப் போல, தமிழகத்தில் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதல்வராக வருவதற்கு தேர்தல் களத்தில் அன்றைக்கு இருந்த அரசியல் தலைவர்கள் காத்த அரசியல் பண்பாட்டைப் போல இவர்களும் ஆண்டிப்பட்டியில் நடந்து கொண்டிருக்க வேண்டும். அரசியல் வரலாறு அறியாதவர்கள் என்று அடுத்தவர்களைப் பார்த்து அடிக்கடி கூறுபவர்கள் இந்த வரலாற்றை மட்டும் மறந்துபோனது ஏன் என்பதுதான் நாட்டு மக்கள் எழுப்பும் கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)

அன்னைத் தமிழாய், ஆதிபராசக்தியின் திருவடிவாய் வாழ்ந்து கொண்டிருக்கிற எங்கள் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களைப் பணிந்து, பாத மலர்களை வணங்கி இந்த தொழில் துறை மானியக் கோரிக்கையையும், வணிக வரித் துறை மானியக் கோரிக்கையையும் சமர்ப்பித்து, பதிலுரையை இந்த மாமன்றத்தில் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் தொழில் துறையை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்ற அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் ஆளுநர் உரையில் கூறியுள்ளபடி இந்த அரசினால் பல சலுகைகளை வழங்குவதன் மூலம் தொழில் வளர்ச்சியும், வருவாய் வளர்ச்சியும் ஒருசேர அமையும் நிலை உருவாக்கப்படும் என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலையாய குறிக்கோளாகிய, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்குவது என்ற எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் தொழில் துறையின் கொள்கைகளும், செயல் திட்டங்களும் வரையப்பட்டு இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்திலுள்ள பல்வேறு வளங்களையும், மனித ஆற்றலையும் முழுமையாகப் பயன்படுத்தி, எழுச்சிமிக்க தொழில் முன்னேற்றத்தை உருவாக்குவதன் மூலம், தமிழக மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது, வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, வேளாண்மை போன்ற பிற துறைகளுக்கு உறுதுணையாக இருப்பது, இத்துறையின் தொலைநோக்குக் கொள்கையாகும். இவ்வாறு தொழில் துறையில் தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதில், இத்துறை ஈடுபடும். தொழில் துறையில் முன்னேற்றம் காணவும், அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் சிறப்பாக இயங்கவும், முதலீட்டாளர்களிடையே நட்புமிக்க தொழில் சூழ்நிலை அமைய வேண்டுமென்றும் அரசு கருதுகிறது. இத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஏற்ற தொழில் கொள்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு உருவாக்கி வருகிறது.

தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவது, இயங்கி வரும் தொழிற்சாலைகளைத் தங்குதடையின்றி செயல்படுத்துவது, தமிழகத்தில் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு முன்னிலையில் உள்ள துணி, இரசாயனம், தோல் போன்ற துறைகளை வலுப்படுத்துவது ஆகியவற்றிற்கு வழிவகைகள் வகுக்கப்படும்.

தொழில் துறை முன்னேற்றத்திற்கு இன்றியமையாத அடிப்படை வசதிகளை சர்வதேச நெறிகள் அடிப்படையில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய தொழிற்சாலைகள் தொடங்கவும், செயல்படவும் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள், படிவங்கள் போன்ற செயல்பாட்டு நெறிமுறைகள் சீரமைக்கப்பட்டு, எளிதான முறையில் செயல்பட வகை செய்யப்பட்டுள்ளது.



சென்ற முறை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் அமைந்த அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக ஃபோர்டு, ஹூண்டாய் போன்ற பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. இவற்றின் காரணமாகத் தமிழகம் மோட்டார் கார் உற்பத்தியில் முதல் மாநிலமாகத் திகழ்கிறது. கடந்த 5 ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற பெரிய அளவிலான உற்பத்தியில் ஈடுபடும் தொழிற்சாலைகள் அமையும் சூழ்நிலை உருவாக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்தகால ஆட்சியாளர்கள் தொழில் துறையை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றிவிட்டோம் என்று சூளுரைத்தார்கள். அவர்களுடைய அப்பட்டமான ** வெட்ட வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. ** என்பதைப்போல கடந்த கால ஆட்சி நடந்து முடிந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், ** என்பதை உண்மைக்கு மாறான என்று மாற்றலாம்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறேன். அதை நீக்கிவிடலாம்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் வெளியிடும் அறிக்கையின்படி, நமது மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் 1991-1996-ல் தமிழகத்தில் மொத்த முதலீடு 90,650 கோடி ரூபாய் ஆகும். ஆனால் 1996-2001 வரையிலான தி.மு.க. ஆட்சியில் முதலீடு ரூ.67,024 கோடி மட்டுமேயாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியைவிட இது ரூ.23,626 கோடி குறைவாகும்.

இதனைக் கருத்தில்கொள்ளும்போது தி.மு.க. ஆட்சியில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் தேக்க நிலை அடைந்துள்ளது என்பது தெளிவாகும்.

பிற்பகல் 5-55

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் கடந்த ஆட்சியில் ஆகஸ்ட் 1991-க்கும் ஏப்ரல் 1996-க்கும் இடைப்பட்ட காலத்தில்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ரூ.29,709 கோடிக்கு புதிய முதலீட்டிற்கான தொழில் அறிக்கை பதியப்பட்டு உள்ளது. ஆனால் 1996-2001 தி.மு.க. ஆட்சியில் ரூ.4,067 கோடி குறைவாக ரூ.25,642 கோடிக்கு மட்டுமே புதிய முதலீடுகளுக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தி.மு.க. ஆட்சியில் தனியார் முதலீட்டின் வேகம் குறைந்துள்ளது என்பது தெளிவுபடுகிறது.

இதேபோன்று தொழில் உரிமம் பெறுவதற்கு, 1991-1996-ல் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் கடந்த கால ஆட்சியில் ரூ.7,756 கோடிக்கு தொழில் தொடங்க உரிமம் பெறப்பட்டன. ஆனால், 1996-2001 வரையிலான தி.மு.க. ஆட்சியில், ரூ.3101 கோடிக்கு மட்டுமே உரிமம் பெறப்பட்டது. இது ரூ.4,655 கோடி குறைவாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அடைந்த முன்னேற்றத்தில் பாதியைக்கூட, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எட்டவில்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த கால தி.மு.க. ஆட்சியில் திட்டங்கள் அனைத்தும் ஏட்டளவிலேதான் இருந்தன. செயல் அளவில் செய்யும் திட்டங்கள் எதுவும் இல்லை. கடந்த 1996-2001 வருடத்திய திரு. கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில், தமிழக தொழில் துறையைப் பொறுத்தவரையில் மிகவும் கவலை அளிக்கக்கூடிய விஷயம், அறிவிக்கப்பட்ட தொழில் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படாததுதான். பெரிய முதலீடுகளைக் கொண்டு பல்வேறு பெரிய தொழிற்சாலைகள் வெறும் அறிவிப்புகளாகவும், திட்ட அறிக்கைகளாகவும் ஏட்டளவில் மட்டுமே இருந்தனவே தவிர, அவற்றிற்கு உண்மையிலேயே முதலீடுகள் பெறப்பட்டு, திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் ஒட்டுமொத்த முதலீடான ரூ.1,60,804 கோடியில், வெறும் 21 சதவீதம் அளவிற்கே அதாவது சுமார் ரூ.34,000 கோடி அளவிற்கு மட்டும் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கப்பட்டுள்ளது என்பதற்கு கோப்புகளில் ஆதாரங்கள் உள்ளன. மீதமுள்ள 79 சதவீத திட்டங்கள் வெறும் அறிக்கைகளாகவும், திட்ட அறிவிப்புகளாகவும் மட்டுமே நின்றுவிட்டன. திரு. கருணாநிதி கூறியிருப்பதுபோல அவரது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் ரூ.1,60,000 கோடி அளவிற்கு முதலீடுகள் வந்து குவிந்திருக்குமேயானால் தமிழ்நாட்டின் பொருளாதார நிலை எங்கோ சென்றிருக்கும். மேலும் அரசுக்கு இந்தத் தொழில்கள் மூலம் கிடைக்கும் பல்வேறு வரிகள் குறிப்பாக வணிக வரி மிகவும் அதிகமாக



உயர்ந்திருக்கும். ஆனால், அவரது ஆட்சிக் காலத்தில் இவையெல்லாம் இல்லாமல் பற்றாக்குறை பட்ஜெட்டையே தொடர்ந்து போட்டு அரசாங்க கஜானா காலியான நிலை உருவானது. இதிலிருந்து தெரியவில்லையா திரு. கருணாநிதி ஆட்சிக் காலத்தில் தொழில் துறையில் செய்யப்பட்ட தனியார் முதலீடுகள் குறைவு என்பது!

எடுத்துக்காட்டாக, அன்றைய தி.மு. கழகத்தினுடைய அரசு 2000 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்ய ஏதுவாக, 20 குறுகிய கால மின் உற்பத்தித் திட்டங்கள் துவக்குவதாக அறிவிப்புச் செய்து மிகப் பெரிய விளம்பரத்தைத் தேடிக் கொண்டது.

ஆனால், அந்த 20 மின் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில், சிறிதளவு அக்கறைகூடக் காட்டாமல் கடந்த ஐந்தாண்டு காலத்தில் 2 மின் திட்டங்கள் மட்டுமே உண்மையில் துவக்கப்பட்டன. மேலும் மிகப் பெரிய அளவிலே செயல்படுத்தப் போவதாக திரு. கருணாநிதியின் தி.மு.க. அரசால் பறைசாற்றிக் கொள்ளப்பட்ட பல்வேறு இதர திட்டங்களும் இதேபோன்று கிடப்பில் போடப்பட்டன. ஆனால், இவற்றை எல்லாம் செயல்படுத்தப் போவதாகவும், அவற்றிற்கான முதலீடுகள் பெறப்பட்டதாகவும் அன்றைய தி.மு.க. அரசு விளம்பரம் மட்டும் தேடிக்கொண்டு மக்களை ஏமாற்றியது. எடுத்துக்காட்டாக, ரூ.4,500 கோடி மதிப்புள்ள வீடியோகான் வடசென்னை அனல் மின் உற்பத்தித் திட்டம், ரூ.8,000 கோடி மதிப்புள்ள ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் உற்பத்தித் திட்டம், ரூ.9,500 கோடி மதிப்புள்ள இயற்கை எரிவாயு சார்ந்த மின் உற்பத்தித் திட்டம், ரூ.10,000 கோடி மதிப்புள்ள நாகப்பட்டினம் பெட்ரோலிய சுத்திகரிப்புத் தொழிற்சாலை, டிட்கோ நிறுவனத் தொடர்புடன்கூடிய நாப்தா பகுப்புத் தொழிற்சாலை ஆகியவையும், இன்னும் இதுபோன்று செயல்படுத்தப்போவதாக அறிவிக்கப்பட்டு, முறையான முதலீடுகள் பெறப்படாமல் எந்தவிதத் திட்டச் செயல்பாடும் இன்றி, வெறும் ஏட்டளவில் மட்டுமே இருந்த திட்டங்கள் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏராளம். சரியான தொடர் நடவடிக்கை அன்றைய தி.மு.க. அரசினால் எடுக்கப்படாத காரணத்தால், தற்போது உற்பத்தி நடக்கின்ற அளவுக்குப் பெரிய தொழில் திட்டங்கள் எவையும் தமிழ்நாட்டில் கொண்டுவரப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் St. Gobain நிறுவனத்தின் கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றைத் தவிர வேறு எந்தத் தொழில் நிறுவனங்களும் தொடங்கப்படவில்லை. போர்டு மற்றும் ஹூண்டாய் கார்

நிறுவனங்கள் தங்களது தி.மு.க. ஆட்சியில்தான் கொண்டு வரப்பட்டதாகப் பறைசாற்றிக் கொண்டாலும், அவை சென்னையில் துவக்கப்படுவதற்கான முழு முயற்சியையும், தொடர் நடவடிக்கையையும் 1995-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சராக இருந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் எடுத்தார்கள் என்பது மறைக்க முடியாத உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-00

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு அறிவிப்புகளோடு மட்டும் நின்றுவிடாமல், திட்டங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்து, அவற்றின் பயன்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில், முனைப்பாக உள்ளது. உண்மையாகவே தமிழகம் முதன்மை மாநிலமாக உருவாக, ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் முன்னிலையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு சென்னைக்கு அருகில் சிறுசேரியில் செயல்படுத்தப்பட்டு வரும் 'சான்ஸ்சா இந்தியா லிமிடெட்' என்ற இங்கிலாந்து கம்பெனியின் மென்பொருள் தயாரிப்பு மையம் ஆகும். தகவல் தொழில்நுட்பத் துறையில் தேக்க நிலை காணப்பட்டபோதிலும், 234 கோடி ரூபாய் செலவில் 5500-க்கு மேற்பட்ட மென்பொருள் தொழில்நுட்ப வல்லுநர்களைப் பணியில் இந்த நிறுவனம் ஈடுபடுத்தும். இந்த நிறுவனத்திற்குத் தேவையான அனைத்து அரசு அனுமதிகளும் துரிதமாக வழங்கப்பட்டதனால் வரும் 2003 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முதல் கட்டப் பணிகளை முடிக்கும்.

மேலும், அதே பகுதியில் செக்கிம் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு, சிப்காட் மூலம் 40 ஏக்கர் நிலம் வழங்கப்பட உள்ளது. இந்நிறுவனம், அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டது. ரூ. 80 கோடி செலவில் புற்றுநோய்க்கான மருந்துகள் தயாரிக்கும் திட்டத்தை இந்நிறுவனம் விரைவில் தொடங்க உள்ளது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்படி பெருந்துறை சிப்காட் தொழில் வளாகத்தில் ஒரு தோல் பதனிடும் பூங்கா நிறுவ முடிவு செய்யப்பட்டு, 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்துறை லெதர் இன்டஸ்ட்ரீஸ் எகோ



செக்யூரிட்டி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் மூலம், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனையுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும், விராளி ஃபேஷன்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு இதே பூங்காவில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு நூல் மற்றும் துணி ஆலை நிறுவுவதற்கு 25 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இத்திட்டப் பணிகள் வரும் செப்டம்பர் 2002-ல் தொடங்கப்படும்.

தெற்கு ஆசிய நாடுகளிலேயே சிறந்த இடமாகத் தமிழகம் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, உலக வங்கியினுடைய கிளை அலுவலகம் சென்னையில் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கியும், ஏ.பி.என். ஆம்ரோ வங்கியும் தங்களது கிளைகளில் கணக்குகளைத் தொகுத்துப் பராமரிக்கும் அலுவலகப் பணி பிரிவுகளை சென்னையில் சமீபத்தில் தொடங்கியுள்ளன.

எல்.ஜி. மின்னணு நிறுவனம் போன்ற உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தமிழகத்திலுள்ள உகந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தொழில் தொடங்க முன்வந்துள்ளன.

இத்தகைய தனியார் முயற்சிகளின் இடையே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம், அரசும் நேரடியாகப் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தரமணியில் உயிர் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை அனைவரும் அறிவீர். கார்னெல் பல்கலைக்கழகத்துடன் செய்யப்பட்ட தொழில்நுட்ப ஒப்பந்தத்தின் அடிப்படையில், பூங்கா அமைக்கப்படுகிறது. இதற்காக 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, பூங்கா அமைப்பதற்காக வடிவமைப்புகள் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்பூங்கா வரும் ஆண்டு முழுமையாக அமைக்கப்படும். இரண்டு லட்சம் சதுர அடி கட்டட வசதி கொண்ட இப்பூங்காவில், 1000 கோடி ரூபாய் முதலீடு எதிர்பார்க்கப்படுகிறது. 1500 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர். தமிழகத்தில் உயிர் தொழில்நுட்பவியல் தொழில் முன்னேற்றத்திற்குப் புதிய வேகம் அளிக்கப்படும்.

தனியார் துறைச் செயல்பாட்டில் மட்டுமின்றி, அரசு பொதுத் துறைச் செயல்பாட்டிலும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியில் சிறப்பான நிலை இருந்ததையும் அது அடுத்து வந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் களையிழந்ததையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

*1991-1996* ஆகிய ஐந்து ஆண்டு கால மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் *123.82* கோடி ரூபாயை திட்டங்களிலே முதலீடு செய்தது. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியிலே *113* கோடி ரூபாய் மட்டுமே முதலீடு செய்யப்பட்டது. இந்நிறுவனத்தின் முதலீடுகளின் அடிப்படையில் *22* திட்டங்கள் *1132* கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, *1991-1996*-லே தொடங்கப்பட்டன. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் *17* திட்டங்கள் *614* கோடி ரூபாய் முதலீட்டில் மட்டுமே தொடங்கப்பட்டன.

இதேபோன்று தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே *1991-1996* ஆண்டுகளில் *364* நிறுவனத்திற்கு *243* கோடி ரூபாய் நீண்ட காலக் கடனாக வழங்கப்பட்டது. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்தக் கழகம் *140* நிறுவனங்களுக்கு *158* கோடி ரூபாய் மட்டுமே கடன் வழங்கியது. மேலும் அம்மா ஆட்சிக் காலத்தில் மானியமாக வழங்கியுள்ள தொகை ரூ.*44.13* கோடி. ஆனால் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அது ரூ.*35.96* கோடியாகக் குறைந்துள்ளது.

*பிற்பகல் 6-05*

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலமான *1991-1996*ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் ரூபாய் *1793* கோடி கடன் அனுமதிக்கப்பட்டது. அதில் *1058* கோடி ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், *1996-2001* ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலே ரூபாய் *1375* கோடி மட்டுமே அனுமதிக்கப்பட்டது. அதாவது ஐந்தாண்டுகளில் ரூ.*400* கோடி குறைவாகக் கடன் அனுமதிக்கப்பட்டது. கடன் வழங்கப்பட்ட தொகை ரூபாய் *1028* கோடியாகும்.

சிறு தொழில்கள் முதலீட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்ட மூலதன மானியம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்



*1991-1996* ஆண்டுகளில் *5,296* பயனாளிகளுக்கு ரூபாய் *159* கோடியாக இருந்தது. இந்தத் தொகை கடந்த தி.மு.க. ஆட்சியில் ரூபாய் *87* கோடியாகக் குறைந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த கால ஆட்சியில் இந்நிறுவனத்தின் ரொக்க லாபம் ரூபாய் *125* கோடியாகும். ஆனால், தி.மு.க. ஆட்சியில் ரொக்க லாபம் வெறும் ரூபாய் *28* கோடியேயாகும். சுமார் ரூபாய் *97* கோடி இலாபம் குறைந்துள்ளது.

சோளக் கொல்லையில் மாடு மேய்ந்தால், சொக்கனுக்கு என்ன என்பதைப் போல, தமிழகத்தினுடைய தொழில் முன்னேற்றத்திற்கு வித்திடும் இந்த மூன்று முக்கிய வளர்ச்சிக் கழகங்களின் செயல்பாட்டில் வீழ்ச்சி ஏற்பட்ட நிலையில் தமிழகம் தொழில் துறையில் முதன்மை மாநிலமாக ஆக்கப்பட்டது எனக் கடந்த தி.மு.க. ஆட்சியினர் கூறுவதிலே அடிப்படை ஏதும் இல்லை என்பதனை இந்தப் புள்ளி விவரங்களுடன் எடுத்துக்காட்டுகின்றேன்.

தமிழ்நாடு கனிம நிறுவனம்; இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஐந்தாண்டு கால ஆட்சியில் தமிழ்நாடு கனிம நிறுவனம் ரூபாய் *177* கோடிக்கு விற்பனை செய்தது. *72* கோடி ரூபாய் நிகர இலாபம் கிட்டியது. ஆனால், தி.மு.க. அரசின் ஐந்தாண்டு கால ஆட்சியில் ரூபாய் *258.40* கோடிக்கு விற்பனை செய்தும் மிக மிகக் குறைந்த நிகர இலாபமான ரூபாய் *21.56* கோடி மட்டுமே அடைந்துள்ளது என்பதனை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இந்நிறுவனத்திற்கு வர வேண்டிய இலாபங்கள் சுயலாப நோக்கத்துடன் கடந்த தி.மு.க. ஆட்சியாளர்கள் செயல்பட்டமையால் எங்கு சென்றது என்பதனைத் தமிழகமே அறியும். இந்த ஓர் ஆண்டில் மட்டும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் டாமின் நிறுவனம் ரூபாய் *67.05* கோடிக்கு விற்பனை செய்து ரூபாய் *12.08* கோடி மொத்த இலாபம் ஈட்டியது. கடந்த *8* ஆண்டுகளில் இதுதான் உயர்ந்தபட்ச இலாபம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் *133* விழுக்காடு கூடுதல் இலாபம் ஈட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

*2001-2002*-ல் தமிழ்நாடு கனிம நிறுவனம் சிவகங்கை கிராபைட் தொழிற்சாலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்பாக இயக்கியதால் கடந்த ஆண்டைவிட *1,310* மெட்ரிக் டன் அதிகமாக உற்பத்தி செய்து ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டுதான் முதன் முறையாக ரூபாய் 5 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது என்பதைப் பெருமையோடு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

டாமின் நிறுவனம் நிறுவப்பட்ட ஆண்டிலிருந்து முதன் முறையாக 2001-2002-ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் உயர்ரக கனிமங்களின் மொத்த விற்பனை இதுவரை இல்லாத சாதனை அளவான 2,08,680 மெட்ரிக் டன் அளவை எட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய சீரிய கண்காணிப்பில் கூடுதலான இலாபத்தில் இயங்கி வருகிறது. இவ்வாண்டு இந்நிறுவனம் அரசுக்குக் கூடுதலாக ராயல்டி தொகையாக ஒரு கோடியே 50 இலட்சம் வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தொழில் துறையைப் பொறுத்தவரையில் வருகின்ற காலங்களில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தை ஒரு முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டுமென்ற முனைப்போடு பணியாற்றிக்கொண்டிருக்கிற இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆலோசனையோடு இன்று தொழில் துறை குறித்த புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

தேனி மாவட்டத்தில் திராட்சை அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இவற்றை மூலப் பொருளாகக் கொண்டு மது தயாரிக்கும் திட்டத்தை வெளிநாட்டுத் தொழில் முனைவோர் மூலம் செயல்படுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-10

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டு முயற்சியாக தருமபுரி மாவட்டத்தில் நூல் மற்றும் துணி தயாரிக்கும் புதிய தனியார் தொழிற்சாலை 377 கோடி ரூபாய் செலவில் தொடங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியுடன் கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டையில் கோழி இறைச்சி பதப்படுத்தப்படும்



தனியார் தொழிற்சாலை ரூ.11 கோடி செலவில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து இவ்வாண்டு செயல்படுத்தப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் துவங்கப்பட்ட தமிழ்நாடு செய்தித் தாள் நிறுவனம் இவ்வாண்டு 65 கோடி ரூபாய் இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் சிறப்பாகச் செயல்படுவதால் உற்பத்தியை 50,000 டன் கூட்டவும், மேலும் இலாபம் கூடுதலாக ஈட்டும் வகையில் சிறப்புக் காகிதங்கள் தயாரிக்கவும் 90 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கத் திட்டம் மேற்கொள்ளவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு கனிம வள நிறுவனம் இவ்வாண்டும் சிறப்பாகச் செயல்பட்டு 7½ கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் டைல்ஸ் தயாரிக்க 2 கோடி ரூபாய் முதலீட்டில் ஒரு விரிவாக்கத் திட்டத்தை மேற்கொள்ள மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அனுமதியை வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொழில் துறையில் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளால் தமிழ்நாடு வெடி மருந்து நிறுவனம் நலிவுற்ற நிலையில் இருந்து நீங்கி, தற்போது புதிதாக எண்ணெய் கலந்த வெடிபொருள் தயாரிக்கும் புதிய திட்டத்தை ரூ.10 கோடி செலவில் இவ்வாண்டில் செயல்படுத்த உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய ஆணைப்படி தரமணியில் அமையவிருக்கும் உயிர் தொழில்நுட்பப் பூங்காவில், சிங்கப்பூர் மரபணு மையத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள தமிழ்நாடு தொழில் நிறுவனம் இணைந்து அடிப்படை ஆராய்ச்சிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அறிவியல் நகரம் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசால் தரமணியில் அமைக்கப்படுகிறது. எம்.ஐ.டி. லேப் இந்தியா நிறுவனத்தின் ஆராய்ச்சி மையத்தை இங்கு அமைக்க இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு துரித நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. செ.ம. வேலுசாமி] [2002 மே 7

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியுடன் நாங்குநேரியில் சிறப்புப் பொருளாதார மையம் அமைக்கப்படுவதுடன், எண்ணூர் துறைமுகம் போன்ற வசதிகளை மையமாகக் கொண்டு தோல் பொருட்கள், துணி ஆயத்த ஆடைகள் போன்ற பொருள்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும். சென்னை அருகிலும், திருப்பூர், பெருந்துறை போன்ற மண்டலங்களிலும் ஆடைதயாரிக்கும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வணிக வரித்துறை மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில்

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.
கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி."

என்று வள்ளுவர் கூறியுள்ளது போல, கொடை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகியவற்றை உடைய அரசன் போன்று, இப்போது தமிழகத்தைக் காத்து வழி நடத்திச் செல்கின்ற எங்கள் இதயதெய்வம், தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி வணிக வரித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி இதயதெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய தலைமையில் செம்மையோடு இலட்சியப் பாதையை நோக்கி வணிக வரித் துறை செயல்பட்டு வருகின்றது. துறைகள் வளர்ச்சி அடைந்து, அதனால் மக்களுக்குப் பல நன்மைகள் சென்றடைவதே ஆட்சியாளர்களின் தலையாய கடமையாகும். இதற்கேற்ப, நமது இதயதெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய தலைமையில் உள்ள ஆட்சியில், வணிக வரித் துறை அயராது உழைத்து, மீண்டும் புத்துணர்ச்சி பெற்று, புது வேகத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.



2002 மே 7] [திரு. செ.ம. வேலுசாமி]

வணிக வரித் துறை, தமிழக அரசினுடைய வருவாயில் 66 விழுக்காட்டினை ஈட்டித் தந்து, அரசின் பொதுநலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் முன்னோடியாகச் செயல்படுகிறது.

வரி வசூல், தொழில் வளர்ச்சியில் தேக்க நிலை, பொருளாதாரப் பின்னடைவு என்பது போன்ற இடர்ப்பாடுகளையெல்லாம் களைந்து 2001-2002-ஆம் ஆண்டில் 8904.68 கோடி ரூபாய் மொத்த வருவாய் ஈட்டப்பட்டது. இது கடந்த தி.மு.க. ஆட்சியில் ஈட்டப்பட்ட வருவாயினைக் காட்டிலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ரூ.241 கோடி அதிகமாகும். இந்த மொத்த வருவாயானது, கூடுதல் வரி, உபரி வரிச் சட்டங்கள் உள்ளிட்ட தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூ.7541.36 கோடியினையும், மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூ.903.72 கோடியினையும், கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் ரூபாய் 68.31 கோடியினையும், மோட்டார் வாகனங்கள் நுழைவு வரிச் சட்டத்தின்கீழ் ரூபாய் 296.66 கோடியினையும், ஆடம்பர வரிச் சட்டத்தின்கீழ் ரூபாய் 89.03 கோடியினையும் மற்றும் குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின்கீழ் ரூபாய் 5.60 கோடியினையும் கொண்டதாகும்.

பிற்பகல் 6-15

வரி நிலுவை. வணிக வரி நிலுவை பற்றிச் சட்டமன்றத்திற்குள்ளேயும், வெளியேயும் பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டன. பத்திரிகைகளிலும் வணிகவரி நிலுவை பற்றிய கட்டுரைகள் பல வெளியாகியிருந்தன. எனவே, வரி நிலுவை பற்றிய சில உண்மைகளைத் தற்போது தெளிவாக்கிடக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 1995-96 ஆம் ஆண்டு முடிய ரூபாய் 2,178 கோடியாக இருந்த வரி நிலுவை 1999-2000-ஆம் ஆண்டு முடிவில் தி.மு.க. ஆட்சியின்போது ரூபாய் 7,244 கோடியாக உயர்ந்தது. அதாவது, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், வரி நிலுவையானது ரூபாய் 5,066 கோடிக்குக் கூடியது என்பது தெளிவாகிறது. 1996-97-ஆம் ஆண்டு முதல் 2000-2001-ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மொத்த வரி நிலுவைத் தொகையில் வசூலிக்கப்பட்டது ரூபாய் 583.2 கோடியாக மட்டுமே இருந்தது. அதாவது, ஓர் ஆண்டின் சராசரி வரி நிலுவை வசூல் ரூபாய் 116.64 கோடி மட்டுமே.

வரி நிலுவையானது 1996-97 முதல் 1999-2000-ஆம் ஆண்டுகளில், அதாவது கடந்த கால தி.மு.க. ஆட்சியின்போதுதான் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய அரசு 6-11-1997 அன்று ஒரு சட்டம் கொண்டு வந்தது. அதன்படி 1-4-1997 அன்று நிலுவையிலிருந்த அனைத்து வரிவிதிப்புகளையும், 2000-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இச்சட்டம், பின்னர் 2000-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதியன்று மற்றொரு சட்டத்தின் வழியாக முன்தேதியிட்டு நீக்கப்பட்டது. இதற்கிடையில், இறுதி வரி விதிப்புகளை முடிக்க வேண்டும் என்ற கட்டாய நிலையில் வரி விதிப்புகள் பல அனுமானத்தின் அடிப்படையிலான மிகச் சிறந்த தீர்ப்பின்படி-Best of Judgement-ன்படி முடிக்கப்பட்டன. தி.மு.க. ஆட்சியின் இந்த நடவடிக்கையால் வரி நிலுவை கணிசமாக உயர்ந்தது. இம்மாதிரி தி.மு.க. அரசின் காலத்தில் அவசரமாக முடிக்கப்பட்ட வரி விதிப்புகளால், மேல்முறையீட்டில் அதிகமாக நிலுவையாக உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது வரி நிலுவை வசூலில் முன்னேற்றம் காண, பல்வேறு பயன் அளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால் வரி வசூல் அதிகரிக்கும்; வரி நிலுவை குறையும்.

அரிசி மற்றும் கோதுமைக்கு இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதன் முதலில் வரி போடப்படுகின்றது என்ற கூற்று உண்மைக்குப் புறம்பானது என்பதை நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். மற்ற மாநிலங்களில் அரிசி மற்றும் கோதுமைக்கு எவ்வாறு விற்பனை வரி விதிக்கப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஆந்திரப் பிரதேசம் அரிசி 4 சதவீதம், கோதுமை 4 சதவீதம், மேற்கு வங்காளம் அரிசி 2 சதவீதம், கோதுமை 2 சதவீதம், பஞ்சாப் அரிசி 4 சதவீதம், கோதுமை 4 சதவீதம், அரியானா அரிசி 4 சதவீதம், கோதுமை 4 சதவீதம், உத்திரப்பிரதேசம் அரிசி 4 சதவீதம், கோதுமை 4 சதவீதம், தமிழ்நாடு அரிசி 2 சதவீதம், கோதுமை 2 சதவீதம்.



தமிழ்நாட்டில் பொது விநியோக முறை மூலம் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் கோதுமைக்கு விற்பனை வரி விதிக்கப்படவில்லை என்பதை, மாண்புமிகு புரட்சித் தலைவி இதயதெய்வம் அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். இவைமீது முதல்கட்ட விற்பனை தவிர, ஏனைய விற்பனைமீது வரி விதிக்கப்படவில்லை என்பதையும், இப்பொருட்கள்மீது கூடுதல் விற்பனை வரி, உபரி வரி விதிக்கப்படவில்லை என்பதையும், இந்த வரி விதிப்பினால் ஏழை எளிய மக்கள் நிச்சயமாகப் பாதிப்பிற்குள்ளாகமாட்டார்கள் என்பதையும், முன்னர் இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

பருப்பு வகைகள், தானியங்கள், வெல்லம் மற்றும் சமையல் எண்ணெய் முதலிய பொருட்களின்மீது விதித்துள்ள வரி குறித்து மேலும் சில கருத்துகளைக் கூற விரும்புகின்றேன்.

பருப்பு வகைகள், தானியங்கள், வெல்லம் மற்றும் சமையல் எண்ணெய் முதலிய பொருட்களுக்குப் பிற மாநிலங்களில் எவ்வாறு வரி விதிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆந்திரப் பிரதேசம் சமையல் எண்ணெய் 4 சதவீதம், வெல்லம் 4 சதவீதம், பருப்பு வகைகள் 4 சதவீதம், கேரளம்—சமையல் எண்ணெய் 4 சதவீதம், வெல்லம் 4 சதவீதம், பருப்பு வகைகள் 1 சதவீதம், கர்நாடகம்—சமையல் எண்ணெய் 4 சதவீதம், வெல்லம் 1 சதவீதம், பருப்பு வகைகள் 2 சதவீதம், அரியானா—சமையல் எண்ணெய் 4 சதவீதம், வெல்லம் 4 சதவீதம், பருப்பு 4 சதவீதம். தமிழ்நாடு, எண்ணெய் 4 சதவீதம், வெல்லம் 4 சதவீதம், பருப்பு 4 சதவீதம். மேலும் சமையல் எண்ணெய்மீது மகாராஷ்ட்ரா அரசு 4 விழுக்காடும், மேற்கு வங்க அரசு 4 விழுக்காடும் வரி விதித்துள்ளன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே தமிழ்நாட்டில் விதிக்கப்பட்டுள்ள 4 விழுக்காடு வரி அதிகமானதல்ல என்பதைத் தெளிவாக்கிட விரும்புகிறேன்.

பிற்பகல் 6-20

சிமெண்ட் விற்பனை விலையில் அடிக்கடி காணப்படும் அதிகப்படியான விலை உயர்வு அரசையும் பொதுமக்களையும் பெரிதும் கவலை கொள்ளச் செய்தது. இதுகுறித்து இந்தச் சட்டமன்றத்தில்

ஏற்கெனவே விவாதிக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சிமெண்ட் விலையின் ஏற்றத்தினைக் கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெரும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதனடிப்படையில்தான் ஓ.பி.சி. மற்றும் பி.பி.சி. சிமெண்ட் விற்பனை விலை மூட்டைக்கு முறையே ரூபாய் 145 மற்றும் ரூபாய் 135-க்கு மேல் இருப்பின் இவ்விற்பனைமீது 24 விழுக்காடு வரியும் இரண்டாவது மற்றும் இதர விற்பனைமீது 5 விழுக்காடு வரியும் விதிக்கப்பட்டது. இவ்விலைக்குக் கீழே விற்கப்படும் சிமெண்ட்மீது, தற்போதுள்ள வரி விகிதப்படி, முதல் விற்பனையில் 16 விழுக்காடு வரியும், இரண்டாவது மற்றும் இதர விற்பனைமீது ஒரு விழுக்காடு வரியும் விதிக்கப்பட்டது. மேலும் சிமெண்ட் தாராளமாக நியாயமான விலையில் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் சிமெண்ட் மீதான நுழைவு வரி 27-3-2002 முதல் நீக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் முன்னேற்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள், அரசுத் துறைகளுக்கு விற்கப்படும் பொருட்களின்மீது சலுகை வரியாக 4 விழுக்காடு வரி நீண்ட காலமாக வழங்கப்பட்டிருந்தது. இதனைக் கடந்த கால தி.மு.க. அரசு நீக்கம் செய்தது. இதனால் தமிழ்நாடு அரசுத் துறைகள் மட்டுமின்றி தமிழ்நாடு அரசுத் துறைகளுக்குப் பொருட்களை விற்று வந்த தொழில் நிறுவனங்களும் பாதிப்புக்கு உள்ளாயின. அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் வெளி மாநிலங்களில் இருந்து, வெளி மாநிலங்களுக்கு வரியினைச் செலுத்தி பொருட்களை வாங்க ஆரம்பித்தன. இதனால் நமது அரசுக்கு வரி வருவாய் குறைந்தது. இதனைக் கருத்தில் கொண்டு, ஏற்கெனவே வழங்கி வந்த சலுகை வரியினை, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி தமிழ்நாடு அரசுத் துறைகள் மட்டுமின்றி, தமிழ்நாடு மின்சார வாரியம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், மருத்துவ சேவைக் கழகம், மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றிற்கும் மோட்டார் ஸ்பிரிட் டீசல் மற்றும் சிமெண்ட் நீங்கலான இதர பொருட்களை விற்கும்போது 4 விழுக்காடு சலுகை வரி, தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் சில நிறுவனங்கள்



ஒப்பந்த அடிப்படையிலே 'Turn key' முறையிலே செய்யப்படும் விற்பனைக்கும் இச்சலுகை வரி வழங்கப்பட்டுள்ளது. அவையாவன:—

தமிழ்நாடு மின் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்.

மதிப்புக் கூட்டு வரி முறையினை அறிமுகப்படுத்துவதற்குமுன், வரி ஈடுகட்டும் கோட்பாடு, சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அதன்படியாக, கூறப்பட்டுள்ள பொருட்களின் விற்பனை மீது செலுத்தப்பட வேண்டிய தமிழ்நாடு பொது விற்பனை வரி, மற்றும் மத்திய விற்பனை வரியில் இப்பொருட்களைத் தயாரிப்பதற்கான உள்ளீட்டுப் பொருட்கள், உறுப்புகள் மற்றும் உதிரி பாகங்கள்மீது, படிவம் 17-ன்கீழ் செலுத்தியுள்ள வரியினை முழுவதுமாக ஈடுகட்டிக்கொள்ள, சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட உள்ளது.

(1) 12 விழுக்காடு வரிக்குரிய மின் மற்றும் மின்னணுப் பொருட்கள். (2) 10 விழுக்காடு வரிக்குரிய இயந்திரத்தால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள். (3) 10 விழுக்காடு வரிக்குரிய காகித ஆலைப் பொருட்கள். (4) 12 விழுக்காடு வரிக்குரிய கையினால் செய்யப்பட்ட சோப்புகள்.

மேலும் அச்சுத் தொழில் நிறுவனங்கள் கொள்முதல் செய்து பயன்படுத்தும் பேப்பர் மற்றும் ink-ன் மீது, செலுத்திய வரியை, ஈடு செய்து கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட சலுகைகளினால், சிறு தொழில்கள் பெரும் வளர்ச்சி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆலோசனையோடு வணிக வரித் துறை குறித்த அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

ஒன்று. வணிக வரித் துறையைக் கணினி மயமாக்கும் திட்டம். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையின்படி வணிக வரித் துறையை ரூபாய் 10.30 கோடி செலவில் கணினிமயமாக்க ஓர் ஒருங்கிணைந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-25

மாநிலத்திலுள்ள 323 வணிக வரிச் சரகங்களில் ஏற்கெனவே 140 சரகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள சரகங்கள் மற்றும் வணிக வரித் துறை அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படும். மேலும், மென்பொருள் மற்றும் புரோகிராம் ஆகியவை மேன்மைப்படுத்தப்படும்.

இரண்டு. வலைத் தளத்தை மேம்படுத்துதல். வணிக வரித் துறையின் வலைத் தளம் மேன்மைப்படுத்தப்படும். மேலும், வணிகர்கள் மற்றும் பொது மக்களின் நலனுக்காகக் கூடுதல் விவரங்கள் அவ்வலைத் தளத்தில் அளிக்கப்படும்.

மூன்று. ஒருங்கிணைந்த நவீன சோதனைச் சாவடிகள் அமைத்தல். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில் பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகளை மாநிலங்களின் எல்லைகளுக்கிடையே அமைத்திட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக, அவ்வாறான சோதனைச் சாவடிகளின் வடிவமைப்பு மற்றும் திட்ட வரைவுக்கு ஆலோசகர் நியமிக்கப்படுவார். மேலும், அவ்வாறு அமைக்கப்படவிருக்கும் சோதனைச் சாவடிகள், போக்குவரத்து ஏற்பாடுகள், தகவல் வசதிகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, நவீன முறையில் அமையும்.

நான்கு. வருவாய் இழப்பு மற்றும் வரி ஏய்ப்பு ஆகியவற்றைத் தடுக்கும் வகையிலே செயலாக்கப் பிரிவின் நடவடிக்கைகள் கடுமைப்படுத்தப்படும்.

ஐந்து. வரி நிலுவைகளைக் குறைப்பதற்கான துறையின் சிறப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

அரசு இயங்குவதற்கு முக்கிய தேவையான வருவாயினை ஈட்டித் தரும் பல துறைகளில், முதலிடம் வகிக்கும் மிக முக்கிய துறையான தொழில் மற்றும் வணிக வரித் துறை மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த தெளிவான ஆக்கபூர்வமான கருத்துகளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பிற்குரிய உறுப்பினர் திரு. கார்த்தி அவர்கள் பேசுகின்றபோது மேக்னசைட் தொழிலைக் காப்பாற்றுவது பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கார்த்தி அவர்கள், இறக்குமதி செய்யப்படும், முழுவதும் எரியூட்டப்பட்ட மேக்னசைட்டுக்கான இறக்குமதித் தீர்வையை 150 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைத்ததனால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தப் பாதிப்பிலிருந்து மேக்னசைட் தொழிலை மீட்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மத்திய அரசிடம் பலமுறை முறையிட்டுள்ளது. அந்த வகையிலே தற்போதுகூட



மாநில தொழில் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கு 21-8-2001 அன்று நேர்முகக் கடிதம் மூலம் முழுவதும் எரியூட்டப்பட்ட மேக்னசைட்டின் மீதான இறக்குமதித் தீர்வையை 2001-2002 ஆம் ஆண்டு பட்ஜெட்டுக்கு முன்னர் இருந்த அளவான 25 சதவீத அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று கோரி கடிதம் போடப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை மத்திய அரசு பரிசீலிப்பதாக மத்திய நிதியமைச்சர் அவர்களிடமிருந்து [illegible] 8 2001 அன்றைய நாளிட்ட கடிதம் வந்துள்ளது. மத்திய அரசின் இறுதி முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க இன்று அரிசிக்கு வரி விதித்தது பாமர மக்களைப் பாதிக்கும் என்று பல்வேறு உறுப்பினர்கள் அவையில் கருத்துக் கூறினார்கள். அதேபோன்று பொது விநியோக முறையில் ஏழைகளுக்கு வழங்கும் அரிசிக்கு வரி விதிப்பு இல்லை என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அவையில் அறிவித்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 6-30

அரிசியைப் பொறுத்தவரைக்கும், அதற்குக் கூடுதல் விற்பனை வரியும் இல்லை, உபரி வரியும் இல்லை, மறு விற்பனை வரியும் இல்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும், இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் பொது மக்களுக்கு அரிசி வாங்குவதில் வரி விதிப்பு பாதிப்பு ஏற்படாத வண்ணம் வரி விதிப்பு முறையை மாற்றியமைக்குமாறு ஆணையிட்டுள்ளார்கள் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் மற்றும் வணிக வரித் துறை மானியக் கோரிக்கையில் பங்கேற்ற உறுப்பினர்கள் பலர் வெட்டுத் தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, தொழில் மற்றும் வணிக வரித் துறை மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமைகின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கம்போல திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் ஆகிய விவசாய இடுபொருட்கள் தற்போது அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்தின்கீழ் கட்டுப்படுத்தப்பட்டுவருகின்றன. மத்திய அரசால் எல்லா உரங்களின் சில்லறை விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு வருகிற காரணத்தினாலே இப்பொழுது இந்த பலமுனை வரிகளை நீங்கள் விதித்தீர்கள் என்று சொன்னால், அது M.R.P. ரேட்டைவிட அதிகமாகிவிடும். M.R.P.ரேட்டைவிட அதிகமாகப் போகும் என்று சொன்னால், நிச்சயமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. புதிது, புதிதாகக் கருத்துகள் சொல்லாதீர்கள். ஏதாவது clarification இருந்தால் கேளுங்கள். திரு. லட்சுமணன். (குறுக்கீடு) இல்லை, புதுப்புது கருத்துகளை அரங்கேற்றுவதற்கு நேரம் இல்லை இப்போது.

**திரு. சி. ஞானசேகரன்:** அது சட்டத்திற்குப் புறம்பானது. ஆகவே, M.R.P. ரேட்டைவிட அதிகமாகப் போகிறதனாலே I am just requesting....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பற்றி யோசிப்பார் அமைச்சர். சொல்லுங்கள் திரு. லட்சுமணன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விசைத்தறிக்கு உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தைக் குறைத்து அறிக்கை வெளியிட்டபோது, தமிழ் மாநில காங்கிரசின் சார்பாக நன்றி தெரிவித்தோம். அப்பொழுது, இந்த பட்டுச் சேலைக்கு விட்டுப்போய் விட்டது. பட்டுச்சேலைக்கு இப்பொழுது வரிவிதிப்பை நீக்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, என்ன திரு. மணி, ஏதாவது clarification இருந்தால் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பாட்டாளி மக்கள் கட்சி முதலாக பல்வேறு எதிர்க்கட்சிகளும், அரிசி, கோதுமை, பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற பொருட்களுக்கு பொதுமக்களுடைய வேண்டுகோளை ஏற்று வரி விலக்கு அளிக்க வேண்டும், முழுமையாக வரி ரத்து செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அதேநேரத்திலே, விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் ஆகியவற்றிற்கு பலமுனை வரி விதிக்கக் கூடாது என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆகவே, இப்படிப் பொதுமக்களுடைய அவசிய, அத்தியாவசிய தேவைகளைக் கருத்திற்கொள்ளாமல் வரி உயர்வை ரத்து செய்யாத காரணத்தினாலே, பாட்டாளி மக்கள் கட்சி இதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறது.

(பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் மாளிகைக்கு வந்துவிடுங்கள். திரு. மணி, ஆளுநர் மாளிகைக்கு வந்துவிடுங்கள். (சிரிப்பு) திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, அம்மையார் அவர்களுடைய ஆட்சிக்காலத்திலேதான் என்னுடைய தொகுதியிலே ஹூண்டாய் போன்ற பெரிய மோட்டார் கம்பெனிகள் எல்லாம் வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தக் கம்பெனிகள் நிலத்தை கையகப்படுத்துகின்றபோது, நிலம் கொடுக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கு உறுதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இன்று வரையிலும், நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கொடுக்கப்படவில்லை என்பதோடு மட்டுமல்லாமல், வெளிப் பகுதியிலே இருக்கின்றவர்களைக் கொண்டு வந்து அங்கே வேலைக்கு அமர்த்தியிருக்கின்றார்கள். இதைப்பற்றி அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுனை வரியைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஒருமுனை வரியாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் ஒருமுறை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். நுழைவு வரி குறித்து வந்திருக்கக்கூடிய கருத்துகளை அரசு பரிசீலிக்குமா; பரிசீலிக்க வேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். சொல்லுங்கள். சொல்லுங்கள். என்ன திரு. பொன்முடி, சொல்லுங்கள். (குறுக்கீடு) வெளிநடப்பா? (குறுக்கீடு) அப்படியா? (சிரிப்பு)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அத்தியாவசிய பொருட்களின்மீதான வரியை நீக்கிக்கொள்ளாததைக் கண்டித்தும், ஒருமுனை வரியைப் பலமுனை வரியாக மாற்றியமைத்திருப்பதைக் கண்டித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

பிற்பகல் 6-35

## (அ) கோரிக்கை எண் 26—தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 26, தொழில் துறை—வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ. இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டிகே. இராஜா, இருக்கையில் இல்லை. திரு. டிகே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை. திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன், இருக்கையில் இல்லை. திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'தொழில் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 26-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.39,78,45,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.47,85,96,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்' என்னும் மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை—வணிக வரிகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை வணிகவரிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை, திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை. திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை. திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை. திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜே. ஹேமசந்திரன், இருக்கையில் இல்லை. திரு. ஜே. ஹேமசந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய மானியக் கோரிக்கை எண் 10-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.240,19,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்' என்னும் மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

[பேரவைத் தலைவர்] [2002 மே 7

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-5-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6-37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

159. 1999 ஆம் ஆண்டு வரன்முறைப்படுத்த விண்ணப்பம், மதிப்பீடு மற்றும் வசூலிப்பதற்கான (சென்னை பெருநகர்ப்பகுதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 24-4-2002 ஆம் நாளிட்ட 121 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர-ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

160. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 22-2-2002 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

357. வணிக வரிகள் துறையில் உருவாகி, பின்னர் திருத்தப்பட்டவாறு 5-3-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1)/வ.வ. & அ.நி./வ.வ. (a.II)/97 ஆம் எண் உள்ள அறிவிக்கையை 1956ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) படி ரத்து செய்தது குறித்தும், மேலும், வணிகர் ஒருவர், மாநிலங்களிடையே தேங்காய் அல்லது கொப்பரை விற்பனை தொடர்பான வர்த்தகம் அல்லது வணிகம் செய்யும்போது, மேற்சொன்ன சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியானது, இரண்டு சதவீத அளவு வீதத்தில் கணக்கிடப்பட வேண்டும் என்றும் உத்திரவிடுவது குறித்து வணிக



2002 மே 7]

வரிகள் துறையின் 27-3-2002 ஆம் நாளிட்ட 25 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

358. 9-12-1992 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள II(1)/CTRE/210/92 ஆம் எண் மற்றும் II(1)/CTRE/211/92ஆம் எண் ஆகிய எண்ணுள்ள வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் அறிவிக்கைகளில் (இது பின்னர் திருத்தப்பட்டுள்ளது) 1956ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 1-3-2002 ஆம் நாளிட்ட 16 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.

359. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை. (2001-2002)

360. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஏழாவது அறிக்கை. (2001-2002)

361. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி எட்டாவது அறிக்கை. (2001-2002)

362. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

363. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை (2001-2002)

364. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

365. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கை. (2001-2002)

366. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

367. மானியக் கோரிக்கை எண்26-தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

368. தொழில் துறை பற்றிய செயல்திட்ட ஆய்வுரை, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

[2002 மே 7

369. மானியக் கோரிக்கை எண் 26 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான தொழில் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

370. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2002-2003, (தமிழ், ஆங்கிலம்)

371. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2002-2003, (தமிழ், ஆங்கிலம்)

372. சிறு தொழில் துறையின் "மக்கள் சாசனம்", (2002-2003), (தமிழ், ஆங்கிலம்)

373. சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம், 2002-2003, (தமிழ், ஆங்கிலம்)

374. மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003, (தமிழ், ஆங்கிலம்)

375. வணிக வரித் துறையின் "மக்கள் சாசனம்" 2002-2003, (தமிழ், ஆங்கிலம்)

376. சட்டத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

377. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள் (2002-2003) (தமிழ்)

378. கைத்தறி மற்றும் துணிநூல் குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

379. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்)

380. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்)



2002 மே 7]

381. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்)

382. தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்தின் "மக்கள் சாசனம்" (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

383. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் "மக்கள் சாசனம்". (தமிழ், ஆங்கிலம்)

384. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்)

385. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்)

386. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்)

387. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்)

388. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்)

389. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் லிமிடெட்டின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்)

390. மானியக் கோரிக்கை எண்10—2002-2003ஆம் ஆண்டிற்கான வணிக வரித் துறை-வணிக வரிகள் துறை பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

## இணைப்பு I

(84 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பினைக் காண்க)

## கோரிக்கை எண் 26—தொழில் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

### முன்னுரை

பல்வேறு மாநிலங்களுக்கிடையே தற்போது நிலவிவரும் போட்டி சூழ்நிலையை உணர்ந்து இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் இம்மாநிலம் முதலிடம் எய்துவதற்கு ஏதுவாக தொழில் நேயமிக்க சூழ்நிலையை உருவாக்கவும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், அரசு பல புதுமையான அம்சங்களுடன் கூடிய ஒரு புதிய தொழில் கொள்கையை உருவாக்கி வருகிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக பின் தங்கிய மாவட்டங்களில் வேலை வாய்ப்பை உருவாக்கவும், தொழில் வளர்ச்சியால் விளையும் நன்மைகள் அந்தப் பகுதிகளைச் சென்றடையவும், புதிதாகத் தொடங்கப்படும் தொழில்களுக்கு ஊக்குதவிகள் வழங்குவதில் இத்தொழிற் கொள்கை முக்கியக் கவனம் செலுத்தும். 2002-2007 திட்டகாலத்தில் 10% வளர்ச்சி விகிதத்தை எய்துவது இதன் முக்கிய நோக்கமாகும். உயிரியல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு, மருந்துப் பொருள் தயாரித்தல், உணவு பதப்படுத்துதல் போன்ற முக்கியமான துறைகளை வளர்ச்சியடையச் செய்வதும் இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும். உணவு தானியம் தவிர்த்த மற்ற பயிர்களின் விவசாய வளர்ச்சிக்கு உறுதியான ஆதாரம் உண்டாக்க வேளாண்மை ஏற்றுமதி வளர்ச்சி மண்டலம் ஏற்படுத்துவது மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இத்துறையின்கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்களின் செயல்பாடுகளின் வாயிலாக மேற்சொன்ன நோக்கங்களை அடைவது குறிக்கோளாகும்.

2. இம்மாநிலத்தை விரைவான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், பல்வேறு வணிக சங்கப் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர் மட்டக் குழு தற்போது நிலவும் தொழில் வளர்ச்சி நிலையை ஆய்வு செய்யவும்,

முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மற்றும் தேவைப்படும் கொள்கை முடிவுகளை எடுக்கவும் கால முறைப்படி கூடி கலந்து ஆலோசிக்கும்.

3. அறிவித்த திட்டங்களைச் செயல்படுத்தி அதன் விளைவாக முழுமையான பலன்களைப் பெறுவதில் மாநிலம் பெற்ற வெற்றிச் சதவிகிதம் மிகவும் குறைவு என்பது இம்மாநிலம் தொழில் மயமாக்கப்படுவதில் தடைக்கல்லாக உள்ளது. தலைமைச் செயலாளரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் குழு தொழில் வளர்ச்சிக்கு, அரசு மற்றும் இந்தியத் தொழில்களின் கூட்டமைப்பு எடுத்துவரும் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து விரைவான தொழில் வளர்ச்சிக்கும், ஒப்புதல்கள் மற்றும் தணிக்கைகளுக்கான நடைமுறைகளை எளிதாக்குவதற்கும் தேவையான குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் முக்கியக் கவனம் செலுத்தும்.

4. ஏற்றுமதி மேம்பாடு, அரசு கவனம் செலுத்தும் மற்றுமொரு முக்கிய பிரிவாகும். தலைமைச் செயலாளரின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள குழு காலமுறைப்படி கூடி ஏற்றுமதி தொடர்பான பல்வேறு தொழில் பிரிவுகளின் செயல்பாட்டினை ஆய்வு செய்து இடர்பாடுகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளையும் கண்டறியும். ஏற்றுமதிகள் இடர்பாடுகளின்றி நடைபெறுவதற்கென்று உட்கட்டமைப்புத் திட்டங்கள் அடங்கிய ஒரு தொகுப்பினை உருவாக்குவது மேற்படி குழுவின் மற்றொரு முக்கிய செயல்பாடாகும். மேலும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அயல்நாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் முதலீடுகளை ஈர்ப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்துவதற்கு கைடன்ஸ் நிறுவனத்தில் இதற்கென ஒரு பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

5. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்படுத்துவதில் அரசு முக்கியக் கவனம் செலுத்தும். ஏற்கெனவே நாங்குநேரியிலுள்ள உயர் தொழில்நுட்பப் பூங்கா சிறப்புப் பொருளாதார மண்டலமாக மேம்படுத்தப்படவுள்ளது. சிறப்புப் பொருளாதார மண்டலத்தை மேம்படுத்துவதற்கான மாநில அரசின் கொள்கை விரைவில் உறுதி செய்யப்படும். எண்ணூரிலுள்ள புதிய துறைமுக வசதிகளைப் பயன்படுத்தியும், தோல் பொருட்கள், ஆடைகள் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிற் பிரிவுகள் தமிழகத்தில் பெருமளவில்





அமைந்திருப்பதைப் பயன்படுத்தியும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

6. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அமைந்துள்ளதைப் போன்று உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி அயல் நாட்டு முதலீடுகளை ஈர்ப்பது அரசின் நோக்கமாகும். உட்கட்டமைப்பு வசதிகளைச் சிறப்பாக உருவாக்க 'உட்கட்டமைப்பு முதலீடு குழுமம்' உருவாக்கப்படும். இதன்மூலம் இத்தகைய திட்டங்களுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டல், இத்துறையில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவிப்பதற்கு சட்டப்பூர்வ ஆதரவு அளித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7. உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் இரண்டாவது மென்பொருள் பூங்கா தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) இவ்வாண்டு செயல்படுத்தப்படும் பெரிய தொழில் திட்டங்களாகும். டிட்கோ நிறுவனம் ஜுரோங் நகரக் கழகத்துடன் இணைந்து இரண்டாம் மென்பொருள் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவில் ஆராய்ச்சி வசதிகளை ஏற்படுத்த சிங்கப்பூரிலுள்ள மரபணு மையத்துடன் டிட்கோ நிறுவனம் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தும். சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து ஆராய்ச்சி நிறுவனங்களை ஏற்படுத்தும் பணிகள் தொடங்குவதுடன் எம்.ஜி.ஆர். அறிவு நகரம் ஏற்படுத்தப்படும். டிட்கோ நிறுவனம் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் மேலும் சில திட்டங்களைத் தொடங்க உத்தேசித்துள்ளது. தேனி மாவட்டத்தில் திராட்சை மதுத்திட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடல்சார் உயிர் தொழில் நுட்பப் பூங்கா, திண்டுக்கல்லுக்கு அருகில் மருந்துவகைத் தாவரங்கள் தொழில்நுட்பப் பூங்கா ஆகிய இதரத் திட்டங்களும் விரைவில் செயல்படுத்தப்படும். தர்மபுரி மாவட்டத்தில் மலர்ச்செடி வகை ஏற்றுமதி மண்டலம் ஏற்படுத்த 'அபீடா' (APEDA) அமைப்புடன் ஓர் உடன்பாட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அதன் கைவசமுள்ள நிலங்களை விரைவாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சிறுசேரியிலுள்ள மென்பொருள் பூங்கா முக்கிய கவனத்தைப் பெறும். நடப்பு ஆண்டில் ஆடைப்பூங்கா மற்றும் தோல் பொருட்கள் வளாகம் அமைப்பது புதிய முயற்சிகளாகும். மைய அரசு வீட்டுவசதித் துறையில்

அந்நிய முதலீட்டினைத் தாராளமயமாக்கியதை சாதகமாகப் பயன்படுத்தி சிப்காட் நிறுவனமும் சிறுசேரிக்கு அருகில் நகரியமும், சோழிங்கநல்லூரில் அறிவியல் நகரியமும் உருவாக ஊக்கமளிக்கும்.

9. நலிவடைந்த நிலையிலுள்ள சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் போன்ற பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சர்க்கரை ஆலைகளைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

10. 2002-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், தனது காகித இயந்திரம்-I-ல் ரூ. 25 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும், ரூ. 30 கோடி முதலீட்டில் காகித இயந்திரம்-IIன் வேகத்திறனை விரைவுபடுத்தவும், ரூ.25 கோடி செலவில் காகிதக் கூழ் பிரிவின் திறனை மேம்படுத்தவும் மற்றும் ரூ. 10 கோடி செலவில் காகிதம் வெட்டும் இயந்திரம் ஒன்றை நிறுவவும் உத்தேசித்துள்ளது.

11. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் இவ்வாண்டு 'எண்ணெய் கலவை' வெடிபொருள் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தும்.

12. இவ்வாறு கொள்கைகளில் மாற்றங்கள், நடைமுறைகளில் சீர்திருத்தங்கள், அரசின் நிறுவனங்களின் செயல்பாட்டில் தீவிரம் போன்ற சிறப்பான நடவடிக்கைகள் மூலம் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக உருவாக்கப்படும்.

13. அரசின் நிறுவனங்களின் செயல்பாடுகள் பின்வரும் பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) மாநில அரசின் ஒரு முதன்மையான தொழில் மேம்பாட்டு நிறுவன அமைப்பாகும். நடுத்தர மற்றும் பெரிய அளவிலான முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிந்து தனியார் தொழில் முனைவர்களைப் பங்குதாரர்களாகக் கொண்டு தொழில் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனம் 1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த 36 ஆண்டுகளில், இரும்பு மற்றும் உருக்கு, பெட்ரோலிய



இரசாயனங்கள், உரங்கள் மற்றும் இரசாயனங்கள், தானியங்கிகள், மலர்ச்செடி வகைகள் வளர்த்தல் போன்ற பல்வேறு துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திட்டங்களை டிட்கோ நிறுவனம் நிறுவியுள்ளது. தொடர்ந்து முதலீடுகளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளை உருவாக்கிட அண்மைக் காலமாக "டிட்கோ" நிறுவனம் தனது நடவடிக்கைகளைப் பல்முனைப்படுத்தியுள்ளது.

செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் மற்றும் 2002-2003 ஆம் ஆண்டில் டிட்கோ நிறுவனம் செயல்படுத்த உள்ள திட்டங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

### டைசல் உயிர் தொழில்நுட்பப் பூங்கா (TICEL)

உயிர் தொழில்நுட்பம் மற்றும் இதர வசதிகளை ஓரிடத்தில் அளிக்க, சென்னை தரமணிக்கு அருகில் 5 ஏக்கர் நிலத்தில், உயிர் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றினை டிட்கோ நிறுவனம் அமைத்து வருகிறது. இப்பூங்கா இரண்டு முக்கிய வசதிகளை அளிக்கும். (1) 18,000 சதுர அடி பரப்பளவில் உயிரணு வளர்ச்சி ஆதார மையம் அமைத்தல் (2) 1,20,000 சதுர அடி பரப்பளவில் பொது குடிவாரப் பகுதி மற்றும் ஆயத்த ஆய்வுக்கூடம் அமைத்தல். இத்திட்டம் ' சுமார் ரூ. 62.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் அமெரிக்காவைச் சேர்ந்த கார்னெல் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்படும். இப்பூங்காவில் 50 புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலம் சுமார் ரூ. 1000 கோடி அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இப்பூங்கா சுமார் 1500 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்நுட்ப உடனுழைப்பு ஒப்பந்தங்கள் இறுதியாக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு மே திங்களில் பணிகள் தொடங்கப்பட்டு 31-3-2003 அன்று நிறைவடையும்.

### உயிர்த் தகவலியல் மற்றும் மரபுக் குறியீட்டு மையம்

அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் பி. சேனாபதி என்பவரை சக தொழில் முனைவராகக் கொண்டு ரூ. 20 கோடி திட்டச் செலவில் நவீன தொழில்நுட்பம் கொண்ட உயிர்த் தகவலியல் மற்றும் மரபுக் குறியீட்டு மையம் ஒன்றினை டிட்கோ நிறுவனம் அமைத்து வருகிறது. இத்திட்டத்தில் ரூ. 2 கோடி சமபங்கு முதலீடு செய்ய டிட்கோ

[2002 மே 7

நிறுவன இயக்குநர் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இம்மையம், உயர் ஆய்விற்கு உட்படுத்தப்படும் மரபுத் தொடர்புகளுக்கான நவீன ஆய்வுக்கூடம் மற்றும் கணக்கீட்டு தொழில்நுட்ப யுக்திகளை உருவாக்கி அவற்றை வணிகப்படுத்துவதோடு மட்டுமின்றி நோய்கள் ஏற்படுத்துவதற்கான மரபணு மாற்றங்களைக் கண்டறிந்து, அதன் மூலம் நோயின் தன்மைகளை அறிந்து விளக்கங்களையும் அளிக்கும்.

### கடல்வாழ் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா

இப்பூங்கா இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக இருக்கும். அதாவது (1) பொது வசதிகள் (மரபணு வங்கி, வணிகப் பயன்பாட்டுக்காக கடல்சார் உயிர் பொருள் சேகரிப்பு, மையப் பகுப்பாய்வுக் கூடங்கள், உயிரியல் இரசாயனங்களைப் பிரித்தெடுப்பதற்கான மாதிரி ஆலை அமைத்தல் மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு, மின்சாரம், காற்றோட்டம், தொழிலக நீரியற் கழிவுகள் நிர்வாகம் போன்றவற்றிற்கு ஆதரவாக உட்கட்டமைப்பு வசதிகள் அளித்தல் (2) 30 வர்த்தகப் பிரிவுகள் அமைப்பதற்கான இடவசதி அளித்தல்.

### டைடல்-2 லிமிடெட்

தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கான மேம்படுத்தப்பட்ட இட வசதிகளுக்குத் தேவைகள் பெருகியுள்ளதைக் கருத்தில் கொண்டு, டைடல்-2 திட்டத்தைச் செயல்படுத்திட டிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. 2003 ஆம் ஆண்டில் 3.6 மில்லியன் சதுர அடி மேம்படுத்தப்பட்ட இடவசதி தேவைப்படும் என நிலவர ஆய்வு முடிவின் மூலம் தெரிய வருகிறது. டைடல்-2 திட்டத்தைச் செயல்படுத்திட தற்போதுள்ள டைடல் பூங்காவுக்கு அருகில் 40.19 ஏக்கர் நிலத்தை அரசு வழங்கியுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்திட ஜூரொங் நகரக் கழகம் என்னும் சிங்கப்பூர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.

### வேளாண் ஏற்றுமதி மண்டலம்

மலர்கள் ஏற்றுமதிக்காக, டிட்கோ நிறுவனமும் மைய அரசின் அபீடா நிறுவனமும் இணைந்து தருமபுரி மாவட்டத்தில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் ஒன்றினை அமைப்பதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் தருமபுரி மாவட்ட வேளாண் மக்கள்



2002 மே 7]

பயன்பெறும் வகையில் அதிக எண்ணிக்கையில் மலர்ச்செடி வளர்ப்பு மற்றும் தோட்டக்கலைத் திட்டங்களை மேம்படுத்த முடியும்.

### மது உற்பத்தித் திட்டம்

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் விளையும் மஸ்கட்/தாம்சன் ரக திராட்சைகளைக் கொண்டு திராட்சைப் பழங்களுக்கான மதிப்பு கூட்டப்பட்ட மையங்கள் நிறுவிடவும், ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு விற்பனைக்கான ஒயின் தயாரிக்கும் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்தவும் டிட்கோ நிறுவனம் உத்தேசித்துள்ளது. ஒயின் உற்பத்தியுடன் கூடிய வடிசாலை அமைக்க அனுமதிப்பதற்குத் தேவையான விதி முறைகள் வரையறுப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

### உயர் தொழில்நுட்பப் பூங்கா/சிறப்புப் பொருளாதார மண்டலம், நாங்குநேரி

அமெரிக்காவின் இன்பேக் இந்தியா குரூப் மற்றும் ஆக்ஸஸ் டெக்னாலஜிஸ் நிறுவனங்களுடன் இணைந்து திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை வழிகாட்டுத் துறையில் ரூ. 700 கோடி மதிப்பீட்டுச் செலவில் டிட்கோ நிறுவனம் அமைத்து வருகிறது. மின்னணுவியல் தொலைத் தொடர்பு உபரி பாகங்கள் மற்றும் நுகர்வோர் மின்னணு சாதனங்கள், தகவல் தொழில்நுட்பம், உயிர் தொழில்நுட்ப மருந்துப் பொருட்கள், இலகுவான மற்றும் நுணுக்கமான பொறியியல் தொழில்கள் போன்ற சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத தனி வகைத் தொழில்கள் அமைவதற்கு வசதியாக பன்னாட்டுத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் இப்பூங்காவில் அளிக்கப்படும். இதற்கென, 2094 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுள்ளன. இப்பூங்காவை சிறப்புப் பொருளாதார மண்டலமாக உருவாக்க மைய அரசு கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது. சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கான மாநில அரசின் கொள்கையினை வெளியிட்ட பிறகு இதற்கான மைய அரசின் முறையான ஒப்புதல் கிடைக்கும். சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கையை மாநில அரசு விரைவில் அறிவிக்கும்.

[2002 மே 7

'ஸ்பா' வாசஸ்தலம், கன்னியாகுமரி

நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா, கன்னியாகுமரியில் இரப்பர் பூங்கா மற்றும் துறைமுகம், கூடங்குளத்தில் அணு மின்நிலையம் ஆகிய முக்கியத் திட்டங்கள் தென் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றிற்கென, தரம் வாய்ந்த உணவு விடுதிகள், வீடுகள், உயர்தர மருத்துவமனைகள், தரமான சாலைகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டியுள்ளது. இவற்றில் மிக அவசரமாகத் தேவைப்படுவது தரமுள்ள உணவகம் ஆகும். உலகெங்கிலும் விருந்தோம்பல் தொழில் புதுக் கண்ணோட்டத்துடன் பரவி வருகிறது. இதற்கேற்ப, கன்னியாகுமரிக்கு அருகில் பன்னாட்டுத் தரம் கொண்ட 'ஸ்பா' வாசஸ்தலத்தை ஏற்படுத்த டிட்கோ நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதற்காக, கன்னியாகுமரிக்கு அருகில் சுமார் 30 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலத்தைக் கையகப்படுத்த டிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ரூ. 100 கோடி முதலீடு தேவைப்படுகின்ற இந்த வாசஸ்தலம் தமிழ்நாட்டில் மறக்க முடியாத ஓர் இடமாகத் திகழும்.

## தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டில் நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களைக் கீழ்க்கண்ட வகைகளில் ஊக்கமளித்து அமைக்க உதவுவதாகும்:

* தொழில் வளாகங்களை நிறுவி, வளர்ச்சி அடையச் செய்து, பராமரித்து மனைகளை விற்பனை செய்தல்.
* அடிப்படை வசதித் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
* ஏற்கெனவே தவணைக் கடன் வழங்கப்பட்ட நிறுவனங்களை மேற்பார்வையிட்டு கடனை வசூலித்தல்.

செயல்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள்:

(தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.)



2002 மே 7]

ராகவன் குழுவின் பரிந்துரையின்பேரில் அரசு. மாநிலத்தில் துரிதமாக அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்காக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தை சிப்காட் நிறுவனத்துடன் 1-11-1999-லிருந்து இணைக்க ஆணையிட்டது. அதே சமயத்தில் சிப்காட்டில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த கடன் வழங்கும் திட்டத்தை நிறுத்தி அதை 1-4-2000 முதல் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் ஒப்படைத்தது.

செயல் திட்டங்கள்

| | 31-3-2000 வரை | 1-4-2000 முதல் 31-3-2001 வரை |
|---|---|---|
| * கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதி | 25693.99 ஏக்கர் | 25693.99 ஏக்கர்* |
| * கையகப்படுத்தப் பட்டுள்ள பகுதி | 16928.10 ஏக்கர் | 864.33 ஏக்கர் |
| * செலவிடப்பட்டுள்ள தொகை | ரூ. 11824.02 இலட்சம் | ரூ. 815.62 இலட்சம் |
| * மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள பகுதி | 18984.00 ஏக்கர் | 18984.00 ஏக்கர்* |
| * மேம்படுத்தப்பட்டுள்ள பகுதி | 10413.51 ஏக்கர் | 10413.51 ஏக்கர்* |
| * மேம்படுத்தச் செலவிடப்பட்ட தொகை | ரூ. 19594.15 இலட்சம் | ரூ. 1535.47 இலட்சம் |
| * விற்பனைக்காக ஒதுக்கப்பட்ட பகுதி | 14340.66 ஏக்கர் | 14340.66 ஏக்கர்* |
| * விற்பனை செய்யப்பட்ட பகுதி | 5983.16 ஏக்கர் | 279.34 ஏக்கர் |
| * வசூலிக்கப்பட்ட நிலத்தின் மதிப்பீடு | ரூ. 16526.23 இலட்சம் | ரூ. 1225.60 இலட்சம் |

(* கூடுதலாக நிலங்கள் கண்டறியப்படுதல், கையகப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் இல்லாததால் இவற்றில் மாற்றமில்லை.)

[2002 மே 7

2001-2002 ஆம் ஆண்டு சிப்காட் நிறுவனம் கையகப்படுத்தி வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு விற்பனை செய்துள்ள விவரங்கள் பின்வருமாறு:

(ஏக்கரில்)

| | |
|---|---|
| • கையகப்படுத்திய நிலப்பரப்பு | 20,981.00** |
| • வளர்ச்சிப் பணி மேற்கொண்ட நிலப்பரப்பு | 10,177.00** |
| • விற்பனை செய்யப்பட்ட நிலப்பரப்பு | 294.00 |
| • நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை | 52 |
| • வளர்ச்சிப் பணிக்காக செலவிடப்பட்ட தொகை | (ரூ. இலட்சத்தில்) 2,968.00 |
| • நில விற்பனையின் மூலம் பெறப்பட்ட வருமானம் | 1070.00 |

** தொடர்ச்சிப் பணி, இது தொடர் திறள் அளவாகும்.

*2002-2003 ஆம் வருடத்திற்கான திட்டங்கள்*

(ஏக்கரில்)

* கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பகுதி - 2899.91
* மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள பகுதி - 1824.00
* விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ள பகுதி - 1256.54

ஆடை தயாரிக்கும் நிறுவனங்களுக்கான தொழிற்பூங்கா அமைப்பது போன்ற சிறப்பு நோக்கங்கள்.

ஆடை தயாரிக்கும் நிறுவனங்களுக்கான தொழிற்பூங்கா இருங்காட்டுக்கோட்டை, பெருந்துறை, திருப்பூர் போன்ற நகரங்களில் அமைப்பதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது.

மத்திய அரசின் "முக்கிய அடிப்படை வசதித் திட்டத்தை" தமிழ்நாட்டில் செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்:



2002 மே 7]

சேலத்தில் உள்ள சிறிய துணிச்சாயம் ஏற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது:

மைய அரசின் முக்கிய அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ் சேலத்தில் துணிச்சாயம் ஏற்றும் சிறிய தொழிற்சாலைகளுக்காக பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைத்திட 'சிப்காட்' நிறுவனம் 'இட்காட்' நிறுவனத்தின் மூலமாக ஒரு செயலாக்கத் திட்டத்தைத் தயாரித்து அதை சேலத்தில் உள்ள எருமைப்பாளையம் சிறு தொழில் சாயம் ஏற்றும் தொழிற்சாலைகள் கூட்டமைப்பிற்குக் கொடுத்தது. அதை அந்நிறுவனம் ஏற்றுக்கொண்டு மொத்தத் திட்ட மதிப்பீடான ரூ. 190 இலட்சத்தில் 50 விழுக்காடு தொகையை ஏற்றுக்கொள்ள ஒத்துக்கொண்டுள்ளதால் மைய அரசின் திட்டத்தின் கீழ் அரசிற்கு மீதியுள்ள 50 விழுக்காடு நிதியுதவி பெறுவதற்கு 'சிப்காட்' நிறுவனம் மைய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. தற்போது இத்திட்டம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

மைய அரசின் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்றிட சிப்காட் வசம் உள்ள மற்றும் சில திட்டங்கள்:

(i) நிலக்கோட்டை மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் மைய அரசிடம் தலா ரூ. 4.00 கோடி மானியமாக நிதி உதவி பெற்று உணவுப் பூங்காக்களை நிறுவுதல்.

(ii) காஞ்சிபுரத்தில் ரூ. 2 கோடி திட்ட மதிப்பீட்டில் பட்டு உற்பத்தித் தொழில்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு பட்டுத் தொழில் அபிவிருத்தி மையம் ஒன்றை ஏற்படுத்தி மத்திய அரசின் திட்டத்தின்கீழ் தேவையான நிதி உதவி பெறுவது.

2002-2003 ஆம் ஆண்டில் நிலம் கையகப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் விற்பனை இலக்கு போன்ற விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ. எண் | தொழில் வளாகம்/பூங்கா/ வளர்ச்சி மையத்தின் பெயர் | நில ஆர்ஜிதம் செய்யப் படும் அளவு | அபிவிருத்தி செய்யப் படும் பகுதி | விற்பனைக் கான இலக்கு |
|---|---|---|---|---|
| | | | (ஏக்கரில்) | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ராணிப்பேட்டை பகுதி III | - | - | 50.00 |
| 2 | ஒசூர் தொழில் வளாகம் | | | |
| | (அ) பகுதி II | - | - | 6.54 |
| | (ஆ) பகுதி II விரிவு I | - | - | 22.00 |
| | (இ) பகுதி II விரிவு II | 223.91 | 100 | 50.00 |
| 3. | புதுக்கோட்டை தொழில் வளாகம் | - | - | 20.00 |
| 4. | மானாமதுரை தொழில் வளாகம் | - | - | 20.0 |
| 5. | கும்மிடிப்பூண்டி தொழில் வளாகம் | | | |
| | (அ) பகுதி I | - | - | 23.00 |
| | (ஆ) பகுதி II | - | - | 35.00 |
| 6. | ஏற்றுமதி தொழில் வளர்ச்சிப் பூங்கா, கும்மிடிப்பூண்டி | - | - | 50.00 |
| 7. | தூத்துக்குடி தொழில் வளாகம் | 1616.00 | 300.00 | 300.00 |
| 8. | கடலூர் தொழில் வளாகம் | - | - | - |
| | (அ) பகுதி II | - | 194.00 | 85.00 |
| | (ஆ) கடலூர் தொழிற்பூங்கா | 269.00 | - | 100.00 |
| 9. | இருங்காட்டுக்கோட்டை தொழில் வளாகம் | - | - | 85.00 |
| 10. | திருப்பெரும்புதூர் தொழில் வளாகம் | 571.00 | 400.00 | 50.00 |
| 11. | சிறுசேரி தகவல் தொழில் நுட்பப் பூங்கா | 150.00 | 230.00 | 180.00 |
| 12. | பெருந்துறை தொழில் மையம் | 70 | - | 100.00 |
| 13. | கங்கைகொண்டான் தொழில் மையம் | - | 300.00 | 15.00 |
| 14. | நிலக்கோட்டை தொழில் வளாகம் | - | - | 15.00 |
| 15. | பர்கூர் தொழில் மையம் | - | - | 20.00 |
| 16. | ஓரகடம் தொழில் பூங்கா | - | 300.00 | 30.00 |
| | மொத்தம் | 2899.91 | 1824.00 | 1256.54 |





## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 1949 ஆம் ஆண்டில் மாநில அளவிலான முதன்மை நிதியுதவி நிறுவனமாக அமைக்கப்பட்டது. இக்கழகம், இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இக்கழகம் நிலம், கட்டடம், தளவாடம், இயந்திரம் போன்ற நிலையான சொத்துகளை வாங்குவதற்கு ரூ.800 இலட்சம் வரை தற்போது காலக் கடன் வழங்குகிறது. தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கும் மற்றும் ஏற்கெனவே உள்ள

தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதற்கும்/நவீனப்படுத்துவதற்கும் இக்கழகம் நிதியுதவி அளிக்கிறது.

### செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள்

இக்கழகத்தின் நிதியுதவியில் பெரும்பகுதி காலக் கடனாக, சிறிய மற்றும் நடுத்தர தொழிற் பிரிவுகளுக்கும், போக்குவரத்துப் பிரிவிற்கும் வழங்கப்படுகிறது. முதன்முதலில் தொழில் தொடங்குவோருக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கும் திட்டம், தேசிய மூலதன பங்குத் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்களுக்கு நிதியுதவி, மகளிர் தொழில் முனைவோருக்கு நிதியுதவி மற்றும் தாழ்த்தப்பட்ட/பழங்குடி மக்களுக்கு தாட்கோ திட்டத்தின்கீழ் நிதியுதவி ஆகியவற்றை இக்கழகம் அளித்து வருகிறது.

மறுநிதியுதவி திட்டத்தின்கீழும், தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழும் துணித் துறையின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காகவும், இத்தொழிலை நவீனப்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. சேமிப்புக் கிடங்குகள், மருத்துவ இல்லங்கள், சமுதாயக் கூடங்கள், வணிக வளாகங்கள், உணவு விடுதி அமைப்பது போன்றவற்றைத் தவிர, கணினிப் பயிற்சி நிலையங்கள் மற்றும் இதர தகவல் தொழில்நுட்பப் பிரிவுத் திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### மேம்பாட்டு நடவடிக்கைகள்

### வட்டி விகிதம் குறைப்பு

சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் நலன் கருதி ரூ.2.00 இலட்சம் முதல் ரூ.25.00 இலட்சம் வரையான கடன் தொகைகளுக்கு வட்டி விகிதம் 15.5%-லிருந்து 15% ஆக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், கடன் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் தற்போதுள்ள வட்டி விகிதம் 15.5%-லிருந்து 15.25% ஆக குறைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து காலந்தவறாமல் முறையாக கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவோருக்கு 1% வட்டிச் சலுகை அளிக்கப்படுகிறது.

### கடனுதவியை அடிப்படையாகக் கொண்ட மூலதன மானியத் திட்டம்

சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடனுதவியை அடிப்படையாகக்கொண்ட மூலதன மானியத்தை அளிக்க இக்கழகம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிறுதொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப





மேம்பாட்டிற்காக, சில குறிப்பிட்ட பொருள்களுக்கும்/உட்பிரிவுகளுக்கும் 12% மூலதன மானியம், அதிகபட்சமாக ரூ.4.80 இலட்சம் வரை நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பத்தைப் புகுத்துவதற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது.

மாநில மானியத் திட்டங்களை நிர்வகித்து அதனைத் தகுதியுள்ள நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் செயல்திட்டம் சிப்காட் நிறுவனத்திடமிருந்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு 19-11-2001லிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### சுழற்சி முறைத் திட்டம்

17%-க்கு மேலும் வட்டி செலுத்தும் தொழில் நிறுவனங்கள் மீதமுள்ள கடன் காலத்திற்கு ஒரே மாதிரியாக 17% வட்டி சுழற்சி முறையில் செலுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 2002-2003 ஆம் ஆண்டுக்கான இலக்கு

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியினைத் தொடரும் பொருட்டு, இக்கழகத்தின் 2002-2003ஆம் ஆண்டிற்கான இலக்குகள் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன:-

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| அனுமதித்தல் | 385.00 |
| வழங்குதல் | 270.00 |
| வசூலித்தல் | 375.00 |

## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

தமிழக அரசு கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக்கொண்டு ஆண்டொன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன் அச்சு எழுது காகிதமும் தயாரிப்பதற்காக, கரூர் மாவட்டம், புகளூரில் ஒருங்கிணைந்த காகித ஆலை ஒன்றை நிறுவியுள்ளது. இந்தக் காகித ஆலை 1985ஆம் ஆண்டில் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது.

### விரிவாக்கத் திட்டம்

ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுக்கால அளவிற்குள், இந்நிறுவனம் ரூ.600 கோடி மூலதனச் செலவில், 90,000 டன்னாக இருந்த உற்பத்தியை 1,80,000 டன்னாக அதாவது இரண்டு மடங்காக அதிகரித்தது. இந்த விரிவாக்கத் திட்டம் 1996ஆம் ஆண்டு ஜனவரியில் செயல்பட தொடங்கியது. இந்நிறுவனம், 1995 நவம்பரில் மூலதனப் பங்குகளை பொதுமக்களின் விற்பனைக்குக்கொண்டு வந்து விரிவாக்கத் திட்டத்திற்கு ஒரு பகுதியாக ரூ.216 கோடி திரட்டியுள்ளது. இத்திட்டச் செலவுக்கான எஞ்சிய தொகை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து தவணைக் கடனாக பெறுவதன் மூலமும் நிறுவன நிதியைக்கொண்டும் ஈடு செய்யப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு உலக வங்கி 75 மில்லியன் அமெரிக்க டாலரை நேரடி வெளிநாட்டுக் கடனாக வழங்கியுள்ளது.

### செயல்பாட்டு மற்றும் நிதி விளைவுகள்

இந்நிறுவனம், 2001-2002 ஆம் ஆண்டில் 102.37 விழுக்காடு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தி 1,84,268 மெட்ரிக் டன் செய்தித்தாள் மற்றும் எழுது அச்சு காகிதத்தை உற்பத்தி செய்து ரூ.65.00 கோடி நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் 2000-2001ஆம் ஆண்டிற்கு 25 விழுக்காடு ஆதாயப் பங்கு அரசுக்கு அளித்துள்ளது.

### ஏற்றுமதி

இந்நிறுவனம், பல்வேறு நாடுகளுக்கும் காகிதத்தை ஏற்றுமதி செய்ததன் மூலம் 1994-95ஆம் ஆண்டில் ஏற்றுமதி சந்தையில் நுழைந்தது. அன்றிலிருந்து ஏற்றுமதி விற்பனையில் முறையான வகையில் இந்நிறுவனம் சாதனை புரிந்து வருகிறது. 2001-2002ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 28,006 மெட்ரிக் டன் மரப் பொருளற்ற அச்சு மற்றும் எழுதும் காகிதம் மற்றும் செய்தித்தாள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து ரூ.73.90 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது. ஏற்றுமதியில் தலைசிறந்த செயல்பாட்டிற்காக மத்திய அரசு 2001ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனங்களுக்கு "வணிக இல்லம்" என்ற தகுதியை வழங்கியுள்ளது. 1999-2000ஆம் ஆண்டில் ஏற்றுமதியில் சாதனை செய்ததற்காக இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு, இந்நிறுவனத்திற்கு "நிர்யத் ஸ்ரீ" விருதை வழங்கியுள்ளது.



### காற்றாலைப் பண்ணை

இந்நிறுவனம், ரூ.47.69 கோடி செலவில் திருநெல்வேலி மாவட்டத்தில் தேவர்குளம், பெருங்குடி ஆகிய இடங்களில் மரபு சாரா எரிசக்தியால் மாசற்ற மின்சாரம் உற்பத்தி செய்ய 1993-94ஆம் ஆண்டில் 15 மெகாவாட் திறன் கொண்ட ஒரு காற்றாலைப் பண்ணையை நிறுவியுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இக்காற்றாலை 197.35 இலட்சம் யூனிட் மின் சக்தியை உற்பத்தி செய்துள்ளது. இக்காற்றாலையின் திறன் 31-3-2001 முதல் 15 மெகா வாட்டிலிருந்து 18 மெகா வாட்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2001-2002ஆம் ஆண்டில் கூடுதலாக்கப்பட்ட 3 மெகா வாட் திறன் மூலம் 68.16 இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

### மூலப் பொருட்களுக்கான கூடுதல் ஆதாரங்கள்

இந்நிறுவனத்திற்கு கரும்புச் சக்கை பிரதான மூலப் பொருளாக இருக்கிறது. சுற்றுச்சூழல் நேயமிக்க கரும்புச் சக்கையை மூலப்பொருளாக புதுவகையில் பயன்படுத்துவதன் மூலம் ஒவ்வோர் ஆண்டும் 30,000 ஏக்கர் பரப்பிலுள்ள காடுகளைப் பாதுகாக்க முடிகிறது. இந்நிறுவனம், நிலக்கரி/கச்சா பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட கொதிகலன்களை ஐந்து சர்க்கரை ஆலைகளில் நிறுவி, அதன்மூலம் கரும்புச் சக்கைக்குப் பதிலாக நீராவியை அளிக்கிறது. மேலும், இந்நிறுவனம் கூடுதலாகத் தேவைப்படும் கரும்புச் சக்கையை வெளிச்சந்தையில் வாங்குகிறது.

### வருங்காலத் திட்டங்களும் வாய்ப்புகளும்

இந்த நிறுவனத்தின் காகித இயந்திரம்-1ன் செயல்பாட்டையும், உற்பத்தித் திறனையும் சீரமைத்து மேம்படுத்துவதற்காக, 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.50 கோடி மொத்த முதலீட்டில் அந்த இயந்திரத்தின் மறுகட்டுமானப் பணியை இந்நிறுவனம் மேற்கொண்டது. படில் (Puddle) அளவு அச்சுப் பொறியினை நவீன அளவுமானி பொருத்தப்பட்ட அச்சுப் பொறியாக (metered size press) மாற்றி அமைப்பதற்காக ரூபாய் 25 கோடி மூலதனச் செலவிலான ஒப்பந்தம் ஒன்றினை இந்நிறுவனம் அண்மையில் இறுதி செய்துள்ளது. ரூபாய் 30 கோடி முதலீட்டில் காகித இயந்திரம்-2-ன் வேகத் திறனை 950 எம்.பி.எம். வரை உயர்த்துவதற்காக விரைவுபடுத்தும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. காகிதத்தின் உலர்தன்மையை அதிகரித்து

அதன்மூலம் இயந்திரத்தின் வேகத்தைக் கூட்டுவதற்காக "ஷூ பிரஸ்" (shoe press) ஒன்று நிறுவப்படும். இப்பணிகள் நிறைவுற்றதும் ஆண்டு உற்பத்தி அளவு 26,000 டன்கள் அதிகரிக்கும். காகிதக்கூழ் செல்வழி அனைத்தையும் ரூ.25 கோடி செலவில் முழுமையாக நவீனமயமாக்கும் பணி 2002-2003 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இதன்மூலம், நாளொன்றுக்கு 460 டன் இரசாயன கரும்புச் சக்கைக்கூழ் மற்றும் 120 டன் வன மரக்கூழ் என்று வரையறுக்கப்பட்ட திறனளவை எய்த உதவுமென்பதோடு, நீரியற் கழிவின் தரமும் கணிசமாக உயரும். இந்நிறுவனத்தில் மேலும் ஒரு பணிக் கொதிகலன் மற்றும் டர்போ ஜெனரேட்டர் ஆகியவற்றுடன் கூடிய 24.62 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரகூடம் ஒன்று நிறுவி இயக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மின்சக்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது. அதுமட்டுமின்றி இந்நிறுவனம், நாள் ஒன்றுக்கு உபரியாக உள்ள 3 இலட்சம் யூனிட் மின் சக்தியை தமிழ்நாடு மின்வாரியத்தின் தொகுப்பிற்கு கொடுக்கிறது. படியெடுக்கும் இயந்திரத்தாள்கள் மற்றும் வெட்டளவுத் தாள்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நாளொன்றுக்கு 100 டன் திறனுள்ள தானாகவே தாள்களை நறுக்கிச் சிப்பம் செய்யும் பிரிவு ஒன்று ரூபாய் 10 கோடி முதலீட்டில் ஏற்படுத்தப்படும். இந்தப் பிரிவு 2002ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கி வைக்கப்படும்.

### வேலைவாய்ப்பு

இந்நிறுவனம் 1805 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் சுமார் 5000 நபர்களுக்கு பிற வகை வேலைவாய்ப்பும் அளித்துள்ளது.

## தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்

ஆலங்குளத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) 1970-ல் ஏற்படுத்தப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்தை, பின்னர் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்) ஏற்றுக்கொண்டது. அதனையடுத்து தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அரியலூரில் மேலுமொரு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தி, 1979 ஆம் ஆண்டு சிமெண்ட் உற்பத்தியைத் தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் 1981 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்தில் ஆலங்குளத்தில் கல்நார் சிமெண்ட் தகடு (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்) தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும், மாயனூரில் 1984-ல் கல்நார்



சிமெண்ட் அழுத்தக்குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை (ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப்ஸ்) ஒன்றையும் தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், 1989-ல் கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாச்சலத்தில், இயங்காமலிருந்த கற்குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலையை, தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து எடுத்துக்கொண்டது.

### அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையை நவீனமயப்படுத்தல்

அரியலூர் தொழிற்சாலையின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் பொருட்டு, ஆலையை நவீனமயப்படுத்தி உற்பத்தித் திறனை பெருக்குவதற்காக, முன்னுரிமை அடிப்படையில் டான்செம் சுமார் ரூ.150/- கோடி திட்ட மதிப்பீடு செய்துள்ளது. இதில் ரூ.100 கோடி வெளிக் கடனாகவும், மீதமுள்ள ரூ.50 கோடி டான்செம் மூலம் அல்லது அரசு சமபங்குகள் மூலமும் திட்டத்தைச் செயல்படுத்தும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

### டான்செம் நிறுவனத்தின் சிமெண்ட் விலை

2001-2002 ஆம் ஆண்டில் வெளிச்சந்தையில் தனியார் உற்பத்தியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட அதிக சிமெண்ட் விலை ஏற்றங்களுக்கு இடையிலும், அதிக உற்பத்திச் செலவும் பழமையான இயந்திரங்களாக இருந்தும்கூட வெளிச்சந்தையில் இந்நிறுவனம் தனது சிமெண்டின் விலையை ஒரே சீராக கடைப்பிடித்து வந்துள்ளது.

### சிமெண்ட் கொள்முதல் சலுகை

ஆலங்குளம் மற்றும் அரியலூர் சிமெண்ட் ஆலைகள், 2001 நவம்பர் மாதம் வரையில் போதிய விற்பனையின்றி பாதிக்கப்பட்டாலும், அவ்விரு ஆலைகளில் டிசம்பர் 2001 மற்றும் ஜனவரி 2002 மாதங்களின் உற்பத்தித் திறன் பயன்பாடு குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998-க்கு செப்டம்பர் 2001-ல் வெளியிட்ட திருத்தத்தினால், டான்செம் நிறுவனத்திற்கு 1-12-2001 முதல் வழங்கப்பட்ட விற்பனைச் சலுகையின் பயனாக அரசுத் துறைகளிலிருந்தும், டான்செம் முகவர்களிடமிருந்தும் சிமெண்ட் வழங்கக் கேட்டு அதிக அளவிலான கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அதனால் சென்ற டிசம்பர் 2001 மற்றும் ஜனவரி 2002 மாதங்களில் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை முறையே 94 விழுக்காடு மற்றும் 100 விழுக்காடு என்ற அளவிலும், அரியலூர்

[2002 மே 7

சிமெண்ட் ஆலை முறையே 111 விழுக்காடு மற்றும் 122 விழுக்காடு என்ற அளவிலும் உற்பத்தித்திறன் பயன்பாட்டினை எட்டியுள்ளன.

### டான்செம் நிறுவனத்தின் இதர தொழிற் பிரிவுகள்

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மூன்று ஆலைகளான— ஆலங்குளம் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (தகடு) தொழிற்சாலை, மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (குழாய்கள்) தொழிற்சாலை, மற்றும் விருத்தாச்சலம் கற்குழாய் தொழிற்சாலை நீங்கலாக சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்தவரையில், இந்நிறுவனம் தற்பொழுது மீட்புப் பாதையில் செல்கிறது. ஆலங்குளம் ஆஸ்பெஸ்டாஸ் (தகடு) தொழிற்சாலை பழமையான தொழில்நுட்பம் மற்றும் அதிக உடலுழைப்பு செயல்முறைகளாலும் மற்றும் தனியார் தகடு உற்பத்தி ஆலைகளின் அதிகப்படியான உற்பத்தித் திறன் மற்றும் மிகுதியான இயந்திர செயல்பாடுகளினாலும் நட்டத்தில் இயங்குகிறது. மாயனூரில் ஆஸ்பெஸ்டாஸ் குழாய் தொழிற்சாலை மற்றும் விருத்தாச்சலத்திலுள்ள கற்குழாய் தொழிற்சாலை ஆகியவை போதிய விற்பனையின்மையால் தொடர்ந்து செயல்படாத நிலையில் உள்ளன.

நிதிநிலை மோசமானதால் பிப்ரவரி, 2002-ல் டான்செம் நிறுவனம் தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிலை மாறி, இந்நிறுவனத்தின் நிதிநிலையைச் சீரமைப்பதற்கு ஆலையை நவீனப்படுத்துதல் போன்ற அந்நக நடவடிக்கைகள் குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்), முறைப்படியும், அறிவியல் ரீதியாகவும், கருப்பு, சாம்பல், வெள்ளை மற்றும் இதர பல வண்ணப் பாறைகளையும், தொழிற்சாலைகளில் பயன்படும் கனிமங்களான குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பார், வெர்மிகுலைட், சுண்ணாம்புக்கல், சிலிகா மணல் மற்றும் கிராஃபைட் கனிமங்களையும் வெட்டியெடுத்து வருகின்றது. 2001-2002 ஆம் ஆண்டில் 24,000 கன மீட்டர் கருப்பு மற்றும் பல வண்ணப் பாறைகளையும், 22,000 சதுர மீட்டர் கிரானைட் இறுதிப் பொருட்களையும், 4,555 மெட்ரிக் டன் செழுமைப்படுத்திய கிராஃபைட்டையும், 2,340 மெட்ரிக் டன் இதர கனிமப் பொருட்களையும், 2,08,680 மெட்ரிக் டன் உயர்வகை கனிமங்களையும் டாமின் உற்பத்தி செய்தது.



2002 மே 7]

உலக அளவில் கிரானைட் சந்தையில் தேக்கநிலை இருப்பினும், இந்நிறுவனம் 2001-2002 ஆம் ஆண்டில் சுமார் ரூ.67.05 கோடி விற்பனை அளவை எட்டியது. இவ்வாண்டில் ரூ.7.40 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

### மாலிப்டினைட் திட்டம்

தருமபுரி மாவட்டத்தில், அரூர் வட்டத்தில் வேலம்பட்டி கிராமத்தில் மாலிப்டினம் தாது இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ராக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகளைத் தயாரிக்க மாலிப்டினைட் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனம் மொத்தம் ரூ.112.11 இலட்சம் முன்னோடி சுரங்கப்பணி, ஆழ்குழாய் கிணறு ஆராய்ச்சிக்கும், இந்தியப் புவியியல் அளவைத் துறையிடமிருந்து அடிப்படை புள்ளி விவரங்களைப் பெறவும் செலவு செய்துள்ளது.

தெற்கு வேலம்பட்டியின் வடக்குப் பகுதியிலிருந்து 14 கி.மீ. தூரத்திற்கு மாலிப்டினைட் தாது இருப்பதைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக இந்திய புவியியல் அளவைத் துறை ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டி ஆராய்ச்சிப் பணியினை முடித்துள்ளது. இந்தியப் புவியியல் அளவைத் துறையுடன் செய்து கொண்ட உடன்பாட்டு ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு அரசு அனுமதித்த ரூ.180 இலட்சங்களில் இதுவரை ரூ.152 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வேலம்பட்டி தெற்குப் பகுதியில் மாலிப்டினைட் ஆராய்ச்சிக்கான முன்னோடி சுரங்கப் பணியை, கனிம ஆராய்ச்சி நிறுவனம் மூலமாக செய்வதற்காக மைய அரசு ரூ.3.92 கோடி செலவு செய்துள்ளது. இத்திட்டத்திற்காக தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், காட்டூர் கிராமத்தில் ரூ.7.47 இலட்சம் மொத்தச் செலவில் 15.76 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. தரையின் மேல் பகுதியிலிருந்து கீழே 50 மீட்டர் ஆழம் வரை வேலம்பட்டி தெற்குப் பகுதியில் சுரங்க முன்னோடி ஆராய்வு முடிக்கப்பட்டு, மாதிரி மாலிப்டினம் தாது, பெங்களூரிலுள்ள இந்திய சுரங்க மையத்திற்கும், ஹைதராபாத்திலுள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்திற்கும், ஆய்வுக்கூட ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டுள்ளது. மாலிப்டினம் தாதுவின் ஆராய்ச்சிக்கூட முடிவுகளின்படி திட்ட அறிக்கை ஒன்றை கனிம ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்து வழங்கும். இத்திட்ட அறிக்கை மாலிப்டினம் தொழிற்சாலை அமைக்கத் தேவையான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரிக்க அடிப்படையாக அமையும்.

[2002 மே 7

*குவாரிகளை நவீனப்படுத்துதல்*

குவாரிகளில் தற்போது பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் குறைந்த உற்பத்தியைத் தரக்கூடியதாகவும், சுற்றுச்சூழலை மாசு படுத்துவதாகவும் உள்ளன. 'டைமண்ட் வயர் சா' இயந்திரங்கள் தற்போது பயன்படுத்துகின்ற இயந்திரங்களைக் காட்டிலும் 50% கூடுதலாக உற்பத்தி தரக்கூடிய வகையில் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாமல் கிரானைட் கற்களை அறுக்கும் திறன் கொண்டவை. இதைப் போலவே 'ஹைட்ராலிக்' துளையிடும் இயந்திரங்களைப் பயன்படுத்தினால், பாறைகளைத் துளையிடும் செலவு 50% முதல் 60% வரை குறைவதோடு சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படாது. எனவே, தமிழ்நாடு கனிம நிறுவனம் 'டைமண்ட் வயர் சா' இயந்திரங்கள் மற்றும் 'ஹைட்ராலிக்' துளையிடும் இயந்திரங்களைப் படிப்படியாக அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 5 'டைமண்ட் வயர் சா' இயந்திரங்களையும், 5 'ஹைட்ராலிக்' துளையிடும் இயந்திரங்களையும் ரூ.5 கோடி செலவில் இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளது. இத்தகைய முதலீட்டின் மூலம் சில தேர்ந்தெடுக்கப்பட்ட குவாரிகளில் 50% உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

*மாதேப்பள்ளியிலுள்ள கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை*

இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் கிரானைட் ஓடுகள் 0.5 மி.மீ. அளவுக்கு கூடுதலாக பருமன் உடையதாக உள்ளதால், கிரானைட் ஓடுகளை அதிகம் வாங்கும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதனால் தொழிற்சாலையில் இந்த ஓடுகளின் ஏற்றுமதி விற்பனை 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளில் மிகவும் குறைந்துள்ளது. எனவே, உலகத்தரம் வாய்ந்த கிரானைட் ஓடுகளைத் தயாரிக்க தமிழ்நாடு கனிம நிறுவனம் மிகுந்த தொழில்நுட்பம் வாய்ந்த "மல்டி பிளேடு கட்டர் அண்ட் கேலிப்ரேசன்" இயந்திரம் ஒன்றை சுமார் ரூ.1.80 கோடி செலவில் வாங்கி நிறுவ உத்தேசித்துள்ளது. இந்தக் கூடுதல் இயந்திரம் நிறுவப்படுவதால் உற்பத்தி நாளொன்றுக்கு 65 ச. மீட்டரிலிருந்து 150 ச. மீட்டராக அதிகரிக்கவும் உற்பத்தியில் 90 விழுக்காட்டுக்கு மேல் ஏற்றுமதி செய்யவும் வாய்ப்புள்ளது.



2002 மே 7]

*சேவாத்தூர் வெர்மிகுலைட் சுரங்கத்தை நவீனப்படுத்துதல்*

தமிழ்நாடு கனிம நிறுவனம் ரூ.2 இலட்சம் மதிப்பில் நவீன இயந்திரங்களை நிறுவி, சேவாத்தூர் 'வெர்மிகுலைட்' சுரங்கத்தை நவீனப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

## தமிழ்நாடு கிராஃபைட் நிறுவனம்

தமிழ்நாடு கிராஃபைட் நிறுவனம் (டான்கிராப்) கிராஃபைட்டைக் கொண்டு மதிப்புக் கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஊக்குவிக்க 19-3-1997-ல் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.1 கோடி, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 இலட்சம். இந்நிறுவனம் மூலதனத்தை ஈர்ப்பதற்கு விரிவான மேம்பாட்டு நடவடிக்கைகளை எடுத்தபோதிலும், கிராஃபைட் தொழிலில் முதலீடு செய்ய தொழில் முனைவோர்கள் ஆர்வம் காட்டவில்லை. மேலும், தமிழ்நாடு கனிம நிறுவனம் கிராஃபைட்டை உற்பத்தி செய்து விற்றுவருவதால் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் தற்போது ஏதுமில்லை. எனவே, இந்நிறுவனத்தைத் தமிழ்நாடு கனிம நிறுவனத்துடன் இணைப்பது குறித்த கருத்துரு அரசின பரிசீலனையில் உள்ளது.

## தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்) மேக்னசைட் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காகவும், அதைக்கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துடனும், 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் சேலத்தில் தொடங்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன்கள் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்வதற்காக ரூ.8.57 கோடி செலவில் சுழற்சூளை ஒன்று 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான நிலைச்சூளை, மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்கிறது. 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் கச்சா மேக்னசைட் உற்பத்தி குறியீட்டளவான 46,000 மெட்ரிக் டன்களுக்கெதிராக 40,956 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்தும், விற்பனைக் குறியீட்டளவான 65,000 மெட்ரிக் டன்களுக்கெதிராக 62,545 மெட்ரிக் டன்கள்

விற்பனையும் செய்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனைக் குறியீட்டளவுகள் பின்வருமாறு:

| | | உற்பத்தி (மெட்ரிக் டன்கள்) | விற்பனை (மெட்ரிக் டன்கள்) |
|---|---|---|---|
| கச்சா மேக்னசைட் | : | 38,800 | 56,000 |
| முழு எரியூட்டபட்ட மேக்னசைட் | : | 23,000 | 23,000 |
| மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | : | 10,000 | 10,000 |

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், தொழில் வெடிமருந்து, வெடி ஊக்கி மற்றும் வெடித்திரி தயாரிக்கவும், அவற்றை விற்பனை செய்யவும் தோற்றுவிக்கப்பட்டது. இது டிட்கோவின் துணை நிறுவனமாகும். இந்நிறுவனம், தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி வந்துள்ளது. இந்நிறுவனம் ஜனவரி 1999 ஆம் ஆண்டு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்குத் தரவேண்டிய கடன்தொகையினை ஒட்டுமொத்தமாக 'ஒரே தவணை முறையில்' ரூ.35.05 கோடி செலுத்தி கடன் சுமையிலிருந்து விடுபட்டது.

பல்திறப்படுத்துதல்

இந்நிறுவனம் பல்திறப்படுத்தவும், புதுவகை எண்ணெய்க் கலவை வெடிமருந்துகளை தயாரிக்கவும் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் மின்சாரம் தேவைப்படாத வெடி ஊக்கிகளையும், மிகக் குறைந்த வெடிமருந்தின் அளவில் வெடிக்கும் வெடித்திரிகளையும் தயாரிக்க திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. இந்த எண்ணெய்க் கலவை வெடிமருந்துகள் என்.ஜி. வெடிமருந்தைவிட பாதுகாப்பானதும், மலிவானதுமாகும். இத்திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ.10 கோடியாகும்.



## சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் 1956 ஆம் ஆண்டு தனியார் துறையில் சரக்கு இரயில் பெட்டிகள், இரும்பு கட்டுமானங்கள் தயாரிப்பதற்காகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் நலிவடைந்ததால் 1969-70 ஆம் ஆண்டில் மூடப்பட்டது. எனவே, இதில் பணிபுரியும் சுமார் 1200 நபர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு தமிழக அரசு இந்நிறுவனத்தை 1971 ஆம் ஆண்டு தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டது.

இந்நிறுவனம், மே 1992 ஆம் ஆண்டில் தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்தின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, அதன் பரிந்துரையின்பேரில் புனரமைப்புத் திட்டம் 1998 ஆம் ஆண்டு, ஜனவரி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிறுவனம், 1987-88ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்துள்ளது. திரு. எஸ்.வி.எஸ். ராகவன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில பொதுத் துறை நிறுவனங்கள் ஆய்வுக் குழு, தன்னுடைய அறிக்கையில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் 31-3-1998 அன்றுள்ள நிலையில் மாநில அரசு இந்நிறுவனத்தைப்பற்றி ஒரு தெளிவான ஆய்வு செய்து, அரசின் நிதி உதவி இல்லாமல் இந்நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்த முடியாவிடில் நிறுவனம் மூடப்பட வேண்டும் என்றும், நிறுவனத்தின் நிலையான சொத்துகள் சந்தை விலையில் விற்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. எனினும், பரவலான தொழில் பின்னடைவு, இரயில்வே துறைக்கு ஆதாயமற்ற வகையில் சரக்குப் பெட்டிகளை விற்பனை செய்தது ஆகியவற்றின் காரணமாக இந்த நிறுவனத்தைப் புனரமைக்கும் திட்டம் வெற்றிபெறவில்லை.

இந்நிறுவனத்தின் எதிர்காலம் குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

இத்துடன் விருப்ப ஓய்வுத் திட்டமும் இந்நிறுவனத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கெனவே, 15-3-2002 அன்று வரை ஏறக்குறைய 221 ஊழியர்கள் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் அனுப்பப்பட்டுள்ளனர். 30-4-2002 அன்று 73 ஊழியர்கள் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் அனுப்பப்பட உள்ளனர். மேலும் ஏறக்குறைய 250 ஊழியர்கள் விருப்ப ஓய்வில் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், உப்பு மற்றும் உப்பு சார்ந்த பொருட்களையும் அதன் துணைப் பொருள்களையும் தயாரிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசால் 1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. விவசாயம் மற்றும் தொழிற்சாலைகளின் மூலம் அதிக வேலைவாய்ப்பு கிடைக்காத, மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோர பகுதிகளில் உப்பு உற்பத்தி செய்து, அதன்மூலம் அதிக வேலைவாய்ப்பு அளித்து பின்தங்கிய பகுதியின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும்பொருட்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம், தற்பொழுது தொழிற்சாலைகளுக்குத் தேவையான உப்பு உற்பத்தி செய்வதோடு, இரும்பு ஊட்டச் சத்து, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு மற்றும் அயோடின் கலந்த 'அரசு' உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகிறது.

*மூலதன அமைப்பு முறை*

இந்நிறுவனம், 1974-75 ஆம் ஆண்டு ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்தைக்கொண்டு பணிகளைத் தொடங்கியது. தற்பொழுது அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனமும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனமும் முறையே ரூ.400 இலட்சம் மற்றும் ரூ.317.01 இலட்சங்களாகும். பங்கு மூலதனம் முழுமையும் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

*நிலப்பரப்பு மேம்படுத்துதல்*

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்திலுள்ள மாரியூர் வாலி நோக்கம் உப்பு வளாகத்திலுள்ள 5,524 ஏக்கர் மொத்த பரப்பளவில், இதுவரை 3,210 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்தி செய்ய மேம்படுத்தப்பட்டுள்ளது. இம்மேம்பாட்டினால் ஆண்டு உப்பு உற்பத்தி 2,00,000 மெட்ரிக் டன்களாக இருக்கும்.





***2001-2002 ஆம் ஆண்டில் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழ் வருமாறு:—***

| | ஆண்டு இலக்கு | உள்ளபடி | சாதனை சதவிகிதம் |
|---|---|---|---|
| | | (டன்களில்) | |
| **தொழிற்சாலைக்குகந்த உப்பு** | | | |
| உற்பத்தி | 85,380 | 91,280 | 106.91 |
| விற்பனை | 1,15,000 | 1,16,908 | 101.66 |
| **இரும்பு சத்து உப்பு** | | | |
| உற்பத்தி | 2,930 | 2,754 | 93.99 |
| விற்பனை | 2,850 | 2,862 | 100.42 |
| **டை-எதில் கார்போமைசீன் சத்துக் கலக்கப்பட்ட நல உப்பு (*)** | | | |
| உற்பத்தி | 1,397 | 1,397 | 100 |
| விற்பனை | 1,550 | 1,549 | 99.94 |
| **அயோடின் கலந்த 'அரசு' உப்பு** | | | |
| உற்பத்தி | 12,285 | 13,446 | 109.45 |
| விற்பனை | 12,320 | 13,238 | 107.45 |

* டை-எதில் கார்போமைசீன் சத்துக் கலக்கப்பட்ட நல உப்பு வழங்கும் திட்டம் 30-9-2001 உடன் நிறுத்தப்பட்டுள்ளது.

***2002-2003 ஆம் ஆண்டுக்கான இலக்கு***

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகத்தின்மூலம் மட்டும் தற்பொழுது தொழிற்சாலைக்குகந்த உப்பு தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. தொழிற்சாலைக்குகந்த உப்பை வாங்கும் வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப, 2002-2003 ஆம் ஆண்டில் 700 உப்பளப் பாத்திகளை பயன்படுத்தி 1,50,000 மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[2002 மே 7

2002-2003ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனை இலக்குகள் கீழ்வருமாறு:-

| | (டன்களில்) |
|---|---|
| தொழிற்சாலைக்குகந்த உப்பு | |
| * உற்பத்தி | 1,50,000 |
| * விற்பனை | 1,35,000 |
| இரும்புச் சத்து கலந்த உப்பு | |
| * உற்பத்தி | 3,500 |
| * விற்பனை | 3,500 |
| அயோடின் கலந்த 'அரசு' உப்பு | |
| * உற்பத்தி | 18,000 |
| * விற்பனை | 18,000 |

தமிழ்நாடு உப்பு நிறுவனம், அயோடின் கலந்த அரசு உப்பை கிலோ ஒன்றுக்கு ரூ.2.50-க்கு மலிவு விலையில் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் வறுமைக் கோட்டில் வாழும் ஏழை மக்களுக்கு வழங்கும் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டதைத் தொடர்ந்து நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட உதிரி உப்பு கிலோ ரூ.4/-க்கு பொது விநியோகத் திட்டத்தின்மூலம் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### நிதிச் சாதனை

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1990-91 ஆம் ஆண்டு முதல் இலாபம் ஈட்டி வருகின்றது. 2001-2002 ஆம் ஆண்டில் இந்நிறுவனம், ரூ.42.70 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

### ஆதாயப் பங்கு அறிவிப்பு

இந்நிறுவனம், 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.15.85 இலட்சம் அரசுக்கு ஆதாயப் பங்குத் தொகையாகவும், ரூ.7.46 இலட்சம் குத்தகைத் தொகையாகவும் வழங்கியுள்ளது. தமிழக அரசில் நல்ல நிலையில் இயங்கும் ஒரு சில பொதுத் துறை நிறுவனங்களில் ஒன்றாக தமிழ்நாடு உப்பு நிறுவனம் இயங்கி தமிழக அரசுக்கு ஆதாயப் பங்குத் தொகையைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்த ஆண்டு சிறப்பு ராயல்டி (Royalty) தொகை ரூ.1.643 கோடி செலுத்தியுள்ளது.



2002 மே 7]

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

கனிம நிர்வாகம் மற்றும் கனிம ஆய்வுகள் ஆகியவை புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் இரு தலையாய பணிகளாகும். மாவட்டங்களில் கனிம நிர்வாகத்தை மேம்படுத்தவும், கனிம வருவாயைப் பெருக்கவும், அறிவியல் முறையில் கனிமத்தை கண்டுபிடித்து மேம்பாடு அடையச் செய்யவும், பெருங்கனிம மற்றும் சிறுகனிம சட்ட மற்றும் விதிகளைக் கடைப்பிடித்து குத்தகை அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கனிம நிர்வாகத்தின் முக்கிய அம்சமாக, அனுமதி இல்லாமல் கனிமங்களைத் தோண்டுவதையும், அவற்றை எடுத்துச் செல்வதையும் கண்காணித்து, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகளின் மூலம் அரசுக்கு கனிம வருவாய் இழப்பு ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பெருங்கனிமங்கள் மற்றும் சிறுகனிமங்களை நடைமுறை ஆய்வு முறைகளிலும், தற்போதுள்ள நவீன அறிவியல் முறைகளிலும் ஆய்வு செய்து கனிம இருப்புகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இவற்றோடு நீலகிரி மற்றும் கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் புவி தொழில்நுட்ப ஆய்வுப் பணிகள் தொடர்ந்து மேற்கொண்டு, நிலச்சரிவு மற்றும் மண் சரிவு ஏற்படும் பகுதிகள் கண்டறியப்பட்டு, முன்தடுப்பு நடவடிக்கைக்கான அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. மேலும், மாநிலத்தில் மலைப்பகுதிகளில் திட்டப்பணி செயல்பாட்டு வளர்ச்சிக்கும், குடியிருப்புகள் கட்டுவதற்கும், நிலச்சரிவுகள் நிகழாவண்ணம் தடுப்பு வழிவகைகள் செய்வதற்கும், ஆய்வுகள் மேற்கொள்வதோடு சுற்றுச்சூழல் மாறுபாட்டால் ஏற்படும் அழிவுகள் ஏற்படாமலிருக்கவும் தக்க பாதுகாப்பு அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### கனிமங்களை முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்

பட்டா நிலங்களில் பெருங்கனிமங்களுக்கு சுரங்கக் குத்தகை வழங்கும் அதிகாரம் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநரிடமே தொடர்ந்து இருந்து வருகிறது. அரசு புறம்போக்கு நிலங்களில் பெருங்கனிமங்களுக்கும், கிரானைட்டிற்கும் முன்னோட்ட ஆய்வு அனுமதி, கனிம ஆய்வு உரிமம் மற்றும் குத்தகை வழங்கும் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது. கிரானைட், மணல், கல் போன்றவற்றிற்கான மேல்முறையீட்டு மனுக்களை ஆய்வு செய்தல், கள்ளத்தனமாகக் குவாரிப் பணி செய்தல் மற்றும் சட்ட விரோதமாக கனிமங்களை எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றினை தடுத்து, அரசுக்கு கனிம வருவாய்

இழப்பு ஏற்படுதலைத் தவிர்த்தல் ஆகிய பணிகளும் இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சீரிய முறையில் இத்துறை இயங்கவும், சுரங்க குத்தகை உரிமம், குவாரிக் குத்தகை உரிமம் ஆகியவற்றுக்கு முன்னோட்ட ஆய்வு அனுமதி வழங்குவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் ஏதுவாக கீழ்க்கண்ட சட்டங்கள் மற்றும் விதிகள் நடைமுறையில் உள்ளன.

(1) சுரங்கச் சட்டம், 1952.

(2) கனிமங்களும் சுரங்கங்களும் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957.

(3) வனப்பகுதி (பாதுகாப்பு) சட்டம், 1980.

(4) சுரங்க விதிகள், 1955.

(5) தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள், 1959.

(6) கனிமச் சலுகை விதிகள், 1960.

(7) உலோக சுரங்க ஒழுங்குபடுத்துதல் விதிகள், 1961.

(8) வனப்பகுதி (பாதுகாப்பு) விதிகள், 1981.

(9) கனிமப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு விதிகள், 1988.

(10) கிரானைட் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு விதிகள், 1999.

இச்சட்டங்களையும் விதிகளையும் பயன்படுத்தி சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், கனிம நிருவாகத்தை ஒழுங்குபடுத்தவும் இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

## கனிம ஆய்வு

புவியியல் மற்றும் சுரங்கத் துறை, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் கிடைக்கப்பெறும் கனிமங்களைப் பற்றிய புவியியல் ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. பெரம்பலூர் (அரியலூர்) மாவட்டத்தின் சில பகுதிகளில் சுண்ணாம்புக்கல் இருப்பு பற்றிய ஆய்வு, சுண்ணாம்புக்கல் மற்றும் மேக்னசைட் சுரங்க கனிமக்கழிவுகளில் கனிம இருப்புபற்றிய ஆய்வு, வெளிநாட்டு ஏற்றுமதிக்கு தகுதி வாய்ந்த கிரானைட் பற்றி தருமபுரி மற்றும் சேலம் மாவட்டத்தில் ஆய்வு, கொடைக்கானல் மற்றும் நீலகிரி மலைப்பகுதியில் புவி தொழில்நுட்ப





ஆய்வுகள் நடப்பு ஆண்டில் தொடர்ந்து நடைபெறும். இத்துறையின் கனிமங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து கணினிமயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் நுண்பகுப்பாய்வு மற்றும் மரபுவழி ஆய்வுக்கூடங்களில் கனிம ஆய்வின் மூலம் சேகரிக்கப்படும் கனிம மாதிரிகள்மீது வேதியியல் ஆய்வுகள் செய்யப்படுகின்றன. நுண்ணிய வேதியியப் பகுப்பாய்வகத்தில் 'மில்லியன்' மற்றும் 'பில்லியன்' அளவு துல்லியமாகக் கணக்கிடும் அளவிற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வல்லுநர்கள் கற்று அளித்த மற்றும் அந்நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி வேதியியல் பகுப்பாய்வுகள் செய்யப்படுகின்றன. இத்துறையின் புவி வேதியியப் பகுப்பாய்வாளர்கள் நவீன தரம் உயர்ந்த நுண்ணிய பகுப்பாய்வு கருவிகள்மூலம் வேதியியப் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கனிம வருவாய்

வரியில்லா வருமானம் ஈட்டக்கூடிய சில அரசுத் துறைகளில் ஒன்றாக புவியியல் மற்றும் சுரங்கத் துறை தற்போது விளங்கி வருகின்றது. இத்துறை, தற்போது குறைவான அடிப்படை மற்றும் நிருவாக வசதிகளைக் கொண்டிருந்தாலும் ஒவ்வோர் ஆண்டும் கனிம வருவாய் ஈட்டுவதில் தேவையான செயல் ஊக்கம் மற்றும் முனைப்பினைக் கொண்டு அரசுக்கு அதிக வருவாய் ஈட்டி வருகின்றது. சிறந்த நிருவாகத் திறனுடன் இத்துறையின் தீவிர செயல்பாடு மற்றும் சாதனைகளின் மூலமாகவும் ஈட்டப்பட்டுள்ள கடந்த ஆண்டுகளுக்குரிய வருவாய் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| ஆண்டு<br>(1) | பெறப்படும் வருவாய் (ரூபாய் கோடியில்)<br>(2) |
|---|---|
| 1991-92 | 22.14 |
| 1992-93 | 63.17 |
| 1993-94 | 54.50 |
| 1994-95 | 64.80 |
| 1995-96 | 66.90 |

[2002 மே 7

| (1) | (2) |
|---|---|
| 1996-97 | 73.85 |
| 1997-98 | 89.94 |
| 1998-99 | 110.37 |
| 1999-2000 | 124.86 |
| 2000-2001 | 407.07* |
| 2001-2002 | 162.42 |

(*ரூ.407.07 கோடி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடமிருந்து பழுப்பு நிலக்கரிக்காக, உரிமத் தொகை முன்பணமாகப் பெற்ற ரூ.250 கோடி உள்ளிட்டதாகும்.)

எதிர்வரும் காலத்திலும் இத்துறையின் ஊக்கமான தொடர் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்கவகையில் கனிம வருவாயினைக் கூடுதலாக ஈட்டித் தரக்கூடிய பெருமையைப் பெறும். மேலும் வாகனங்களின் மூலம் நிகழும் கனிமத் திருட்டு மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கனிம அகழ்வுகள் ஆகியவற்றை தடுத்து நிறுத்தும் தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு, புதியதாக கனிம இருப்பிடங்கள் கண்டறியப்பட்டு அவற்றைத் தோண்டி எடுக்கவும், அதற்குரிய புதிய உரிமங்களை வழங்கவும் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் அரசுக்கு வருவாயைப் பெருக்கும் வழிகளையும், சமுதாயத்தில் பல்வேறு பிரிவினருக்கு பெரும் அளவில் வேலைவாய்ப்புகளை வழங்கிடும் பின்னணியும் உருவாக்கப்படும்.

## சர்க்கரைத் தொழில்

தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 கூட்டுறவுத் துறையிலும், 3 பொதுத் துறையிலும் மற்றும் 19 தனியார் துறையிலும் உள்ளன. 16 கூட்டுறவுச்சர்க்கரை ஆலைகளில், 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் மூன்றும், கரும்பு கொள்முதல் விலை அதிகரிப்பு, சர்க்கரை விலைச் சரிவு, உற்பத்திச் செலவு அதிகரிப்பு மற்றும் சர்க்கரைக் கட்டுமானக் குறைவு போன்றவற்றினால் நட்டம் ஏற்பட்டு நலிவடைந்துள்ளன. இந்நலிவடைந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளைப் புனரமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆலைகளிலுள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல் திறனை



2002 மே 7]

அதிகப்படுத்துவதற்கும், கரும்பு பெருக்கத்திற்கும் சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து மைய அரசிடம் உதவி கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளான அறிஞர் அண்ணா, மதுரா மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகள் நலிவடைந்த ஆலைகளாக அறிவிக்கப்பட்டு, தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்திடம் பதிவு செய்யப்பட்டுள்ளன. தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்தின் ஆணைப்படி, தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்தை தொழில்நுட்பப் பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க இயங்கும் முகவர்கள் நியமித்துள்ளனர். பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கான புனரமைப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் இரண்டு ஆலைகளுக்கான புனரமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுத் துறையில் மூன்று ஆலைகள், அதாவது எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (சேத்தியாதோப்பு), செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (அனக்காவூர்) மற்றும் சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (அரூர்) ஆகியவற்றில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆலைகளில் உற்பத்தியாகும் உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கப்பட்டு வருகிறது. செங்கல்வராயன், தருமபுரி மற்றும் கள்ளக்குறிச்சி-1 (மூங்கில்துறைப்பட்டு) கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் முழுத் திறனுடனான (fullfledged) இணை மின் திட்டத்தையும், கோமுகி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இடைநிகழ்வு (incidental) இணை மின் உற்பத்தித் திட்டத்தையும் நிதி நிறுவனங்களிடம் நிதியுதவி பெற்று மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இயந்திரங்களை மாற்றியமைத்து சீரமைப்பதன் மூலம் சர்க்கரை ஆலைகளின் செயல்பாட்டை மேம்படுத்தி அதிக சர்க்கரை கட்டுமானம் பெறவும், கரும்பு அரைவையை மேம்படுத்தவும், ஆலை நிறுத்த நாட்களைக் குறைக்கவும் மற்றும் இழப்பைக் கட்டுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1992-1993 ஆம் ஆண்டுகளில் சேலம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, திருத்தணி, அமராவதி, கள்ளக்குறிச்சி, மதுராந்தகம் ஆகிய

ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் நவீனப்படுத்தல் மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ரூ.77.72 கோடி கடன் ஒப்பளித்தது. இந்தச் சர்க்கரை ஆலைகள் கடனை வட்டியுடன் செலுத்தத் தவறியதால் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூ.102.03 கோடியாகியது. 31-3-2001 அன்று வரையில் செலுத்த வேண்டிய தவணை தவறிய கடன்கள் மீதான 50 விழுக்காடு சாதாரண வட்டி, வட்டியின் மீது வட்டி மற்றும் 2.5 விழுக்காடு தண்டவட்டித் தொகை, ஆக மொத்தம் ரூ.32.74 கோடி, ஒட்டுமொத்தமாக ஒரே தவணை முறையில் செலுத்தும் திட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்ய தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் முன்வந்தது. இத்திட்டத்தின்கீழ், மாநில அரசு செலுத்த வேண்டிய தொகை ரூ.69.29 கோடியாகும். இதில் இதுவரை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ.47.86 கோடி செலுத்தப்பட்டுவிட்டது.

16. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் நடைமுறை மூலதன நிதியுதவிககாகவும், இந்த ஆலைகள் 2000-2001 அரைவைப் பருவத்திற்கு கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு விலை பாக்கியைக் கொடுப்பதற்கும் அரசு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடம் ரூ.125.88 கோடி கடனுதவி வழங்கக்கோரியது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 11 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு, ரூ.87.20 கோடி கடன் வழங்க ஒப்புக்கொண்டு, ரூ.50 கோடி முதல் தவணையாகவும், ரூ.37.20 கோடி இரண்டாவது தவணையாகவும் வழங்கியுள்ளது.





## இணைப்பு II

(84 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பினைக் காண்க)

## கோரிக்கை எண்10

## வணிக வரித் துறை—வணிக வரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

### 1. முன்னுரை

*1.1.* வணிக வரிகள் தமிழக அரசுக்கு மிக அதிகமான வரி வருவாயை ஈட்டித் தருகிறது. சமூக நலம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்காக பெருகிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில், தமிழக அரசின் வரிவிதிப்பு கொள்கையானது அதிகமான வருவாயை திரட்டுவதோடு, ஏற்கனவே அதிகமான வரி வீதத்திற்குட்பட்ட பொருட்கள் மீது மேலும் வரிச்சுமையை அதிகரிக்காத முறையில் வரி ஆதார அடிப்படையை விரிவுபடுத்தும் நோக்கம் கொண்டது. அதேசமயம் பொதுமக்கள் அதிக வரிச் சுமைக்கு ஆளாகாதவாறும் கவனம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவ்வரசின் முழு வரிவிதிப்புக் கொள்கையானது, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் துரிதப்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது.

### *1.2.* வணிக வரித் துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள்

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970
3. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
4. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம், 1961
6. தமிழ் நாடு பந்தைய வரிச் சட்டம், 1935
7. தமிழ்நாடு ஆடம்ப வரிச் சட்டம், 1981
8. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச்சட்டம், 1990

9. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983.

10. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001.

## 2. துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்

செயலாக்க அளவில், வணிக வரித் துறையானது வணிக வரி ஆணையரின் தலைமையில் செயல்படுகிறது. ஆணையருக்கு உதவியாக தலைமையகத்தில் இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் கொண்ட குழுக்கள் செயல்படுகின்றன. இத்துறையில், 10 வணிக வரிக் கோட்டங்களும், ஒரு இடைமாநில புலனாய்வுக் குழுவை உள்ளடக்கிய 8 செயலாக்கக் கோட்டங்களும் உள்ளன.

### 2.1. வரி விதிப்பு பிரிவு

இத்துறை நிருவகிக்கும் பல சட்டங்களின்கீழ் வரி விதிப்பு, கேட்பு மற்றும் வசூல் பணிகளைக் கவனிக்க மாநிலத்தில் 10 வணிக வரிக் கோட்டங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் துணை ஆணையர் தலைமையில் செயல்படுகின்றன. இக்கோட்டங்கள், மேலும் 40 வணிக வரி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன; சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள வணிக வரி மாவட்டங்கள் சரகம் என அழைக்கப்படுகின்றன. மேலும் 6 விரைவு வழி வரி விதிப்பு வட்டங்கள் உள்ளிட்ட (உதவி ஆணையரின் தலைமையில், 4 சென்னையிலும், 2 கோயம்புத்தூரிலும்) 323 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றில் 6 வரி விதிப்பு வட்டங்கள் உதவி ஆணையர்கள் தலைமையிலும், 236 வரி விதிப்பு வட்டங்கள் வணிக வரி அலுவலர் தலைமையிலும், மற்றும் 81 வரி விதிப்பு வட்டங்கள் துணை வணிக வரி அலுவலர் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன.

### 2.2. தணிக்கைப் பிரிவு

வரி விதிப்புத துறையில் உள்ளீட்டுத் தணிக்கைப் பிரிவு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்கென 40 உள்ளீட்டு தணிக்கைக் குழுக்கள் கொண்ட உள்ளீட்டு தணிக்கைப் பிரிவு ஒன்று உள்ளது. வரி விதிப்பு தொடர்புடைய பதிவுகள் அனைத்தும் உள்ளீட்டுத் தணிக்கை மற்றும் மாநிலக் கணக்காயர் குழுவினரால் தணிக்கை செய்யப்படுகின்றன. உள்ளீட்டுத் தணிக்கை மற்றும் மாநிலக் கணக்காயர் தணிக்கைக் குழுவின் அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கையினைக் கண்காணிக்க ஒரு தனிக் குழு வணிக வரி ஆணையர் அலுவலகத்திலுள்ள இணை ஆணையர் (தணிக்கை) அவர்களின் கண்காணிப்பின்கீழ் செயல்பட்டு வருகிறது. 2001-2002



ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2002 முடிய) பணித்திறன் கீழ்கண்டவாறு உள்ளது:-

| | 2001-2002 (பிப்ரவரி 2002 முடிய) | | |
|---|---|---|---|
| | பழையன | புதியன | மொத்தம் |
| உள்ளீட்டு தணிக்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளின் எண்ணிக்கை | 29,962 | 35,206 | 65,168 |
| உள்ளீட்டு தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளில் நிவர்த்தி செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை | 18,198 | 16,633 | 34,831 |
| மாநில கணக்காயரின் தணிக்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டு நிலுவையிலுள்ள பத்திகளின் எண்ணிக்கை | 13,365 | 3,549 | 16,914 |
| நிவர்த்தி செய்யப்பட்ட பத்திகளின் எண்ணிக்கை | 2,204 | 338 | 2,542 |

### 2.3. செயலாக்கப் பிரிவு

வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு செயலாக்கப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பிரிவிலுள்ள 7 கோட்டங்களில், 7 துணை ஆணையர்களும், 10 உதவி ஆணையர்களும் மற்றும் 15 வணிக வரி அலுவலர்களும் உள்ளனர். செயலாக்கப் பிரிவில் 29 வணிக வரி தணிக்கைச் சாவடிகளும், 48 சுற்றும் படைகளும் உள்ளன. மேலும் ஒரு துணை ஆணையர் தலைமையிலான இடை மாநில புலனாய்வுக் குழுவும் செயல்பட்டு வருகிறது. செயலாக்கப் பிரிவு, கடைகள், திரையரங்குகள் போன்றவற்றை ஆய்வுசெய்வது, வாகனங்களைச் சோதனையிடுவது போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

## 3. மேல்முறையீட்டு மன்றங்கள்

### 3.1. முதல் மேல்முறையீட்டு அமைப்பு

மேல்முறையீட்டின் முதற்கட்டமாக, 20 மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒருவருமாக

2 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் உள்ளனர். இவர்கள் விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத் தலைவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றனர்.

2001-2002 ஆம் ஆண்டில் மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்களால் தீர்வு செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை 14,556 ஆகும்.

### 3.2. விற்பனை வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம்

விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள் ஆகியோர்களின் தீர்ப்புகளின் மீது எழும் மேல்முறையீடுகளை விசாரிக்கிறது. இத்தீர்ப்பாயம் 4 விற்பனை வரி நடுவர் ஆயங்களாகச் செயல்பட்டு வருகின்றது. முதன்மை ஆயம் சென்னையிலும் மற்றும் 3 கூடுதல் ஆயங்கள் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலும் உள்ளன.

சென்னையில் உள்ள முதன்மை ஆயத்திற்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, தீர்ப்பாயத் தலைவராகவும், இணை ஆணையர் தரத்தில் ஒருவர் துறை உறுப்பினராகவும் மற்றும் இந்திய தணிக்கை மற்றும் கணக்கியல் துறையைச் சார்ந்த ஒருவர் இரண்டாம் உறுப்பினராகவும் உள்ளனர். கூடுதல் ஆயங்கள், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினரைத் தலைவராகவும், கூடுதல் துறை உறுப்பினராக துணை ஆணையர் நிலையில் ஒருவரையும் கொண்டு இயங்குகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் இத்தீர்ப்பாயங்களால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 3,831 ஆகும்.

### 3.3. தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம்

தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. இத்தீர்ப்பாயம் தலைவர், உப தலைவர், நீதித் துறை உறுப்பினர் மற்றும் நிருவாக உறுப்பினர் ஆகியோர் அடங்கியது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை முறையே 1,613 மற்றும் 446 ஆகும்.

### 4. வணிக வரி பணியாளர்கள் பயிற்சி மையம், சென்னை.

வணிக வரித் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையம் 1982-ல் தொடங்கப்பட்டு சென்னையில் இயங்கி வருகிறது. இந்தப் பயிற்சி மையம் வரி நிர்வாகம் குறித்த நினைவுகூர் பயிற்சிகள் மற்றும்



சிறப்பு விரிவுரைகளை அளிக்கிறது. மேலும், இம்மையம் கணினி மற்றும் மதிப்பு கூட்டு வரிவிதிப்பிற்கான பயிற்சிகளை அளிக்கிறது. இப்பயிற்சி மையம், ஒரு துணை ஆணையர் தலைமையில் இரண்டு உதவி ஆணையர்கள் மற்றும் ஒரு வணிக வரி அலுவலருடன் ஆசிரியர் குழுவாக இயங்கி வருகின்றது. கணினி பயிற்சிப் பிரிவு ஓர் உதவி புள்ளி விவர இயக்குநர் தலைமையில் செயல்படுகிறது.

**பயிற்சி மையத்தின் செயல்பாடுகள் கீழ்வருமாறு:—**

| பயிற்சித் திட்டத்தின் பெயர். | பயிற்சிகளின் எண்ணிக்கை. | பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்கள். | 2000-2001 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை. | 2001-2002 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| பணியிடைப் பயிற்சி | 5 | வணிகவரி அலுவலர் | 91 | 77 |
| | | துணை வணிக வரி அலுவலர் | 18 | 59 |
| | | உதவி வணிக வரி அலுவலர் | 61 | 76 |
| கணினிப் பயிற்சி | 42 | வணிக வரி அலுவலர் | . | 83 |
| | | துணை வணிக வரி அலுவலர் | . | 82 |
| | | உதவி வணிக வரி அலுவலர் | . | 85 |
| | | உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் | 700 | . |

[2002 மே 7

## 5. வருவாய் வசூல் நிலவரம்

5.1. 2000-2001 ஆம் நிதியாண்டின் மொத்த வரி வசூல் ரூ.8663.72 கோடி. 2001-2002 ஆம் நிதியாண்டில் மொத்த வசூல் ரூ.8904.68 கோடியாகும். கடந்த 5 ஆண்டுகளில் இத்துறை சம்பந்தப்பட்ட அனைத்துச் சட்டங்களின்கீழ் வரப்பெற்ற வருவாயின் விவரங்கள் பின் வருமாறு:-

| வரிசை எண். | சட்டத்தின் பெயர்கள். | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1997-1998 | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
| 1. | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 | 4963 | 5455 | 6185 | 7354 | 7541 |
| 2. | மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 | 707 | 779 | 813 | 862 | 904 |
| 3. | தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 | 109 | 91 | 86 | 74 | 68 |
| 4. | தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935 | 7 | 5 | 5 | 6 | 6 |
| 5. | தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981 | 65 | 69 | 71 | 92 | 89 |
| 6. | தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990. | 213 | 183 | 221 | 276 | 297 |



2002 மே 7]

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம் 2001, 01-12-2001 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டு, 6 பொருட்கள் மீது நுழைவு வரி விதிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் பிப்ரவரி 2002 வரை கிடைத்த வருவாய் ரூ.1841.36 இலட்சம்.

## 6. வணிக வரித் துறையின் வருவாய் மற்றும் செலவினம்

(ரூபாய் கோடியில்)

| வருடம் | வருவாய் | செலவினங்கள் |
|---|---|---|
| 1997-1998 | 6063 | 68.65 |
| 1998-1999 | 6583 | 92.42 |
| 1999-2000 | 7381 | 99.76 |
| 2000-2001 | 8664 | 98.57 |
| 2001-2002 | 8905 | 84.07 |

(பிப்ரவரி 2002 முடிய)

## 7. சமச்சீர் வரி விதிப்பு விகிதங்கள்

1999, நவம்பர் திங்களில் புதுடில்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், சமச்சீர் வரிவிதிப்பு முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது. இது வரிச் சீரமைப்பின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டது.

7.1. தமிழ்நாடு அரசு, 40 பொருட்கள் மீது 23-01-2000 அன்றும், 25 பொருட்கள் மீது 18-08-2001 அன்றும் மற்றும் 4 பொருட்கள் மீது 01-12-2001 அன்றும் விற்பனை வரி விகிதத்தை, சமச்சீர் வரிவிகித முறைக்கு இணக்கமான வகையில் மாற்றியமைத்துள்ளது.

7.2. மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax-Vat)

அதிகாரம் அளிக்கப்பட்ட மாநில நிதி அமைச்சர்கள் குழு அண்மையில் எடுத்த முடிவின்படி, அனைத்து மாநிலங்களும் 01-04-2003 முதல் மதிப்பு கூட்டு வரி முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். மேற்கண்ட பரிந்துரைக்கிணங்க, வணிக வரி ஆணையர் அலுவலகத்தின் வலைதளத்தில் (Website), மதிப்புக் கூட்டு வரி

[2002 மே 7

செயல்படுத்துதல் குறித்த ஆலோசனைகளை வழங்கக் கோரி "ஒரு விவாதக் குறிப்பு" வைக்கப்பட்டுள்ளது. மேலும், இதுகுறித்து வணிக வரித் துறை அலுவலர்களுக்கும் மற்றும் வணிகர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை, 7 இணை ஆணையர்களுக்கும், 16 துணை ஆணையர்களுக்கும், 38 உதவி ஆணையர்களுக்கும் மற்றும் 5 வணிகவரி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மதிப்புக் கூட்டு வரி முறையினை செயல்படுத்துவதற்கான ஆயத்த நிலையைக் கருத்தில் கொண்டு, 2002-2003 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டு வரிமுறையானது, குறைந்த வரிவிதிப்பு விகிதங்கள், ஒவ்வொரு நிலையிலும் கட்டிய வரியை ஈடுகட்டுதல் அல்லது பலமுனை மதிப்புக் கூட்டு வரிவிதிப்பு போன்றவற்றை உள்ளடக்கியதாகும். மதிப்புக் கூட்டு வரியின்கீழ் விதிக்கப்படவிருக்கும் வரி விகிதங்களானது,

அ) விலக்களிக்கப்பட்ட சில இனங்களின் பட்டியல்;

ஆ) 4 விழுக்காடு வரிவிதிக்கப்படும் சில அடிப்படைத் தேவைக்கான பொருட்கள் மற்றும் தொழில் உள்ளீட்டுப் பொருட்கள்;

இ) ஒரு விழுக்காடு தளவரிக்குட்படும் தங்கக்கட்டிகள் மற்றும் தங்க ஆபரணங்கள் மற்றும்;

ஈ) வருவாய் சமநிலை வரி விகிதம் ஆகியன.

மதிப்புக் கூட்டு வரியின் கீழ் பெட்ரோலியம் பொருட்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபானங்கள் மற்றும் கரும்பு ஆகிய பொருட்கள் உட்படவில்லை. இருப்பினும், வரிவிலக்கு அளிக்கப்படும் இனங்கள் கட்டுக்குள் இல்லாவிடில் வருவாய் சமநிலை வரி விகிதம் (RNR) அதிகமாக இருக்கும். மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முறைக்கு விரைவில் மாறவிருப்பதைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் தயாரிப்பதற்கான (எரிபொருள் நீங்கலாக) படிவம் 17 கொடுத்து வாங்கப்படும் வரி செலுத்தப்பட்ட உள்ளீட்டுப் பொருட்கள், உறுப்புகள் மற்றும் உதிரி பாகங்களின் மீது செலுத்தப்பட்ட வரியை முழுமையாக ஈடுகட்டிக் கொள்ளலாம். (Full-set off) 10 விழுக்காடு வரிவிதிப்புக்கு உட்பட்ட காகிதம், இயந்திரத்தில் செய்யும் தீப்பெட்டி, அச்சிடப்பட்ட பொருட்கள் (பேப்பர் மற்றும் இங்க் மட்டும்)



2002 மே 7]

12 விழுக்காடு வரிவிகிதத்திற்கு உட்பட்ட மின் மற்றும் மின்னணுப் பொருட்கள், கையினால் செய்யப்படும் சோப்புகள், மறு விற்பனை மீது வரி விதிக்கவும் மற்றும் 8 விழுக்காடு வரி விகிதப்பகுதியை கலைக்கவும் வழி வகுக்கப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட பொருட்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வரிவிலக்கு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

### *8. வரி விகிதத்தில் மாற்றங்கள்*

***8.1.*** அரிசி மற்றும் கோதுமைக்கு 2 விழுக்காடு வரி (இருப்பினும், பொது விநியோக முறை விற்பனைக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது).

* வெல்லம், மிளகு, பருப்பு வகைகள், சித்தா மற்றும் யுனானி மருந்துகள், சாம்பிராணி, உடனடி சாம்பிராணி, தைக்கப்பட்ட கைக்குட்டைகள், மீள் சக்தி சேமிப்புக் கருவிகள் [சூரிய சக்தியால் இயங்கும் சமையற் கருவிகள், நகரக் கழிவுகளை எரிசக்தியாக மாற்றியமைக்கும் சாதனங்கள், எரி சக்தி சேமிக்கும் அடுப்புகள் (Chulas) நீங்கலாக], துணிக்கழிவுகள் மற்றும் தேங்காய் துருவல் மீதான பொருட்களுக்கு 4 விழுக்காடு வரி.

* அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பெட்ரோலியப் பொருட்கள், அறிவிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் இணக்க விகித வரி செலுத்தும் வணிகர்களுக்கும் மறு விற்பனையில் வரிவிலக்கு, அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் அறிவிக்கப்பட்ட பொருட்களுக்கு உபரி வரியிலிருந்து விலக்கு.

* அலுமினியம், பாக்கு, முந்திரி, சிமெண்ட், தரைக் கற்கள், சாயங்கள், மைகள் (எழுதும் மையை தவிர) பி.வி.சி. குழாய்கள், நீள் குழாய்கள் மற்றும் பொருத்திகள், அச்சிட்ட பொருட்கள், இயந்திரத்தினால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள், மருந்துகள், போட்டோ ஆல்பங்கள், இரப்பர், தையல் இயந்திரங்கள், தட்டச்சுகள் மற்றும் மரங்கள் முதலியவற்றிக்கு 8 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக வரி உயர்வு.

* கூடுதல் வரி விதிப்பிலிருந்து அரிசி, கோதுமை, பருப்பு வகைகளுக்கு விலக்களிக்கப்படுகிறது.

* உடற்கட்டமைப்பிற்கான சாதனங்கள் உள்ளடங்கிய உடற்பயிற்சிப் பொருட்கள் மற்றும் சாதனங்கள், எண்ணெய் ஒட்டாத பாத்திரங்கள்

[2002 மே 7

மற்றும் தொலைக்காட்சி வானலை வாங்கிகள் ஆகியவற்றின் மீதான 4 விழுக்காடு வரி 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

• வீட்டு உபயோகப் பாத்திரங்கள் தவிர்த்த உலோகப் பாத்திரங்கள், அழுத்த மற்றும் சூடு எதிர்ப்புச் சமையற் பாத்திரங்கள், மின் விசிறிகள், மின்னணுவால் இயங்கும் பொருட்கள், டம்பர்கள் (Dumpers) மற்றும் மண்வாரி இயந்திரங்கள் ஆகியவற்றின் மீதான வரி 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

• மின் மற்றும் மின்னணுப் பொருட்களை மறுவகைப்படுத்தும் முயற்சியாக, கணினி மற்றும் கணினி புற உறுப்புக்கள், மென் பொருட்கள் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட மின்னணுப் பொருட்கள் மீது 4 விழுக்காடு வரியும், அனைத்து மின் மற்றும் மின்னணுப் பாகங்கள், துணைப் பொருட்கள் மின் சக்தி மற்றும் மின் கடத்து மின்னியல் உறைகலன்கள் (Power and Shunt Capacitors) ஆகியவை மீது 10 விழுக்காடு வரியும், இதர மின் மற்றும் மின்னணுப் பொருட்கள் மீது 12 விழுக்காடு வரி விகிதம் என மாற்றியமைக்கப்படுகிறது.

• சில இறக்குமதிப் பொருட்களுடன் வேறுசில பொருட்களும் 11-வது அட்டவணையில் சேர்க்கப்படுகிறது.

**8.2. குறைக்கப்பட்ட வரி விகிதங்கள்**

• மூங்கில், புட்டி மூடிகள், வணிகச் சின்னமிடாத மிட்டாய்கள் மற்றும் தின்பண்டங்கள், வணிகச் சின்னமிடாத கேக் மற்றும் ஐஸ்கிரீம் உள்ளிட்ட வணிகச் சின்னமிடாத உணவு பொருட்கள், பருத்தி நூல் கழிவு, கைவினைப் பொருட்கள், பளிச்சிடு செய்யப்பட்ட சணற் பைகள், பனைக் கொழுப்பு அமிலம், வெளுப்புத் திரவம், உயரடர்த்தி பாலி எத்திலின் (HDPE) மற்றும் பாலி பொரபலின் (Poly Propylene) ஆகியவற்றால் நெய்யப்பட்ட துண்டுப்பட்டைகள் மற்றும் துணி, குடைகள், தகரக் கொள்கலங்கள், இலகு மேற்கூரைத்தகடுகள் மற்றும் பதிவு பெறாத பிஸ்கட்டுகளின் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அனற்பொறியூட்டும் செருகிகள் (Spark Plug) மீதான வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டு உள்ளது.

• ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டு உள்ளது.



2002 மே 7]

• பதிவுப் பெறாத, வணிகச் சின்னமுடைய அனைத்து விதமான வறுவல்கள் (Chips) மீதான 16 விழுக்காடு வரி 10 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**8.3. வரிவிலக்கு அளிக்கப்பட்ட இனங்கள்**

• முன்னதாக 4 விழுக்காடு வரி விதிப்பிற்குட்பட்டிருந்த பருத்திக் கொட்டைப் பொட்டு, வேப்பம் பிண்ணாக்கு, மீன்பிடி வலை, இரப்பர் விளையாட்டு பலூன்கள்;

• வணிகச் சின்னமிடாத வெண்ணெய் (முன்னர் கடைசிக் கட்ட கொள்முதலில் வரிவிலக்கு)

• முன்னதாக 12 விழுக்காடு வரி விதிப்பிற்குட்பட்டிருந்த வணிகச் சின்னமிட்டு சிப்பமாக்கப்பட்ட (Packed) பச்சைக் காய்கறிகள் மற்றும் கனிகள்.

**8.4** OPC மற்றும் PPC சிமெண்ட் விற்பனை விலை 50 கிலோ உள்ள மூட்டைக்கு (வரி உட்பட) முறையே ரூ.145/- மற்றும் ரூ.135/-க்கு மேலே இருப்பின் அவ்விற்பனை மீது 24 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது. இவ்வகையிலான சிமெண்ட்டின், இரண்டாவது மற்றும் அதன்பின் நடைபெறும் விற்பனை மீது 5 விழுக்காடு வரி விதிக்கப்படும். மேற்கூறப்பட்ட விற்பனை விலைக்குக் கீழே விற்கப்படும் சிமெண்ட்டின் மீது தற்போதுள்ள வரி விகிதப்படி முதல் விற்பனையில் 16 விழுக்காடும், இரண்டாவது மற்றும் இதர விற்பனையில் 1 விழுக்காடும் வரி விதிக்கப்படும்.

**9. கூடுதல் வருவாயைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்**

9.1. இரண்டாவது மற்றும் இதர விற்பனையாளர்களின் மறுவிற்பனை மீது ஒரு விழுக்காடு விற்பனை வரி விதிக்கப்படும். இவ்வரி விதிப்பு அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் இதர அறிவிக்கப்பட்ட பொருள்கள் நீங்கலாக அனைத்துப் பொருட்களுக்கும் பொருந்தும். வணிகர்களின் விற்று முதல் ஓராண்டிற்கு ரூபாய் பத்து இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், மறு விற்பனை வரி விதிக்கப்படமாட்டாது.

9.2. ஆண்டிற்கு ரூபாய் பத்து இலட்சம் முதல் ரூபாய் 25 இலட்சம் வரை விற்று முதல் உள்ள உணவு விடுதிகள் மீது இணக்க விகித வரியாக ரூ.12,000/- விதிக்கப்பட்டுள்ளது.

[2002 மே 7

9.3. ஒரு பட்டுப் புடவையின் கொள்முதல் மதிப்பு ரூபாய் 3000/-க்கு மேற்பட்டு இருப்பின், ஒரு விழுக்காடு ஆடம்பர வரி விதிக்கப்படும்.

9.4. அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் அறிவிக்கப்பட்ட பொருள்கள் தவிர்த்து ஏனைய பொருட்களின் மீது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படும் விற்பனை வரி மீது 5 விழுக்காடு உள் கட்டமைப்பு உபவரி (Infrastructure Surcharge) விதிக்கப்படும்.

**10. சட்டம் மற்றும் நடைமுறை மாற்றங்கள்**

***10.1.*** *சுய வரி விதிப்புத் திட்டம்:—*

ஆண்டிற்கு பத்து கோடி ரூபாய் வரை விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, சுய வரி விதிப்புத் திட்டம் சில மாற்றங்களுடன் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அனைத்து வணிகர்களுக்கும் பொருந்தும் நிபந்தனைகள்:

(i) 31 அக்டோபர் அன்றோ அதற்கு முன்னரோ நமூனாக்கள் உரிய உறுதிமொழிப் படிவங்களுடன் சமர்ப்பித்தல்.

(ii) மேல்முறையீடு, மறு ஆய்வு மற்றும் நீதிப் பேராணை தவிர்த்து வரி நிலுவைகள் கூடாது.

(iii) வணிகம் முதலாண்டு அல்லது இறுதியாண்டில் இருக்கக்கூடாது.

(iv) வணிகரின் வரி விதிப்புக்கு உட்பட்ட தொகை முந்தைய ஆண்டை விட, குறைந்தது 10 விழுக்காடு உயர்ந்து இருக்க வேண்டும்.

எனினும், ஆண்டு விற்பனைத் தொகை 40 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாமல் உள்ள வணிகர்கள் மேற்கண்ட நிபந்தனைகளுடன், விலை மதிப்பீட்டுக் கணக்கர்/பட்டயக் கணக்கர் கணக்குகளைத் தணிக்கை செய்த சான்று பெறப்பட வேண்டும். ஒரு கோடி ரூபாய் அல்லது அதற்கு மேல் விற்று முதல் உள்ள வணிகர்களுக்கு மேற்கண்ட நிபந்தனைகளுடன் அவ்வணிகர்கள் முந்தைய ஆண்டு செலுத்திய வரியைக்காட்டிலும் 15 விழுக்காடு வரி கூடுதலாகச் செலுத்தி இருக்க வேண்டும். இப்புதிய வழி முறைகள் 2001-2002 வரிவிதிப்பு ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும்.



2002 மே 7]

***10.2. பதிவுச் சான்று புதுப்பித்தல்***

- பதிவுச் சான்று கட்டண விகிதங்களை மாற்றியமைக்கவும், அடுத்த ஆண்டிற்கான பதிவுச் சான்று நடப்பு ஆண்டில் மார்ச் 31-க்கு முன்பும், தண்டத் தொகையுடன் ஏப்ரல் 30 வரையும் புதுப்பிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

- 2002-2003 ஆண்டிற்கு, தண்டத் தொகை இல்லாமல் ஏப்ரல் 30 வரையிலும், தண்டத் தொகையுடன் ஆகஸ்ட் 31 வரையிலும் புதுப்பிக்கலாம்.

***10.3.*** முதல் மேல்முறையீட்டு அலுவலரிடம் மேல்முறையீடு செய்யும் போது வணிகர் கட்ட வேண்டிய சர்ச்சைக்குரிய வரியை தற்போதைய 12.5 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்த தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் உரிய திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

***10.4.*** முதல் மேல்முறையீட்டு அலுவலரின் மீட்டனுப்புகை ஆணையை எதிர்த்து தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வணிகரோ அல்லது துறையோ இரண்டாவது மேல்முறையீடு செய்யும் தற்போதுள்ள வழிமுறை நீக்கப்படவுள்ளது. மேலும், முதல் மேல்முறையீட்டு அலுவலரின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு தொடர்பான சர்ச்சைக்குரிய வரி வசூலினைத் தடை செய்து பிறப்பிக்கப்படும் ஆணை, அம்மேல்முறையீடு மீதான இறுதி ஆணை, 180 நாட்களுக்குள் பிறப்பிக்கப்படாவிட்டால், தடை ஆணை தானாகவே ரத்தாகிவிடும்.

***10.5.*** வரி விதிப்பு அலுவலர்களின் அதிகாரங்களைச் செம்மைப்படுத்தும் வகையில் மிகச்சிறந்த தீர்ப்பின்படி (Best of judgement) இறுதி வரிவிதிப்பு செய்யும்போது மனப் போக்கான வரி விதிப்பினைக் குறைக்கவும் அதனால் ஏற்படும் வரிநிலுவைகள் குவிதலைத் தவிர்க்கவும் சில மாற்றங்களைக் கொண்டுவர வகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி வரி விதிப்பு அலுவலர் ஒரு லட்சத்திற்கு மேல் வரி அதிகரிப்பு செய்ய வேண்டிய மிகச் சிறந்த தீர்ப்பின் அடிப்படையிலான இறுதி வரி விதிப்பு செய்யும் இனங்களில், சம்பந்தப்பட்ட துணை ஆணையரின் முன் ஒப்புதலைப் பெற வேண்டும். இது தொடர்பாக வணிக வரித் துறைச் செயலர், நிதித் துறைச் செயலர் மற்றும் வணிக வரித் துறை ஆணையர் அடங்கிய குழுவிற்கு மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

வருவாயினைப் பாதுகாக்க கீழ்க்கண்ட வழி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன:

***10.6.*** வெளிமாநிலத்திற்கு அனுப்பப்படும் சரக்குகள் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட பொருட்களுக்கு துறையால் வழங்கப்படும் படிவம் 20 பயன்படுத்துவது கட்டாயமாக்கப்படவுள்ளது.

***10.7.*** பணி ஒப்பந்தக்காரர்களைப் பொறுத்தமட்டில், ஒப்பந்தக்காரர் வரிப் பிடித்தம் செய்யாமலிருந்தாலோ, பிடித்தம் செய்த வரியினைச் செலுத்தாமலிருந்தாலோ ஒப்பந்தக்காரரிடம் அத்தொகையை வசூலிக்க சட்டத்தில் வழிவகை செய்யப்படவுள்ளது.

## 11. குறிப்பிட்ட வரி நிலுவை இனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் வழிமுறைகள்

### *11.1 சமாதானத் திட்டம்-2002*

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் சர்ச்சைக்குரிய வரி குறித்து ஒரு புதிய சமாதானத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டம் 3 மாத காலத்திற்கு மட்டும் நடைமுறையிலிருக்கும்.

### *11.2. தீர்வாணையம்*

இந்த ஆணையம், நிலுவையிலுள்ள வரி, உபரி வரி, கூடுதல் வரி மற்றும் தண்டம் ஆகியவற்றை கீழ்க்கண்ட இனங்களில் தீர்வு செய்யும்:—

(1) 1-4-1995-க்கு முன்பு வணிகத்தை நிறுத்திவிட்ட, 28-2-2002 அன்று மேல்முறையீடு ஏதும் நிலுவையில் இல்லாததுமான வணிகர்களின் வரி நிலுவை இனங்கள்.

(2) 1-4-1996 முந்தைய வரி விதிப்பு ஆண்டுகளுக்குரிய பரிசுச் சீட்டு வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய வரி நிலுவைகள்.

(3) பொதுத் துறை நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள்/ கழகங்கள், மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் சம்பந்தப்பட்ட சர்ச்சைகள்.

(4) 28-2-2002 அன்று மேல் முறையீடு நிலுவையில் இல்லாத இனங்களில், 1-4-1999-க்கு முந்தைய வரி விதிப்பு ஆண்டுகளுக்குரிய வரி நிலுவையினைக் கைவிடுதல் குறித்த (Waiver) கோரிக்கைகள்.



## 12. தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான சலுகைகள்

***12.1.*** மதிப்புக் கூட்டு வரி முறையினைச் செயல்படுத்துவதற்கான ஆயத்த நிலையைக் கருத்தில் கொண்டு முதல் கட்டமாக கீழ்க்கண்ட பொருட்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாடு விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின்கீழ் இப்பொருட்களை தயாரிப்பதற்கான (எரி பொருள் நீங்கலான) உள்ளீட்டுப் பொருட்கள், உறுப்புகள் மற்ற உதிரி பாகங்களின் மீது படிவம் 17-ன்கீழ் செலுத்தியுள்ள வரியினை முழுவதுமாக ஈடுகட்டி கொள்ளலாம்:—

(1) 10 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் காகித ஆலைப் பொருட்கள்.

(2) 10 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் அச்சிடப்பட்ட பொருட்கள் (பேப்பர் மற்றும் இங்க் மட்டும்).

(3) 12 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் மின் மற்றும் மின்னணுப் பொருட்கள்.

(4) 10 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் இயந்திரத்தால் செய்யப்படும் தீப்பெட்டிகள்.

(5) 12 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் கையினால் செய்யப்படும் சோப்புகள்.

இச்சலுகையானது, ஒப்படைப்பு விற்பனைக்கு (Consignment Sales) அனுப்பப்படும் பொருள்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

4 விழுக்காடு மத்திய விற்பனை வரி செலுத்தியுள்ள இனங்களில் மட்டும், செலுத்தப்பட்ட மத்திய விற்பனை வரியில் 50 விழுக்காடு வரை ஈடுகட்டிக் கொள்ளலாம். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையில் நடைபெறும் விற்பனைகளுக்கு மேற்கூறிய ஈடுகட்டும் சலுகை கிடையாது.

*கீழ்க்கண்ட சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன:—*

***12.2.*** அச்சடிக்கப்பட்ட பொருட்களுக்கு விற்பனை அல்லது ஒப்பந்தப் பணி எதுவாயினும், மொத்தத் தொகையில் 3 விழுக்காடு இணக்க விகித வரி விதிக்கப்படும். இந்த இணக்க விகித வரி இனங்களுக்கு வரி ஈடுகட்டும் சலுகை இல்லை.

***12.3.*** தமிழ்நாடு அரசுத் துறைகள் மற்றும் கீழ்க்கண்ட அரசு பொதுத் துறை நிறுவனங்கள்/தன்னாட்சி நிறுவனங்களுக்கு, அட்டவணையிலுள்ள பெட்ரோல், டீசல் மற்றும் சிமெண்ட் நீங்கலான முதல் பொருட்களை விற்பனை செய்யும் போது 4 விழுக்காடு சலுகை வரி சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு விதிக்கப்படும்:—

1. தமிழ்நாடு மின்சார வாரியம்.
2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.
3. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம்.
4. மாநில போக்குவரத்துக் கழகங்கள் (நேரடிக் கொள்முதல் மட்டும்).
5. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் (நேரடிக் கொள்முதல் மட்டும்).
6. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் (நேரடிக் கொள்முதல் மட்டும்).

***12.4.*** தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் ஆகிய நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான டர்ன் கீ (Turn Key) முறையில் செய்யப்படும் விற்பனைக்கு 4 விழுக்காடு சலுகை வரி விதிக்கப்பட்டுள்ளது.

***12.5.*** சர்க்கரைக் கழிவினை மூலப்பொருளாகக் கொண்டு மருந்து மற்றும் வேதிப் பொருட்கள் தயாரிக்கும் தமிழ்நாட்டில் உள்ள, அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படும் சர்க்கரைக் கழிவின் மீது குறிப்பிட்ட உறுதிமொழிப் படிவத்தின் அடிப்படையில் 20 விழுக்காடாகக் குறைத்து வரி விதிக்கப்படும்.

***12.6.*** இரப்பர் தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படும் கொள்முதல் வரியில் இயற்கை இரப்பர் மீது செலுத்தப்பட்ட மத்திய விற்பனை வரியினை ஈடுசெய்து கொள்ளலாம்.





***12.7.*** சேலத்திலுள்ள திருவாளர்கள் சேகோ சர்வ் என்ற நிறுவனத்திற்கு கூடுதல் விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சேகோ மற்றும் ஸ்டார்ச்சுக்கு விற்பனை வரி 2 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

***12.8.*** எண்ணெய் நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் லூப் எண்ணெய் (Lube Base Oil) மீதான கொள்முதல் வரியில் 7 விழுக்காடு வரை ஈடுகட்டிக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

***12.9.*** சிறு தொழில்கள் பயன் பெறும் வகையில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படும் பாரபின் மெழுகிற்கு (Paraffin Wax) 4 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது.

***12.10.*** மின் கட்டுப்பாட்டுப் பலகைகள், மூலதனப் பொருள்களாகக் கருதப்பட்டு அவற்றின் மீது சலுகை வரியாக 3 விழுக்காடு விதிக்கப்பட்டுள்ளது.

**13. இதர அம்சங்கள்**

***13.1.*** வரைமுறைகளைப் பூர்த்தி செய்துள்ள வணிகர்களை பொறுத்தமட்டிலும், 1998-1999 வரி விதிப்பு ஆண்டு முடிய நிலுவையிலுள்ள வரி விதிப்புகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நமூனாபடி வரி செலுத்தியுள்ள, மேலும் முதலாண்டு வணிகராகவோ, கடைசியாண்டு வணிகராகவோ இல்லாத அனைத்து வணிகர்களுக்கும் பொருந்தும். மேலும், அவ்வணிகர்கள் முந்தைய ஆண்டுகளுக்கு மேல்முறையீடு, மறு ஆய்வு மற்றும் நீதிப் பேராணை ஆகியவற்றிற்கு உட்படாத வரி நிலுவை ஏதும் இல்லாதவர்களாகவும், அனைத்து நமூனாக்களையும், உறுதிமொழி படிவம் மற்றும் சான்றிதழ்களையும் 30-9-2002-க்குள் சமர்ப்பித்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். உறுதிமொழிப் படிவங்களைத் தாக்கல் செய்ய இயலாத வணிகர்கள் அதற்குப் பதிலாக அறிவிக்கை செய்யப்பட்ட மாற்று அத்தாட்சிகளைச் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுவர். அவ்வாறான நிகழ்வுகளில் மத்திய விற்பனை வரிச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வரி விகிதத்திற்கு மேலாக 2 விழுக்காடு பிழை பொருத்தல் கட்டணமாகச் செலுத்த வேண்டும். வரி விதிப்பிற்கு உட்படாத வணிகர்கள் 2000-2001 முடியவுள்ள வரி விதிப்பு ஆண்டுகளுக்கு 30-9-2002-க்குள் அவ்வாண்டுகளுக்கான நமூனாக்களைத் தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டு, வரி விதிப்பு பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இல்லாவிடில் பதிவுச் சான்று இரத்து செய்யப்படும்.

[2002 மே 7

*13.2.* தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம் 2001-ன் கீழ் ஏற்கெனவே அறிவிக்கை செய்யப்பட்ட வெள்ளை சிமெண்ட் மற்றும் ரெஃப்ராக்டரி சிமெண்ட் உள்ளடங்கிய சிமெண்ட் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டு, 17 புதிய வகைப் பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

*13.3.* (அ) சுயேச்சையான மின் உற்பத்தியாளர்கள் இறக்குமதி செய்யும் எல்.எஸ்.எச்.எஸ். (Low Sulphur Heavy Stock) மீது விதிக்கப்படும் நுழைவு வரி, ஓராண்டு காலத்திற்கு 3 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(ஆ) மறு விற்பனைக்கு அல்லது வெளி மாநில விற்பனைக்கு, அட்டவணைப் பொருட்களைக் கொண்டு வரும் குறிப்பிட்ட எண்ணெய் நிறுவனங்களுக்கு நுழைவு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

*13.4.* ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிடித்தம் செய்த வரித் தொகையை துறைக்கு செலுத்துவதைக் கண்காணிக்க மையப்படுத்தப்பட்ட பிரிவு ஒன்று சென்னையில் அமைக்கப்படும். அவ்வாறு மாதந்தோறும் பிடித்தம் செய்யப்பட்ட தொகை அடுத்த மாதத்தில் 12 ஆம் நாள் செலுத்தப்பட வேண்டும்.

*13.5.* விளம்பர வரிச் சட்டத்தின் நோக்கம் விரிவாக்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

**14. துறையின் பிற சிறப்பு அம்சங்கள்**

*14.1.* கணினிமயமாக்குதல்

தற்போதுள்ள 323 வரி விதிப்பு வட்டங்களில், 140 வரி விதிப்பு வட்டங்கள், 18 உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 துணை ஆணையர் அலுவலகங்கள், 6 மாநில எல்லைத் தணிக்கைச் சாவடிகள், அரசு செயலர் அலுவலகம் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகம் ஆகியவை ரூ. 3.57 கோடி செலவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. வணிக வரித் துறை முழுவதும் கணினிமயமாக்குவதற்கான ஒரு விரிவான திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. வணிக வரித் துறையின் பொது விவரங்களான பதிவு செய்யும் நடைமுறை, வரி செலுத்தும் வகை, தற்போதைய வரி விகிதம் ஆகியவை *www.tnsalestax.com* என்ற வலை தளத்தில் உள்ளன.



2002 மே 7]

*14.2.* சோதனைச் சாவடிகள் ஒருங்கிணைப்பு

வணிக வரித் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து நவீன ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

*14.3.* மாநில மற்றும் மாவட்ட நிலையிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள்

விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் அரசால் மாநில மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்படுகின்றன. மாநில அளவிலான குழு மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும் மற்றும் வணிகர்கள், வணிக வரித் துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்படுகிறது. மாவட்ட அளவில் இக்குழு, மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகவும் மற்றும் வணிகர்கள், வணிக வரித் துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்படுகிறது. வணிக வரித் துறை நிர்வகிக்கும் சட்டங்களின் நடைமுறை விளக்கங்கள் மற்றும் வணிகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இக்குழுக்களில் ஆய்வு செய்யப்படுகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

*14.4.* குறை தீர்க்கும் குழு

வணிகர்கள் தங்களது குறைகளைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கும் வகையில், வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் பிரிவு ஒன்று செயல்படுகிறது. இக்குழு இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களைத் தலைவராகவும், இணை ஆணையர் (சுய சிராய்வு மனு) மற்றும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

**15. தமிழ்நாடு வணிகர் நல வாரியம்**

வணிகர்களின் நலனுக்காகவும் மற்றும் அவர்களுக்கு சில வகையான உதவிகள் வழங்குவதற்காகவும் வணிகர் நல வாரியம் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் 31-[illegible]-2002 அன்று 39,616 உறுப்பினர்கள் உள்ளனர். இவ்வாரியத்தின் தற்போதைய உறுப்பினர் கட்டணம் (ஒருமுறை மட்டும்) ரூ.250/-. உறுப்பினர் கட்டணமாக இதுவரை

[2002 மே 7

மொத்தம் ரூ. 70.65 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியம் நலத் திட்டமாக உறுப்பினர்களுக்கு குடும்ப நலம், கல்வி, மருத்துவம் மற்றும் விபத்து நிவாரணம் போன்றவற்றிற்கு உதவித் தொகை வழங்கி வருகிறது. தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டபொழுது அரசின் பங்களிப்பு ரூ.2 கோடி ஆகும். மேலும், இதுவரையில் ரூ. 35.49 இலட்சம் ஈடான மானியமாகவும் அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வாரியத்தின் செயல்பாடு மற்றும் நல உதவிகள் குறித்து மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தேவைக்கேற்ப மேன்மைப்படுத்தப்படும்.

------0------

225165
சென்னை-600 008